

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்:27 இதழ்:04 ஏப்ரல் 2001 (முஹர்ரம்-ஸபர் 1422)

## 1422
## ஹிஜ்ரா

20/- இஸ்லாமிய இலட்சியக் குரல்

AL HASANATH ISLAMIC MONTHLY

Registered at Tertiary and Vocational Education Commission
Affiliated with University of Management & Technology - Pakistan
Accredited by Council for Information Technology (CINTEC)

# கம்பியூட்டர் டிப்ளோமா பயிற்சி நெறி

- Introduction to Information Technology
- Operating System (Win98)
- Microsoft Word 2000
- Microsoft Excel 2000
- Microsoft PowerPoint 2000
- Microsoft Access 2000
- Introduction to Visual Basic
- Hardware Fundamentals and Internet & E-mail
- English for Information Technology

காலம் : 30 நாட்கள்
கட்டணம் : 6500/=

உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

**Islamic Institute of Information Technology**
Madampe - 61230
Tel : 032 - 47561 Fax : 032 - 47134 E-mail : iiit@sltnet.lk

بسم الله الرحمن الرحيم

அருளாளன் அன்புடையோன்
அல்லாஹ் அவன் பெயரால்

"நிச்சயமாக உம்முடைய இறைவன்தான் நாடியவர்களுக்கு விசாலமான உணவு (சம்பத்து) களை வழங்குகிறான். அளவாகவும் கொடுக்கிறான். நிச்சயமாக அவன்தான் அடியார்களை நன்கு அறிந்தவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான். நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை அளிக்கிறோம். அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும்."

(ஸூரா பனீஇஸ்ராயீல் 30:31)


# அல்ஹஸனாத்

மலர் 27 இதழ் 04 ஏப்ரல் 2001
முஹர்ரம் - ஸபர் 1422

ISSN : 1391 - 460 X



வெளியீடு:
இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
Sri Lanka Jama-ath-e-Islami
77, Dematagoda Road,
Colombo 09
Phone : 687091
Fax : 686030
email : islambks@slt.lk


## விலை விபரம்

**உள்நாடு**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூபா 20.00 |
| வருட சந்தா | : | ரூபா 250.00 |

**வெளிநாடு**

வருட சந்தா

| | | |
|---|---|---|
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேஷியா | : | 10$ |
| மத்திய கிழக்கு நாடுகள் | : | 10$ |
| ஏனைய நாடுகள் | : | 10$ |

## உள்ளே உள்ளவை


குழந்தைகளைக் கொலை செய்யாதீர்
(அல்குர்ஆன் விளக்கம்) 03
திருமணமும் இனவிருத்தியும்
(அல்ஹதீஸ் விளக்கம்) 05
உலகமயமாக்கல்:
காலனித்துவத்தின் அதிநவீன வடிவமே! 07
த.்.வா களம்:
'பிரேக்' 09
முஸ்லிம்களின் வீழ்ச்சியினால்.... 11
ஆப்கானிஸ்தானில் யாருக்காக அழுவது? 13
முஸ்லிம்கள் விழித்தெழுவது எப்போது? -4 15
கருத்தடை: CIA யின் தீர்வு! 17
பதாவா முஆஸிரா:
முரண்பாட்டில் உடன்பாடு காண்போம் 19
கவிதா பவனம் 26
'இறைகாதல்' 31
இஸ்லாம் (உயர்தரம்) 33
நான் ஏன் இஸ்லாத்தை தெரிவு செய்தேன்? 35
இமாம் ஹுஸைன் (ரழி) உயிரை விட்டது ஏன்? 37
ஜம்இய்யா பக்கம் 40
சிறுவர் பூங்கா 42
கருவிலிருப்பது ஆணா? பெண்ணா? (விஞ்ஞானம்) 44
நிர்மாணப் பணியில் ஹிஜ்ரத் 45
கேள்வி - பதில் 47
இன்னும் பல....


## அந்நிஸா


மெல்லலென வரும் புயல் 21
சமூக அந்தஸ்த்தை எங்கே தேடுகிறீர்கள்? 23
பெற்றோர்களுக்கு..! 25
ஆரோக்கிய சந்திப்பு: வீட்டுத் தோட்டத்தில்.. 28
பதாவா அந்நிஸா 30

ஆசிரியர் கருத்து

# தேசிய இஸ்லாம் பேசித் தப்பமுடியாது!

அல்குர்ஆன், ''ஆதமுடைய மக்களே!'' என மனிதகுலத்தைப் பார்த்து அழைப்பு விடுத்தது. முழு மனிதகுலமும் ஒரு தாய் மக்கள் எனக்கூறி சகலவித சாதி, குல இன, நிற பேதங்கள் அனைத்தையும் குழிதோண்டிப் புதைத்தது. பின்னர் கூறியது, ''உங்களை மாத்திரமல்ல; இந்த முழு உலகையுமே உங்களுக்காகப் படைத்தவன் ஒரே இறைவனான அல்லாஹ்தான். அவனது வழிகாட்டுதலே உங்கள் அனைவரினதும் உண்மையான உயர்வுக்கு வழிவகுக்கவல்லது.''

இந்தச் செய்தியை நம்பி, ஏற்றவர்கள் தான் முஸ்லிம்கள். எனவே அல்லாஹ் தனது திருத்தூதர் மூலம் முஸ்லிம் சமுதாயத்தை சாட்சியாளர்களாக ஏற்படுத்தி தம் சொல்லாலும் செயலாலும் இவ்வுண்மையை மக்களுக்கு நிரூபித்து அவர்கள் அனைவரையும் அதன்பால் அழைக்கும்படி பொறுப்புச் சாட்டினான். இந்த இலங்கைத் தீவில் வாழும் நாம் இங்குள்ள மக்களுக்கு சத்திய இஸ்லாத்தின் சான்றாளர்களாகத் திகழவும் அதன்பால் அழைக்கவும் கடமைப் பட்டுள்ளோம். ஆனால்...

ஹிஜ்ரி 1422 புத்தாண்டின் ஆரம்பத்திலேயே ஆப்கானில் ஒரு பாரிய சவாலை நாம் எதிர்நோக்க வேண்டி வந்தது. மக்களுக்கு நாங்கள் யார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய இக்கட்டான ஒரு கட்டத்தைச் சந்தித்தோம். அதன்போது நாம் முன்வைத்த கருத்துக்கள் இஸ்லாத்திற்கொரு புதிய ரூபத்தைக் கற்பிக்க முனைகிறோமா எனும் சந்தேகத்தைக் கிளப்பியது.

கிறிஸ்தவ மதத்தவர்கள் தாம் கர்த்தரின் (ஈஸா நபியின்) சாட்சிகள் எனப் பலமாக நம்புகிறார்கள். ஈஸாவை நம்பியவர்களுக்கு மாத்திரமே விமோசனம் உண்டு என உறுதியாக நம்பும் அவர்கள் பிற மக்கள் மீது கவலையும், கருணையும் கொண்டு அவர்களை தாம் நம்பும் தீனின்பால் அழைப்பதில் மிக நாசூக்காக, துணிச்சலுடன் செயல்படுகின்றார்கள் ஜனாதிபதி மட்டத்திலும் அமைச்சரவை மட்டத்திலும் படைத்தளபதி மட்டத்திலும் செல்வாக்கை வளர்த்து வல்லரசுகளின் உதவியுடன் தம் தீனின் மேம்பாட்டுக்காக உழைக்கிறார்கள். ஆனால்....

நாம் செய்து கொண்டிருப்பதென்ன?

றஸூல் (ﷺ) அவர்கள் தம்மைச் சுற்றியிருந்த இறை மறுப்பாளர்களுக்கே த.'வா எனும் இஸ்லாமிய அழைப்பை விடுத்தார்கள். ஆனால் தாம் த.'வத்தில் ஈடுபடுவதாகக் கூறிக் கொள்பவர்களோ ''லா இக்ராஹ பித்தீன்'' (மார்க்கத்தில் பலவந்தம் இல்லை) எனும் அல்குர்ஆன் வசனத்தைக் கூறி எமது த.'வத்தெல்லாம் முஸ்லிம்களுக்குத்தான் என வெட்கமின்றிப் பகிரங்கமாகப் பகர்கிறார்கள். அத்தோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. ''லகும் தீனுக்கும் வலியத்தீன்'' (உங்களுக்கு உங்கள் மார்க்கம்; எங்களுக்கு எங்கள் மார்க்கம்) என்ற அல்குர்ஆன் வசனத்தை மொழிந்து ஏதோ இஸ்லாம் முஸ்லிம்களுக்காக வந்தது; மற்றையவர்களுக்கல்ல என்பதுபோல் விளக்கமளிக்கிறார்கள். என்னே கேவலம்!

இதனை சோனக இனத்தின் அரசியல் தலைவர்கள் கூறினால் தவறில்லை. ஏனெனில் அந்த இனத்தின் பாதுகாப்பில் தான் அவர்களின் இருப்பு தங்கியுள்ளது. ஆனால் ஆலிம்களும் இந்த ''அரசியல் இஸ்லாத்தைப்'' பேசமுனைந்தால் அது ஆபத்து. தீனை மக்கள்முன் சரியாக வைத்து ''இஸ்லாமிய அரசியலை''ப் பேசவும் நிலைநாட்டவும் ஜிஹாத் (முயற்சி) செய்ய வேண்டியவர்கள் திசைமாறிச் சென்றால் நிச்சயமாக முஸ்லிம் சமூகத்துக்கு அது பெரும் ஆபத்தான நிலையையே உருவாக்கும்.

இன்று மேற்குலகம் முஸ்லிம்களைக் கூறுபோட்டு நசுக்க முனைந்துள்ளது. ''இஸ்லாமிய அரசியல்'' பேசி, ''ஷரீஆ உலகை ஆளவேண்டும்'' என ஹக்கைப் பறைசாற்றுபவர்களைப் ''பயங்கரவாதிகள்'' எனப் பட்டம் சூட்டி அழித்தொழிக்க முனைகிறது. அதேவேளை அல்லாஹ் படைத்த அகிலத்தைத் தேசங்கள் எனும் கூறுகளாக்கி *'தேசத்திற்கிசைந்த இஸ்லாத்தைப்'* பேச வைக்க முயல்கிறது. அரசியலைத் துறந்து சூபித்துவ இஸ்லாத்தை முன்வைப்பவர்களைப் போற்றிப் புகழ்ந்து அரவணைத்துத் தூங்கவைக்க முயல்கிறது. முஸ்லிம் நாடுகளின் ஆட்சிபீடங்களை அலங்கரிக்கும் அரசர்களைத் தம் பகடைக்காய்களாக்கி, முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கே காரணமாயமைந்த உட்போராட்டங்களை உயிர்கொடுத்துத் தூண்டிவிட்டு அரசியலின்பால் அவர்களின் கவனம் சென்றுவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறது. இம் மன்னர்களின் அன்பளிப்புக்களில் மதிமயங்கும் மார்க்கவாதிகள் பிளவுகளின் பிறப்பிடமாக இன்று திகழ்கிறார்கள். முஸ்லிம் சமூகம், தான் எங்கே, எதனை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதையெல்லாம் சிந்திக்க இடம்கொடாது பார்த்துக் கொள்கிறார்கள். சீர்திருத்தமே தம்பணி என்றால் அதில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். என்ற எந்த விதக் கணிப்பும் அவர்களிடமில்லை. போராட்டத்தை இஸ்லாமிய வட்டத்துக்குள் வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். முஸ்லிம்களின் பரம எதிரி, அனைத்து முஸ்லிம்களினதும் குரல்வளைகளை இறுக்கி இன்றோ இப்போதோ மூச்சு நின்றுவிடும் எனும் நிலையை உருவாக்கிவரும் இவ்வேளை, முஸ்லிம்கள் மேலும் மேலும் பிளவுபட்டு சின்னாபின்னமாகிப் போனால் நாளை மறுமையிலும்கூட அவர்களுக்கு விமோசனம் கிடையாது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

நாம் ஐக்கியப்பட்டு உண்மையான தீனுல் இஸ்லாத்தை அனைத்து மக்களினதும் பிரச்சினைகளுக்குப் பரிகாரமாக முன்வைத்து இந்நாட்டு மக்களின் உண்மையான விமோசனத்திற்கு இப்புதிய ஆண்டு முதல் செயல்பட திடசங்கற்பம் பூணுவோம். அல்லாஹ் நம் அனைவருக்கும் நேர்வழிகாட்டப் போதுமானவன்.

"நிச்சயமாக உம்முடைய இறைவன், தான் நாடியவர்களுக்கு விசாலமான உணவு (சம்பத்து) களை வழங்குகிறான்; அளவாகவும் கொடுக்கிறான். நிச்சயமாக அவன்தான் அடியார்களை நன்கு அறிந்தவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான். நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும், உங்களுக்கும் நாமே உணவை அளிக்கிறோம். அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும்."

(ஸூரா பனீஇஸ்ராயீல் 30:31)

## அல்குர்ஆன் விளக்கம்

மௌலவி
M.H.M. முனீர் (முஹம்மதி)

# வறுமைக்குப் பயந்து குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள்

ஸூரா பனீ இஸ்ராயீல் 30ம் 31ம் வசனங்கள் ஒரு முஸ்லிம் கொண்டிருக்க வேண்டிய ஆழமான ஈமானையும், உலகவாழ்வு பற்றிய குர்ஆனின் ஓர் எண்ணக்கருவையும் விளக்கப்படுத்துவதோடு வரலாறு முழுவதும் மனிதர்களிடம் காணப்பட்ட ஓர் அடிப்படைத் தவறையும் குறித்துக் காட்டுகிறது.

முப்பதாவது வசனம் அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு விசாலமாகவும் அளந்தும் 'ரிஸ்க்' வழங்குகிறான் எனக் கூறுகிறது. பொதுவாக இப்பிரயோகம் உணவுத் தேவைகளை நிறைவு செய்வதையே குறிப்பிடுகிறது. இருந்தபோதும், இதனை அல்குர்ஆனின் ஒட்டுமொத்த நோக்கிலே விளக்கிய அறிஞர்கள், இது மிகவும் விசாலமான கருத்தாழத்துடன் கையாளப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். ''உணவு குடிவகைகள் மாத்திரம் அன்றி தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் அனைத்தையும் இது குறித்துக் காட்டுகிறது'' என இமாம் ராகிப் (ரஹ்) அவர்கள் கருதுகிறார்கள். இக்கருத்தினையே இப்னு கல்தூன் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: ''மனிதர்கள் பயன்படுத்தும் அனைத்துப் பொருட்களும் ரிஸ்காகும்.''

மனிதனின் உடல் ஆரோக்கியத்திற்கான உணவுகள், குடிவசதிகள், உடலை மறைத்து அலங்கரித்துக் கொள்வதற்கான உடைகள், வீடு போன்ற அடிப்படைத் தேவைகள் முதல் அனைத்துவித பௌதீக காரணிகளையும் வழங்குதலையே 'ரிஸ்க்' என்ற பதம் குறிப்பிடுகிறது.

அல்குர்ஆன் சுமார் எண்பது இடங்களுக்கு அதிகமாக இறந்தகாலத்தில், எதிர்காலத்தில், படர்க்கையில், தன்மையில், முன்னிலையில் பௌதீக தேவைகளை நிறைவு செய்தல் அல்லாஹ்வையே சார்ந்தது எனக் கூறுகிறது. அல்லாஹ்வின் வல்லமைகளையும், ஆற்றல்களையும் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் ஒரு மனிதன் தனது உலக வாழ்நாட்களை எவ்வித சலனமோ, விரக்தியோ இன்றி நிம்மதியாகக் கழிப்பான். அல்லாஹ்வின் பண்புகளுள் ஒன்றான 'ரஸ்ஸாக்' பற்றிய கோட்பாடு அவனது உள்ளத்தில் ஆழமான ஈமானை ஏற்படுத்தி விடுகிறது. எதிர்காலம் பற்றி அவன் எவ்வித அச்சமும் கொள்ள மாட்டான். அல்லாஹ் தன்னைப் பற்றி பின்வருமாறு அறிமுகம் செய்கிறான்:

**"நிச்சயமாக அல்லாஹ் ரஸ்ஸாக் ஆவான். அவன் பலமிக்கவனும் உறுதியானவனுமாவான்."**

**(அத்தாரிக் : 58)**

அல்லாஹ் தனது உயர்ந்த படைப்பாகிய மனிதனின் பௌதீக தேவைகளை நிறைவு செய்யும் போது மிகச் சிறந்தவைகளையே வழங்குவதாக கூறுகிறான்:

**"நிச்சயமாக நாம் ஆதமுடைய சந்ததியை கண்ணியப்படுத்தினோம். இன்னும் கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவையும் மற்றும் பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள பலவற்றை விட அவர்களை மேன்மைப்படுத்தினோம்.**

**(பனீ இஸ்ராயீல் : 70)**

உலகில் உயிர்வாழும் எத்தரத்தைச் சார்ந்த மனிதனும் எச்சந்தர்ப்பத்திலும் தனது உணவு குறித்து அஞ்ச வேண்டிய தேவை கிடையாது. ஏனெனில்,

உயிர்வாழும் நுண்ணுயிர்கள் முதல் இராட்சத உயிர்கள் வரை அனைத்துக்கும் அல்லாஹ்தான் உணவளிக்கிறான்.

**“இன்னும், உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளாத எந்த உயிரினமும் பூமியில் இல்லை. மேலும் அவை வாழும் இடமும் (இருக்கும்) இடமும், அடங்கும் இடமும் (லவ்ஹுல் மஹ்பூல் எனும்) தெளிவான புத்தகத்தில் (பதிவாக) இருக்கின்றன.”**

**(ஸூரா ஹூத் : 6)**

இந்த ஈமானை பெற்றுக் கொள்ளாத மனிதர்களின் மிகப் பிழையானதொரு போக்கைத்தான் 31வது வசனம் பின்வருமாறு கூறுகிறது:

**“நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே வாழ்க்கை வசதிகளை அளிக்கிறோம்.”**

அல்குர்ஆனின் வருகைக்கு முன்னர் வறுமைக்குப் பயந்து மனிதர்கள் தமது குழந்தைகளை கொலை செய்தனர். ஸூரத்துல் அன்ஆமின் 151, 152 வது வசனங்களில் பத்து விடயங்களை தொடராகக் கூறும் அல்குர்ஆன் இதனையும் இணைத்துக் கூறுகிறது:

**“(நபியே!) நீர் கூறும்: வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியவற்றையும், ஏவியவற்றையும் ஓதிக் காண்பிக்கிறேன். எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள்; பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள்; வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். ஏனெனில், உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம்....”**

வரலாறு முழுதும் மனிதர்கள் இப்படியானதொரு தவறைச் செய்து வந்துள்ளனர். தவ்ராத்தை நன்றாக அறிந்து வைத்திருந்த க.்புல் அஹ்பார் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். “இந்த வசனத்தைப் போன்ற வசனம் (இதுபோன்ற கட்டளை) மூஸா (அலை) அவர்கள் மீது இறக்கப்பட்டிருந்தது.

ஜாஹிலிய்யாக் காலத்திலும், அதற்கு முன்னரும், பின்னரும் தாம் பெற்றெடுத்த குழந்தைகளை வறுமைக்குப் பயந்து கொலை செய்தனர். இன்று அது பல்வேறு வடிவங்களை அடைந்துள்ளதோடு இனவிருத்தியை தடைசெய்கின்ற வேறு பல யுக்திகள் கையாளப்படுவதையும் காண்கிறோம். ஷரீஅத்தின் நிபந்தனைகளை மீறிச் செய்யும் அனைத்து இனவிருத்திக் கட்டுப்பாடுகளும் ஹராமானவையாகும். உண்மையில் மனிதர்கள் வாழ்க்கை வசதிகளுக்குப் பயந்தே இவ்வாறு செய்கின்றனர். இது அல்லாஹ்வைப் பற்றிக் கொண்டிருக்கும் மிகப் பிழையான சிந்தனையாகும். ‘வறுமைக்குப் பயந்து’ என்ற சொற்றொடர் ‘இம்லாக்’ என கையாளப்பட்டுள்ளது. இதனை விளக்கவந்த இமாம் ஆலூசி (ரஹ்) அவர்கள் தனது ‘ருஹுல் மகானி’ யில் இப்படிச் சொல்கிறார்கள். “வறுமைக்கு உள்ளாக்கப்படாதவன்; ஆனால் எதிர்காலத்தில் வறுமை ஏற்படும் எனப் பயப்படுபவன்”

உங்களது உணவோ அல்லது உங்கள் பராமரிப்பில் வாழ்வோர் உணவோ உங்களின் அளவீட்டில் கிடையாது. நீங்கள் நிர்ணயித்தவைகள் அல்ல. பின்னர் ஏன் கொலை செய்கிறீர்கள்? அல்லது குழந்தைகளைப் பெற்றெடுக்கப் பயப்படுகிறீர்கள்? இன்று சாதாரண தனிமனிதர்கள் முதல் இராட்சத அரசுகள் வரை இப்பயத்தால் பீதியடைந்துள்ளன. இந்தப் பயம் அவர்களை பல பில்லியன் டொலர்களை செலவழிக்க வைத்துள்ளது. இதனால் மிக மோசமான விளைவுகளையே உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) கேட்டார்கள்: ‘பெரிய பாவம் எது?’ ‘அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தல்’ ‘பின்னர் எது?’ ‘உணவு கொடுக்க வேண்டும் எனப் பயந்து உனது குழந்தையை கொலை செய்வதாகும்’ ‘பின்னர் எது?’ ‘அடுத்த வீட்டுக்காரியுடன் விபச்சாரம் செய்வதாகும்.’ என்றார்கள்.” (புகாரி)

ஒரு மனிதன் தனது குடும்பத்தை திட்டமிடுவதோ, குழந்தைப் பேறுகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதோ பிழையல்ல; ஆனால் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையில் அவனது பரிந்துரைக்கப்பட்ட அருட்கொடைகளில், அவனையே சார்ந்து நிற்கும் தவக்குலில், கழா கத்ரில் எவ்விதமான சறுகல்களையும் உண்டுபண்ணி விடக் கூடாது என்பதே மிக முக்கியமான விடயமாகும். நபியவர்கள் கூறியதாக உமர் (ரழி) கூறுகிறார்கள்:

**“அல்லாஹ்வின் மீது தவக்குல் எனும் முழுப்பொறுப்புச் சாட்டும் முறையில் நீங்கள் முழுமையாக பொறுப்புச்சாட்டினால் பறவைகளுக்கு உணவளிப்பது போன்று அல்லாஹ் உங்களுக்கும் உணவளிப்பான். பறவை காலையில் வயிறு ஒட்டியதாகச் செல்கிறது. மாலையில் வயிறு நிரம்பித் திரும்புகிறது.” (திர்மிதி)**

அல்லாஹ்வின் அருட்கொடையான குழந்தைகளுக்கு கற்பிக்காமல், பண்பாடுகளை பயிற்றுவிக்காமல் விட்டுவிடுவது கொலை செய்வதைவிடக் குறைந்ததாக ஆகமாட்டாது. என முப்தி ஷபீஃ வலி அவர்கள் கூறுகிறார்கள். ●

# திருமணமும் இனவிருத்தியும்

## அல்ஹதீஸ் விளக்கம்

அஷ்ஷெய்க்
H.M. மின்ஹாஜ் இஸ்லாஹி

**நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:**

**"அதிகம் பிள்ளைகளைப் பெற்றெடுக்கக் கூடிய, அதிகம் அன்பையும் பாசத்தையும் பரிமாறக் கூடிய பெண்ணைத் திருமணம் முடித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மறுமை நாளில் பிற சமூகங்களின் முன்னிலையில் உங்களது அதிகரித்த தொகை மூலம் நான் பெருமிதம் கொள்வேன்."**

**அறிவிப்பாளர் : அனஸ் (رضي الله عنه)**

**ஆதாரம் : அஹ்மத், இபுனு ஹிப்பான், அல்ஹாகிம்**

பிறிதொரு அறிவிப்பில், **"நபிமார்களின் முன்னிலையில்"** என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.

இமாம் அல்ஹாகிம் தனது அல்-முஸ்தத்ரக் என்ற கிரந்தத்தில், 'இது ஆதாரபூர்வமானது' எனக் குறிப்பிடு கிறார்கள். இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள், 'இத்தகைய ஹதீஸ்கள் அநேக மானவற்றில் பலவீனம் காணப்படுகிறது' என்று குறிப்பிட்டு விட்டு, 'ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இந்த ஹதீஸ்கள் அடிப் படையில் திருமணத்திற்கான ஆர்வமூட்ட லாக அமைகின்றன" என்றும் குறிப்பிடத் தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும். இந்த ஹதீஸ் மிகவும் பலவீனமானது அல்ல. மேலும் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைக்கும் அதன் பொதுவிதிக்கும் இந்த ஹதீஸ் முரணாக அமையவுமில்லை.

நாம் விளக்கத்திற்கு எடுத்துள்ள ஹதீஸ் திருமணத்திற்கான ஊக்குவிப்பாக அமைவதோடு இனப்பெருக்கத்திற்கான உற்சாகமூட்டலாகவும் அமைகிறது. இதற்கு உதவுகின்ற வகையில் மணமகள் தெரிவு அமைய வேண்டுமென்ற வழிகாட்டல் ஹதீஸில் முன்வைக்கப்படுகிறது.

இந்த உலகம் தோன்றி மனித இனம் வாழ ஆரம்பித்த காலம் முதல் உலகம் அழியும் வரை இனப்பெருக்கத்திற்காக இறைவன் வகுத்த நியதி சோடி சேர்ந்து வாழ்வதாகும். இந்தப் பொது நியதியிலி ருந்து மனிதன் விதிவிலக்கானவனல்ல. அல்லாஹ் இந்நியதி குறித்து பின்வருமாறு கூறுகிறான்:

**"பூமி முளைப்பிக்கும் (புற்பூண்டுகள்) யாவற்றையும், இவர்களையும் சோடி சோடியாகப் படைத்து இவர்கள் (இது வரையில்) அறியாத (மற்ற) வைகளை யும் படைப்பவன் மிகத் தூய்மை யானவன்." (ஸூறா யாஸீன்:36)**

இந்த வகையில் அல்லாஹ் 'திருமணம்' என்ற உன்னதமான உயரிய வரையறை களுடன் கூடிய கட்டுக்கோப்பான, ஒழுக்கம், நாணம், ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த உடன்படிக்கையின் மூலம் ஆணையும், பெண்ணையும் இணைத்து வைத்து இனவிருத்திக்கும் அதன் நித்திய மான இருப்புக்கும் வழிவகுத்துள்ளான். ஒரு மனிதனிடத்தில் இயற்கையாக அமையப் பெற்றுள்ள பாலியல் வேட்கையை தீர்த்துக் கொள்வதற்கான மிகவும் சிறந்த பொருத்த மான, அங்கீகரிக்கப்பட்ட, தூய்மையான வழிமுறையே திருமணம். கடமையுணர்வும் பொறுப்புணர்வும் நெறிப்படுத்தப்படாத நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த இரு உள்ளங்களை குடும்பப் பொறுப்பு என்ற விலங்கிட்டுப் பிணைத்துவிடுகிறது திருமணம்!

ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்பாகவே அல்லாஹ் வகுத்தளித்துள்ள பொறுப்புக்களையும் பணிகளையும் சரியாக தமக்கு மத்தியில் பகிர்ந்து கொண்டு சிறந்த தொரு குடும்ப உருவாக்கத்தில் அவ்விரு வரும் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக் கிக் கொடுக்கிறது திருமணம். அவ்வாறே திருமண வாழ்வில் புகுந்து கொண்டதன் பின்னர் ஒரு மனிதன் பிள்ளைப் பாசத்தை சரியாக உணர்ந்து கொள்ள முடிகிறது. இத்தியாதி நோக்கங்களைக் கொண்டுள்ள திருமணம், இனவிருத்தியை பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.

இனப்பெருக்கத்தை வலியுறுத்துகின்ற அண்ணலார் மனைவியாக அமைய இருக் கின்றவளின் பண்புகள் குறித்து விளக்கு கிறார்கள். ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள 'அல்வலூத்' என்ற பதம் 'அதிகம் பிள்ளை களைப் பெற்றெடுக்கக் கூடியவள்' என்ற கருத்தைத் தொனிக்கிறது. எனவேதான் நபி (ﷺ) அவர்கள் கன்னிப் பெண்ணை திருமணம் செய்துகொள்ளுமாறு ஆர்வ மூட்டினார்கள். ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (رضي الله عنه) அவர்கள் ஒரு விதவையை மணம் முடித்துவிட்டு வந்து அண்ணல் நபி (ﷺ) அவர்களிடம் சொன்னபோது,

**"ஒரு கன்னிப் பெண்ணை நீர் மணம் முடித்திருக்க வேண்டுமே! நீர் அவளுடனும், அவள் உம்முடனும் கொஞ்சி விளையாடியிருக்கலாமே!"**

என்று நபியவர்கள் ஆதங்கப்பட்டார் கள். தனது தந்தை சிறிய வயது பெண் பிள்ளைகளை விட்டு விட்டு மரணித்ததனால அவர்களைப் பரிபாலிக்க குமரியை விட விதவையே ஆற்றல்மிக்கவள். எனவேதான் விதைவையைத் தான் திருமணம் முடித்ததாக அந்த ஸஹாபி நியாயம் சொன்னார்கள்.

ஒரு பெண்ணின் சீரான உடலமைப்பை அறிவதன் மூலமாகவும் அவளது சகோதரி கள் ஆகியோரது திருமண வாழ்வை ஒப்பு நோக்குவதன் மூலமும் அவள் அதிகம் பிள்ளைகளைப் பெறக்கூடியவளா? இல்லையா? என்பதை அறிந்து கொள்ள லாம். அல்லாஹ்வும் அவனது திருத் தூதரும் இனப்பெருக்கத்திற்கு எத்தகைய தடையையும் ஏற்படுத்தியதாக நாம் அறிய முடியவில்லை. அவ்வாறே எத்தகைய கட்டுப்பாட்டை விதித்ததாகவும் தெரிய வில்லை. இக்கருத்தை நாம் விளக்கப் புகுந்துள்ள ஹதீஸும் அக்கருத்தில் அமைந்த ஏனைய ஹதீஸ்களும் சொல்லப்பட்டதற்கான பின்னணியும், சூழ் நிலையும் தெளிவாக விளக்குகின்றன. அதாவது ஒரு ஸஹாபி ஒரு மலடியை திருமணம் முடித்துவிட்டு அண்ணலாரிடம் வந்து சொன்னபோது அதனைத் தடுத்த ரஸூல் (ﷺ) அவர்கள் மேலே குறிப்பிட்ட ஹதீஸைச் சொன்னார்கள். அவ்வாறே அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் எங்களைத் திருமணம் செய்யுமாறு கட்டளை பிறப்பித்து துறவறப் போக்குடன்

ஒதுங்கி வாழுவதைத் தடுத்தார்கள். பின்னர் நீங்கள் அதிகம் பிள்ளைகளைப் பெறக் கூடிய பிரியத்திற்குரிய பெண்ணைத் திருமணம் செய்யுங்கள். ஏனென்றால், மறுமை நாளில் பிற சமூகங்கள் முன் உங்களது அதிகரித்த தொகையைக் கண்டு பெருமிதம் கொள்வேன் என்று அண்ணலார் கூறியதாக ஸஹாபாக்கள் கூறுவதும் கூட இனவிருத்திக்கான தூண்டுதலாக அமைகின்றது!. அல்குர்ஆன் இது குறித்து கீழ்வருமாறு கூறுகிறது:

**“உங்கள் மனைவிகள் உங்களுக் குரிய விளைநிலமாகும். ஆகவே உங்கள் விளைநிலத்திற்கு நீங்கள் விரும்பியவாறு செல்லுங்கள்”**

**(ஸூரதுல் பகரா: 223)**

அல்லாஹ்வும் அவனது தூதரும் இனப்பெருக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கத்தோடு எத்தகைய தடையையும் விதிக்கவில்லை. இந்த வகையில் இஸ்லாம் குடும்பக் கட்டுப் பாட்டை தனது அடிப்படைக் கொள்கை களில் ஒன்றாகவோ பொதுவாக எல்லா நிலைமைகளிலும் எல்லாரும் பரவலாக மேற்கொள்ளக்கூடிய ஆகுமான செயலா கவோ பிரகடனம் செய்யவில்லை. இந்த நூற்றாண்டில் மேற்குலகம் அறிமுகம் செய்த குடும்பக் கட்டுப்பாட்டுச் சிந்தனைக்கும், இஸ்லாத்திற்கும் எத்தகைய தொடர்புமில்லை. இஸ்லாத்தின் உயிரோட் டத்தை உணர்ந்து கொள்ளத் தவறிய சிலர் இஸ்லாத்தின் கொள்கை - கோட்பாடுகளை நுனிப்புல் மேய்ந்துவிட்டு இஸ்லாம் குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிக்கிறது. என்று குரலெழுப்புவது மௌட்டீகம் என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை.

குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிப்பது போல தோற்றுகின்ற சில ஹதீஸ்களை இங்கு ஆய்வுக்கு உட்படுத்துகின்றபோது இது குறித்த இஸ்லாத்தின் நிலைப்பாடு எங்களுக்குத் தெரியவந்துவிடும்.

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**“ரஸூல் (ﷺ) அவர்களது காலத்தில் நாங்கள் விந்தை கர்ப்பத்தில் செலுத்து வதை தவிர்ந்து வந்தோம்.”**

மூன்றாம் அறிவிப்பில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது.

**“அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டுக் கொண்டிருந்த வேளை நாங்கள் விந்தை கர்ப்பத்தில் செலுத்துவதை தவிர்ந்த வந்தோம்” (புகாரி, முஸ்லிம்)**

ஜாபிர் (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**“ரஸூல் (ﷺ) அவர்கள் காலத்தில் நாங்கள் விந்தை கர்ப்பத்தில் செலுத்து வதைத் தவிர்ந்து வந்தோம். இவ் விடயம் அண்ணலாருக்கு தெரியவந்த போது ‘அவ்வாறு செய்ய வேண்டாம்’ என்று அண்ணலார் எங்களைத் தடுக்கவில்லை” (முஸ்லிம்)**

மேற்படி அறிவிப்புக்கள் அனைத்தும் “அஸ்ல்” (விந்தை கர்ப்பத்தில் செலுத்து வதைத் தவிர்க்கும்) செய்முறையை ஆகுமானதென கருதி ஸஹாபிகள் செயல் பட்டுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்து கின்றன. இதற்கான தடையுத்தரவு குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ இடம் பெற்றதாக ஸஹாபிகள் அறிவிக்கவில்லை.

வேறு சில அறிவிப்புகளில் “அஸ்ல்” என்ற செய்முறை விரும்பத்தகாதது என்ற கருத்தை அண்ணலார் கொண்டிருந்ததாக குறிப்பிடுகின்றன.

அபூ ஸயீத் அல்குத்ரி (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**“நாங்கள் கைதிப் பெண்களைப் பெற்று அவர்களுடன் சேரும்போது ‘அஸ்ல்’ என்ற செய்முறையை மேற் கொண்டு வந்தோம். இது குறித்து அண்ணலாரிடம் நாம் கேட்டோம். ‘அஸ்ல்’ என்ற செய்முறையை நீங்களும் மேற்கொள்கிறீர்களா?’ என்று மூன்று முறை வினவிவிட்டு, ‘மறுமை நாள் வரை உருவாக வேண்டிய அனைத்துப் படைப்புக்களும் உருவாகியே தீரும்’ என பதிலளித்தார்கள்.”**

(புகாரி, முஸ்லிம்)

**“ஒரு மனிதன் ரஸூல் (ﷺ) அவர் களிடம் வந்து, ‘எனக்கொரு அடிமைப் பெண் இருக்கிறாள். அவள் எனது பணியாள். மேலும் அவள் எமக்கு நீர் புகட்டுபவள். அவளிடம் செல்லும் நான் அவள் கர்ப்பமுற்றுவிடுவாள் என்று அஞ்சுகிறேன்’ என்றார். ‘நீர் விரும்பினால ‘அஸ்ல்’ என்ற செய்முறையை மேற் கொள்வீராக! ஏனென்றால் அவளுக்காக திட்டமிடப்பட்டதே அவளுக்கு ஏற்படும்’ என நபி (ﷺ) அவர்கள் பதிலளித் தார்கள்.” (முஸ்லிம்)**

சில ஸஹாபிகளும் வேறு சிலரும் ‘அஸ்ல்’ தடுக்கப்பட்டுள்ளது. என்ற கருத்தைத் தெரிவிக்கின்றனர். இமாம் திர்மிதி தங்களது கிரந்தத்தில் கீழ்வருமாறு கூறுகிறார்கள். “ஸஹாபிகளும் வேறு சில அறிஞர்களும் ‘அஸ்ல்’ என்ற செய்முறை விரும்பத்தகாதது என்கின்றனர்.”

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் அல்முவத்தா என்ற தங்களது கிரந்தத்தில், ‘இப்னு உமர் (رضي الله عنه) ‘அஸ்ல்’ என்ற செயல் முறையை மேற்கொள்ளாதவராகவும் இதை வெறுக்கின்றவராகவும் இருந்தார்கள் எனக் குறிப்பிடுகிறார்கள்.

நாம் குறிப்பிட்ட இருவகையான ஹதீஸ்களையும் அறிவிப்புக்களையும் முன் வைத்த மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் கீழ்வருமாறு கூறுகிறார்கள்:

“ரஸூல் (ﷺ) அவர்கள் விந்தை கர்ப்பத்தில் செலுத்தாது தவிர்ப்பதை (அஸ்ல்) அனுமதிக்காது வெறுத்துள்ளார் கள். அதனை அவர்கள் ஒரு வீண் விளை யாட்டாகவே கருதினார்கள். அவ்வாறே அறிஞர்களான ஸஹாபிகளில் ஒரு பிரிவினரும் இச்செய்முறையை விரும்பத் தகாததாகவே கருதிவந்தனர். அக்காலத் தில் முஸ்லிம்களுக்கு மத்தியில் கருத் தடையும் குடும்பக் கட்டுப்பாடும் பொது வான ஒரு நடவடிக்கையாக இருந்த தில்லை. ‘அஸ்ல்’ ஒரு சமூகத் திட்டமாக சமூகத்தில் நிலவும் பொதுவான நடை முறையாக ஆக்கப்படுவதற்கான முயற்சிகள் அக்காலத்தில் பிரயோகிக்கப்பட வில்லை. மாறாக, முஸ்லிம்களில் உள்ள சில தனிநபர்கள் தனிபட்ட முறையில் தமது நிர்க்கதியான நிலையின் காரணமாகவும், தேவையின் நிமித்தமும் அஸ்ல் (என்ற அக்கால குடும்பக் கட்டுப்பாடு) செயன் முறையை கையாண்டனர். நபி (ﷺ) அவர்கள் ‘அஸ்ல்’ என்ற குடும்பக் கட்டுப் பாட்டு செயன்முறையை ஹராம் எனப் பிரகடனப்படுத்தவுமில்லை; அதனைக் கண்டிப்பாக தடைசெய்யவுமில்லை. அவர்களது காலத்தில் பரந்த அளவில் சமூகமட்டத்தில் கருத்தடை, குடும்பக் கட்டுப் பாடு ஆகியவற்றை நோக்கி மக்களை அழைக்கக் கூடிய பொதுவான ஓர் இயக்கம் இருந்திருக்குமென்றால் சந்தேகமற அண்ணலார் அதனைக் கண்டிப்பாக தடுத்திருப்பார்கள்.”

இக்காலத்தில் ஏனைய வழிமுறைகள் மூலம் (மாத்திரை, சத்திரசிகிச்சை) உருவாகியுள்ள கருத்தடை, குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றை அக்கால ‘அஸ்ல்’ என்ற செயன்முறையோடு ஒப்பு நோக்கி ஆராய்ந்தால் ஷரீஅத் முற்று முழுதாக குடும்பக் கட்டுப்பாட்டை தடை செய்யவில்லை என எம்மால் கூற முடியும். அதாவது, மனிதனுக்கு சில சூழ்நிலை களின்போது உண்மையாகவே சில தேவைகள் ஏற்படுகின்றன. அப்போது அவன் பேணுதல் என்ற வகையில் குடும்பக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படு கிறது. உதாரணமாக, ஒரு பெண் கர்ப்ப முற்றால் பாலூட்டும் பிள்ளைக்கு அல்லது அவளுக்கு உயிர் ஆபத்தோ, மரண அபாயமோ, அசாதாரணமான தீங்குகளோ ஏற்படலாம் என்ற நிலை இருந்தால் அல்லது அதுபோன்ற சூழ்நிலைகளில் மருத்துவ ஆலோசனையின் பின்னர் ஒருவர்

(51ம் பக்கம் பார்க்க)

# உலகமயமாக்கல்: காலனித்துவத்தின் அதிநவீன வடிவமே!

M.N.M. இர்ஷாத்
வரகஸ்ஹின்னை, அக்குறணை

**(சென்ற இதழ் தொடர்)**

கடந்த இதழில் பூகோளமயமாக்கலினால் முஸ்லிம் சமூகத்தில் ஏற்படும் பாதகமான விளைவுகள் 7 ஐக் குறிப்பிட்டோம் அதன் தொடரை இவ்விதழில் தருகிறோம்.

8. உலகளாவிய ரீதியில் பரந்தளவில் இத்திட்டத்தினூடாக தமது கலாசாரத்தைப் பரப்பி வருகின்றன.

T-Shirts, Jeans, Fast food, போன்ற உணவு உடை வகைகளை KFC, MCDonald's, Pizza Hut போன்ற சர்வதேச நிறுவனங்களினூடாக பரப்புகின்றன. மேற்குலகு இப்படிப் பொதுக் கலாசாரத்தின் மூலம் குறிப்பாக முஸ்லிம் இளைஞர்கள், யுவதிகள், சிறார்களை கவர்ந்து ஈர்க்க முயற்சிக்கிறது. மேலும் சட்டவிரோத செயல்களுக்கும், குற்றச் செயல்களுக்கும், தீமைகளுக்கும் தூண்டக் கூடிய Pop கலாசாரத்தை பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு பரப்புகிறது. இது மனித உள்ளங்களையும், உணர்வுகளையும் கெடச் செய்யும் ஆற்றல்மிக்கது. இப்படியான பல்வேறு நடவடிக்கைகளையும், மேற்கத்தைய கலாசார பழக்கவழக்கங்களையும் முஸ்லிம்களும் அணுவணுவாக பின்பற்றக் கூடியவர்களாக மாறிவருகின்றனர். இதன் விளைவாக உளவியல் ரீதியாக சோம்பேறிகளாகவும் மாறி விடுகின்றனர்.

9. குற்றச் செயல்கள், நோய்கள், போதைப் பொருட்களின் தடை நீக்கம் என்பன சர்வதேசமயமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சமூகவியல் பிரச்சினைகளுக்கு மக்கள் உட்பட்டுள்ளனர். இவை மனித சமுதாயத்தை அழிவுபடுகுழியை நோக்கி இழுத்துச் சென்று கொண்டிருக்கின்றன.

சர்வதேச மயமாக்கல் திட்டம் சாதகங்களை மிகைத்து அதிகமான பாதகங்களை கொண்டதாகவும், இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் பாதகமாகவும், குழிபறிப்பதாகவுமே உள்ளது. இது மேற்கின் காலணித்துவ ஆதிக்கத்தினை அடியாகக் கொண்டமைந்துள்ள முன்னேற்றகரமான திட்டமாகும். மேற்குலகானது அடக்குமுறை, சுரண்டல் என்பவற்றை வளர்த்து வருகிறது. உதாரணமாக, ஒல்லாந்து (Dutch) தன்னாலான அனைத்து விதமான பண உதவியையும் இந்தோனேஷியாவுக்குக் கொடுக்கிறது. இதன் மூலம் இந்தோனேஷியாவில் அவர்களது நாகரீகத்தை கட்டியெழுப்புவதோடு வளங்களைச் சுரண்டியும் வருகிறது.

நாம் வரலாற்றில் பின்னோக்கிச் சென்றால் 18ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலங்களில் (கைத்தொழில் வளர்ச்சியுற்று வரும் காலப்பகுதியில்) சர்வதேச இஸ்லாமிய பூகோளமயமாக்கலை காணலாம். அதாவது, அன்று வலுவான பலம் பொருந்திய இஸ்லாமிய கிலாபத் தலைநிமிர்ந்து இருந்தது. அது இஸ்லாமிய நாகரிகத்தை அடித்தளமாகக் கொண்டே அமைந்திருந்தது. அது இஸ்லாமிய நாகரிகத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியது; அதனை வீணாக்கவில்லை. மாறாக, அதி சீக்கிரத்தில் அதனூடு சிறந்தொரு பங்களிப்பை வழங்கியது. அதில் செல்வந்தர், வறியவர் என்று சமூகம் இரு கூறாகப் பிளவுபட்டிருக்கவில்லை. அவர்களிடையே கூட்டுறவும், நல்லுறவும் நிலவியது. ஏழைகளுக்கு செல்வந்தர்களின் சொத்தில் நியாயமான உரிமை இருந்தது. பொதுவாகவே ஓர் ஆரோக்கிய நிலை காணப்பட்டது.

இஸ்லாம் பண்பாடான ஒழுக்கம் நிறைந்த மார்க்கம். அது ஆடைக் குறைப்பை அல்லது ஆடை நீக்குவதை அனுமதிக்கவில்லை. அதில் உறுதியான வரையறையை இட்டது. ஏனைய கலாச்சாரங்களின் கலை அம்சங் களையும் நீக்கிக் கொள்ளவில்லை. ஆனால் ஒழுக்க விழுமியங்களுக்கான அடிப்படைகளையும் இஸ்லாத்தின் பெறுமானங்களையும் கவனத்திற் கொண்டு உள்வாங்கிக் கொண்டது; அல்லது நிராகரித்து விட்டது. உலகமயமாக்கல் திட்டத்தில் பொதுவாக சில சாதகங்கள் காணப்பட்ட போதிலும் முஸ்லிம் சமூகத்திற்கும், இஸ்லாமிய வாழ்க்கை முறைக்கும் ஒரு பாரிய சவாலாக உலகமயமாக்கல் திகழ்கிறது. இச்சவாலை எதிர்கொள்ள சில அடிப்படை வழிகாட்டல்களை கோடிட்டுக் காட்டலாம். அவை பின்வருமாறு:

1. இஸ்லாம் பற்றியும் அதன் வரலாறு பற்றியும் ஆழமாக விளங்க வேண்டும்.

இது குறித்து முழுமையாக அறிந்திருக்க வேண்டும் என்பது இதன் பொருளல்ல. மாறாக, தேவைக்கேற்ப பிரச்சினைகளுக்கான தீர்வை அறிந்து கொள்வது தவிர்க்க முடியாதது. இஸ்லாமிய நாகரிகம் பற்றியும், உலகமயமாக்கல், அதன் பாதிப்புகள் போன்றன பற்றியும் போதியளவு அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

2. சடவாதத்திற்கு மாத்திரம் நாங்கள் கவனம் செலுத்துவதை தவிர்ந்து கொள்ள வேண்டும்.

உலகாயுதம், ஆன்மிகம் ஆகிய இரண்டையும் இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது. அது நடுநிலையான வாழ்க்கைநெறியாகும். தீவிரமான போக்கில் யாதாயினும் ஒரு துறையைச் சார்ந்திருக்கக் கூடாது.

3. முஸ்லிம் நாடுகள் உன்னதமான இஸ்லாமிய சமூகத்தை கட்டி எழுப்ப முயற்சி செய்வது கடமை ஆகும்.

அது இஸ்லாமிய நாகரீகத்தை அடியாகக் கொண்டமைய வேண்டும். குறிப்பாக முஸ்லிம் தலைவர்கள், புத்திஜீவிகள், அறிஞர்கள் ஆகியோா முஸ்லிம்களைச் சூழ உலகில் நடப்பவற்றையும், இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான சவால்களை எதிர்கொள்வதற்கான வழிவகைகள் குறித்தும் அறிந்து ஆக்கபூர்வமான திட்டங்களை வரைய வேண்டும்.

4. இத்திட்டங்களை கூட்டாக குறிப்பாக இஸ்லாமிய இயக்கங்கள் கூட்டாக தூர நோக்கோடு நீண்டகால திட்டத்தின்படி செயலாற்றுவது காலத்தின் தேவையும், சன்மார்க்கக் கடமையுமாகும். இதுவும் நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதில் உள்ளதாகும்.

இப்பாரிய சவாலை அனைவரும் கூட்டாக ஓரணியில் நின்று வளங்கள் அனைத்தையும் முடியுமான வரை திரட்டி எதிர்த்து நின்று செயலாற்றக் கடமைப்பட்டுள்ளோம். எமது தீனான சத்திய மார்க்கத்தை இதற்குப் பகரமாக குரல்வன்மையுள்ள சக்தியாகவும், வலுவான சக்தியாகவும், உலக மக்களின் வாழ்வுக்கான வழிகாட்டியாகவும் முன்வைப்பது தவிர்க்க முடியாதது.

இக்கட்டுரை
The Muslim World League Journal (March-2000) இதழ் - 27 ஐத் தழுவி எழுதப்பட்டது.

# செய்தது முறையா?

பாமியான் புத்தசிலை உடைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மாபெரும் ஊர்வலம் ஒன்று மாவனெல்லை நகரில் 12-03-2001ல் நடைபெற்றது. இவ் ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்டு மூக்கை சுளித்துக் கொண்டு சென்றது சிறப்பம்சம்.

சில பௌத்த தேரர்கள் ஒன்றுசேர்ந்து ஏற்பாடு செய்த இவ்வூர்வலத்தில் முஸ்லிம்களையும் கலந்து கொள்ளுமாறும், கடைகள் வியாபார ஸ்தலங்களை மூடி ஆதரவு தருமாறும் பள்ளிவாசல்கள் அனைத்துக்கும் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க முஸ்லிம் சகோதரர்கள் கலந்து கொண்டனர். பெரும் தொகையான முஸ்லிம் சகோதரர்கள் கலந்துகொண்டதை வரவேற்பதாக இருந்தாலும், சில முஸ்லிம் சகோதரர்களின் சில வார்த்தைகள் நூறு கோடி முஸ்லிம்களின் மனதையும் புண்படுத்தும்படியாக பரிமாறப்பட்டமை கவலைக்குரியதாகும். ''இந்த பாமியான் சிலைகள் இன்றைக்கு 2500 வருடங்களுக்கு முற்பட்டவை'' என பௌத்த சகோதரர்கள் பெரும் கவலை கொள்ள, அவர்களுடன் எமது முஸ்லிம் சகோதரர்களும் வருத்தப்பட்டுக் கொண்டனர். சிலை உடைப்பு சரியோ, பிழையோ பல கருத்துக்கள் முஸ்லிம்களின் மத்தியில் நிலவுகின்றன. கருத்து வேறுபாடுகள் முஸ்லிம்களின் மத்தியில் வேறுபாட்டை இனங்காட்டக் கூடியதாக உள்ளன. இதில் உலமாக்களும் நான் முந்தி, நீ முந்தி என்று ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்கின்றனர். தொலைக்காட்சிக்கு முகங்கொடுத்து முஸ்லிம் சமுதாயத்தின் சார்பில் தமது கருத்தை தெரிவிக்கின்றனர். இவ்விடயத்தில் புத்தியுடன் நடந்து கொள்வதே சிறந்தது. கொழும்பில் நடந்த தாலிபான் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தொலைக்காட்சியில் காட்டிவிட்டு அதனை நெறிப்படுத்தி தொகுத்தளிக்கும் செய்தியாளர் கூறுகின்றார்: ''நடக்க வேண்டியது நடந்தபின் ஆர்ப்பாட்டம் செய்து என்ன பலன்?'' எவ்வளவு சின்னத்தனமாக கருத்து!

க:பத்துல்லாஹ்வை சுற்றி வைக்கப்பட்டிருந்த சிலைகளுக்கு மத்தியில் நாயகம் (ﷺ) அவர்கள் தொழுதிருக்கிறார்கள். அவர்கள் நினைத்திருந்தால் தொடர்ந்து அவற்றை வைத்திருக்க முடியும். காலங்கள் செல்ல அவற்றில் மாற்றங்கள் நடைபெற்றன. தாலிபான் செய்தது தவறோ சரியோ வேறுவிடயம். ஆனால் முஸ்லிம்கள் சிந்தித்து செயலாற்றியிருக்க வேண்டும். கூட்டுச்சேர்ந்து ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதை விட தனித்துவமான முறையில் எடுத்துக்காட்டான ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களை நடத்திக் காட்டியிருக்க வேண்டும். இந்த நாட்டில் புதிய ஊர்வலக் கலாசாரத்தில் நாமும் சிக்கித் தவிக்கக் கூடாது.

இந்தியாவில் பாபரி மஸ்ஜித் தகர்க்கப்பட்டபோது ஆர்ப்பாட்டம், ஊர்வலம் எதுவுமே செய்யாது முஸ்லிம் சமூகம் என்ன செய்து கொண்டிருந்தது? இந்தியப் பிரதமர் வாஜ்பாய் செய்தது என்ன? 1983ல் நடந்த இனக்கலவரத்தின் போது ஆயிரக்கணக்கான சிலைகள் தகர்க்கப்பட்டன; தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. அப்போது ஆர்ப்பாட்டம் ஏன் இடம்பெறவில்லை? உலகளாவிய ரீதியிலும், உள்நாட்டிலும் கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாயல்கள் தாக்கப்பட்டமை அவர்களுக்குத் தெரியாத உண்மைகளா? அரச மரியாதையுடன் அன்று அரங்கேற்றம் நடந்தது. இன்று விஷமிகள் முஸ்லிம்களின் விடயத்தில் துவேஷத்துடன் செயல்படுகின்றனர்.

பசி பட்டியினுடன் வாழ்கின்ற மக்களுக்கு கருணை காட்ட முடியாத, ஈராக்மீது குண்டுகள் வீசி சிறுவர்களைக் கொன்றொழிக்கும் அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் இல்லை; எதிர்ப்பும் இல்லை. உலமாக்களே, முஸ்லிம் தலைவர்களே! சிந்தியுங்கள் செயல்படுங்கள்!!

**ஷபீக் எம் ஸரூக் - மாவனெல்லை**

# 'பிரேக்'

உஸ்தாத்
ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

ஒருமுறை நாம் வேகமாக பயணம் செய்து கொண்டிருந்த வாகனம் எதிர்பாராத விதமாக ஒரு திடீர் 'பிரேக்'கில் நிறுத்தப்பட்டது. இருக்கையில் இருந்தவர்கள் பிரேக்கின் மரியாதைக்காக ஒரு முறை எழுந்து உட்கார்ந்து கொண்டார்கள். பின் இருக்கையில் இருந்த ஒருவர் கேலியாக அதட்டும் குரலில், ''யாரடா பிரேக் போட்டவன்?'' எனக் கேட்க 'பிரேக்'கின் அதிர்ச்சியை மறந்து அனைவரும் கொல்லெனச் சிரித்தார்கள்.

'பிரேக்கை ஒருவர் தன்னிடம் வைத்துக் கொண்டு வாகனத்தை ஓட்ட விடாமல் விளையாடுகிறார். இதனைத் தட்டிக் கேட்க ஆளில்லை எனக் கோபம் காட்டியதுதான் அவரது பரிகாசத்தின் கரு.

அன்று எம்மை வாகனத்தில் சிரிக்க வைத்த அந்தப் பரிகாசம், இன்று களத்தில் எம்மைச் சிந்திக்க வைக்கிறது. சிந்திக்கும்போது இது பரிகாசமே அல்ல; வாழ்க்கையின் யதார்த்தமே இதுதானோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

குழந்தை கையில் ஒரு கத்தரிக்கோலை வைத்துக் கொண்டு காகிதத் துண்டுகளை அரிந்து போடுகிறது. இதனைக் கண்ணுற்ற தாய் உடனே கத்திரிக்கோலைப் பிடுங்குகிறாள். குழந்தையின் கற்பனைக்கும், சிந்தனா சக்திக்கும் அங்கு 'பிரேக்' போடப்படுகிறது.

ஒரு சாதாரண மனிதன் ஒரு பெரியவரை இன்னார் என்று தெரியாமல் தன்னைப் போன்ற ஒருவனாக நினைத்து நடந்து கொண்டான். அவனது அறியாமையை அங்கீகரிக்க முடியாத அந்தப் பெரியவர் அந்தப் பாமரனின் முகத்தில் அறைந்தாற்போல், ''நான் யாரென்று நினைக்கிறாய்? உன்னைப் போன்ற ஒரு பொறுக்கி என நினைத்துக் கொண்டாயா?'' எனப் பொரிந்து தள்ளுகிறார். உடனே அந்தப் பாமரன் தான் ஒரு உதவாக்கரை என்ற முடிவுக்கு வந்துவிடுகிறான். அதேநேரம் இனி எந்தப் பெரியவரையும் மதிப்பதில்லை என்றும் தீர்மானிக்கிறான். அங்கே அவனது ஆளுமைக்கு 'பிரேக்' போடப்படுகிறது.

இவ்வாறு சமூகத்தில் எண்ணற்ற பல உதாரணங்களை எடுத்துக் கூறலாம்.

ஒரு குழந்தையின் வளர்ச்சி, ஒரு மரத்தின் வளர்ச்சி, ஒரு சமூகத்தின் வளர்ச்சி இவையனைத்தும் ஒத்த இயல்பைக் கொண்ட வளர்ச்சிகளே. இவற்றின் வளர்ச்சிகள் கண்ணுக்குத் தெரிவதில்லை; அது இயற்கை. சிலர் இயற்கையின் இந்த நியதிக்கு மாற்றமாக செயல்பட விரும்புகிறார்கள். வளர்ச்சியைக் கண்ணால் காண ஆசைப்படுகிறார்கள். அதற்காக அவர்கள் மேற்கொள்ளும் முயற்சி பிரேக் போடுவதுதான்.

'வட்டி ஹராம்', 'பெண்கள் வெளிநாடு போகக் கூடாது', 'கலவன் பாடசாலைக்கு பெண் பிள்ளைகளை அனுப்ப வேண்டாம்', 'TV பார்ப்பது ஹராம்', 'புகைத்தல் ஹராம்', 'கந்தூரி, கத்தம் போன்றவைகளுக்கு இஸ்லாத்தில் ஆதாரமில்லை', 'கப்றுகளை வணக்கஸ்தலமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்', பெண்கள் தமது நிறுத்துவதில்தான் அதிகமானோரின் கவனம் செயல்படுகிறது. ஓட்டுவதில் ஆர்வமிருப்பதாகத் தெரியவில்லை. இது வாழ்க்கையின் ஒரு மருங்கில் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக அனைத்திலும் பரவியிருக்கும் ஒரு பண்பாக மாறிவிட்டது. ஏன்... இது த:வாவைக்கூட விட்டு வைக்கவில்லை. அங்கும் 'பிரேக்'கிற்குத்தான் அதிகமான வேலை. ஒருவர் ஓட்ட முயற்சிக்கிறார்; இன்னொருவர் பிரேக்கைப் போடுகிறார். வாகனமும் பழுதடைகிறது; பயணமும் தடைப்படுகிறது.

அன்று பரிகாசத்திற்காக ''யாரடா பிரேக் போட்டவன்'' என்று கேட்டதை இன்று நிஜமாகவே கேட்க வேண்டிய நிலை த:வாக் களத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் சிலர் ஓட்ட முயற்சிக்கும் போது, வேறு சிலர் பிரேக் போடுகிறார்கள்.

அங்கங்களை வெளிப்படுத்தித் திரிய வேண்டாம்'.... என்று தொடரும் விலக்கல்கள் பலநூறு.

'வேண்டாம்' என இஸ்லாம் விலக்கி வைக்கும் பாவங்கள் ஏராளமுண்டு. இந்த விலக்கல்களை 'ஹுதூதுல்லாஹ்' (அல்லாஹ்வின் வேலி) என்று குர்ஆன் கூறுகிறது. இந்த வேலிகளை ஒரு மனிதன் அண்மிக்கும்போது அவனை நிறுத்த வேண்டியிருக்கிறது. இதனை சரியாகச் செய்தால் இஸ்லாம் வளரும்; முஸ்லிம் சமூகம் எழுச்சி பெறும். பிழையாகச் செய்தால் இஸ்லாம் பற்றிய தெளிவின்மைகள் அதிகரிக்கும்; முஸ்லிம் சமூகம் குழப்பத்தில் ஆழ்ந்து விடும். முதலில் சரியாகச் செய்வது எப்படி? அதற்கான முன்மாதிரி யாது? என்பதைப் பார்ப்போம்.

முதலில் இந்த சமூகத்தின் தூக்கத்தைக் கலைக்க வேண்டும். மறுமை என்ற நீண்ட பயணத்தையும், சுவனம் என்ற நீண்ட இலக்கையும் மறந்து இந்த சமூகம் உலகின் போதையில் மயங்கிக் கிடக்கிறது.

அடுத்து போதை நீங்கி, தூக்கம் கலைந்து, இலக்கைப் புரிந்து கொண்ட சமூகத்தை ஒரு கட்டமைப்பினுள் கொண்டு வர வேண்டியிருக்கிறது. ஒரு பாடசாலை ஒரு அதிபரின் கீழ் கட்டுப்பாடாக இயங்குவது போல இந்த சமூகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். மதீனாவில் நபிகளார் இந்த சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்தினார்கள்.

> "ஒரு பிரச்சினையிலிருந்து அந்த சமூகம் விடுபடும்போது அல்லது ஒரு பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்போது அந்தப் பிரச்சினைக்கு மீண்டும் அந்த சமூகம் ஆளாகிவிடாமல் வேலி போடப்பட்டது."

அடுத்து இந்த சமூகம் தனது இலட்சியப் பணியை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் கவனிக்கப்பட வேண்டும். உலகில் அநீதிகளை அழித்து நீதியை வாழ வைப்பது முஸ்லிம்களின் பணி.

இந்தப் பாரிய பணிக்கு எண்ணற்ற வளங்கள் தேவையாகின்றன; நுட்பமான திட்டமும், தூரநோக்கும் அவசியமாகின்றன; சீரிய கல்வியும், உயர்ந்த பண்பாட்டுப் பயிற்சிகளும் இன்றியமையாத அம்சங்களாக மாறுகின்றன. முஸ்லிம் சமூகம் தனக்குள் இருக்கும் தீமைகளைக் களைந்து விடுவதும் இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளுள் ஒன்றாகும்.

இத்தகைய ஏற்பாடுகளோடு தனது இலட்சியப் பணிக்காகப் புறப்படும் ஒரு சமூகம் தனக்கெனத் தன்னிகரில்லாத ஒரு பாதையை வகுத்துக் கொள்ளும். அந்தப் பாதையின் முதல் இலக்கு உலக அமைதி; இறுதி இலக்கு சுவனம்.

நபி (ﷺ) அவர்கள் இத்தகைய ஒரு பாதையில் சமூகத்தை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அந்தச் சமூகம் தனக்குள் இருந்த தீமைகளைக் களைந்து கொண்ட விதம் இதுதான்.

**“ வெளிப் பார்வைக்கு தென்படுகிற பிரச்சினை ஷிர்க்; ஆனால் மறைவிலிருக்கும் பிரச்சினை பொருளாதாரம். இதை நீக்குவது எப்படி? அடித்து நொறுக்குவதனாலா? ஷிர்க்கின் பயங்கரத்தை ஆவேசமாக உபதேசிப்பதனாலா? ‘‘வயிற்றுப் பிழைப்புக்காக மார்க்கத்தை விற்று வாழுகிறார்கள்’’ என்று சாடுவதனாலா? ”**

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் மதீனாவில் ஒரு கட்டுக்கோப்பான சமூகத்தை உருவாக்கி அதன் பிரச்சினைகளுக்கு படிப்படியாக பரிகாரங்களை வழங்கினார்கள். ஒரு பிரச்சினையிலிருந்து அந்த சமூகம் விடுபடும்போது அல்லது ஒரு பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்போது அந்தப் பிரச்சினைக்கு மீண்டும் அந்த சமூகம் ஆளாகிவிடாமல் வேலி போடப்பட்டது.

பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்ட போது ‘களவு’ என்ற பாவத்துக்கு வேலி போடப்பட்டது. இவ்வாறு கூறும்போது சிலர் இப்படிக் கேட்கலாம்:
‘‘இந்த உதாரணத்தை ஷிர்க் போன்ற விடயங்களுக்கு ஒப்பிடலாமா? பொருளாதாரப் பிரச்சினைக்கும், களவு எடுப்பதற்கும் தொடர்பிருக்கலாம்; பொருளாதாரப் பிரச்சினைக்கும் ஷிர்க், பித்அத்துகளுக்கும் என்ன தொடர்பிருக்க முடியும்?’’
கேட்கப்பட வேண்டிய கேள்விதான். உலகின் எந்தப் பிரச்சினைக்கு பொருளாதாரத்தோடு தொடர்பில்லை?

**“வறுமை (குப்ர் எனும்) இறை நிராகரிப்புக்கு இட்டுச் செல்லும்.”**

**“உலக ஆசையே அனைத்துத் தீமைகளுக்கும் ஆணிவேர்”**
என்றெல்லாம் ஹதீஸ்கள் வந்திருக்கும்போது தொடர்பில்லை என்று எவ்வாறு கூற முடியும்?

தீமைகள் களையப்பட வேண்டுமானால் உலக ஆசைக்குப் பதிலாக சுவன ஆசை உள்ளத்தில் பதிக்கப்பட வேண்டும். குப்ரியத்திலிருந்து மனிதர்கள் பாதுகாக்கப்படுவதானால் பொருளாதார சீர்திருத்தம் இன்றியமையாதது. நபிகளாரின் இந்த அணுகுமுறை இன்று கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நான் ஒரு சித்த வைத்தியரிடம் சென்றிருந்தேன். அவர் ஒரு முஸ்லிம். என்னை உள்ளே வருமாறு அழைத்தார். ஆனால் பரிசோதிக்கும் இடமும், மருந்து கொடுக்கும் இடமும் முன்பகுதியிலேயே இருந்தன. ஏன் அழைக்கிறார் என்று தெரியாமல் உள்ளே சென்றேன். அங்கே ஓரிடத்தில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன; பூத்தட்டுகளும் வைக்கப்பட்டிருந்தன. ஒருவர் என்னைப் பிடித்துக் கொண்டு மந்திரம் ஓதத் துவங்கினார். நான் வெறுப்போடு அவரைப் பார்த்து, ‘‘வைத்தியம் பார்க்கிறீர்களா? பைத்தியம் பார்க்கிறீர்களா?’’ என்று கேட்டுவிட்டு கையை விடுவித்துக் கொண்டு வெளியே வந்துவிட்டேன். உடனே மற்றொருவர் என் பின்னால் விரைந்து வந்து என்னிடம் கூறினார், ‘உங்களுக்கு இதில் நம்பிக்கை இல்லை; எங்களுக்கும் இதில் நம்பிக்கை இல்லை. ஆனால் மனிதர்கள் இதை நம்புவதால்தான் செய்கிறோம். வாருங்கள் மருந்து தருகிறேன்’’ என்றார். ‘‘அந்த மருந்துகளையும் நான் நம்பத் தயாரில்லை’’ என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.

இங்கு எது பிரச்சினை? வெளிப் பார்வைக்கு தென்படுகிற பிரச்சினை ஷிர்க்; ஆனால் மறைவிலிருக்கும் பிரச்சினை பொருளாதாரம். இதை நீக்குவது எப்படி? அடித்து நொறுக்குவதனாலா? ஷிர்க்கின் பயங்கரத்தை ஆவேசமாக உபதேசிப்பதனாலா? ‘‘வயிற்றுப் பிழைப்புக்காக மார்க்கத்தை விற்று வாழுகிறார்கள்’’ என்று சாடுவதனாலா?

ஈமான், போதுமென்ற மனம், தியாக உணர்வு, பற்றற்ற தன்மை என்பவற்றோடு சமூகக் கட்டுக்கோப்பு, தலைமைத்துவம், பொருளாதாரத் தேவைகளுக்கு வழிகாட்டுதல், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல், அதற்கான பல்வேறு சமூகநலத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கே தீமைகளை அகற்றுவது இலகுவாக இருக்கும். தீமைகளின் பக்கபலங்கள் சிதறுண்டுவிடும். நன்மைகள் செழித்தோங்கி வாழ்வதற்கு நல்லதொரு களமும், சூழலும் கிடைக்கும். அப்போது சமூகத்தை ஓட்டலாம். அது முன்னேறும்; வளர்ச்சி பெறும்.

ஆனால், இன்றைய களத்தில் இத்தகைய ஓட்டுநர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். ‘பிரேக்’ போடுபவர்கள்தான் அதிகம். ‘‘செய்யாதே!’’, ‘‘போகாதே!’’, ‘‘இது கூடாது’’, ‘‘இது ஹராம்’’, ‘‘எதிர்த்து நிற்போம்’’, ‘‘போராடுவோம்’’ ‘‘விட்டுக் கொடுக்க மாட்டோம்’’, ‘‘உடைப்போம்; தகர்ப்போம்’’ என்ற பிரேக்குகள்தான் விழுந்து கொண்டிருக்கின்றன.

துரதிஷ்டம், இந்த பிரேக்குகளும் இன்று இயங்காமல் போய்க் கொண்டிருக்கின்றன. த'.வாவில் நபிகளாரின் சுன்னாவை உணருமா த'.வா களம்?

# முஸ்லிம்களின் வீழ்ச்சியில் உலகம் இழந்தது என்ன?

எம். ஜே. எம். மன்ஸூர்

"முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன என்ற தலைப்பு பல்வேறு அறிஞர்களுடைய ஆய்வுகளுக்கும் கருத்துரைகளுக்கும் ஆய்வுத் தலைப்புகளுக்கும் உட்பட்ட ஒன்று. இங்கு பின்வரும் இரு தலைப்புகளின் அடிப்படையில் இதனை இவ்விடயத்தை நோக்குவோம்:

1. **முஸ்லிம்களின் வீழ்ச்சி**
2. **முஸ்லிம்களின் வீழ்ச்சியால் ஏற்பட்ட இழப்புக்களும் நஷ்டங்களும்**

## 1. முஸ்லிம்களின் வீழ்ச்சி

நாங்கள் வாழும் காலத்தை இன்றைய உலகம் இஸ்லாத்தினதும், முஸ்லிம்களதும் வீழ்ச்சியாக கணிப்பிடுவது எதனை அடிப்படையாகக் கொண்டு?

முஸ்லிம் சமூகம் இன்றைய உலகின் மொத்த சனத்தொகையில் 6 பில்லியனுக்கும் அதிகமான சனத்தொகையை (சுமார் 1/4 பகுதி) உள்ளடக்கிய ஒரு சமூகம்; உலகத்தின் மிகப்பெரிய நிலப் பரப்புக்கு சொந்தம் கொண்டாடுகின்ற ஒரு சமூகம்; உலகின் மிகப்பெரும் கனிப் பொருள் வளத்தை சொந்தம் கொண்டாடுகிற சமூகம்; அதனுடைய கனிப்பொருள் வளங்களுள் ஏதாவது ஒன்றை ஒரு வாரத்துக்கு வழங்காது நிறுத்தி விட்டால் உலகத்தின் இயந்திரங்கள் இயங்க மாட்டாது என்ற அளவுக்கு சக்தி படைத்த ஒரு சமூகம்; பல இலட்சம் பள்ளிவாசல்களைக் கொண்ட சமூகம்.

இறுதியாக 'இஸ்லாமிய உலகம்' என்று அழைக்கப்படுமளவு சக்தி படைத்த ஒரு சமூகம் வீழ்ச்சியடைந்த சமூகமா?

இத்தகைய வலிமையும், ஆற்றலும் சாதனங்களும் கொண்ட ஒரு சமூகம் அல்லது அந்த சமூகத்தை தாங்கி நிற்கின்ற கொள்கை பின்னடைந்துள்ளதா? வீழ்ச்சி அடைந்ததா? அவ்வாறு கூற முடியுமா?

ஆங்காங்கே சில நாடுகளில் வறுமை தாண்டவமாடுவது உண்மைதான்; இன்னும் நாடுகளில் முஸ்லிம்கள் அதிகமாக அகதிகளாக வாழ்வது உண்மைதான்; பிரச்சினைகளும், சண்டைகளும், சச்சரவுகளும் உள்ளது உண்மைதான். ஆனால் அவற்றை ஒருபுறமும், மேலே குறிப்பிட்ட வளங்களையும், சக்திகளையும் ஆற்றல்களையும் மறுபுறமும் நிறுத்திப் பார்க்கும் பொழுது இஸ்லாமிய சமூகத்தை வீழ்ச்சியுற்ற பின்தங்கிய, நலிவுற்ற சமூகமாக கருத முடியுமா? அவ்வாறு கருதுவது பொருத்தமானதா? "முஸ்லிம்கள் நலிவுற்றவர்களாக இருக்கிறார்கள் அல்லது முஸ்லிம்கள் வீழ்ச்சி அடைந்து விட்டார்கள்" என்று ஏன் கூறுகிறோம்? இந்த கேள்விதான் இந்த தலைப்பிலிருந்து சிந்திக்க வேண்டிய காரணமாகும். இந்தக் கேள்விக்கு ஒரு சுருக்கமான விடை இருக்கிறது.

இந்த அனைத்து சக்திகளையும் கொண்ட இந்த இஸ்லாமிய சமூகம் *உலகின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற ஒரு வல்லரசாக ஒரு சாம்ராஜ்யமாக உலகின் வாழ்க்கைப் போக்கை தனது கையிலே இருத்திக் கொள்கின்ற ஒரு சமூகமாக இல்லாதிருப்பதால்தான் இந்த சமூகத்தை வீழ்ச்சியடைந்த சமூகம் எனக் குறிப்பிடுகிறோம்.* ஏனெனில் இந்த சமூகம் அனுப்பப்பட்டதன் நோக்கம் ஏராளமான கனிப்பொருட்களை சொந்தமாக்கிக் கொள்வதற்கு அல்ல; ஏராளமான நாடுகளைக் கொண்ட ஒரு தனி உலகமாக இருப்பதற்கல்ல; இந்த சமூகம் அனுப்பப்பட்டது ஆழ்ந்த வலிமை கொண்ட மிக்க மூளைசாலிகளைக் கொண்ட சமூகமாக இருப்பதற்பல்ல; இந்த சமூகம் அனுப்பப்பட்டது இந்த ஆயுதங்களைத் தனது கையில் குவித்து வரலாற்றிலே படையெடுப்புகளை நடத்தி வெற்றி கண்ட மிகப்பெரும் கதாநாயகர்கள் போன்ற ஒரு சமூகமாக தன்னை அடையாளம் காட்டிக் கொள்வதற்கல்ல; இந்த சமூகம் உலகத்துக்கு அனுப்பப்பட்டதெல்லாம் அல்லாஹ்வுடைய வேதமாகிய இந்த தீனை உலகத்திற்கு அங்க சம்பூரணமாக நடைமுறை ரீதியாக எடுத்துச் சொல்லத்தான்.

எந்தக் காலப் பிரிவிலாவது இச்சமூகம் அந்நோக்கத்தை நிறைவேற்றத் தவறினால் எந்தக் காலத்திலாவது இந்த சமூகம் அல்லாஹ்வுடைய தீனை தனது கொள்கையாக ஏற்று இந்தக் கொள்கையை முழுமையாக உலகத்துக்கு பிரகடனப்படுத்தி உலகத்தின் வாழ்க்கைப் போக்கினை கொள்கையின் அடிப்படையில் நடாத்துவதற்கு இந்த சமூகம் தவறிவிட்டால் அப்பொழுதுதான் இந்த சமூகம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று கருத்தாகும்.

அது ஒரே நேரத்தில் அல்லாஹ்வுடைய அரசியலுக்கு சான்றுபகர வேண்டும். அல்லாஹ்வுடைய அரசியல் கொள்கைகளை உலகத்துக்கு எடுத்துச் சொல்லி உலக மக்கள் நீதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் 'உங்களைப் படைத்த அல்லாஹ்வுடைய அரசியல் கோட்பாடுகள் எம்மிடத்தில் இருக்கின்றன; எம்மை நோக்கி வாருங்கள்" என்று அழைப்பு விடுத்து அவர்களை அரவணைக்கின்ற ஒரு சமூகமாக இருந்தால் மாத்திரம்தான் அந்த சமூகம் அரசியல் ரீதியாக எழுச்சி பெற்ற சமூகமாக கருதப்படும். பொருளாதார ரீதியாக இந்த சமூகம், "உலகத்தில் எங்களிடத்தில்தான் சமத்துவத்தையும், வறுமையைப் போக்கக்கூடிய ஏற்றத் தாழ்வில்லாத ஒழுங்கான வர்க்க பேதமற்ற ஒரு பொருளாதார முறை இருக்கிறது; நீங்கள் உங்களுடைய பொருளாதார ஆய்வாளர் அனைவரும் பல காலமாக ஆய்ந்து பெற முடியாத அழகிய தீர்வுகள் எங்களது வேதத்தில் இருக்கிறது." என்று நடைமுறை ரீதியாக உலகத்துக்கு எப்போது சான்றுபகர்கிறதோ அப்பொழுது தான் இந்த சமூகம் பொருளாதார ரீதியாக முழுமையான எழுச்சிபெற்ற சமூகமாக கணிக்கப்படும்.

எப்பொழுது இந்த சமூகம் உலகம் ஏங்கிக் கொண்டிருக்கின்ற சமூக நீதிக்காக, மன அமைதிக்காக, சகோரத்துவத்திற்காக- "அல்லாஹ்வுடைய வேதம் இந்த அனைத்துக்கும் வழிகாட்டுகிறது; அது எங்களிடத்தில் இருக்கிறது" என்று நடைமுறயைாக சாட்சி சொல்கிறதோ அப்போதுதான் ஒரு எழுச்சி பெற்ற சமூகமாக மிளிரும். அல்குர்ஆன் அதனைத்தான் இவ்வாறு சொல்லிக் காட்டுகிறது:

**"அவ்வாறே நாம் உங்களை நடுநிலையான சமூகமாக ஆக்கினோம். அல்லாஹ்வின் தூதர் உங்களுக்கு ஷாஹிதாக இருந்தது போல் நீங்கள் மனித சமுதாயத்திற்கு ஷாஹித்களாக இருக்க வேண்டும் என்பதற்காக"**

**(ஸூரதுல் பகரா :143)**

அல்குர்ஆன் மீண்டும் கூறுகிறது:

**"மனிதர்களுக்காக வெளியாக்கப் பட்ட சமூகங்களுள் சிறந்த சமூகமாக (கைர உம்மத்) நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்,) நீங்கள் நன்மையைக் கொண்டு ஏவுகிறீர்கள்; தீமையைக் கொண்டு தடுக்கிறீர்கள்; அல்லாஹ்வை விசுவாசம் கொள்கிறீர்கள்",**

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவேதான் இந்த சமூகம் (கைர உம்மத்) பிறந்தது. அதாவது நல்லதை ஏவி, தீமையைத் தடுப்பதால் கைர உம்மத் ஆக இருக்கிறீர்கள். நீங்கள் பல நாடுகளைக் கொண்ட, பல நிலப்பரப்புகளைக் கொண்ட, பல கனிப்பொருள் வளங்களைக் கொண்ட, பல மனிதவளங்களைக் கொண்ட சமூகமாக இருப்பதற்காக அல்ல என்று அல்குர்ஆன் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

எனவே நாங்கள் வீழ்ச்சியடைந்திருப்பதற்கான காரணம் -நவீன இஸ்லாமிய உலகம் மேற்சொன்ன அனைத்து வளங்களைக் கொண்டிருந்த போதிலும்- அல்லாஹ் இந்த சமூகத்திலிருந்து எதிர்பார்த்த அந்த பரிபூரணமான நடைமுறை ரீதியான அந்தப் பிரகடனம், வழிகாட்டல், ஆதிக்கம் என்பவற்றை வழங்க இந்த சமூகம் தவறிவிட்டது என்பதுதான்.

உலக சனத்தொகையில் 1/4 பகுதியாக இருக்கலாம்; உலகத்திலுள்ள இயந்திரங்களை நிறுத்துகின்ற கனிப்பொருள் வளங்கள் இருக்கலாம். ஆனாலும் இவை அனைத்தும் இருந்தாலும் *அல்லாஹ் குறிப்பிட்ட அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற எண்ணம், அபிலாஷை இல்லா விட்டால் இந்த சமூகம் பின்னடைந்த நலிவுற்ற சமூகம் என்பது அல்குர்ஆனின் கருத்தாகும்.* எனவேதான் முஸ்லிம்கள் வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள் என குறிப்பிடுகிறோம்.

## வீழ்ச்சியின் மறுபக்கம்

இந்த கருத்தை சொல்லும்போது உங்களது உள்ளத்தில் ஒரு வினா எழும்பலாம். இந்த கோடிக்கணக்கான முஸ்லிம்கள், பல இலட்சக்கணக்கான பள்ளிவாசல்கள், அவர்கள் நிறைவேற்றுகின்ற கடமைகள், இபாதத்துக்கள் அவர்களினால் செய்யப்படும் நற்கிரியைகள் இவற்றின் பொருள் என்ன? இவற்றை நாம் எத்தரத்தில் வைத்து நோக்குவது? இவற்றுக்கான மதிப்பீடு என்ன? இவற்றின் பெறுமதி என்ன? என்பது உங்களது உள்ளத்துள் தோன்றலாம்.

ஆம்! எங்களது வீழ்ச்சியின் மறு பக்கமும் அதுதான். ஒரு பக்கம் நாங்கள் அல்லாஹ்வுடைய தீனை சம்பூரணமாக வாழ்க்கையின் எல்லா துறைகளுக்கும் இதுதான் சரியான கொள்கை என்பதை உலகத்துக்கு நடைமுறைரீதியாக எடுத்துக்காட்டாத அநீதியை இழைத்ததன் காரணமாக நாங்கள் நலிவுற்றிருக்கிறோம்.

முக்கியமான கருத்தரங்கு ஒன்றில் ஓர் இஸ்லாமிய அறிஞரிடத்தில், ''முஸ்லிம்கள் 56 நாடுகளைக் கொண்ட ஒரு தனியான உலகமாக இருந்தும் ஒரு தனியான நாடாக இருக்கின்ற எதிரி இஸ்ரேலிடமிருந்து ஏன் பைத்துல் மக்திஸை இன்னும் எம்மால் விடுவிக்க முடியாதிருக்கிறது?'' என்று கேட்டார். அவர் சொன்னார்: ''56 நாடுகளாக இருப்பதால்தான் இவ்வாறான ஒரு நிலை உருவாகியிருக்கிறது.''

நாம் 56 நாடுகளாக பிரிந்து வாழ வந்தவர்கள் அல்ல. அதற்காக அல்குர்ஆன் எம்மை வர்ணிக்கவுமில்லை. அந்த நோக்கத்திற்காக அல்லாஹ் எம்மை அனுப்பி வைக்கவுமில்லை. *நாம் உலகத்திற்கு வந்ததெல்லாம் ஒரு சாம்ராஜ்யமாக வாழவ்தற்காக! அந்த சாம்ராஜயம்தான் உலகத்தின் அரசியலை, பொருளாதார முறையை, சட்டத்தை, சமூக நீதியை, ஒழுக்கத்தை, கல்வியை அனைத்தையும் தீர்மானிக்கின்ற சக்தி வாய்ந்த சாம்ராஜ்யமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் வெற்றி பெற்ற சமூகமாக இருக்க முடியும்.*

நபியவர்கள் மதீனாவிலே நிர்மாணித்த அந்த சமூகம் இப்பொழுது எங்களிடத்திலிருக்கின்ற கனிப்பொருள் வளங்களைப் பெற்றிருக்கவில்லை; எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை; ஆள்பலத்தைக் கொண்டிருக்கவில்லை; ஆயுத பலத்தைக் கொண்டிருக்கவில்லை. ரஸுலுல்லாஹ்வுடைய அந்த சாம்ராஜ்யம் சிறிய நிலப்பரப்பைத்தான் கொண்டிருந்தது. அந்த சாம்ராஜ்யத்துக்கு உலகத்திலிருந்த மிகப் பெரிய சாம்ராஜ்யங்கள் அஞ்சின; ரஸுலுல்லாஹ்வுடைய கடிதம் சென்றவுடன் அவர்கள் நடுங்கும் கரங்களால்தான் அதனைப் பெற்றார்கள்; நபி (ﷺ) அவர்களது படை எங்களை நோக்கி வந்துவிடுமோ என்று அஞ்சினார்கள்.

மதீனா என்ற அந்த வரண்ட வனத்தில், ஒரு சில மனிதர்களே இருந்த அந்தப் பாலை வனத்தில் வளங்கள் அற்ற அந்த பாலை வனத்தில் எதுவுமே அற்ற அந்த நிலப் பரப்பில் ஸ்தாபிக்கப்பட்ட அந்த சாம்ராஜ்யத்துக்கு முழு உலகமும் அஞ்சியது என்றால், இந்தக் கொள்கையை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த முழு உலகம் விரும்பியது என்றால் இன்று அதற்கு நேர்மாற்றமாக ஏராளமான வளங்களையும், சக்திகளையும் கொண்ட சக்திவாய்ந்த இந்த சமூகத்தைக் கண்டு யாரும் அஞ்சுவது இல்லையெனில் அதற்குரிய அடிப்படைக் காரணம் இந்தக் கொள்கையின் பரிணாமத் தன்மையை பிரகடனப்படுத்தவில்லை என்பதே!

## எமது வணக்க வழிபாடுகளின் நிலை

இஸ்லாத்தின் பெயரால் நாம் செய்கின்ற அனைத்து செயற்பாடுகளிலும் ஒரு பிரதான குறை இருக்கிறது. அந்த அனைத்து செயற்பாடுகளிலும் -அது நம்பிக்கையாக, வணக்கங்களாக, கடமைகளாக, தர்மங்களாக, நற்கிரியைகளாக இருந்தபோதிலும்- அவற்றில் அநேகமானவை மரபுரீதியான ஒரு பின்பற்றலாகத்தான் இருக்கிறது; உயிரோட்டம் கிடையாது; உயிர்துடிப்பு கிடையாது; வலு கிடையாது. அவற்றின் மூலம் இஸ்லாமிய சமூகம் எதனைப் பெற வேண்டுமோ அதனையும் பெறுவதில்லை. நாம் இஸ்லாமிய கொள்கைக்கான பரிபூரணமான சாட்சிகளாக இருப்பதும் இல்லை. இஸ்லாத்தின் பெயரால் நாம் செய்கின்ற எந்தக் கடமைகளையும் உயிரோட்டமாக செய்ததுமில்லை.

ஒரு குழந்தை பிறந்ததும் அதன் காதில் ''அல்லாஹு அக்பர்'' என்று கூறி ஊதப்படுகிறது. இறக்கும் பொழுதும் ''லா இலாஹ இல்லல்லாஹ்'' என்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த பிறப்புக்கும் இறப்புக்கும் ''அல்லாஹு அக்பர்'' ''லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்'' என்ற சொற்றொடர்களின் கருத்து யாது? பொறுப்புகள் என்ன? வேண்டுதல்கள் என்ன? என்று அந்த மனிதர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. பல்லாயிரம் முறை இந்தச் சொற்கள் அவனைக் கடந்து செல்லும்; பல்லாயிரம் முறைகள் இந்த வார்த்தைகள் ஓதிக் காண்பிக்கப்படும். ஆனால் அவன் அவற்றை உணர்ந்து பார்ப்பதில்லை.

எனவே உயிரோட்டமில்லாத நம்பிக்கை, எந்த நோக்கத்திற்காக அல்லாஹ்வுடைய தீனில் வணக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டனவோ அந்த நோக்கத்தை வணக்கங்கள் நிறைவேற்றவில்லை; அவை எதுவும் உயிரோட்டமாக நிறைவேற்றப்படவில்லை. அல்லாஹ்வையும் மனிதனையும் இணைக்கின்ற மி'ராஜ் என வர்ணித்துக் காட்டிய இந்தத் தொழுகை எத்தனை பேரது உள்ளத்தில் 'மி'ராஜ்' ஆக இருக்கிறது?

தொழுகை 'அல்லாஹு அக்பர்' என்று ஆரம்பிப்பதிலிருந்து ஸலாம் கொடுக்கும் வரையான 'துஆ' க்கள் 'அவ்ராது' கள் ஓதும் குர்ஆன் வசனங்கள் என்பவற்றுள் எது எமது உள்ளத்தை தொட்டுச் செல்கிறது? எத்தனை பேருக்கு அதன் கருத்து தெரியும்?

இஸ்லாத்தின் மிகப் பிரதானமான ஒரு அம்சத்தை இஸ்லாமிய சமூகம் நிறைவேற்றுகிறது. ஆனால் உயிரோட்டமில்லாத மரபுரீதியான ஒரு பின்பற்றலே அது.

இந்திய உபகண்டத்தை முஸ்லிம்கள் 800 ஆண்டுகள் ஆட்சி செய்தார்கள். அதன் இறுதிக் காலப் பகுதியில் (முகலாய சாம்ராஜ்யம்) நடைபெற்ற ஒரு சம்பவம் உயிர்த்துடிப்பான செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. முகலாய மன்னரான அவரங்கஸீப் காலத்தில் இஸ்லாத்துக்காக தன்னை அர்ப்பணித்த ஒரு பெரும் மகான் மரணமடைந்த பொழுது அவருடைய ஜனாஸா தொழுவிக்கப்படுவதற்காக பள்ளிவயாலில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிவாயலில் பல்லாயிரக் கணக்கானோர் குழுமியிருக்கிறார்கள்.

(50ம் பக்கம் பார்க்க)

– ஆஸிம் அலவி –

"அநாகரிகமான ஒரு முல்லாக்களின் கும்பல் தனது காடைத்தனத்தைக் காட்டி விட்டது; அவர்களுக்குக் கலையுணர்வே கிடையாது; புராதன சின்னங்களை மதிக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்வதற்கு கூட திராணியற்றவர்கள்; இஸ்லாம் அல்லாத ஏனைய மதங்களுக்கு தமது ஆளுகைக்குள் இருப்பதற்குக் கூட அனுமதி கிடையாது என முழங்கியவாறு மணல்பாறைகளில் சுமார் 1500 வருடங்களுக்கு முன் செதுக்கப்பட்ட புத்தர் சிலையையும், உலக பௌத்தர்களின் இதயங்களையும் வெடிவைத்துத் தகர்த்து விட்டார்கள். அவர்கள் நேர்மையான முஸ்லிம்களல்ல; 'இஸ்லாமிய காட்டுமிராண்டிகள்". ஆப்கான் சிலை உடைப்பு விவகாரத்தை மேற்கு நாட்டு ஊடகங்கள் இப்படித்தான் நமக்குப் படம்பிடித்துக் காட்டின.

உண்மையில் ஆப்கானிஸ்தான் தரப்பிலிருந்து கிடைக்கும் தகவல்களை மையமாக வைத்து நோக்குகையில் அண்மைய தசாப்தங்களில் அச்சிலைகளைத் தரிசிப்பதற்காக இலங்கையிலிருந்தோ அல்லது வேறு நாடுகளிலிருந்தோ யாத்திரிகர்கள் சென்றுள்ளதற்கான ஆதாரங்கள் கிடையாது. ஆனால் அந்நாட்டில் இஸ்லாம் அறிமுகமானதும் மக்கள் மனமுவந்து அதனை ஏற்றுக் கொண்டதற்கான வரலாறு உண்டு. 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் புராதன சின்னங்கள் பட்டியலில் பாமியான் சிலைகள் இருந்த போதும் இச்சர்ச்சை மூன்று வருடங்களுக்கு முன் தோன்றுவதற்கு முன்பு இலங்கையர் அதில் கரிசனை எடுத்தார்களா எனக் கேள்வி கேட்க வேண்டியுள்ளது? புத்த பெருமானின் சிலைகள் அன்னாரை வணங்குவதற்காக அல்ல; பதிலாக அன்னாரை ஞாபகப்படுத்துவதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்பதுதான் பௌத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.

# ஆப்கானிஸ்தானில் யாருக்காக அழுவது?

தாலிபான் நிர்வாகம் பாமியான் மாநிலத்தில் செதுக்கப்பட்டிருந்த பிரமாண்டமான இரு புத்தர் சிலைகளை இடித்து நொறுக்கிய சம்பவம் நாடுபூராவும் ஆவேச அலைகளைக் கிளப்பிவிட்டது. 'பௌத்தர்களின் இதயம் வெடிக்கப்போகிறது'; 'புராதன சின்னம் அழியப் போகிறது' என்ற குரல்கள் இடிமுழங்கின. பௌத்த மதத்தில் பற்றுள்ளவர்களும் இவ்வலையால் கவர்ந்து இழுக்கப்பட்டவர்களும் தெருவில் இறங்கினர். இலங்கையில் பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் அவர்களது உணர்வுகளை எம்மால் புரிந்து நியாயம் காணமுடியும். எனினும் ஏன் நாம் இச்சர்ச்சையை சற்று விரிவாக குறிக்கோள் அடிப்படையில் நோக்கத் தவறினோம்? எமது சுயமான அழுக்கையும் நாற்றத்தையும் மறந்துவிட்டு அடுத்தவனின் அழுக்குக்கு எதிராக உணர்ச்சிவசப்பட்டு போர்க்கொடி தூக்கினோமா? இவ்விடயங்களையும் சற்று அலசிப்பார்க்க வேண்டியுள்ளது.

பாமியான் சிலைகள் பௌத்தர்களுக்கு எவ்வகையில் முக்கியத்துவமடைகின்றன? இச்சர்ச்சையைக் கிளப்பிவிட்டவர்கள் யார்? முஸ்லிம்கள் என்ன நிலைப்பாட்டை எடுத்திருக்க வேண்டும்? போன்ற விடயங்களையும் பார்த்தாக வேண்டும்.

இந்தக் கோட்பாட்டை பாமியான் சிலையுடன் ஒப்பிட்டு நோக்கினால் 100% முஸ்லிம்களைக் கொண்ட அந்நாட்டில் (வெளிநாடுகளிலிருந்து சென்ற மாற்று மதத்தினரும் அங்கே வாழ்கின்றனர்.) புத்தபெருமானை ஞாபகப்படுத்த வேண்டும் என்ற அவசியம் எவருக்கும் கிடையாது.

இச்சிலைத் தகர்ப்பின்போது பௌத்தர்களுள் இரு வகையான மக்கள் ஆத்திரமடைந்தார்கள். முதல் வகையினர், தமது மதமும், அதன் புராதனச் சின்னங்களும் வரலாறும், அழியப் போகிறது என்ற எண்ணத்தில் அச்சமடைந்த நேர்மையான மனிதர்கள். இவர்கள் பிரச்சினையை குறிக்கோள் அடிப்படையில் நோக்கி, மத ரீதியாக எந்த முக்கியத்துவமும் அற்ற சிலைகளுக்காக சண்டையிடுவதால் என்ன லாபம் என்ற கேள்வியை எழுப்பி தமது ஆவேசத்தைத் தணித்திருப்பார்கள். அடுத்த வகையினர்தான் துவேஷத்தை மூட்டி இனங்களுக்கிடையில் சண்டையை மூட்டி இலங்கையிலும் தாலிபானைப் போன்று தாடி வளர்த்த பயங்கரவாதிகள் இருக்கின்றனர் என்ற பேரச்சத்தை ஏற்படுத்த முயற்சித்தனர். பௌத்தர்களைப் போன்று ஏனைய இனத்தவர்களுக்கும் மன உணர்வுகள் இருக்கின்றன என்பதை இவர்கள் மறந்து விட்டனர். அகில இலங்கை ஹிந்து மகாசபையின் அறிக்கைப்படி ஹிந்துக்களுக்கு எதிரான துவேஷத்தினதும் யுத்தத்தினதும் காரணமாக சுமார் 118 ஆலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் கவலைகொண்டு உளத் தாக்கமடைந்த ஜீவன்களது குரல் தேசிய ரீதியாக எழுப்பப்படவில்லை. அரசாங்கம் கூட அவற்றுக்கு நஷ்டஈடு வழங்கவில்லை. ஏன் இந்தப் பாகுபாடு? என இத்தீவிரவாதிகளிடம் நாம் வினவ வேண்டும்.

இதில் விநோதம் யாதெனில் தினந்தோறும் வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதிபுனிதஸ்தலமான தலதா மாளிகை தாக்கப்பட்டபோது எதிர்பார்த்ததைவிடக் குறைவாகவே ஆத்திர அலை எழுந்தது. ஆனால் அதற்கு நேர்மாற்றமாக, பல நூற்றாண்டுகளாக பௌத்தர்கள் மறந்திருந்த சிலைக்காக அளவுக்கதிகம் இலங்கை பௌத்தர்கள் ஆவேசப்பட்டனர் என்றுதான் கூறவேண்டும்.

இந்நிலை தோன்றுவதற்கு யார் காரணம்? நீங்கள் சற்று பின்னோக்கிப் பாருங்கள். 1991ம் ஆண்டு அமெரிக்கப் போர் விமானங்கள் ஈராக்கில் பொதுமக்கள் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டிருந்த குடியிருப்புக்களின் மீது சதாம் ஹுஸைனின் ராணுவத்தை அழிக்கிறோம் என்ற பெயரில் தாறுமாறாக குண்டு வீசியபோது CNN தொலைக்காட்சி ஒரு கறுப்பு நிற விகாரமான கடல்புறாவை தொடர்ந்து தொலைக்காட்சியில் காட்டிக் கொண்டிருந்தது. அதாவது, சதாம் ஹுஸைன் குவைத்தில் எண்ணெய்த் தாங்கிகளை உடைத்து விட்டதால் கடல்நீர் மாசடைந்து வெண்ணிறமான புறாக்களின் நிறம் கறுப்பாகிவிட்டது என்பதனை எடுத்துக் காட்டுவதற்காகவே அப்படிச் செய்தது. தமகெதிராக தலைதூக்கும் சமூகம் விலங்கினங்களை விட கீழ்த்தரமானது என்பதுதான் இதன் விளக்கம்.

> "பாமியான் சிலையை காப்பாற்றுவதற்காக கோபி அன்னானும் அவரது யூத மனைவியும் கச்சையைக் கட்டிக்கொண்டு பாகிஸ்தான் எல்லைக்கு விரைந்து சென்றனர். அப்படியெனில் அவர்கள் ஏன் பட்டினியால் வாடும் குழந்தைகளுக்காக ஒரு தடவை சென்றிருக்கக் கூடாது?"

முற்றிலும் இதேவிதமான நாடகம்தான் இவ்விடயத்திலும் நடந்தது. அமெரிக்காவினதும் ஸியோனிச சக்தியினதும் கைக்குள் இருக்கும் சர்வதேச ஊடகத்துறையானது

எவ்விடயத்தை சர்ச்சைக்குள்ளாக்க வேண்டும்? எவற்றை சிறிதுபடுத்தி அல்லது பெரிதுபடுத்திக் காட்டவேண்டும் எனும் கலையை நன்கு புரிந்து வைத்துள்ளது. மேற்படி சிலை விடயம் வேறு வகையில் உருப்பெற்றாலும் இஸ்லாத்துக்கு எதிராக பௌத்தர்களையும் புராதன சின்னங்களில் ஆர்வமுள்ளோரையும் துண்டிவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக இலங்கை பௌத்தர்களுக்கு முக்கியத்து வமற்ற ஒன்று மிக முக்கியமானதாக மாறிவிட்டது.

தலதா மாளிகை தகர்க்கப்பட்டபோது இந்த அமெரிக்காவும் ஐ.நா. சபையும் எங்கே இருந்தன? கொரியாவில் நூற்றுக் கணக்கான புத்தர் சிலைகள் அழிக்கப்பட்ட போது இலங்கை பௌத்தர்கள் ஏன் ஆவேசப்படவில்லை. அங்கே முஸ்லிம்கள் செய்திருந்தால் சர்வதேச ஊடகத்துறை பௌத்தர்களை தூண்டி விட்டிருக்கும். கம்போடியாவில் அமெரிக்கா அழித்த 3000 பௌத்த விகாரைகளின் விபரம் ஐ.நா. சபைக்கும் 'யுனெஸ்கோ' வுக்கும் தெரியாமலா இருந்தது?

இச்சிலை தகர்ப்பில் இந்தியா அடைந்த ஆத்திரம் கவலைக்குரியது. புத்த மதம் பிறந்த பூமி என்ற வகையில் இந்தியா அம்மதத்துக்குச் செய்த அநியாயங்கள் தனியாக ஆராயப்பட வேண்டியவை. பிராமணர்கள் பௌத்தர்களுக்கும் பௌத்த மதத்துக்கும் இழைத்த கொடுமைகள் ஏராளம். இப்போதும்கூட 'புத்தகாயா' தமக்குச் சொந்தமானதென அவர்கள் வாதாடுகின்றனர். இது ஒரு ஹிந்துத் துறவி யால் 1590ல் கட்டப்பட்டதென அவர்கள் வாதாடுகின்றனர். அங்கே இதற்காக BJP-RSS தீவிரவாதிகளுக்கும் பௌத்தர்களுக்கு மிடையில் பல சண்டைகள் மூண்டுள்ளன. ஹிந்துக்கள் எவ்வகையிலும் பௌத்தர் களுக்கு புத்தகாயாவை விட்டுக் கொடுப்ப தாக இல்லை. இந்நூற்றாண்டின் ஆரம்பத் தில் திரு. அநகாரிக தர்மபால அவர்கள் புத்தகாயா சென்று அதனை மீட்பதற்காக இயக்கம் நடத்தியதாக வரலாறு கூறுகிறது. தற்போது புத்தகாயாவின் நிர்வாக சபையில் 4 பௌத்தர்களும் 5 ஹிந்துக்களும் அங்கம் வகிக்க வேண்டும் என்பதுதான் சட்டம். எனவே இந்தியா ஹிந்துத் தீவிரவாதத்திற் குரிய நாடென்பது இதிலிருந்து புலனாகிறது. (மேல் விபரங்களுக்கு INDIA TODAY 30 Nov 1995)

இலங்கை அரசும் பாமியான் சிலை விடயத்தில் எடுத்த நடவடிக்கையின் அளவு புத்தகாயா விடயத்தில் எடுக்காதது கவலையைத் தருகிறது. ஆப்கானிஸ்தானில் மரணித்துள்ள பௌத்தத்தைக் காப்பாற்றச் சென்ற பிரதமர், புத்தகாயாவில் உயிர் வாழும் பௌத்தத்தை காப்பாற்ற ஏன் ஒரு விஜயம் மேற்கொள்ளக்கூடாது? இவர்கள் அமெரிக்கா வகுத்த முன்னுரிமைகளுக்கு (Priorities) இரையாகி தமது வளங்களை வீணாக்குகின்றனரா? அல்லது பௌத்தத்தின் வழிகாட்டலின்படி செயற்படுகின்றனரா? மூன்றாவது மண்டல வறியவர்களான இவர் களது சிந்தனை வட்டம் அமெரிக்காவை தாண்டிச் செல்வதில்லை; அவர்களுக்கு எது முக்கியமோ இவர்களுக்கும் அதுவே முக்கியம்!

சரி, இஸ்லாமியர்கள் இவ்விவகாரத்தில் எவ்வாறு நடந்திருக்க வேண்டும்? இஸ்லாம் அடிப்படையில் ஏகதெய்வக் கொள்கையை போதிக்கும் மார்க்கம். அது பலதெய்வக் கோட்பாட்டுக்கும், சிலை வணக்கத்துக்கும் முற்றிலும் எதிரானது என்பதை எவரும் மறைக்கத் தேவையில்லை. இதன் கருத்து ஏனைய மதங்களுக்கு பூமியில் இருப்பதற் குக் கூட அனுமதி கிடையாது என்பதல்ல. இஸ்லாம் விரும்பிய மதத்தை ஏற்றுக் கொள்வதற்கான சுதந்திரத்தை அப்போதே வழங்கிவிட்டது. மாற்று மத கடவுள்களுக்கு ஏசக்கூடாது எனக் கடுமையாக உத்தரவிடும் குர்ஆன் இம்மார்க்கத்தில் நுழைவதற்கு நிர்ப்பந்தம் இல்லை என்ற கொள்கையை யும் முன்வைக்கிறது. எனவே இந்த வழி காட்டலின் கீழ்தான் இவ்விடயத்தை அலச வேண்டும்.

சில முஸ்லிம்கள் தமக்கு இஸ்லாம் பற்றி இருக்கும் குறுகிய விளக்கம் காரண மாகவோ அல்லது சர்வதேச விவகாரங்க ளில் போதியளவு அறிவின்மை காரண மாகவோ அல்லது மாற்று மதத்தவர்களை யும் அமெரிக்காவையும் அதன் கூட்டாளி களையும் திருப்திப்படுத்தும் நோக்குடனோ நிதானம் இழந்து செயற்பட்டதை நாம் அவதானித்தோம். மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லையென அல்குர்ஆன் ஆணையிடுவ தால் தாலிபான் செய்தது இஸ்லாத்துக்கு முரணான செயல் என இவர்கள் வாதிட்டனர். ஆனால் இவ்வாதாட்டம் பொருத்தமானது அல்ல! ஏனெனில், இங்குள்ள பிரச்சினை பௌத்த மதத்தை அழிப்பதா? வாழ விடுவதா? என்பதல்ல. பதிலாக ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் 15 இலட்சம் அகதிகளா? அமெரிக்காவின் கொடூர பொருளாதாரத் தடையால் அழிந்து கொண்டிருக்கும் ஓர் இளஞ் சந்ததியா? அல்லது மணல் பாறையில் செதுக்கப் பட்டுள்ள சிலையா முக்கியமானது என்பதுதான். இது ஒரு மார்க்கப் பிரச்சினை அல்ல; மாறாக, இஸ்லாமிய எழுச்சிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் இடை யிலான ஓர் அரசியல் பிரச்சினை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்கா தாலிபானை உவமையாக உலகுக்கு காட்டி புனிதமிகு இஸ்லாமிய எழுச்சியை சித்திரிக்க முற்படுகிறது. இஸ்லாம் அதிகாரத்துக்கு வந்தால் இத்தகைய காடைத்தனங்கள் மலிந்துவிடும் எனக் காட்டுவதுதான் அதன் நோக்கம்.

இஸ்லாமிய உலகின் தலைசிறந்த உலமாக்களும் இஸ்லாமிய இயக்கங்களின் தலைவர்களும் இதனை *அமெரிக்காவின் ஓர் அரசியல் நாடகம்* என்றே நோக்கினர். இஸ்லாமிய உலகின் தலைசிறந்த முப்தி யான அல்லாமா யூஸுப் அல்கர்ழாவி கூட தாலிபானின் செயலில் பிழைகாண முடிய வில்லை என இன்டர்நெட்டில் அறிக்கை விடுத்துள்ளார். இச்சர்ச்சை குறித்து இஸ்லாமிய உலகில் பல வாதப்பிரதிவாதங் கள் நிகழ்ந்தன. தாலிபான் அவற்றை உடைத்திருக்கக் கூடாது என்ற கருத்தை விட இப்போதைக்கு அதனை செய்திருக்க கூடாது என்ற கருத்தே மேலோங்கிக் காணப்பட்டது. பாகிஸ்தானில் ஹிந்துக்களின் ஆலயங்களை அந்நாட்டு அரசு அழிக்கத் தீர்மானித்திருந்தால் அல்லது மலேஷியா வில் பௌத்த விகாரைகளை உடைக்கத் தீர்மானித்திருந்தால் அவற்றை நிச்சயம் இஸ்லாமிய மேதைகள் கண்டித்திருப் பார்கள். ஏனெனில் அவை 'மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை' என்ற குர்ஆனியக் கோட் பாட்டுக்கு முற்றிலும் முரணானது. அங்கே வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் ஆப்கானிஸ்தானில் ஒரேயொரு யூதனை யும் ஒரு சில ஹிந்து வியாபாரிகளையும் சில கிறிஸ்தவ நிவாரணப் பணியாட்களை யும் தவிர ஏனைய அனைவரும் முஸ்லிம்கள்.

> "பாமியான் சிலை உடைப்புக்கான முழுக் குற்றச்சாட்டையும் சிங்கள சமூகம் அமெரிக்கா மீதும் ஐ.நா. மீதும்தான் போட வேண்டும். ஏனெனில் அவர்களது அநியாயங்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல், அவர்களது அடாவடித்தனங்களுக்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் பொங்கியெழுந்த ஆப்கான்வாசிகளின் ஆத்திரத்தின் வெளிப்பாடே பாமியான் சிலை உடைப்பு"

இஸ்லாம் புராதனச் சின்னங்களுக்கு எதிரான மார்க்கமல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. உதாரண மாக, எகிப்தின் 'ஸ்பிங்ஸ்' பெண் சிலை களையும் பாரசீகத்தின் புராதனச் சின்னங்க ளையும் இஸ்லாமிய அரசு பாதுகாத்து வந்தது. ஆப்கானிஸ்தானை ஆட்சிபுரிந்த முகலாயர் எண்ணியிருந்தால் பாமியான் சிலைகள் இப்போது வெறும் வரலாற்று

(50ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்கள் விழித்தெழுவது எப்போது? -4

பேராசிரியர் குர்ஷித் அஹ்மத்
நாயிப் அமீர்–
ஜமா அதே இஸ்லாமி, பாகிஸ்தான்

இன்று அணு ஆயுதத்தைத் தன்வசம் வைத்துள்ள ஒரேயொரு முஸ்லிம் நாடான பாகிஸ்தானை அழித்தொழிப்பதில் மேற்குலகின் சதித்திட்டங்கள் பற்றி முன்னைய இதழ்களில் ஆராய்ந்தோம். அவற்றிலிருந்து தப்புவதற்கான வழிமுறை, பரிகாரம் என்ன என்பதை இவ்விதழில் காண்போம்.

எதிரிகள் எவ்வளவு சதித்திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டாலும் இன்ஷா அல்லாஹ் பாகிஸ்தான் நின்று நிலைத்து தன் இலக்கை எய்தியே தீரும். நாம் இவ்வாறு விரும்புவதால் மாத்திரம் எம் இலக்கை அடைந்துவிட முடியாது. எல்லாவற்றிற்கும் முதலாவதாக நம்மை எதிர் நோக்கும் ஆபத்து பற்றிய முழு அறிவை நாம் அனைவரும் பெற்றிருக்க வேண்டும். ஒருபுறம் நாம் சென்றடைய வேண்டிய இலக்குகள் பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்; மறுபுறம், நமது நண்பன் யார்? பகைவன் யார்? என்பதைப் பிரித்தறிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் பகிரங்கமான மற்றும் மறைவான எதிரிகள் அனைவர் மீதும் கவனம் செலுத்தலாம்.

ஒன்றை மாத்திரம் நாம் புரிந்துகொள்ள வேண்டும். எதிரிகள் என்னதான் சதி, நாசகார வலை பின்னினாலும் அனைத்துக்கும் காரணம் எமது பலவீனமான, பொறுப்பற்ற, சுயநலமிக்க தேசிய தலைமைத்துவமே ஆகும். நாட்டை ஆண்ட இருபெரும் அரசியல் கட்சிகளும் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியாகவும் மற்றும் கல்வி ஒழுக்க கலாச்சார ரீதியாகவும் பாகிஸ்தானின் வரலாற்றில் பெரும்பகுதியை சீரழித்து விட்டன. எனினும் அணுஆயுத உற்பத்தித் தகைமை, காஷ்மீர் போராட்டம் இவை இரண்டும் நம்பிக்கை ஒளி ஊட்டுவனவாக இருக்கின்றன. பாகிஸ்தான் பொருளாதாரம் அரசுகளின் தவறான போக்குகளால் நலிவுற்றிருந்தாலும் அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தகுதியும் வளங்களும் இன்னும் பசுமையாக இருக்கின்றன. அல்லாஹ்வின் மீது அச்சமும், மறுமையில் பதில் சொல்ல வேண்டுமே என்ற பொறுப்புணர்வும் அற்ற கோஷ்டியினர் தம் சொந்த நலன்களுக்காக நாட்டின் அரசியல், நிதி வளங்களைச் சுரண்டி நாட்டின் நிர்வாக நிறுவனங்களையும் செறிவான பலத்தையும் அழித்து விட்டார்கள். பொறுப்புணர்வும் நம்பிக்கையும் தகைமையும் உள்ள தலைமைத்துவம்தான் இன்றைய நாட்டின் தேவையாகும். இதனை வழங்கத் தகுதிபடைத்தவர்களாக இஸ்லாமிய இயக்கவாதிகளே இருக்கின்றார்கள். எனவே அவர்கள் எழுந்து நின்று தமக்கு மத்தியிலுள்ள சகல பிரிவினைகளையும் களைந்து ஒருமுகப்பட்டு நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்று நாட்டை அதன் இலக்கை நோக்கி நகர்த்தல் வேண்டும். நாம் விழித்துக் கொண்டால் வெளிநாட்டு சக்திகள் நமக்குத் தீங்கிழைக்க முடியாது. இன்று பாகிஸ்தான் எதிர்நோக்கும் ஆபத்தி லிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு தேசிய நிகழ்ச்சித் திட்டம் தேவை. அதனை இப்போது ஆராய்வோம்.

### 01. இஸ்லாமே பாகிஸ்தானின் அத்திவாரம்:

பாகிஸ்தான் ஒரு கொள்கைக்காகப் பிறந்த நாடு; இஸ்லாம் அதன் அத்திவாரம், அதன் இலக்கு, அதன் பலத்தின் இரகசியம். அல்லாஹ்வுக்கும் அவனது ரஸுலுக்கும் முற்றும் விசுவாசமாக நடப்பதே இஸ்லாம். முஸ்லிம்கள் தமக்கும் முழு மனிதகுலத்துக்கும் ஓர் பாக்கியமாக மாறுவதற்கு முழு மனித வாழ்க்கையையும் இறைவணக்கத்திலும், நல்லொழுக்கத்திலும் மனித சேவையிலும், சமத்துவத்திலும், நீதியிலும் அமைத்து வைத்து அல்லாஹ்வின் உரிமைகளையும் அவனது படைப்புக்களின் உரிமைகளையும் வரையறுத்துக் கூறியுள்ளது இஸ்லாம். இதுவே எமது குறிக்கோளாகும். இதிலிருந்து சிறிதும் விலகினால் அது எமக்குப் பலஹீனத்தையும் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதையும் கொண்டுவரும். எனவே இது இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் முதல் இடத்தை வகிக்கிறது. இதில் எவ்வித விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை.

### 02. செழிப்பான ஜனநாயக பாரம்பரியம்

பாகிஸ்தான் ஒரு கோஷ்டியினரின் அல்லது ஒரு தனிநபரின் ஏகபோக சொத்து அல்ல. மாறாக இந்திய உபகண்டத்தில் ஏற்பட்ட மக்கள் ஜனநாயகப் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட ஒன்று என்பதனால் அவர்களே அதன் உடமையாளர்கள். எனவே மக்களின் சுதந்திரத்திலும் அவர்களது உரிமைகளின் பாதுகாப்பிலும் அரசியலை வழிநடாத்தும் உரிமையிலும்தான் எமது முன்னேற்றத்தின் இரகசியம் புதைந்துள்ளது. 1973ம் ஆண்டு அரசியல் யாப்பு இதன் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டுள்ளது. அதாவது இஸ்லாம், ஜனநாயகம் சமஷ்டி அமைப்பு (Federation) இவையே அதன் அத்திவாரம். இதனை மாற்றுவதற்கு எவருக்கும் உரிமையில்லை. இக்கொள்கைகளை விசுவாசமாக நிலைநாட்டுவதால் மாத்திரமே நம்மால் ஒரு ஆரோக்கியமான ஜனநாயக அமைப்பைக் கட்டியெழுப்ப முடியும். பொறுப்புணர்வும் தேர்தல் முறையும் இதனை சாதிப்பதற்கு மிக அவசியமாகும். எனினும் அவை அவ்வொழுங்கின் பிரகாரம் நடக்கவேண்டுமேயொழிய இராணுவ அல்லது சர்வாதிகாரப் போக்கில் தேர்தல்களை நடாத்துவதன் மூலம் நிலைமை சீர்பெறுவதற்கு மாறாக சீர்கேட்டிற்கே வழிகோலும்.

### 03. சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை

பாகிஸ்தானின் சுதந்திரமும் பாதுகாப்பும் அது தனது சொந்தக்காலில் நிற்பதிலேதான் தங்கியுள்ளது. பொதுவாக உலக நாடுகள் அனைத்துடனும் விசேடமாக முஸ்லிம் நாடுகளுடன் சிநேகத்துடனும், ஒத்துழைப்புடனும் வாழ்வதுதான் எமது நிலைப்பாடு. ஆனால் இன்று எமது பொருளாதாரக் கொள்கையும், வெளியுறவுக் கொள்கையும் அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்துள்ளன. இது எம்மை ஏமாற்றி விட்டது; வேதனையை ஊட்டியுள்ளது. இந்தப் பொறியிலிருந்து எவ்வளவு வேகமாக வெளியேறுகின்றோமோ அவ்வளவுக்குச் சிறந்தது. இன்று எமக்கு ஒரு முழுமையான, சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையும், பாகிஸ்தானின் நலன்களைப் பாதுகாக்க வல்லதும், இப்பிராந்தியத்தில் எமது திடமான நிலைப்பாட்டை உறுதி செய்யக்கூடியதுமான பொருளாதாரக் கொள்கையே தேவை.

### 04. நேர்மையான பொருளாதாரமும் அபிவிருத்தியும்

பொருளதாரக் கொள்கையை முற்று முழுதாக மறுபரிசீலனை செய்வது நாட்டின் பாதுகாப்பிற்கும் மக்களின் தேவைகளுக்கும் உகந்ததாகும். உலகளாவிய காலனித்துவ அடிமைத்தனத்தினதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் வலையிலிருந்து எமது

பொருளாதாரத்தை வெளியேற்றுவது இன்றியமையாததாகும். அத்தோடு நாட்டின் தேசிய நலன்களைப் பாதுகாக்கவும் நாட்டின் அபிவிருத்தியை, பொருளாதார நீதியை, செழிப்பை உறுதிப்படுத்தவல்ல ஒரு பொருளாதார அமைப்பை அரசினதும் சந்தையினதும் ஒத்துழைப்புடன் ஏற்படுத்துவது அவசியமாகும். விவசாய அபிவிருத்தி, சேமிப்பு மற்றும் முதலீடுகளில் முன்னேற்றம், முதலாளி-தொழிலாளி ஒத்துழைப்பு, வறுமை ஒழிப்பு, மக்களின் தேவைகளுக்கேற்ப பண்டங்கள் சேவைகளின் அளிப்பை நிலைநாட்டுதல் இவையே புதிய பொருளாதாரக் கொள்கையின் இலக்குகளாய் அமைய வேண்டும். உலக வங்கி, உலக வாணிப அமைப்பு (WTO) போன்றவற்றின் நலன்களை அன்றி பாகிஸ்தானின் நலன்களையும் மக்களின் தேவைகளையும் மையமாகக் கொண்டதாக பொருளாதார அபிவிருத்தி அமைதல் வேண்டும்.

**05. அணு ஆயுதத் தகைமையைப் பாதுகாத்தல்**

நாட்டின் பாதுகாப்புத் தேவையையும் அணுஆயுத தகைமையை பாதுகாப்பதையும் ஒரு பொழுதும் விட்டுக்கொடுக்க முடியாது. பாகிஸ்தானுக்கு எதிரான சக்தியின் குறிக்கோள்கள் எமக்குள் தெளிவாக இருக்கிறது. இவர்களின் சூழ்ச்சிகளை வீணடித்துவிட முடியும். இராணுவ, வெளியுறவு, அரசியல், ஒழுக்கப் பலத்தைப் பெற்றுக் கொள்வதும் அச்சுறுத்தலை அகற்றி விடுவதும் எதிரியின் ஆக்கிரமிப்புக்களை முறியடிப்பதும் இன்றைய எமது கடமைகளாகும்.

**06. காஷ்மீர் பாகிஸ்தானின் உயிர்க்காப்பு**

காஷ்மீர் பிரச்சினை என்பது ஒரு துண்டு நிலத்திற்காக நடாத்தப்படும் போராட்டமல்ல; அல்லது இரு நாடுகளுக்கிடையிலான நலன்களுமல்ல. மாறாக, இந்திய உபகண்டத்தின் பிரிவினையின் பொழுது முடிவுபெறாத ஒரு நிகழ்ச்சியாகும். அது 12.5 மில்லியன் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம். 'காஷ்மீரா? அல்லது பாகிஸ்தானா?' எனப் பேசுபவர்கள் காஷ்மீரின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். பாகிஸ்தானின் உண்மையையும் தெரிந்து கொள்ளாதவர்கள். உண்மையில் காஷ்மீர் சுதந்திர இயக்கமானது பாகிஸ்தானின் பாதுகாப்புக்கும் வாழ்வுக்குமான போராட்டம். அங்கு காஷ்மீரா? பாகிஸ்தானா? என்ற ஒரு நிலைப்பாடு இல்லை. அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான எல்லைப் போராட்டமுமல்ல. காஷ்மீர் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை ஐ.நா சபை மூலம் தீர்ப்பதே அதற்கான ஒரே தீர்வு. அதுவரை காஷ்மீருக்கு ஆதரவு வழங்குவது பாகிஸ்தானின் கடமை மாத்திரமல்ல; முழு இஸ்லாமிய உம்மத்தினர் மீதும் கடமையாகும். இந்திய அடிமைத்துவத்திலிருந்தும் வெளியேறுவதற்கான ஒரே வழி இந்தியாவின் மேலாதிக்கத்திற்கும் சட்டபூர்வமற்ற கைப்பற்றலுக்கும் எதிரான காஷ்மீர் மக்களின் ஜிஹாதே ஆகும்.

இத்தேசிய நிகழ்ச்சி நிரலை ஒரு மனதுடன் ஏற்று, புதிய மக்கள் தலைமைத்துவத்தை உருவாக்குவதிலேயே எமது விடிவு இருக்கிறது. நாம் அல்லாஹ்வின் மீதும் அவன் வாக்களித்துள்ள உதவி மீதும் நம்பிக்கை வைக்கிறோம். எமது குறிக்கோளை எய்துவதற்காக முழு நாட்டு மக்களையும் விழித்தெழச் செய்ய நாம் முயல்கிறோம். மற்றவர்கள் மீது தங்கியிருக்காமலும் அவர்களது சூழ்ச்சி வலையில் விழாமலும் உற்சாகத்துடன் நாட்டை வழிநடாத்திச் செல்ல விழைகிறோம். அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து சரியான பாதையில் கடுமையாக உழைப்பதிலேதான் முஸ்லிம்களின் உண்மையான பலத்தின் இரகசியம் உள்ளது.

**"அல்லாஹ்வும், அவனுடைய தூதரும், இன்னும் எவர்கள் (உண்மையாகவே) விசுவாசங் கொண்டு, தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்து, (அல்லாஹ்வின் கட்டளைக்கு எந்நேரமும்) தலைசாய்த்து வருகின்றனரோ அவர்களும்தான், நிச்சயமாக உங்களுடைய (உண்மையான) தோழர்களாவர். அன்றி, எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், விசுவாசங் கொண்டவர்களையும் (தங்களுக்குத்) தோழர்களாக எடுத்துக் கொள்கிறார்களோ (அவர்கள்தாம்) அல்லாஹ்வின் கூட்டத்தினர் (ஆவர்). அவர்கள்தாம் நிச்சயமாக வெற்றியாளர்கள்."**

**(அல்மாயிதா: 55,56)**

**(நிறைவு பெற்றது)**

## நூல் அறிமுகம் :

# இஸ்லாமிய ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் பாகம் (1)

நீண்ட காலமாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஒரு நூல் இன்று எம் கைகளில் தவழவந்து விட்டது. அதுதான் மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களின் புகழ்மிக்க படைப்பான 'கிலாபத் வ முலூகிய்யத்' (கிலபத்தும், மன்னராட்சியும்) தின் தமிழாக்கமான 'இஸ்லாமிய ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும்' எனும் நூல்.

ரசூலே கரீம் (ﷺ) இந்த உலகிற்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவுசெய்து முழு உலக மனித குலத்துக்கும் ஓர் அருட்கொடையாக விட்டுச்சென்ற கிலாபத் எனும் இறையாட்சி பற்றியும் குலாபஉர் ராஷிதீன் எனும் நேர்வழிபெற்று, நேர்வழியில் நின்று, நேர்வழி நடாத்திய நாற்பெரும் கலீபாக்களுள் இடையிலுதித்த கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களும் எவ்வாறு அக்கிலாபத்தை நிலைநிறுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள் என்பதையும் பின்னால் ஏற்பட்ட மன்னராட்சி பற்றியும் அதற்கும் கிலாபத்திற்கும் உள்ள வித்தியாசம் பற்றியும், அதனால் முஸ்லிம் உலகு அடைந்த நஷ்டங்கள் பற்றியும் அக்குவேறு ஆணிவேராக மிக அழகாக தனக்கேயுரிய பாணியில் மௌலானா அவர்கள் விபரித்துச் செல்கிறார்கள். இன்று முஸ்லிம் நாடுகளின் ஆட்சிபீடத்தை அடைந்து, அலங்கரித்துக் கொண்டு தாம் இஸ்லாமிய அடிப்படையில் ஆட்சிசெய்வதாக ஒரு மாயையை உருவாக்கி வைத்துக் கொண்டுள்ள மன்னர்களை தோலுரித்துக் காட்டுகிறது இந்நூல். அனைவரும் அவசியம் வாங்கிப் படித்து, இவ்வுலகில் முஸ்லிம்களின் தலையாய பணி ரசூலுல்லாஹ்வின் உயரிய சுன்னாவான இந்த கிலாபத்தை மீண்டும் ஏற்படுத்துவதுதான் என்பதை உணர்ந்து, புரிந்து செயல்பட இந்நூலில் உங்களை அழைக்கிறது.

இந்நூலை மிக நேர்த்தியாக தலைப்புக்களையும் உப தலைப்புக்களையும் அமைத்து, கையிலெடுத்தால் வைப்பதற்கு மனமில்லாத அளவுக்கு அதிலே லயிக்கச் செய்யும் விதமாக அமைத்தளித்திருக்கும். மொழிபெயர்ப்பாளருக்கும் (சையத் அப்துர் ரஹ்மான் உமரி) வெளியீட்டாளர்களுக்கும் (ஷமீமுல் இஸ்லாம்) எமது ஆழ்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

"உலகில் ஒவ்வொரு நிமிடமும் 380 பெண்கள் கருத்தரிக்கிறார்கள்; ஒவ்வொரு நிமிடமும் ஒரு பெண் இறக்கிறாள்'' இத்தகவல் தாய்மைப் பாதுகாப்பு முன்னெடுப்புக்கள் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் வெப்தளத்தில் காணப்படுகிறது. எனினும், இத்தகவல்களைக் கொண்டு அவர்கள் சாதிக்க முயல்வதோ வேறொன்று.

தாய்மைப் பாதுகாப்பு முன்னெடுப்புத் திட்டத்தில் உலக வங்கி, ஐ.நா. குடும்பத் திட்ட நிதி, WHO (உலக சுகாதார நிறுவனம்) மற்றும் ஐ.நா. குழுக்கள் பலவும் உள்ளடங்குகின்றன. இதற்கான நிதியினை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜன்ஸி வழங்குகிறது. ''பாதுகாப்பான தாய்மை'' எனும் குடையின் கீழ் பணிபுரியும் அநேகமான எல்லா தனியார் குழுக்களும் US. AID சனத் தொகை காரியாலயத்துடன் கொந்தராத்து களை பகிர்ந்து கொள்கின்றன.

குழுக்கள் மாத்திரமல்ல இன்னும் பல நிறுவனங்கள், அமைப்புக்கள் உதவிகோரி நிற்கின்றன. அமெரிக்க உளவு நிறுவனமான CIA யும் அவற்றுள் ஒன்று. *''2015ல் உலக நோக்கு''* எனும் CIAயின் வெப்தள வெளியீடு (www.cia.gov/cia/publications/ globaltrends 2015/index.html) ஒன்றில் நாளைய உலகை நிர்ணயிக்கவிருக்கும் ஏழு விடயங்கள் ''உலகின் சாரதிகள்'' எனும் தலைப்பில் நீண்ட ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள் ளன. இவற்றுள் மிக முக்கியமானவைகளாக தொழில்நுட்பம், இயற்கை வளங்கள், சனத் தொகைப் பெருக்கம் என்பன குறிப்பிடப் பட்டுள்ளதோடு சனத்தொகை புள்ளிவிபரம் இப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது கவனித்தக்கது. அவ்வறிக்கை இதோ:

6.1 பில்லியனாக இருக்கும் உலக சனத்தொகை 2015ம் ஆண்டளவில் 7.2 பில்லியன்களாக உயரும். இவ்வளர்ச்சியில் 95% வளர்முக நாடுகளில் இடம்பெறும். இதே காலகட்டத்தில் மேற்குலகின் பொருளாதாரத்தை தக்கவைத்துக் கொள்ள

**– எலிஸெபத் லையஜின் –**
**தமிழில் : அபூ நாஹித்**
**நன்றி :**
**Impact International (Feb 2001)**

மத்தியகிழக்கு எண்ணெய் உற்பத்தியில் கணிசமான அளவு ஆசிய நாடுகளுக்கே அனுப்பிவைக்கப்படும். 10% மாத்திரமே மேற்குலகை வந்தடையும். சக்தியின் தேவை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தாலும் கூட சக்தி மூலவளங்கள் 95% வாயு உட்பட இன்னும் நிலத்தினடியில் இருக்கும்'' என அவ்வறிக்கை கணிப்பிடுகிறது.

''எனினும் எதிர்கால 'பயங்கரவாத' (ஜிஹாத்) நடவடிக்கைகள் மூலம் சக்தி விநியோகங்களில் ஏற்படவிருக்கும் குறுக்கீடுகளால் பாரிய தாக்கம் ஏற்படும்'' எனவும் அது குறிப்பிடத் தவறவில்லை.

மேலும், ''பிறப்பு விகிதம் அதிகமாகக் காணப்படும் நாடுகள் எண்ணிக்கையில்

# கருத்தடை: CIA யின் தீர்வு!

''சனத்தொகை (குடும்பக்) கட்டுப்பாடு'' என நேரடியாகச் செல்லும்போது அது பொதுமக்களை விரட்டுவதாக அமைவத னால் ''நிமிடத்திற்கு ஒரு பெண் மரணம் ஏற்படுவதைத் தடுப்பது'' எனும் சுலோகத் தைப் பயன்படுத்தும் தந்திரம்தான் இது! மக்களைக் கவர்ந்திழுக்கச் செய்யப்படும் ஒரு சதி எனத் துணிந்து கூறலாம். ஏனெனில் கருத்தடை மாத்திரைகளோ, உபகரணங்களோ ஒருபோதும் பெண்களின் இறப்புகளுக்குக் காரணமாய் அமையும் மலேரியவையோ, பஞ்சத்தின் பட்டினிச் சாவையோ, பாம்புக்கடியையோ, வயிற்றுப் போக்கையோ, யுத்தச் சாவுகளையோ தடைசெய்யப் போவதில்லை. மற்றொரு பெண் அல்லது ஆண் குழந்தை பிறப்ப தைத்தான் அவை தடைசெய்யப் போகின்றன. ஆனால், மக்களின் ஆதரவை அரசுகளின் சட்டரீதியான அங்கீகாரங்களை கருத்தடை சாதனங்களுக்குப் பெற்றுக கொடுக்க இந்த ''குழந்தைகள் பாதுகாப்பு'', ''சுகமான தாய்மார்கள்'' எனும் சுலோகங் கள் பெரிதும் உதவுகின்றன; நல்லதொரு வியாபாரத் தந்திரமும் கூட!

அமெரிக்காவின் சனத்தொகை நிதியத்திடம், ''பாதுகாப்பான தாய்மை''

அவசியமான தொழிலாளர்களின் தொகை குடும்பத் திட்டத்தின் காரணமாக குறிப்பிடத் தக்க அளவு வீழ்ச்சியைக் காணும். இம்மாற் றங்கள் மேற்குலகின் வல்லமையை உறிஞ்சி விடும். அதேவேளை ஏனைய நாடுகளோ உயர்வு பெறும். குறிப்பாக சீனா அரசியல் தாக்கத்திலிருந்து விரைவாக மீண்டுவரு வதை நிரூபித்துவிட்டது. கிழக்காசியாவின் தலைமைத்துவத்தை பெற்றுவிட அது அதிகமாக முயன்று வருகிறது. அப்பிராந்தி யத்தில் அமெரிக்காவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த அவசியமான தகைமையை அது பெருக்கிக் கொண்டுள்ளது. என அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

''இந்தியா அதனைவிடவும் முக்கியத்து வம் பெறுகிறது. 2015ல் 1.2 பில்லியன் சனத்தொகையை அது பெறுவதோடு தொழில்நுட்ப ரீதியாக அதன் பொருளாதார வளர்ச்சியானது ஒரு பிராந்திய சக்தியாக இந்தியா உருவாகும் என்பதைக் காட்டு கிறது'' என அவ்வறிக்கை தொடர்கிறது.

''இவ்வாறான சனத்தொகை மாற்றங்க ளின், செறிவுகளின் பின்னணியில் வளங்க ளினதும், தொழில்நுட்பத்தினதும் புதிய பங்கீட்டு முறைகள் அமையும். உளவு அறிக்கையின் படி 2015ம் ஆண்டளவில்

நபர்களை அதிகமாகப் பெற்றுக்கொள்வது மாத்திரமல்லாது, (ஒரு மேலதிக நன்மை யாக) இளம் தலைமுறை அவற்றிடம்தான் இருக்கும். அநேகமான இவ்விளம் தலை முறையினர் நகர்ப்புறங்களில்தான் வாழ்வார் கள்.'' எனக் கூறும் CIA, ''இதன் மூலம் அவ்விளைஞர்கள் தொழில்நுட்பத்துடன் தொடர்புடையவர்களாக இருப்பதோடு அரசியல் அல்லது மதத் தீவிரவாதத்திற்கும் ஆளாகுவார்கள். மேலும், அதிவேக தகவல் தொடர்பு சூழலும், நவீன தொழில்நுட்பமும் அவர்களுக்கு சாதகமாயமையும். இவற்றின் மூலம் உலகின் ஸ்திரத் தன்மைக்கும் பாதுகாப்புக்கும் அவர்கள் குந்தகம் விளைவிப்பார்கள்'' என அவ்வறிக்கை எடுத்தியம்புகிறது.

''அத்தோடு அவ் எதிரிகள் அமெரிக்க செல்வாக்கை குறைப்பதற்கு அல்லது புறந் தள்ளுவதற்கு முயற்சிப்பார்கள். அதனால் ஏற்படும் பலவீனத்தைப் பயன்படுத்தவும் முனைவார்கள். எவ்வாறாயினும் சனத் தொகை அதிகரிப்பு தொழில்நுட்பத்தை முக்கியமற்றதாக்கிவிடும். ஊக்குவிக்கப்பட்ட இளம் தலைமுறை தொழில்நுட்பத்தைவிட முக்கியமானதாகிவிடும்.'' என அவ்வறிக்கை தொடர்கிறது.

''வளர்முக நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பினாலும், தொடர்புசாதனங்களின் வளர்ச்சியினாலும் எமது எதிரிகள் அதிகரிப்பார்கள். இதனால் அடுத்த 10 ஆண்டுகளுள் அமெரிக்கா, அரசியல் கொள்கை மற்றும் மதத் தீவிரவாதத்தின் எதிர்ப்பை நோக்கவேண்டி ஏற்படும். இதனால் அரசியல் சாணக்கியம் அதிகம் சிக்கலாகிவிடும். குறிப்பட்ட வெளிநாட்டுக் கொள்கை, இலக்குகளை அடைவதில் அமெரிக்காவுக்கு அதிக சிரமம் ஏற்படும்.

CIA உளவறிக்கை வளர்முக (ஆசிய) நாடுகளினால் உருவாகிவரும் ஆபத்துகள் குறித்து எச்சரிக்கும்போது ஆபிரிக்க நாடுகளைக் குறிப்பிட அது மறந்தாலும் AIDS நோய் வேகமாகப் பரவிவரும் (ஆபிரிக்க) நாடுகளில் இனப்பெருக்கம் ஏற்படப் போவதில்லை என நாசூக்காகக் குறிப்பிடத் தவறவில்லை. ''மேலும் பொருளாதார நடவடிக்கைகளிலும், தொடர்பு சாதன தொழில்நுட்பவியலிலும் வளர்முக நாடுகள் மேற்குலகை மிஞ்சிவிட முயலும். இவ்வேளை ஏற்கனவே ஸ்திரமடைந்திருக்கும் 'பெரும் சக்திகள்' (அமெரிக்கா/ ஐரோப்பா/ ஜப்பான்) படிப்படியாக அழிவை நோக்கிச் செல்லும்'' எனவும் அவ்வறிக்கை எச்சரித்துள்ளது.

சனப்பெருக்கத்தின் விளைவுகளை ஆராயும் அவ்வறிக்கை, ''சனப்பெருக்கம் வீழ்ச்சியுற்றுவரும் மேற்குலகிலும் ஏனைய சில நாடுகளிலும் வயோதிபர் விகிதம் அதிகரித்து வருவதால் சுகாதார உதவி, ஓய்வூதியம் போன்ற செலவினங்கள் அதிகரித்துவரும் அதேவேளை, தொழில் புரியக்கூடிய இளம் வயதினரின் தொகை குறைந்து வருவதால் சமூகம் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும்'' எனத் தெரிவிக்கிறது. ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பானிலும் 2015ம் ஆண்டாகும் போது தொழிலாளர்/ஓய்வூதியம் பெறுவோர் எனும் விகிதாசாரத்தை தற்போதைய அளவில் வைத்துக் கொள்ள 110 மில்லியன் தொழிலாளிகள் தேவைப்படுவர். எனவே இந்நாடுகள் தோல்வி கண்டால் அமெரிக்காவின் மீது பொருளாதாரச் சுமை அதிகரிக்கும்; உலகளாவிய ரீதியில் அது பெரும் பலவீனத்தை ஏற்படுத்தும்'' எனக் கூறுகிறது.

உண்மையில் அவ்வறிக்கையின்படி நிலைமை இவ்வாறிருந்தால் அதனைச் சீர்செய்வதற்கு அவர்கள் எடுக்கவேண்டிய முதல் நடவடிக்கை தங்கள் பிள்ளைப் பேற்றை அதிகரிக்கச் செய்வதுதான். ஆனால் அதைப் பற்றி அறிக்கையில் எதுவும் கூறப்படவில்லை. அடுத்து இப் பிரச்சினை தீர வேண்டுமாயின் அவர்கள் தங்கள் நாடுகளின் எல்லைகளைப் பிற நாட்டு மக்களுக்காகத் திறந்துவிட வேண்டும். ஆனால், அவ்வாறு செய்வது மேலும் பல பிரச்சினைகளுக்கு வித்திடுவதாக அவ்வறிக்கை வாதிடுகிறது. ''வெளிநாட்டவரை தம் நாடுகளுக்குள் அனுமதிப்பதால் தமது கொள்கை, அரசியல், தேசிய அடையாளம் அனைத்தும் பாதிக்கப்பட்டுவிடும். அவ்வாறு குடியேறுபவர்கள் தாம் பிறந்த நாட்டுக்கு விசுவாசமாக நடக்க முனைவதோடு அவற்றிற்குச் சாதகமாக, குடியேறிய நாட்டின் கொள்கைகளில் மாற்றத்தை வேண்டி நிற்பார்கள். அதைவிட இன்னும் ஒருபடி மேலாக மேற்குலக நாடுகளில் உள்ள இன விகிதாசாரத்தை இக்குடியேற்றம் வெகுவாகப் பாதித்துவிடும். இப்போதே 50க்கும் அதிகமான நாடுகளில் இவ்வாறு குடியேறியவர்களின் தொகை 15%க்கும் மேலாக உள்ளது'' என அவ்வறிக்கை அழுதுவடிக்கிறது. ''இது இன்னும் வளரும்; இதனால் சமூக, அரசியல் இறுக்கங்கள் (Tention) ஏற்பட்டு தேசிய அடையாளத்தையும் அது மாற்றிவிடும்.''

''எனவே இவற்றிக்குத் தீர்வாக ஏனைய இனங்களின் சனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்துவதே ஒரே வழி! அதற்காக கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.'' என CIA அறிக்கை நேரடியாகத் தெரிவிக்கவில்லை. மாறாக, இதனைச் செய்யாவிட்டால் ஏற்படும் விளைவுகளை அது குறிப்பட்டதன் மூலம் கருத்தடை வளர்ப்பை NGO க்களின் பொறுப்பில் விடுகிறது. வளர்முக நாடுகளில் மேற்குலகின் செல்வாக்கை ஸ்தாபிப்பதில் NGO க்களின் பங்களிப்பை அது விதந்துரைக்கிறது.

மொத்தத்தில் நிமிடத்துக்கு ஒன்றாக மரிக்கும் தாய்மாருக்கு நிவாரணம் கிடைக்கா விட்டாலும் நிமிடத்துக்கு கருத்தரிக்கும் 380 தாய்மார்களுக்கு அவசியமற்ற ***கவனிப்பு*** மாத்திரம் நிச்சயம் கிடைக்கும்!

## ஆக்கங்கள் தேவை

மதிப்பிற்குரிய வாசகர்களே!
இலங்கையின் எப்பாகத்திலாயினும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், பாரபட்சங்கள் குறித்து விழிப்பாக இருக்குமாறு அல்ஹஸனாத் வேண்டுகிறது. அவ்வாறான நிகழ்வுகள் குறித்து எமக்கு அறியத் தாருங்கள். தகவல்கள் உண்மையானதாகவும், நம்பத் தகுந்தவையாகவும் இருத்தல் வேண்டும். தெளிவான புகைப்படங்களை இணைத்து அனுப்புவது சிறந்தது. உங்களது ஊரிலுள்ள பள்ளிவாயல் தர்மகர்த்தாக்களிடம் அல்லது கிராம சேவகரிடம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட செய்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனுப்புபவர் தனது பெயர், முகவரியை தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். பெயர், முகவரி அற்றவை நிராகரிக்கப்படும். தகவல்களை மாதத்தின் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வையுங்கள். தொலைபேசி இலக்கம் இருப்பின் அவசியம் தெரிவியுங்கள்.

## ஆக்கங்கள் அனுப்புவோர் கவனத்திற்கு!

- அல்ஹஸனாத்தில் வெளியாகும் ஆக்கங்களுள் அநேகமானவை ஏற்கனவே கலந்தாலோசிக்கப்பட்டு திட்டமிடப்பட்டு எழுதப்படுபவையாகும். இது தவிர சுயமாக எழுதப்படும் வாசகர்களின் ஆக்கங்களையும் நாம் இடம் உள்ளதைப் பொறுத்து பிரசுரித்து வருகிறோம்.
- நாம் வேண்டிக் கொள்ளாத பட்சத்தில் ஆக்கங்கள் எழுத விழைவோர் $A_4$ தாளின் நான்கு பக்கங்களுக்கு அதிகமாக எழுத வேண்டாம். ஆக்கங்களின் ஒரு பிரதியை உங்களது வசம் வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் ஆக்கங்கள் எதுவும் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.
- ஆக்கங்களை திருத்த, தேவையற்ற பகுதிகளை நீக்க, தேவையானவற்றை சேர்க்க ஆசிரியபீடத்துக்கு உரிமையுண்டு.
- தொடர் கட்டுரைகளை எழுத விரும்புவோர் ஆசிரியருடன் தொடர்பு கொண்டு கலந்தாலோசித்த பின்னர் எழுதலாம்.
- ஆக்கங்கள் தெளிவான எழுத்தில், கோவையிடுவதற்கு வசதியாக, தாளின் ஒரு பக்கத்தில் அமைதல் வேண்டும்.
- ஆக்கியோனின் பெயர், முகவரி என்பன தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். புனைப் பெயரில் எழுதுவதாயினும் அவரது நிஜப் பெயர் தெரிவிக்கப்பட வேண்டும். பெயர், முகவரியில்லாத ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

# முரண்பாட்டில் உடன்பாடு காண்போம்!

**மூலம் : கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி தமிழில் : அஷ்ஷெய்க் A.A. கியாஸ் முஹம்மத் (நளீமி)**

**கேள்வி :**

"உடன்பாடானவற்றில் ஒத்துழைப்போம்; முரண்பாடானவற்றில் விட்டுக் கொடுப்போம்" எனும் காயிதாவை (அடிப்படையை) நீங்கள் வலியுறுத்துவதனை உங்களின் பல நூல்கள், உரைகள் ஊடாக அறிந்திருக்கிறேன்.

இவ்வடிப்படையினை இவ்வடிவில் ஏற்படுத்தியவர் யார்? அதற்கு ஆதாரம் ஏதும் உண்டா? பித்அத் வாதிகளுடனும் வழிபிறழ்ந்தவர்களுடனும் எவ்வாறு ஒத்துழைக்க முடியும்? குர்ஆன் ஸுன்னாவுக்கு முரண்படுபவர்களை நாம் எவ்விதம் மன்னித்து விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளலாம்?

இவ்விதம் முரண்படுபவனை மன்னிக்காது நிராகரித்து ஒதுக்கி விட வேண்டுமல்லவா? குர்ஆன் கூறுகிறது:

**"நீங்கள் எதுவொன்றிலாவது முரண்பட்டால் அவ்விடயத்தை அல்லாஹ்விடமும் அவன் தூதரிடமும் விட்டுவிடுங்கள்" (4:59)**

இவ்வசனத்துக்கு ஏற்ப முரண்படுவனுக்கு குர்ஆன், சுன்னாதான் தீர்ப்பு வழங்க வேண்டும். நாம் அவனுக்கு நியாயங்கள் தேடக் கூடாது.

எனவே குறித்த இவ்விடயம் எமக்குக் குழப்பமாக இருப்பதால் உரிய தெளிவைத் தருமாறு வேண்டுகிறோம்.

**பதில்:**

'உடன்பாடானவற்றில் ஒத்துழைப்போம்; முரண்பாடானவற்றில் விட்டுக் கொடுப்போம்' எனும் அமைபபில் இந்தக் காயிதாவை உருவாக்கியவர் அறிஞர் ரஷீத் ரிழா (ரஹ்) அவர்கள் ஆவார்கள். இவர் நவீன ஸலபிச் சிந்தனையின் முன்னோடியும், 'மனார்' சஞ்சிகை, தப்ஸீர், பதாவா எனும் நூல்கள் உட்பட இஸ்லாமிய உலகில் தாக்கம் செலுத்திய இன்னும் பல நூல்களின் ஆசிரியரும் ஆவார். 'காயிதத்துல் மனார் அத்தஹபிய்யா' என இந்த அடிப்படை அழைக்கப்படுகிறது. முஸ்லிம்கள் அனைவரும் தமது எதிரிகளுக்கு எதிராக அணிதிரள வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

அறிஞர் ரஷீத் ரிழா (ரஹ்) அவர்கள் இந்தக் காயிதாவை எவ்வித அடிப்படையும் இன்றி உருவாக்கவில்லை. மாறாக, குர்ஆன் ஸுன்னாவின் நிழலிலும் ஸலபுகளின் வழிமுறையிலும் நடைமுறைத் தேவைகளைக் கருத்திற் கொண்டுமே ஆக்கியுள்ளார். தமக்கிடையே உள்ள முரண்பாடுகளை மறந்து முஸ்லிம்களுக்கு எதிராக ஓரணி திரளும் எதிரிகளைச் சமாளிப்பதில் முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டியது அவசியத் தேவையாகும். அல்குர்ஆன் இது குறித்து வெகுவாக எச்சரிக்கை செய்துள்ளது.

**"காபிர்கள் தங்களுக்கிடையிலே பரஸ்பரம் உதவியாளர்களாக இருக்கின்றனர். அவ்விதம் நீங்களும் செய்யவில்லையாயின் பூமியில் பெரும் குழப்பமும் பிரச்சினையும் ஏற்படும்." (8:73)**

இங்கு இடம்பெற்றுள்ள, **"நீங்களும் அவ்விதம் செய்யவில்லையாயின்"** என்பதன் கருத்து, காபிர்கள் தமது தரப்பில் பரஸ்பர ஒத்துழைப்போடு நடந்து கொள்வது போல் முஸ்லிம்களாகிய நீங்களும் ஒருவருக்கொருவர் உதவியாக நடந்து கொள்ளாவிடின் உலகில் தீமை அரசோச்சும் என்பதாகும். இதற்குக் காரணம் காபிர்களிடம் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் நிலவுவதற்குப் பதிலாக முஸ்லிம் தரப்பில் பிளவுகளும், ஒத்துழையாமையும் காணப்படுவதாகும்.

எந்தவொரு இஸ்லாமிய சீர்திருத்த வாதியும் முஸ்லிம்களுக்கு எதிராகத் திரண்டிருக்கும் எதிரிகளை முறியடிப்பதில் முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்துவது அவசியமாகும். இது விடயத்தில் முஸ்லிம்கள் உயர் இலக்குகளை அடைவதற்காக தமக்கிடையே உள்ள சில்லறைப் பிரச்சினைகளை மறந்துவிட வேண்டும்.

முஸ்லிம் உலகம் பிளவுகளில் சிக்கியிருக்கின்ற அதேவேளை, இஸ்லாமிய உலகிற்கு வெளியே சர்வதேச ரீதியில் யூதர்களும் மேற்கின் கிறிஸ்தவர்களும் கிழக்கின் சிலைவணங்கிகளும், சமவுடமை வாதிகளும் பரஸ்பரம் ஒத்துழைப்போடு நடந்து கொள்கின்றனர். இந்நிலையில் எந்தவொரு முஸ்லிம் அறிஞரும் ஏக கிப்லாவை முன்னோக்குகின்ற முஸ்லிம்களை ஓரணி திரளுமாறு அறைகூவல் விடுக்காதிருக்க முடியாது. இதன்மூலம்தான் அவர்கள் தம்மை உளரீதியாகவும், சடரீதியாகவும் அழிக்க விளையும் எதிரிகள் விடயத்தில் தாக்குப் பிடிக்க முடியும். இவ்வெதிரிகள் ஆயுத, பொருளாதார வளத்தோடு சூழ்ச்சிக்கான வழிகளையும் சிறந்த திட்டமிடலையும் தம்வசம் கொண்டுள்ளனர்.

இந்தப் பின்னணியில்தான் சீர்திருத்தவாதிகள் அனைவரும் இவ்வடிப்படையை பெரிதும் வரவேற்று அதனை நடைமுறைப் படுத்துவதில் ஆர்வம் காட்டினர். இதில் இமாம் அஷ்ஷஹீத் ஹஸனுல் பன்னாஹ் (ரஹ்) பிரதான இடம்பெறுகிறார். எனவே தான் 'இஹ்வான்'கள் பலரும் இவ்வடிப்படையை அவர்தான் ஏற்படுத்தினார் எனக் கருதுகின்றனர்.

## பதாவா முஆஸிரா

அடுத்து, பித்அத்வாதிகளோடு எவ்வாறு ஒத்துழைக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது?

பித்அத்தில் பல படித்தரங்கள் இருப்பது அனைவரும் அறிந்தவொன்றாகும். அவற்றுள் பாரதூரம் கூடியவையும் உண்டு; குறைந்தவையும் உண்டு. இன்னும் சில 'குப்ர்' ஐ ஏற்படுத்துபவை, ஏற்படுத்தாதவை எனப் பிரிகின்றன.

அவ்வகையில் பாரதூரம் கூடிய பித்அத் வாதிகளை எதிர்ப்பதற்கு குறைந்தவகை பித்அத்வாதிகளோடு ஒத்துழைப்பது தவறாக அமையாது. இதற்கு 'அகப்புழ் ழரரைன்' எனும் "இரு தீமைகளுள் பாரதூரம் குறைந்தவொன்றைத் தெரிதல்" எனும் அடிப்படையும் ஆதாரமாய் அமைகிறது.

'குப்ர்' எனும் நிராகரிப்பின் நிலையும் இவ்வாறே. அது பலதரத்தில் அமைவதை ஸஹாபிகள் தாபிஈன்களின் அறிவிப்புகள் ஊடாக தெரிய முடியுமாக உள்ளது. பெரிய குப்ரைத் தவிர்ப்பதற்கு சிறிய குப்ருடனும்,

இன்னும் சில போது முஸ்லிம்களுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தைத் தவிர்ப்பதற்குத் தெளிவாகத் தெரியும் குப்ர் ஷிர்க்குடனும் கூட ஒத்துழைக்க வேண்டியிருக்கும்.

அல்குர்ஆனில் ஸூரதுர் ரூமின் ஆரம்பப் பகுதிகள் சொல்லும் கருத்துகள் இதற்குச் சிறந்த சான்றாகும். அதாவது கிறிஸ்தவர்களான ரோமர்கள் காபிர்களாயிருந்தும் ஒப்பீட்டு ரீதியில் நெருப்பு வணங்கிகளான பாரசீகர்களைவிடவும் முஸ்லிம்களுக்கு நெருக்கமாயிருந்தனர். இதனால்தான், ஆரம்பத்தில் பாரசீகர்கள் ரோமர்களை வெற்றி கொண்ட போது முஸ்லிம்கள் கவலைப்பட்ட அதேவேளை பாரசீகர்களை தமக்குச் சார்பாக கண்ட முஷ்ரிக்குகள் இது விடயத்தில் மகிழ்ச்சியடைந்தார்கள். இதன்போது இறங்கிய அல்குர்ஆன் வசனங்கள், இந்நிலை மாறி ரோமர்களுக்கு சார்பான வாய்ப்பு ஏற்படுமென்று கூறின.

**"அலிப்லாம்மீம். ரோமர்கள் அருகிலுள்ள பூமியில் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். அவர்கள் தங்கள் தோல்விக்குப் பின் விரைவில் வெற்றியடைவார்கள். இவ்வெற்றி இன்னும் சில வருடங்களிலேயே கைகூடும். இதற்கு முன்னும் பின்னும் அதிகாரம் அல்லாஹ்வுக்கே. ரோமர்கள் வெற்றி பெறும் அந்நாளில் முஃமின்கள் மகிழ்ச்சி அடைவார்கள்."**

**(30:1-4)**

நபி (ﷺ) அவர்களும் மக்கா வெற்றியின் பின்னர் 'ஹவாஸின்' கோத்திரத்தாரை எதிர்ப்பதற்கு குறைஷிகளின் உதவியைப் பெற்றார்கள். இங்கு இரு தரப்பினரும் இணைவைப்பாளர்களாக இருந்தபோதும் கூட ஒப்பீட்டு ரீதியில் குறைஷிகள் நபியவர்களுக்கு நெருக்கமாக இருந்தமையே இதற்குக் காரணமாகும். இதனால்தான் சப்வான் பின் உமையா இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்னர் ஒரு தடவை இவ்வாறு குறிப்பிட்டார்: ''நான் குறைஷிய எஜமானனுக்குக் கீழிருப்பது ஹவாஸின் கிளையைச் சேர்ந்த ஒருவருக்குக் கீழ் இருப்பதை விடச் சிறந்ததாகும்.''

முஃதஸிலாக்களை பித்அத்வாதிகளாகக் கருதும் அஹ்லுஸ் ஸுன்னாக்கள் அவர்களின் அறிவியல் பங்களிப்புகளைப் பெற்று வந்துள்ளதோடு முஃதஸிலாக்கள் சுன்னாவுக்கு அல்லது சத்தியத்துக்கு முரண்படுகையில் அவர்களைக் கண்டித்துமுள்ளனர். இதற்கு இமாம் ஸமக்ஷரி (ரஹ்) அவர்களின் 'அல்கஷ்ஷாப்' எனும் குர்ஆன் விரிவுரை சிறந்த சான்றாகும். இவர் முஃதஸிலா பிரிவைச் சார்ந்தவராயினும் இவரது இத் தப்ஸீரிலிருந்து பின்வந்த அனைத்து அல்குர்ஆனிய அறிஞர்களும் பயனடைந்துள்ளனர். இதே நிலை இமாம்களான அர்ராஸி (ரஹ்), அந்நஸபீ (ரஹ்), அந்நைஸாபூரீ (ரஹ்) அல்பைழாவி (ரஹ்) அபுஸ் ஸுஊத் அல்ஆலூஸி (ரஹ்) போன்றோரின் தப்ஸீர்களுக்கும் நிலவுகிறது.

அல்கஷ்ஷாப் நூலின் முக்கியத்துவம் காரணமாகவே இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் இதில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களை திறனாய்வு செய்து ஒரு நூல் எழுதியுள்ளார். அவ்வாறே இமாம் இப்னுல் முனீர் (ரஹ்) அவர்கள் இதற்கான பிற் சேர்க்கை நூலொன்றையும் ஆக்கியுள்ளார்.

# மீடியா வொட்ச்

## முஸ்லிம்கள் தனித்துவத்தை இழக்கலாமா?

எமது முஸ்லிம்கள் வானொலிப் பிரியர்களாக மாறி அதன் உச்சத்துக்கே சென்று விட்டார்கள். இது தொடர்பாக ஏராளமான ஆக்கங்களும், கருத்துக்களும் இஸ்லாமியப் பத்திரிகைகளாலும், ஆலிம்களாலும் முன்வைக்கப்பட்டும் எவரும் அதை பொருட்படுத்தாதிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். ஒரு உண்மை முஸ்லிம் தவறு என்று ஒன்றைச் சுட்டிக்காட்டினால் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய நவீன முஸ்லிம்கள், தவறு எனச் சுட்டிக்காட்டப்பட்ட போதும் அதனைத் தவிர்த்துக் கொள்ளாது அதன்பால் மேலும் மேலும் நாட்டம் செலுத்துவதை எம்மால் கண்கூடாகக் காணமுடிகிறது.

F.M. அபிமான முஸ்லிம் நேயர்களே! நீங்கள் அவ்வாறு செயல்படுவதால் உங்களுக்கு மட்டுமல்ல, முழு இஸ்லாமியர்களுக்கும், இஸ்லாத்துக்கும்தான் இழுக்கு வந்து சேரும் என்பதை நீங்கள் உணராமல் செயல்படுகிறீர்கள். இனியாவது சிந்தித்து செயல்படுங்கள். இதற்காக நீங்கள் நிச்சயம் மறுமையில் விசாரிக்கப் படுவீர்கள் என்பதில் துளியளவும் ஐயமில்லை. என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? சிந்தித்து சீர்படுத்திக் கொள்ளுங்கள்.

தொலைபேசியில் உரையாடும்போது தான் யார் என்பதையும் தனது மார்க்கம் எப்படிப்பட்டதென்பதையும் மறந்து தொடர்பு கிடைத்த மகிழ்ச்சியில் ஏதேதோவெல்லாம் உளறித் தள்ளிய சம்பவம் கடந்த டிசம்பர் 25ல் கிறிஸ்மஸ் விஷேட வாழ்த்து நிகழ்ச்சியில் இடம்பெற்றது. தொடர்பு கொண்டு பேசிய ஒரு முஸ்லிம் நேயர் முழு முஸ்லிம்களையும் தலைகுனிய வைத்த சம்பவத்தை பல நேயர்கள் அறிந்திருப்பீர்கள்.

**அறிவிப்பாளர்:** இந்த கிறிஸ்மஸ் வாழ்த்து நிகழ்ச்சிகளில் தொடர்பு கொண்டுள்ள முதல் முஸ்லிம் நேயர் நீங்கள். சரி, உங்கள் பிரதேசத்தில் கிறிஸ்மஸ் ஏற்பாடுகள் எப்படி இருக்கின்றன?

**முஸ்லிம் நேயர்:** புனித மரியாள் தேவாலயத்தில் சகல ஏற்பாடுகளையும் மிகப் பிரமாதமாகச் செய்திருக்காங்க.

**அறிவிப்பாளர்:** சனத்திரள் எப்படி இருக்குது?

**முஸ்லிம் நேயர்:** ஏராளமான பக்தர்கள் தாராளமாகக் கூடியிருக்கிறார்கள். இன, மத பேதமின்றி அனைவரும் ஆராதனையில் கலந்து கொண்டுள்ளார்கள். நானும் எனது நண்பர்களும் இதில் கலந்து கொள்ள ஆயத்தமாகவே இருக்கிறோம். நாம் ஒவ்வொரு வருடமும் இதைக் கொண்டாடுவது வழக்கம்.

**அறிவிப்பாளர்:** சரி, யார் யாருக்கு வாழ்த்துக்கூறப் போகிறீர்கள்? என்று அறிவிப்பாளர் கேட்க, அதற்கு அவர் முஸ்லிம் முஸ்லிம் அல்லாத என்று பலருக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துக் கூறினார். பின் அறிவிப்பாளர், 'வாழ்த்துக் கூறுபவர்கள் ஏனைய மத நண்பர்களின் பெயரைத் தவிர்த்து உரிய நண்பர்களுக்கு மாத்திரம் வாழ்த்துக் கூறவும்." என்று கூறவேண்டியும் ஏற்பட்டது.

எமக்கென்று இரு பெருநாள் தினங்களிருக்க, வேற்றுமத பண்டிகைகளில் கலந்து கொண்டு செயல்படுபவர்கள் தாம் முஸ்லிம்கள் என்று சொல்ல வெட்கப்பட வேண்டும். ஏனோ இந்த முஸ்லிம் பெயர்தாங்கிய சிலர் ஏனைய முஸ்லிம்களையும் இஸ்லாத்தின் மேன்மையையும் மறந்து அதைப் பற்றி சிந்திக்காது, அதுபற்றிய கவலை மறந்து இப்படி இழுக்கு சேர்க்கிறார்களே! அன்பான வானொலி மற்றும் தொலைக்காட்சி நேயர்களே, இஸ்லாத்துக்கும் அதன் தனித்துவத்துக்கும் பங்கம் வராதபடி பாதுகாப்பது உங்களனைவரினதும் கடமையாகும். இதுபற்றி சிந்திப்பீர்களாக! இஸ்லாத்தைப் பேணி வாழ முயற்சிப்பீர்களாக!!



# மெல்லென வரும் புயல்!

ரக்ஷானா ஷரீபுத்தீன், அக்கரைப்பற்று

ஒரு சமூகத்தின் பலமும், பலவீனமும் அதன் ஆள்வளத்தில் பெரிதும் தங்கியிருக்கின்றன. குறிப்பாக இளைஞர் வளமானது சமூகம் எனும் உடலை நிமிர்த்திப் பிடிக்கும் முதுகெலும்பைப் போன்றதாகும். இன்று உலகின் பல சமூகங்கள் இவ்வளப்பற்றாக்குறையினால் தளர்வடைந்து போயுள்ளன. மனிதனால் உருவாக்கப்பட்ட ஓட்டைச் சித்தாந்தங்களின் தவறான வழிநடாத்தலினால் ஏற்பட்ட விளைவே இதுவாகும். வளர்ச்சி அடைந்துவிட்டோம் எனக் கூறிக் கொள்ளும் சமூகங்கள் கைக்கொண்டு வரும் சனத்தொகைக் கட்டுப்பாடு, பெண்ணிலை வாதம் போன்றன இதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

சனத்தொகைக் கட்டுப்பாட்டை அமுல்படுத்தும் அடிப்படை அம்சமாக குடும்பக் கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. தாயினதும் குழந்தைகளினதும் போஷணை மற்றும் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு குழந்தைகளுக்கிடையேயான இடைவெளியைக் குறைந்தது இரண்டு வருடங்களாகவாவது பேணும்படி மருத்துவம் வலியுறுத்துகிறது.

**“அவனது தனிப்படுத்தல் இரு வருடங்களிலும்” (ஸூரா லுக்மான்: 14)**

**“எவரேனும் பால் ஊட்டுவதைப் பூர்த்தியாக்க விரும்பினால் தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டவும்” (ஸூரா அல்பகரா: 233)**

மேற்சொன்ன இரு அல்குர்ஆன் வசனங்களும் குழந்தைக்கு இருவருடங்களுக்குப் பாலூட்டுமாறு கூறுகின்றன. தாய் தனது குழந்தைக்குப் பாலூட்டும் காலப் பகுதியில் மீண்டும் கருத்தரித்தல் சாத்தியக் குறைவானதாகும். பாலூட்டும்போது தாயின் உடலில் ஏற்படும் ஹோமோன் மாற்றமே இதற்கான காரணமாகும்.

ஆனால் குழந்தைகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதாக இதனைக் கருத முடியாது. “அதிகமான குழந்தைகளைப் பெற்றெடுக்கக்கூடிய பெண்களைத் திருமணம் செய்துகொள்ளுங்கள்” மற்றும “அதிகமாக குழந்தைகளைப் பெற்றுக் கொள்பவரும் நானும் மறுமையில் இவ்வாறு இருப்போம்” என தனது அடுத்த இரு விரல்களையும் இணைத்துக் காட்டிக் கூறிய நபியவர்களின் ஹதீஸ்களையும் கருத்திற் கொள்ளும் போது *குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதன்றி குடும்பத்தைத் திட்டமிடுதலே அங்கீகரிக்கக் கூடியது* என்பது புலனாகும்.

‘குடும்பத்துக்கு ஒரு குழந்தை’, ‘நாமிருவர் நமக்கிருவர்’ ‘ஒன்றுக்கு மேல் இப்போது வேண்டாம்; இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்’ போன்ற அலங்காரமான சுலோகங்களின் ஊடாக குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

சனத்தொகைக் கட்டுப்பாட்டின் மற்றொரு முயற்சி கருத்தடையை ஊக்குவித்தலாகும். உருவாவதற்கு முன்னரேயே அதனைத் தடைசெய்தலாகும். **“அல்குர்ஆன் இறங்கிக் கொண்டிருந்தது. நாங்கள் அஸ்ல் செய்து கொண்டிருந்தோம்”** எனும் ஸஹாபிகளின் அறிவிப்பின் பிரகாரம் இம்முறை ஒருவகையில் அங்கீகரிக்கப்படலாம். இம்முறை உடலியல் ரீதியாக ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ எவ்விதப் பக்க விளைவையும் ஏற்டுத்துவதில்லை. ஆனால் இன்று கருத்தடைக்காக உபயோகப்படுத்தப்படும் ஹோர்மோன் மாத்திரைகள், ஊசி மருந்துகள் என்பன உடலகச் சமநிலையில் தளம்பலை ஏற்படுத்துவதன் மூலம் வேண்டாத விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மேலும் கருப்பை அக உபகரணங்கள் (லூப்) கர்ப்பப்பையில் துளையை ஏற்படுத்துதல் கருப்பைக் கிருமித் தொற்று, இடுப்புக் குழி அழற்சி போன்ற எதிர்விளைவுகளை உண்டாக்குகின்றன.

கருச்சிதைவை நியாயப்படுத்தி, அதற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கி அதனை ஊக்குவித்தல் சனத்தொகையைக் கட்டுப் படுத்தும் மற்றுமொரு முயற்சியாகும். கர்ப்பம் அல்லது பிள்ளைப்பேறு குறித்த தாயின் உயிருக்கு ஆபத்தாக அமைதல் அல்லது வளருகின்ற சிசு தீவிர குறைபாடுடையதாக இருத்தல் ஆகிய காரணங்களுக்காக இது சில நாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் சட்டபூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் மருத்துவக் காரணமற்ற நோக்கங்களுக்காக நடைபெறும் கருச்சிதைவுகள் ஏராளம். கொழும்பு நகரில் மட்டும் தினமும் 1000க்கும் மேற்பட்ட கருச்சிதைவுகள் நடைபெறுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பணத்தையே நோக்காகக் கொண்டு இவற்றைச் செய்பவர்களால் உரிய காப்பு நடவடிக்கைகளில் கரிசனை செலுத்தப் படாமையினால் கருப்பைக் கிருமித் தொற்று, குருதி விஷப்படுதல், குருதிப் பெருக்கு, நிரந்தர மலடாதல் மரணம் என்பன தவிர்க்க முடியாது போகின்றன.

தனக்குப் பிள்ளை வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது குறித்த பெண்ணின் உரிமை எனக் கூறி கருச்சிதைவைச் சட்டபூர்வமாக்கி மனித உரிமையை நிலைநாட்ட முயலுகின்ற மேற்கத்தேய சமூகம் உருவாகிவிட்ட சிசுவின் உயிர்வாழும் உரிமையை வழங்க மறுத்திருப்பது வியக்கத்தக்கதாகும்.

கருத்தடை, கருச்சிதைவு போன்ற உயிருக்கே உலைவைக்கும் பொறிகளில் தற்காலப் பெண் தந்திரமாகச் சிக்கவைக் கப்பட்டிருக்கிறாள். ஆண் பெண்களுக்கிடையேயான உறவு வரம்பு மீறிச் சென்றிருக்கிறது. பெண்ணை போகப் பொருளாக மட்டுமே கருதுபவர்கள் தங்களது முயற்சியில் வெற்றி காண்கிறார்கள். பொறுப்புணர்வு அற்றவர்களாக கட்டாக்காலிகளாக எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், யாருடன் வேண்டுமானாலும் படுக்கையைப் பங்குபோட்டுக் கொள்ள இவை வழிவகுத்து விட்டிருக்கிறது. ஆணிலும் பெண்ணிலும் நெறி பிறழ்வு ஏற்பட்டிருக்கிறது. சமூக நோய்கள் சர்வ சாதாரணமாகக் சந்திக்கு வந்திருக்கின்றன.

பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டதால் புதிய சந்ததியின் உருவாக்கம் மந்தமாகிக் கிடக்கிறது. அதற்குள்ளாக உருவாகின்ற இளம் சமூகம்கூட நெறிபிறழச் செய்யப்பட்டுள்ளதால் ஆரோக்கியமான இளைஞர் பலம் குன்றிப் போயிருக்கிறது. இதன் காரணமாக சமூகத்தை இழுக்கின்ற வலு குறைந்ததனால் அந்தப் பழு குறிப்பிட்ட ஒரு சிறு தொகையினர் மீது சுமத்தப்படுகிறது. வயதானவர்களின் தொகை வீதம் அதிகரிப்பதனால் தங்கியிருப்போரின் வீதம் அதிகரிக்கின்றது. செயற்திறன் கொண்ட குடித்தொகை குன்றிவிடுகிறது. பொருளாதார உற்பத்தி முயற்சிகள் பாழடிக்கப் படுகின்றன. பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குக் கூட இந்த சமூகங்கள் இலக்காகின்றன.

உல்லாச விரும்பியாக மனிதன் மாறியிருக்கிறான். கணவன்-மனைவி எனும் உறவு கலங்கிப் போகிறது. குழந்தைகள் அன்பு, பாசம் கிடைக்கப் பெறாமல் சமூக விரோதிகளாக உருவாகின்றனர். வயோதிபப் பெற்றோர் தம் ஒரே பிள்ளைக்குச் சுமையாகி விடுகின்றனர்; கவனிப்பாரற்றுக் கைவிடப்படுகின்றனர். முதியோர் இல்லங்கள் முளைக்கின்றன. அன்னையர் தினம், தந்தையர் தினம், சிறுவர் தினம் என்பன உறவுமுறைகளை ஞாபகப்படுத்துவதற்காக ஆண்டுக்கொரு முறை எட்டிப் பார்க்கின்றன.



ஆரோக்கியமான ஒரு சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பம் எனும் அழகிய கூடு கலைக்கப்பட்டிருக்கிறது. பறவைகள் திசை தெரியாமல் சிதறிப் பறக்கின்றன. இலக்கில்லாத நடப்புக்கள், நிம்மதியற்ற வாழ்க்கை எங்கும் எவரிலும் விரக்தியை விளைவித்திருக்கிறது. இருந்தும் வறட்டுச் சிந்தனைகளால் இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறு சீரழிந்துபோன மேற்கத்தேய சமூகம் பலவீனமடைந்து போயிருக்கிறது. வளர்ந்து வரும் நாடுகளில் ஆள்வளம் நிரம்பியிருப்பது இவர்களைக் கலவரமடையச் செய்திருக்கிறது. அவை தமக்குச் சவாலாக அமைந்து விடுமோ என மேற்குலகு அச்சங் கொண்டுள்ளது. குறிப்பாக முஸ்லிம்களிடம் இனப்பெருக்க வீதம் சிறப்பாக இருப்பதனால் இவர்களின் அச்சம் இரட்டிப்பாகியிருக்கிறது. மேற்கத்தேய சமூகம் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

எனவே இந்த சமூகங்கள் தமக்குச் சவாலாக வருவதிலிருந்து தடுப்பதற்கு அவற்றின் ஆள்வளத்தைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாதது என உணர்ந்த இவர்கள் திட்டமிட்டு களம் இறங்கியிருக்கிறார்கள். 'இடப் பற்றாக்குறை', 'உணவுப் பஞ்சம்', 'நீர்வளக்குறைவு' எனப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். இதற்கான ஒரே தீர்வாக சனத்தொகைக் கட்டுப்பாட்டை முன்வைத்திருக்கிறார்கள். தங்களது நாட்டில் நாறிக் கொண்டிருக்கும் அழுகிய குப்பைகளை ஏனைய இடங்களிலும் கொட்ட முயற்சிக்கிறார்கள். இதற்காக சர்வதேச நிறுவனமயப் படுத்தப்பட்ட வழிமுறைகளை கையாள்கிறார்கள் .

*இவர்களது ஊழல்களையும் மோசடிகளையும் பதுக்கல்களையும், கேளிக்கை வீண்விரயங்களையும் கட்டுப்படுத்தினால் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் வயிராற உண்ண முடியும் என்பதை இவர்கள் உணர மறுக்கிறார்கள்.*

இவர்களது சமூக அவலங்களை மூடி மறைத்து பூசி மெழுகிக் காட்டுவதற்கும் தங்களது சித்தாந்தங்களை உயர்வாகச் சித்தரிப்பதற்கும் அவைகளையே பின் பற்றுமாறு தூண்டுவதற்கும் இலத்திரனியல் தொடர்பூடகங்களைத் திட்டமிட்டுத் திறம்பட பயன்படுத்தி வருகின்றனர். இதனைக் கண்களை மூடிக்கொண்டு பின்பற்றுவதில் கீழைத்தேய சமூகங்கள் முண்டியடித்துக் கொள்கின்றன. முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை இதன் தாக்கம் பாரியதாக இல்லை என்றாலும் நடப்பு நிகழ்வுகள் அச்சம் தருவனவாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி தொடர்பாக பேரினவாதிகள் கிலேசமடைந்திருக்கிறார்கள். அவ்வப்போது அவர்களின் தலைவர்கள் விடுக்கும் அறிக்கைகள் இதனைப் பிரதிபலிக்கின்றன. கடந்த 81ம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்போது முஸ்லிம்களின் சரியான தொகை இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக சந்தேகம் தெரிவிக்கப்படும் அதேவேளை மற்றுமொரு சனத்தொகைக் கணக்கெடுப்புக்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குடும்பக் கட்டுப்பாட்டை நாகரிகமான செயலாகக் காட்டி ஒவ்வொரு பெண்ணையும் இதனை மேற்கொள்ளச் செய்ய முயற்சிகள் வெகுவாக மேற்கொள்ளப்படுகின்றன. கருத்தடை ஊசி போட்டுக் கொள்ள கிளினிக்களுக்கு வரும் முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்புக் காணப்படுகிறது. கணவனுக்குக் கூடத் தெரியாமல் இதனைச் செய்பவர்கள் கணிசமானோர் உள்ளனர். கருத்தடை மாத்திரைகளின் விற்பனையும் முஸ்லிம் பிரதேசங்களில் அதிகரித்துள்ளது. இதன் பிரதிபலிப்புகளை புதிதாக தரம் 1இல் சேர்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் வருடாந்தம் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதிலிருந்து அறியலாம்.

மேலும் பிரசவத்திற்காக வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படும்போது தாய்மார்களிடம், "அவசரச் சத்திர சிகிச்சைக்குச் சம்மதம் தருகிறேன்" என எழுதி ஒப்பம் வாங்கப்படுகிறது. ஆனால் அவ்வாறு சத்திர சிகிக்சை ஏன் அவசியப்பட்டது என்பது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்தத் தாய்க்குத் தெரிவிக்கப்படுவதில்லை. அவளுக்குத் தெரியாமலேயே LRT செய்யப்படுகிறது. இவை பதிவு செய்யப்படுவதில்லை. தான் நிரந்தர மலடாக்கப் பட்டுள்ளதை அந்தத் தாய் அறிய மாட்டாள். மேலும் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பெறுமாறு அவசியமற்ற சந்தர்ப்பங்களில் கூட சில தாய்மா வற்புறுத்தப்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தாய்மார் கவனமாக இருக்க வேண்டும். உங்களுக்கு நடப்பதை அறிந்து கொள்வது உங்களது உரிமை.

எவ்வாறெல்லாம் சனத்தொகையைக் கட்டுப்படுத்தி முஸ்லிம்களைப் பலமிழக்கச் செய்ய முடியுமோ அவ்வாறெல்லாம் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே பெண்களே! விழிப்பாக இருங்கள். பெண்ணுரிமை, பெண் விடுதலை, சீர்திருத்தம், குடும்பக் கட்டுப்பாடு போன்ற கோஷங்கள் உங்களைச் சிக்க வைக்கத் தந்திரமாக விரிக்கப்படும் கவர்ச்சிகரமான வலைகள்.

பெண்களே வீட்டு நிர்வாகிகள் என்பதனால் அவர்களைத் தவறாக வழி நடாத்துவதன் மூலம் குடும்பம் எனும் அமைப்பைச் சீரழித்து முழுச் சமூகத்தையுமே தட்டழியச் செய்யும் முயற்சியே இது. இஸ்லாம் பெண்களுக்கு வழங்காத உரிமையா? அல்லாஹ்வும் அவனது தூதரும் வழங்காத கௌரவமா?

தொடர்பு சாதனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், குடும்ப சுகாதார சேவகிகள், வைத்தியர்கள் மற்றும் ஏனைய சமூக சேவகர்கள் ஊடாகத் தரப்படும் குடும்பக் கட்டுப்பாடு வழிமுறைகளில் கண்ணும் கருத்துமாக இருங்கள். உண்மையிலேயே இது உங்களுக்கு அவசியம்தானா? என்பதனை எடை போட்டுப் பாருங்கள். உங்கள் கணவனுடன் கலந்தாலோசியுங்கள். மருத்துவக் காரணங்களுக்கு மட்டுமே அவற்றை உபயோகியுங்கள். அப்போதும் பக்க விளைவுகள் குறைவானவற்றை தேர்ந்தெடுங்கள். அந்நிய சமூகத்திற்கு முன்னால் மண்டியிடும் நிலைக்கு உங்கள் சமூகத்தை ஆளாக்கி விடாதீர்கள்.

**"வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்."** எனும் அல்லாஹ்வின் எச்சரிக்கையை நினைவில் கொள்ளுங்கள். அவனையே அஞ்சுங்கள். அல்லாஹ்- அவன்தான் அர்ரஸ்ஸாக் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவனது அருளிலும் திருப் பொருத்தத்திலும் நாட்டம் வையுங்கள்.

**"அல்லாஹ் ஒன்றைப் படைக்க நாடினால் அதில் நின்றும் அவனை இயலாதவனாக்குதற்கு எதனாலும் முடியாது" (ஸஹீஹ் முஸ்லிம்)** என்பது நபி வாக்கு

பெண்களே! அதிகமான குழந்தைகளைப் பெற்றெடுத்து அல்லாஹ் விரும்பும் அடியார்களாக அவர்களை வளர்த்தெடுத்து மகிழ்ச்சிகரமான இலட்சியக் குடும்பம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் அல்லாஹு"த் தஆலாவின் தீனை இந்த பூமியில் நிலைநாட்டுகின்ற உன்னத சமூகத்தின் உருவாக்கத்தில் உங்களது பங்களிப்பைச் செய்யுங்கள்.

அல்லாஹ்வின் திருப்பொருத்தமும் அவனது தூதரின் நல்லாசிகளும் உங்களைச் சேர வாழ்த்துக்கள்.



# பெண்மணிகளே!

## சமூக அந்தஸ்த்தை எங்கே தேடுகிறீர்கள்?

பொதுவாக இன்று இஸ்லாமிய சமூகத்தை நோக்குகின்றபோது சில பெண்கள் முண்டியடித்துக் கொண்டு பல்கலைக்கழகம் நுழைவதைக் காண முடிகிறது. அவர்களது முழு நோக்கமும் கல்விச் சான்றிதழைப் பெற்று ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்வதே. மாறாக, ஆரம்ப காலங்களைப் போல் ஆழமாக தனது கல்வியைக் கற்று ஒரு சிறந்த புத்தி ஜீவியாக சமூகத்திற்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கம் இல்லை. தனது தொழிலுக்குத் தேவையான அளவு மட்டும் கற்று ஒரு தொழிலைப் பெற்று சமூகத்தில் தன்னை 'நானும் படித்தவள்; நானும் ஒரு உத்தியோகத்தவள்' என்று இனங்காட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஓர் இலக்குத் தான் இவர்களுக்கு முன்னால் உள்ளது. ஒரு தொழிலை கையில் வைத்திருக்கும் போதுதான் சமூகம் தன்னை மதிக்கும் என்றும், வீட்டில் தங்கியிருப்பதை ஒரு பிற்போக்குத்தனம் என்றும் கருதுகிறார்கள்.

''நான் சமூகத்தில் அந்தஸ்த்துள்ளவள் என நிறுவப் போகிறேன்; நான் எனது ஆற்றல்களை சமூகத்திற்குக் காட்டப் போகிறேன்; நான் சுயமாக தொழில்செய்து யாரிலும் தங்கியிருக்காமல் கௌரவமாக வாழ விரும்புகிறேன்.'' என்பது போன்ற வார்த்தை ஜாலங்களும், கேட்பதற்கு இனிமையாக இருக்கும் வெற்றுக் கோஷங்களும் இன்று பெண்கள் சந்தையில் அடிக்கடி ஒலித்த வண்ணம் உள்ளன. இந்த கோஷங்கள் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்று அனைத்து மட்டங்களிலும் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தி வாழ்க்கையில் ஓர் இலக்காக எடுத்து அதன்பால் பெண்களுக்கு அழைப்பு விடுக்கின்றனர்.

இதற்கான காரணத்தை உளவியல் நிபுணர்கள் விளக்கும் போது, பெண்கள் சமூக அந்தஸ்த்தையும், கௌரவத்தையும் இதன் மூலம் எதிர்பார்ப்பதாகவும் அவற்றுக்கான ஒரே வழியாக வீட்டுக்கு வெளியே ஓர் உத்தியோகத்தை தேடுவதால் அடைய முயற்சிக்கின்றனர். அத்தோடு பொதுவாக அந்தஸ்த்து, கண்ணியம் போன்றவற்றை தேடிச் செல்வது மனிதனின் தவிர்க்க முடியாத தேவையும், இயல்பும் என்கின்றனர்.

எது எவ்வாறிருப்பினும் தன்னை சமூகத்திற்கு ஓர் உத்தியோகத்தின் மூலம் மட்டுமே இனங்காட்டலாம் என்ற சிந்தனை படிப்படியாக வளர்ந்து விடுகின்றது. அது தான் வாழ்க்கையின் உன்னத நோக்கமாக மாறியுள்ளது. அதனோடு ஒப்பிடுகின்றபோது ஏனைய எல்லாப் பணிகளும் செயற்பாடுகளும் அற்பமானதாக கணிக்கப்படுகிறது. எந்தளவுக்கு இந்த சிந்தனை பெண்களை ஆக்கிரமித்துள்ளதென்றால், தான் செய்யும் தொழில் பற்றி தனக்கு போதிய அறிவு உள்ளதா? தன்னால் அந்த உத்தியோகத்தை தூய்மையாகவும், திறம்படவும் செய்ய முடியுமா? என்ற கேள்விக்குப் பதில் தெரியாதவர்களாக தொழில்களில் நுழைகின்றனர். அதனை விட முக்கியமான வீட்டு வேலைகள், பிள்ளை வளர்ப்பு, கணவனின் கடமைகள் போன்றவற்றை பூரணமாக கைவிட்டுள்ளனர். இவ்வாறு இந்த பிற்போக்கான சிந்தனை பெண்கள் மத்தியில் பரவலாக வேரூன்றி வருவதை அவதானிக்கலாம்.

இந்த சிந்தனை வளர்ந்து அதன் விளைவாக வீடுகளில் பணிப்பெண்கள் அதிகரித்து தாய்மார்கள் குறைந்து விடுகின்றனர். அந்தளவுக்கு வீட்டிற்கு வெளியே தொழில் செய்வது ஒரு பயங்கர போட்டியாகவும், ஒரு தொற்று நோயாகவும் மாறிவருகின்றது. இதனால் அப்பாவியான குழந்தைகள் சீரிய வழிகாட்டல், பாச உணர்வு, சிறந்த வளர்ப்பின்றி ஆளுமை இழந்தவர்களாக பாதை தெளிவற்றவர்களாக விரக்தி மனப்பான்மை கொண்டவர்களாக உருவாக்கப்படுகின்றனர். ஏனெனில் ஒரு தாய் தனது பிள்ளையிடம் கொஞ்ச நேரம் இருந்தால் போதும் என்றும், பிள்ளை வளர்ப்புக்காக முழு நேரத்தையும் வீட்டில் கழிப்பது ஒரு பழமையான நடைமுறையென்றும் பெண்கள் விளங்கியுள்ளனர். அதனால்தான் தொழில் பார்க்கும் நேரத்தில் பணிப்பெண் வீட்டைக் கவனிப்பாள் என்கின்றனர்.

சரி! அந்தளவுக்கு அவள் தொழில் புரிய வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கின்றளவுக்கு வெளியில் பெரிதாக சாதித்ததாக ஒன்றும் இல்லை. வழமைபோல் ஒன்றில் அவள் ஆசிரியையாக இருப்பாள்; அல்லது ஒரு சாதாரண உத்தியோகம் பார்ப்பவளாக இருப்பாள். உண்மையில் அவள் பிள்ளைகளை உரிய முறையில் வளர்க்காது விட்டதால் ஏற்பட்ட நஷ்டங்களை ஓரளவு ஈடுசெய்யக் கூடிய ஒரு தொழிலை மேற்கொள்ளுகிறாளா என்றால் அதுவும் இல்லை.

உண்மையில் பார்க்கின்ற போது தன்னை சமூகத்தில் கௌரவம் உள்ளவளாக காட்டிக் கொள்வதற்கு வெளியில் தொழில் தேடி அலைவது மட்டும்தான் வழி; வேறு வழி இல்லையா என்று பார்த்தால் எவ்வளவோ வழிகள் உள்ளன. மிகக் கீழ்த்தரமான, சமூகத்தில் பெண்மைக்குப் புறம்பான தொழில் தேடி அல்லது உத்தியோகம் புரிந்து கஷ்டப்படத் தேவையில்லை. ஒரு பெண்ணின் சுயகௌரவம் அந்தஸ்த்து, மதிப்பு எங்கிருக்கிறது என்றால் அவளது வீட்டினுள்ளேயே இருக்கிறது. கீழே நாம் குறிப்பிடுகின்ற விடயங்களை உரிய முறையில் செய்கின்றபோது அவள் சமூகத்தில் அந்தஸ்த்து, கௌரவம் உள்ளவளாக மாறுவாள் என்பதில் சந்தேகம் இல்லை.

முதலாவது, ஒரு பெண் தனது வீட்டை எந்தளவுக்கு ஆழமாக ஒழுங்குபடுத்தி, தரப்படுத்தி வைக்க முடியுமோ அந்தளவுக்கு அவள் தன்னை சமூகத்திற்கு இனங்காட்டிக் கொள்கிறாள். ஆனால் இன்று பெண்களில் இந்த பகுதி குறைந்து வருகிறது.

ஒரு தாய் தனது பிள்ளைகளை அதன் வயதில் உள்ள ஏனைய நண்பர்களைவிட மார்க்க, ஒழுக்க, அறிவு, நடத்தை ரீதியாக முன்னேறியவர்களாக உருவாக்க வேண்டும். அது அவளுக்கு சமூகத்தில் அளவிட முடியாத அந்தஸ்த்தை ஈட்டிக் கொடுக்கிறது.

பிள்ளைகளைப் பெற்றெடுப்பதில் பெரும்பாலும் எல்லாப் பெண்களும் சமனாகும். ஆனால் உண்மையான தாய் யாரென்றால் தனது பிள்ளைகளை அடுத்தவர்களின் உரிமைகளை மதித்து நடக்கக் கூடிய நற்பண்புகளை அணிகலனாகக் கொண்ட ஒரு நல்ல பிரஜையாக உருவாக்குபவளாக இருக்க வேண்டும்.

நாம் அவசியம் 'பிள்ளை பெறுபவள்' என்ற சொல்லையும் 'தாய்' என்ற சொல்லையும் பிரித்தறிய வேண்டும். ஒரு குழந்தையைப் பெற்று எடுப்பவளை பிள்ளை பெறுபவள் என்று சொல்லலாம். பிள்ளை பெறுகின்ற எல்லாப் பெண்களையும் தாய் என்று அழைக்க முடியாது. தாய் என்பது உயரிய கருத்துக்களை கொண்ட ஒரு சொல். ஒரு தாயாக இருக்க விரும்புகிறவள் தனது பிள்ளைகளை ஒரு உயரிய நோக்கத்தின்பால் வளர்த்தெடுப்பதற்கு இரவு



பகலாக பல தியாகங்களை புரிய வேண்டியுள்ளவள்.

அறிவு ரீதியாகவும், சான்றிதழ்களை பெறுவதினூடாகவும் ஒரு பெண் தன்னை சமூகத்தில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். அதாவது அவள் ஒரு துறையை தேர்ந்தெடுத்து அதில் விஷேட தகைமை பெற வேண்டும். உதாரணமாக இஸ்லாமிய சட்டக் கலை அல்லது பெண்களோடு சம்பந்தப்பட்ட துறைகள் போன்றவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெறும்போது அவள் சமூகத்தின் அச்சாணியாக மாறுவாள். அந்தத்துறை சம்பந்தமான பிரச்சினைகளின் போது அவளை நாடிவருவார்கள். அவள் அதனை தனது வீட்டு வேலைகளை கவனித்துக் கொண்டே செய்யலாம். வீட்டிற்கு வெளியே சென்றுதான் தனது அந்தஸ்த்தைப் பெற வேண்டும் என்ற தேவை இல்லை.

அத்தோடு அவள் தனது வீட்டிலே பெண்களுக்கு என்று விஷேடமாக அறிவு மஜ்லிஸ்களை ஏற்படுத்தி பெண்களை வீண்பேச்சுக்களில் நேரங்களை கழிப்பதிலிருந்து திசை திருப்பலாம். பெண்களின் அறிவு மட்டத்தை, சிந்திக்கும் தன்மையை விரிவுபடுத்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம். இது அவர்களுக்கும் ஓர் ஆறுதலாக இருக்கும்.

எனவே ஒரு பெண் தன்னை அந்தஸ்து, மதிப்புள்ளவளாக சமூகத்தில் காட்டுவதற்கு இவை தவிர வேறு பல வழிகள் உள்ளன. அதனால் மேற்சொன்ன வெற்றுக்கோஷங்களின் பின்னால் மதிமயங்கி தமது பெண்மையை மறந்தவர்களாகவும் தமது அடிப்படை நோக்கத்தை தட்டிக் கழிப்பவர்களாகவும் மாறாமல் இஸ்லாம் கூறும் வரையறைகளை பேணி வாழ முற்பட வேண்டும். அதில்தான் இம்மையிலும் மறுமையிலும் அடையக் கூடிய அந்தஸ்த்தும் கௌரவமும் உள்ளவளாக விளங்க வழியுள்ளது.

**நன்றி :**

**அல்முஜ்தமஃ அறபு சஞ்சிகை**

**தமிழில் :**

**பலாங்கொடை நளீம்**

# உணர்வு பெறு சகோதரியே!

பெண்ணை இறைவன் ஆணின் துணையாகவும், கண்ணியமிக்கவளாகவும் படைத்துள்ளான். கண்ணியத்தில் ஆணையும், பெண்ணையும் இஸ்லாம் ஒரே தரத்தில் வைத்துள்ளது. ஆண், தான் ஆண் என்பதையும், பெண், தான் பெண் என்பதையும் மனதில் ஆழப்பதித்து செயல்படும்போது உலகில் சீர்கேடுகள் நீங்கிவிடும். பொதுவாக தீமைகளுக்கு ஆணும், பெண்ணும் துணைபோனாலும் இதில் பெண்ணின் பங்கு மிகப் பெரியதாகும்.

பெண் ஆணுக்குப் பின் படைக்கப்பட்டவள். இப்னு அபீ ஹாதிம் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ''பெண் ஆணிலிருந்து படைக்கப்பட்டவள். அவளின் தேவையை (இறைவன்) ஆணில் வைத்துள்ளான். ஆண் பூமியால் படைக்கப்பட்டவன். அவனின் உணவை பூமியில் வைத்துள்ளான். ஆகவே, உங்கள் பெண்களை நீங்கள் தடுத்துக் கொள்ளுங்கள்''

(தப்ஸீர் இப்னு கஸீர், முதலாம் பாகம்)

ஆண்தான் உலகையும், பெண்ணையும் நிர்வகிப்பவன்; பெண் அல்ல. ஆனால் 'நாட்டை நிர்வகிப்பதற்கு எங்களுக்கும் உரிமை உண்டு' என்று பெண்கள் வாதாடத் தொடங்கியிருக்கிறார்கள். பெண்ணுக்கு கடமையற்றவற்றில் பெண் சமூகம் தலையிடுகிறது. எனவேதான், 'பெண் மூலம் சமூக சீர்கேடுகள் உருவாகின்றன' எனக் குறிப்பிட்டேன். பெண் சமூகமே தங்களின் மானத்திற்கு விலைபேசுகிறது; பெண்களே தங்களது கண்ணியத்தை இழந்து விடுகிறார்கள்; காட்சிப் பொருட்களாக தங்களை அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள்; ஆனால் அவர்களின் கற்புக்கு பாதுகாப்பை வழங்கியது இஸ்லாம்தான் என்பதை மறந்து விடுகிறார்கள்.

சகோதரிகளே! இஸ்லாம் கூறும் பாதையில் நாம் சென்றால் எங்களை விட்டுச் சென்ற மானத்தையும், கண்ணியத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆண்களை விட பெண்கள் இஸ்லாத்தைப் பின்பற்றுவது மிக இலகுவானது. உதாரணமாக, நாம் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு செல்லக் கடமையற்றவர்கள், ஆண் துணையின்றி ஹஜ் செய்ய கடமையற்றவர்கள்; இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஆணைப் போன்று செயல்படக் கடமையற்றவர்கள். இன்னும் பல உதாரணங்களைக் கூறலாம். இவ்வாறு எமக்கு இஸ்லாத்தைப் பின்பற்றுவதற்கு இலகுபடுத்தித் தந்தும் கூட அநேக சகோதரிகள், தாய்மார் பிள்ளை வளர்ப்பில்கூட தவறிழைக்கிறார்கள். வீணாக நேரத்தைக் கழிக்கிறார்கள். ஐந்து நேர தொழுகையை விட்டுவிடுகிறார்கள். இவற்றைச் சரியாகப் பேணத் தெரியாதவர்கள் சமூகத்தை நிர்வகிக்கப் புறப்பட்டு விடுகிறார்கள் என்பது ஆச்சரியமானது. இவற்றை எமது சகோதரிகள் சிந்திப்பதில்லையா?

ஒரு சீரிய சமூகத்தை உருவாக்குவதில் ஒரு பெண்ணின் பங்கு பாரியது. அதேபோன்று ஒரு சீர்கெட்ட சமூகம் காணப்படுமாயின் அதற்கும் முக்கிய காரணம் பெண் என்பதையும் நாம் மறுக்க முடியாது. இதனை அந்நிய சமூகத்தில் உள்ள அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். ''பெண்களால் உலகம் அழிவதுண்டு. ஆனால் அழிவிலிருந்து காப்பவர்களும் பெண்கள்தான் என்ற உண்மையை மறுக்க முடியாது'' என்று அறிஞர் சோக்ரடீஸ் கூறியுள்ளார். இந்த அறிஞரின் சிந்தனை இஸ்லாத்திற்கும் முரணானதல்ல. நபி (ஸல்) அவர்கள் கூட இந்த உண்மையை கூறியுள்ளார்கள். அபூஸஈத் அல்ஹுத்ரி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்.

**"நிச்சயமாக இவ்வுலகம் பசுமையானதும் இன்பமானதுமாகும். அல்லாஹுத் தஆலா உங்களை (இவ்வுலகில்) பிரதிநிதியாக ஆக்கிவிட்டு நீங்கள் எப்படி செயல்படுகிறீர்கள் என்று பார்க்கிறான். ஆகவே உலகத்தையும், பெண்களையும் பயந்து கொள்ளுங்கள். ஏனெனில், முதல் பித்னா பனூ இஸ்ரவேலர்களில் பெண்களின் மூலமாகவே ஏற்பட்டது" (முஸ்லிம்)**

இன்னும் எங்கள் இனம்தான் (பெண்இனம்) நரகத்தில் அதிகமாக இருப்பதை நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள். ஏன் நபி (ஸல்) அவர்கள் இப்படி கூறி இருக்க வேண்டும் சிந்திக்கக் கூடாதா? அதன் அடிப்படையில் நாம் செயல்படக்கூடாதா?

ஆகவே சமூக அழிவுக்கு காரணம் நாங்கள்தானா? இறைவன் எம்மைப் பாதுகாக்க வேண்டும். எமது தாய்மார், சகோதரிகள் நரகத்தில் இருப்பதை சகோதரிகளே நீங்கள் விரும்புவீர்களா? அப்படி என்றால் வாருங்கள் இஸ்லாமியப் பாதையில் பயணிப்போம். இடிந்துபோன சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம். இறைவன் எம்மை கொடிய நரகத்திலிருந்து பாதுகாப்பானாக!

**– ஹெம்மாதகம பாதிமா பர்ஸானா ஸலீம் –**



# பெற்றோருக்கு...!

– சமீஹா சியாலுாத்தீன், பூலாச்சேனை –

குழந்தைகளுக்கு முந்திக் கொண்டு 'ஸலாம்' செல்லும் பழக்கத்தை உருவாக்குங்கள்.

நீங்கள் உங்களுக்கு விரும்புவதையே பிறருக்கும் விரும்புகிறீர்கள் என்பதை செயல்முறையில் கடைப்பிடித்து அந்த உணர்வை குழந்தைகளிடம் தோற்றுவியுங்கள்.

குழந்தைகளின் விஷயத்தில் அவர்களிடம் கலந்து ஆலோசியுங்கள். இறைவனுக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளை சமமாக நடத்துங்கள்.

ஒரு தாய் தன் குழந்தைக்கு கொடுக்கும் அன்பளிப்புகளில், அதற்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிப்பதுதான் சிறந்த அன்பளிப்பாகும்.

சமூக நடவடிக்கைகளிலும் விருந்தினர்களை உபசரிப்பதிலும் பங்கு கொள்ள அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

உண்ணல், பருகல், விளையாட்டு போன்றவற்றில் பிற குழந்தைகளையும் இணைத்துக் கொள்ள ஊக்கமளிக்க வேண்டும்.

உங்கள் வழிகாட்டலின் கீழ் குழந்தைகள் தம் விஷயங்களுக்கு தாமே தீர்வுகாணும் உரிமையை முடிந்தளவுக்கு வழங்க வேண்டும்.

தம் பணியை தாமே செய்யும் பழக்கத்தை குழந்தைகளிடம் ஒப்படையுங்கள்.

நண்பர்களின் வீடுகளுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள்; குழந்தைகளின் நண்பர்களை வீட்டுக்கு அழைத்துவர உற்சாகப்படுத்துவதோடு அவர்களை கண்ணியப்படுத்துங்கள்.

**“எல்லாக் குழந்தைகளும் இயற்கையிலேயே (முஸ்லிமாகவே) பிறக்கின்றன. ஆனால் அவர்களது பெற்றோரே அவர்களை யூதர்களாகவோ நெருப்பு வணங்கிகளாகவோ மாற்றுகின்றனர்.”**

**(நபிமொழி)**

இந்த வகையில் எமது குழந்தைகளை எடுத்து நோக்கினால் அவர்கள் மெழுகினையொத்த மென்மையுடையன. நாம் விரும்பியவாறெல்லாம் வளைந்து கொடுக்கும் தன்மையுடையன. நாம் விரும்பிய வண்ணம் நம் குழந்தைகளை உருவாக்கிட நம்மால் முடியும். நம் குழந்தையின் எதிர்காலம் பெற்றோராகிய நமது கரங்களிலேதான் உள்ளது. நமது குழந்தைகளை எத்தகைய அச்சில் வார்க்கின்றோமோ அவ்வாறே அவை உருப்பெறுகின்றன. அவற்றின் வருங்கால வாழ்வும் அவ்வண்ணமே அமைகிறது.

உதாரணமாக, குழந்தைகள் அழுகின்ற போது எத்தனையோ பொய்களைக் கூறி அந்த அழுகையை நிறுத்துகிறோம். ஆனால் அக்குழந்தை அன்றிலிருந்து பொய் பேசும் பழக்கத்தை கற்றுக் கொள்கிறது என்பது எமது சிந்தனைக்கு எட்டுவதில்லை. விளையாட்டுக்குக் கூட பொய் பேசும் பழக்கத்தை நபியவர்கள் கண்டித்துள்ளார்கள் என்பதை பின்வரும் ஒரு சம்பவத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.
“ஒரு பெண்மணி தன்னுடைய கையைப் பொத்திக் கொண்டு, 'மகனே இங்கே வாருங்கள்' என்று அழைத்த போது, இதனைக் கண்ட நபியவர்கள், 'உங்கள் கையில் என்ன இருக்கிறது?' என்று கேட்க, அப்பெண், 'எனது கையில் பேரீத்தம்பழம்' என்கிறாள். உடனே நபியவர்கள் கூறினார்கள்: 'அவ்வாறு இல்லாது உங்களது வெறுங்கையாக இருந்து நீங்கள் அழைத்து இருந்தீர்களென்றால் பொய்யர்களில் ஒருவராக நீங்கள் எழுதப்பட்டிருப்பீர்கள்' என்று கூறினார்கள்.”

குழந்தைப் பருவத்தில், பிஞ்சு நெஞ்சத்தில் பதிந்திடும் நிகழ்ச்சிகள், அவ்வப்போது நாம் நடந்து கொள்ளும் விதம் ஆகியன எதிர்காலத்தில் அக்குழந்தையின் சிந்தனைப் போக்கையும், வாழ்க்கை முறையையும் நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

குழந்தை வளர்ப்பு கடினமானதொரு கலையாகும். தன் பிள்ளைகளை வையகம் போற்றும் அறிஞர்களாக்க விரும்பும் பெற்றோர், இஸ்லாம் கூறும் பண்பின் அடிப்படையில் பயிற்றுவித்தால் தனது விருப்பத்தை நிறைவேற்ற முடியும்.

குழந்தையின் சீரிய வளர்ச்சிக்கு அன்பும், முயற்சியும், கவனமும் மிகவும் தேவைப்படுகிறது. வேறு எந்த உயிரினங்களின் வளர்ச்சிக்கும் அவ்வாறு தேவைப்படுவதில்லை. இத்தகைய பயிற்சி அளிப்பதில் ஏற்படும் சிறு தவறும் அல்லது காட்டப்படும் அசிரத்தையும் குழந்தையின் சீரிய வளர்ச்சியின் திசையை மாற்றி, பெரும் அபாயங்களை விளைவிக்கும். பிறகு அக்குழந்தை சமூகத்துக்கு இன்னல் விளைவிக்கக்கூடிய, வேதனை தரக்கூடிய ஒரு பிறவியாக ஆகிவிடக்கூடும். ஆனால் விழிப்புணர்ச்சியுடன் சீரான திசையில் அதற்குப் பயிற்சியளிக்கப்பட்டால் அக்குழந்தை நாட்டின், சமூகத்தின் விலைமதிப்பற்ற ஒரு மூலதனமாக ஆகும்.

எனவே இன்றைய எம் மழலைச் செல்வங்கள்தான் நாட்டின் நாளைய தலைவர்கள் என்பதைக் கருத்திற் கொண்டு நாட்டுக்கும், சமூகத்திற்கும் சேவை செய்யக் கூடிய ஒழுக்கநலன் கொண்ட உயர் மக்களையும், பெற்றோரின் மரணத்துக்குப் பின் நன்மையை பெற்றுத்தரக் கூடிய பிள்ளைச் செல்வங்களாக மாற்றியமைக்க பெற்றோர்களாகிய நாம் முயற்சிப்போமாக.

**உங்களது சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். உங்களின் நண்பருக்கு, உறவினருக்கு நீங்கள் அளிக்கும் சிறந்த அன்பளிப்புகளுள் ஒன்றாக ஏன் 'அல்ஹஸனாத்' இருக்கக் கூடாது?**

# கவிதாபவனம்

தயாரிப்பு அஷ்ஃப்

## நீயும் அவளன்றோ?

சீதனச் சண்டமாருத மையத்தில்
தாயினர், சகோதரியர்
முகங்களுமல்லவா தெரிகின்றன.

அவள் மருமகளாகின்றபோது
தன் மகளால் வெதும்பிய
கைக்கூலிக் கனலால்
எரியூட்ட நினைப்பதும்,

சகோதரியாயிருந்து
தானே கனன்ற கைக்கூலிக்கு
சிபாரிசு செய்வதும்
சுழற்சி முறைப்பலி தீர்த்தலா ?

பலி தீர்த்து இகத்தில்
பயன் காணலாம்
மகத்தான அந்நாளின் நிலுவையில்
இது இடப்பக்கம் கனக்கவல்லது.
மஹ்ஷரின் நினைவில்
இச்சங்கிலித் தொடர் நொறுங்கும்.

இப்னு ஜ ∴ப்ரி

## இன்றைய பாதி மக்கள்

மஹர் கொடுத்து
கரம் பிடிக்க
மணமகன் வருவானென
மங்கையவள் காத்திருந்தாள்
இறைகாட்டிய மறைவழியை
இவன் இன்று மறந்து விட்டான்.
புன்னகையை எடை போட
பொற்தராசு இல்லையென்று
பொன்னகையை அவன்
போடுமாறு கேட்டு விட்டான்
கட்டிக்காத்த ஒழுக்கத்தை
ஏழையவள் தரமுனைய
கட்டுக் கட்டாய்த் - தா
இலட்சங்களை கட்டாயம்
கரம்பிடிப்பேன் என
கஞ்சனவன் கேட்டுவிட்டான்
கன்னியவள் கலங்கியதால்
கடன்பட்டே கொடுத்திட்டாள்
பாதிமாவின் கொள்கையை
பற்றியிருந்த கரங்களை
தட்டிய காளையவன்
பதில் சொல்லும் காலம்
நிச்சயம் வரவேண்டும்

எம் . அஸ்மியா, பலந்தொடை

## மறுபக்கம்

சீதனமெனும்
கோரப்பிடிக்குள்
சிக்குண்டு
சீரழிந்து நிற்கும் பெண்ணே!

உன் இந்நிலமைக்கு
காரணம்
ஆண்களென்றா
கண்களில் நீர்

கொடுத்த பாலுக்கு
கூலி கேட்டு
சாதனை ஒன்றை
சாதித்து விட்டதாக
சத்தியம் செய்கிறாளே
தாய்யென்ற
பெயர் பொறித்த
பெண்

ஊட்டி வளர்த்த உணவுக்கு
வாடகை கேட்டு விட்டு
மானமிழந்ததை
உணராமல்
மகுடமேந்தியதாக
மார்தட்டி நிற்கும்
சகோதரியும்
பெண்

சீதனமென்றால்
சிம்மாசனமானாலும்
வேண்டாமென்று
உன்னைப்போல்
அத்தனை பெண்களும்
உறுதி கொண்டால்
அத்தனை ஆண்களும்
அணிவகுத்து நிற்பர்
மகரெனும்
மகரந்தம் ஏந்தி
மானத்தோடு

இப்னு ஷஹீத்,
காஸிமிய்யா அரபுக் கல்லூரி

## நீயும் வாழவேண்டும

போய் வா மகளே
கடல் கடந்து
மனக் கனவுகள் துறந்து
மனக் கதவைத் திறந்து
நீ போய் வா!

நீ இதய வீணையை
மீட்டும் போதெல்லாம்
உன் விழிகளால் அல்லவா
கானம் கசிகிறது
கண்ணீராக....!

நீ சிட்டாகச்
சிறகடித்த பொழுதில்
உன் சிந்தை
உலக உணர்வில்
மழுங்கிக் கிடந்தது
இன்று உன் தாவணி
உனக்கேன் வேலி போட்டது!

உன் பருவம் நான்கு சுவருக்குள்
ஏன் சிறைவைத்தது!
துள்ளித்திரிந்த உன் இளமை
சதி வலையில் ஏன் சிக்கியதோ!

ஓ.. அது காலம் வகுத்த
பெண்மையின் விதியோ
போய் வா
உன் வாழ்க்கையின்
வசந்த கால விடியலுக்காய்
பலியெடுக்கும்
வெளி நாட்டில் உழைத்திட
நீயும் போய் வா!

அங்கு உனக்கு
இலவசப்பட்டம்
வழங்கப்படும்
அடிமை என்று!

காமப் பேய்கள் உன் மீது
கண் பதிக்கும்
வண்டுகள்தேனருந்த வரும்
நீ பூவாக இராதே
முட்களாக மாறிவிடு!

லட்சக்கணக்கில்
பணமும் நகையும்
ஏழைகள் எம்மிடம்
ஏது..!

மாப்பிள்ளையின் விலை
இன்னும் குறையவில்லை
நாளுக்கு நாள்
அதிகரிக்கிறது!

நாட்களுக்கும்
பொறுமையில்லை
விரைந்தே செல்கிறது
உன் வயதையும்
கூட்டிக் கொண்டு!

தாமதிக்காதே
போய் வா!
இச்சீதனத் தேசத்தில்
நீயும் வாழ வேண்டும்
கடல் கடந்து
போய் வா மகளே!

விந்தானி ஏ. தாரிக், கந்தளாய

## எப்போது?

வாழ்க்கை ரணத்தில்
வாழாவெட்டியாய்
வரி விதிப்புக்குள்
சுமை தாங்கியாய்
வாடும் மங்கையரின்
கல்புக்குள் ஒளியூட்டி
புது யுகத்தை உருவாக்க
விரைந்திடுவீர் வாலிபரே!

மங்கைக்குள் தீயாய்
தீக்குள் அவளாய்
எரியும் சீதனத்தை
மஹர் நீரை ஊற்றி
அணைப்பதற்காய்
களம் வாருங்கள்!!

சீதனக் கொடுமையால்
சீரழியும் சமூகத்தை
சீராக்க வேண்டுமென்ற
வைராக்கியம் இன்னும்
முதுகெலும்புள்ள புத்திஜீவிக்கு
பிறக்கவில்லையா ?

பரீஹா இஸ்மாஈல் இஸ்லாஹி

விஷேட தினங்களை முன்னிட்டு கவிதைகளை அனுப்புவோர் குறித்த தினத்திற்கு 30 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்

## யார் இவர்கள்?

இவர்கள் மனைவியரிடம்
பகல் கொள்ளையடித்த
தூரோகிகள்.... பின்பு
கூசாமல் அவள் முகம் பார்க்கும்
வேஷதாரிகள்...

பலமிருந்தும் வெட்கமின்றி
கேட்டு வாங்கிய
பிச்சைக் காரர்கள்....
மாற்றான் சொத்தை
அபகரித்த
போலி தனவந்தர்கள்....

ஏழைத் தகப்பனின்
துன்பத்தில் சிரித்த
இரக்கமில்லா அரக்கர்கள்...

ஆண் வர்க்கத்திற்கே
அவமானம் ஏற்படுத்திய
படு கோழைகள்...

நாபாவளை மதனி உவைஸ்

# கவிதாபவனம்

தயாரிப்பு அஷ்

## கவிதை நெய்தல் 13 முடிவுகள்



### முதலிடம் பெற்ற கவிதை

**அற்பம்**

மறுமைக்கென
உயிரைக்கூட விற்றுவிட்ட
புனிதரிடம்
நீ வெறும் காகிதமே

அபூஸாஜித், புத்தளம்

### இடம்பிடித்த ஏனையவை

**தாள்**

கால் கடுக்க நின்றேனும்
அடுக்கடுக்காய்
உனைச் சேர்க்க
துடிக்குது என் மனம்
பிணங்கூட வாய்பிளக்குமாம்
உனைக் காண்டு மனமகிழ்ந்து
எங்கிருந்து வந்ததோ
உனக்கிந்த கௌரவம்!

நப்லிஸா ராஜுன், ஹெம்மாதகம

**சகராத்துப் புலம்பல்**

முயற்சித்த போதெல்லாம்
திரண்டு வந்து தழுவினாய்
மறுமை வாழ்வுக்கும் உனை
பயன்படுத்தவில்லை நான்
அப்போது
பரிதவித்தென்ன பலன்
இப்போது

ஏயாரெம் முஸம்மில்
தெல்தோட்டை

**கொடுமை**

மலர்ந்து
மணம் வீச வேண்டிய
ஏழை
மொட்டுக்கள் எல்லாம்
மலராமலே
உதிர்ந்து போவது
உன் கொடுமையல்லவா?

எம்.ஆர். பர்வீன் கான்
நீர்கொழும்பு

**நிலைமாற்றம்**

பண நோட்டுக்கள்
கரம் ஏறினால்
பிண மேடெனவே
குணம் மாறுமோ!
அதில் சிறு
பயன் தேறுமோ!

பர்ஸானா மன்ஸூர், ஹற்றன்

**புரிந்தது**

நிம்மதி என்றெண்ணி
சொந்தங்களைத் தூரமாக்கி
சோகங்களைச் சொந்தமாக்கி
நித்தமும் உனைச் சேர்த்தேன்
நீ வந்ததும் தான் புரிந்தது -
நான்
தேடியதைக் தொலைத்தது.

**காசேதான்...**

கட்டுக் கட்டாய்
கோடி பணம்
ஹலால் ஹராம்
கட்டாய தர் ஒதுக்கீடு
ஆய்ந்தளக்க நேரமில்லை
உலகை வாங்கும் அவசரத்தில்

ரிஸானா ஜுனைட், பேருவளை

**பிணம்**

தனம் பணம் என
தினம் விழும் தொழும்
மனம் கணம் குணம்
காணா அழும் பிணம்

அபூ ஒமர் மஹ்மூத்

## கவிதை நெய்தல் 14



அடையவேண்டிய
இறுதித் திகதி
08 - 05 - 2001

**புத்திசாலி**

நோட்டு நோட்டாய்
இறைவழியில் சிலரால்
நீ இறைக்கப்பட
கட்டுக்கட்டாய்
கூட்டுப் பெட்டியில் சிலரால்
நீ குவிக்கப்பட
பட்டம் இதில் யாருக்கு
'புத்திசாலி' என!

எம்.பீ.எம். பர்ஹான்
மீஸானிய்யா அரபுக்கல்லூரி

**வாழ்க்கை**

உலகைக் கேட்டேன்
பணமே இன்பம் என்றது
உள்ளத்தைக் கேட்டேன்
பணமே எல்லாம் என்றது
அறிவைக் கேட்டேன்
மறுமைதான் வாழ்வு என்றது

பி.எம். றில்வான், அகுரணை

**குற்றங்கள்**

உன்னாசையால்
இறைவழி மறந்து
நபிவழி துறந்து
குறைவழி சென்றோம்
குற்றச் செயல் எம்பின்னால்
கோடிக்கணக்கில்
நரகவாயில் எம்முன்னால்
திறந்த நிலையில்

எம்.எஸ்.எம். நிலாம், அம்பாரை

## ஆரோக்கிய சந்திப்பு :

# வீட்டுத் தோட்டத்திற்கான திட்டம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

Dr. எம்.எல்.எம். றயீஸ்
M.B.B.S. (SL), D.C.H. (Colombo)
லேடி றிட்ஜ்வே
சிறுவர் வைத்தியசாலை,
கொழும்பு.

**அடிப்படைத் தேவை:**

நிலப்பரப்பு, சூரிய ஒளி, நீர் மற்றும் முயற்சி

அதிஷ்டவசமாக இலங்கையின் மண் மற்றும் காலநிலைகளுக்கு ஏற்ப வளரக் கூடிய பிரயோசனமான பலவகையான தாவரங்கள் தாராளமாய் கிடைக்கின்றன. தேவையானதெல்லாம் சிறு முயற்சி மாத்திரமே!

வீட்டுத் தோட்டத்தின் மூலம் உணவு கிடைப்பது மட்டுமல்லாமல் வீட்டுச் சூழலை அழகாக வைக்கவும் அது உதவுகிறது.

**நிழலை விரும்பும் தாவரங்கள்**

பொன்னாங்கண்ணி (முகுணுவென்ன) வல்லாரை (கொடுகொல) கிரிஅல, இஞ்சி போன்றவற்றை பல வடிவங்களில் மரங்களைச் சுற்றி அழகாக நாட்டி வளர்க்க முடியும். மேலும் பொன்னாங் கண்ணி பச்சை, சிவப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் உள்ளவற்றை பாத்திகளின் ஓரங்களில் இருமருங்கிலும் நாட்டுவதன் மூலம் தோட்டம் மிக அழகாய்த் தோன்றும். மேலும் அவரை போன்ற படரும் தாவரங் களை மரங்களில் அல்லது வேலியில் நாம் விரும்பியபடி வழிகாட்டி படரவிடுவதன் மூலம் அவற்றிலிருந்து பயன்பெற முடியும்.

வளர்ப்பதற்காக தாவரங்களை தெரிவு செய்யும்போது உங்கள் பகுதியின் கால நிலை, மழைவீழ்ச்சி, நிலப்பரப்பு மற்றும் செலவு செய்யக்கூடிய நேரம் என்பவை முக்கியமாகும். உங்கள் வீட்டில் தாவரங் களை நாட்டும் இடமும் முக்கியமாக கவனிக் கப்பட வேண்டும். உதாரணமாக நிழல் தேவையான தாவரங்களை நிழலில் நாட்டுங்கள். தோட்டம் அளவுக்கதிகமாக நிழலாக இருந்தால் பெரிய மரங்களின கிளைகளை தறிப்பதன் மூலம் சூரியஒளியை ஏனைய தாவரங்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும். தக்காளி, கத்தரி போன்ற தாவரங்கள் ஓரளவு நிழலில் சூரிய ஒளியில் நன்றாக வளரும்.

நீர் தேங்கி நிற்கும் இடங்களில் பொன்னாங்கண்ணி, கங்குன், லுணுவில போன்ற தாவரங்கள் செழிப்பாக வளரும். நீர்வீழ்ச்சி குறைவான இடங்களில் முருங்கை, முள்முருங்கை இறமடு போன்றவை செழிப்பாக வளரும்.

பொதுவாக மரங்கள் நடும்போது இலை கள் சிறியதாய் உள்ள மரங்களை தெரிவு செய்வது அவசியமாகும். இதன் மூலம் அதிகளவு சூரிய ஒளியை கீழேயுள்ள தாவரங்கள் பெற வசதியாய் இருக்கும்.

பழ மரங்களை பொறுத்தவரை வருடம் முழுவதும் பயன்தரும் பப்பாசி, கொய்யா போன்ற மரங்களை நடுவது சிறந்தது.

### பச்சை இலை மரக்கறி வகை

| தாவரம் | நாட்டும் முறை | இடைவெளி (cm இல்) | அறுவடைக் காலம் (நாள்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| பொன்னாங் கண்ணி | 10-15 cm துண்டுகள் | 20 X 20 | 60 - 365 | பரந்து வளரும் தாவரம் |
| வல்லாரை | வேர்த் துண்டுகள் | 15 X 15 | 60 - 365 | நீண்ட இலை. உயர்ந்து வளரும் தாவரம். பாத்தி களுக்கு சட்டிகளிலும் வளர்க்க முடியும் |
| கங்குன் | 20 cm துண்டுகள் | 45 X 30 | 60 - 365 | ஈரலிப்பான நீர் தேங்கி நிற்கும் இடங்களில் செழித்து வளரும் |
| பசளி | நேரடியாக விதைகள் மூலம் | 30 X 30 | 60 - 210 | ஒரு குழிக்குள் 3 விதை கள் நடலாம். 60 cm உயரத்தில் பந்தல் அமைக்க வேண்டும். |
| தம்பள | நேரடியாக விதைகள் மூலம் | 20 X 20 | 45 - 100 | இலைகளை பறிக்கும் போது கீழிருந்து மேலாகப் பறிக்கவும். |
| கொஹில | 15 cm துண்டுகள் | 90 X 90 | 270 நாட்களுக்கு | ஈரலிப்பான நிலப்பரப்பு சிறந்தது |

### பழ வகைகள்

| தாவரம் | இடைவெளி (மீட்டரில்) | அறுவடைக் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| பப்பாசி | 03 மீட்டர் | 6 மாதங்கள் | 2-3 விதைகளை ஒரு குழியில் இட்டு பின்னர் தனியாக நட்டவும் (நீண்ட தண்டுள்ள ஆண் மரங்களை அப்புறப்படுத்த வேண்டும் |
| வாழை | 3 மீட்டர் | 10-12 மாதங்கள் | |
| கொடித் தோடை | 3 மீட்டர் | 12-15 மாதங்கள் | கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டருக்கு மேல் ஊதா நிற வகையும், அதற்குக் கீழுள்ள நிலப்பரப்பில் மஞ்சள் நிற வகையும் செழிப்பாக வளரும் |

## மரக்கறி வகை மற்றும் தானியவகை

| தாவரம் | நாட்டும் முறை | இடைவெளி (cm இல்) | அறுவடைக் காலம் (நாள்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| கௌபி | நேரடியாக விதை விதைத்தல் | 45 X 30 | 90 | |
| தக்காளி | நாற்று மேடையிலிருந்து | 60 X 30 | 75 - 200 | நாற்று மேடையிலிருந்து 2-3 கிழமைகளில் உரிய இடத்தில் நட வேண்டும் |
| கத்தரி | நாற்று மேடையிலிருந்து | 90 X 90 | 75 - 180 | நாற்று மேடையிலிருந்து 2-3 கிழமைகளில் உரிய இடத்தில் நட வேண்டும் |
| மிளகாய் | நாற்று மேடையிலிருந்து | 40 X430 | 60 - 180 | நாற்று மேடையிலிருந்து 2-3 கிழமைகளில் உரிய இடத்தில் நட வேண்டும் |
| சுரைக்காய் | நேரடியாக விதைகள் மூலம் | 100 X 180 | 120 - 270 | 2-5 விதைகளை ஒரு குழியில் நட்டு பின்னர் ஒவ்வொன்றாக குழிக் குள் நட வேண்டும். |
| கரட் | நாற்று மேடையிலிருந்து அல்லது நேரடியாக | 20 X65 | 75-90 | நாற்று மேடையிலிருந்து 4 கிழமைகளில் உரிய இடத்தில் நட வேண்டும். |
| வெண்டி | நேரடியாக விதைத்தல் | 60 X 60 | 60-180 | 3-4 விதைகளை குழிக்குள் இட்டு வளர்த்து பின் ஒவ்வொன்றாக பிரித்து நட வேண்டும். |
| சோளம் | நேரடியாக விதைத்தல் | 75X75 | 120 | ஒரே இடத்தில் இரண்டு விதைகள் விதைக்கப்பட வேண்டும் |

## கிழங்கு வகை

| தாவரம் | நாட்டும் முறை | இடைவெளி (cm இல்) | அறுவடைக் காலம் (நாள்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| மரவள்ளி கிழங்கு | 20 cm துண்டுகள் | 90 X 90 | 150 - 275 | நாட்டும்போது துண்டின் அரைப் பகுதி (10 cm) நிலத்துக்கு மேல் இருக்க வேண்டும் |
| வத்தாளை | துண்டுகள் | 25 X 50 | 90 - 120 | நடுவதற்கு முன் துண்டுகளின் ஒரு பகுதியை 2 நாட்களுக்கு ஊற வைக்க வேண்டும் 5-7.5 cm ஆழத்தில் நட வேண்டும் |

# செல்வ மகளுக்கு...

வண்ணமாக நடந்து வரும்
சின்ன சின்ன பேபி
அன்னை பாத்திமாவின்
வழிவந்த
அழகு பேபி

எனக்காக அல்லாஹ் தந்த
செல்வ மகள் நீ
அதற்காக அவனுக்கு
அல்ஹம்து லில்லாஹ்

நீ பிறந்தவுடன் வலது காதில்
வாப்பா 'பாங்கு' கூறினார்
அதே நேரம் இடது காதில்
'இகாமத்' தும் ஓதினார்

உலகத்தில் பிறந்து விட்டால்
ஊர் சுற்றலாமென
எண்ணாதே
உனக்கென்று ஒரு வாழ்க்கை
காத்திருக்கடி

நபிகள் நாதர் காட்டித் தந்த
வாழ்க்கைதானது
நாமெல்லோரும் அதன்
வழியே
நடப்போமடி

மனம் போன போக்கெல்லாம்
போகமுடியுமா?
மானத்தை விலை கூறி
வாழ முடியுமா?

வானமட்டும் கொடி கட்டி
வாழ்ந்திட்ட போதும்
வகையாக மாட்டிக்
கொள்ளும்
நேரம் வருமடி

இறுதி நேரம் ஒன்றுண்டு
மனதில் வையடி
ஈமானுடன் கரை சேர
'இபாதத்' செய்யடி

எச்.எம் முஹம்மத் ஹனீபா
ஓட்டமாவடி -01



பதாவா அந்நிஸா

# கடமையான குளிப்பை நிறைவேற்றும் போது...

**கேள்வி :**

**மாதாந்த ருது ஏற்பட்ட ஒரு பெண் குளித்து சுத்தமாகும் போது பேண வேண்டியவை எவை?**

**பதில் :**

அல்லாஹ்வை புகழ்ந்த பின்... மாதவிடாய் என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் இயல்பாக ஏற்படும் ஒன்றாகும். அதனை பெருந்தொடக்கு என்றும் கூறுவர். மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் ஒரு பெண் தொழுகை, நோன்பு, பள்ளிவாயிலுக்குச் செல்லுதல், அங்கு தரிபடுதல் போன்றவற்றில் ஈடுபடுவது கூடாது. அவளுக்கேற்பட்ட மாதவிடாய் நின்று விட்டால் சுத்தமாகுவதற்காக குளிப்பது அவள் மீது கடமை ஆகும். அவ்வாறு அவள் தன்மீது கடமையான குளிப்பை நிறைவேற்றும் போது அவள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுவது அவசியம். இதுவே நபி (ﷺ) அவர்களின் வழிமுறையாகும்.

1. நிய்யத்து வைத்தல்: பர்ழான குளிப்பை நிறை வேற்றுகிறேன் என உள்ளத்தால் எண்ணுவது.

2. 'பிஸ்மி' கூறுவதுடன் இரு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவுதல்.

3. வுழு செய்தல்.

4. தலைமீது நீரை மூன்று முறை ஊற்றி தலை மயிர்களின் அடிப்பகுதிக்கு நீர் செல்லும் வகையில் தோய்த்தல்.

5. உடலின் ஏனைய பகுதிகளுக்கு நீரை மூன்று முறை ஊற்றுதல். இவ்வேளை முதலில் வலது பக்கத்தையும் பின் இடது பக்கத்தையும் கழுவுதல் வேண்டும்.

குறிப்பு:- குளிக்கும் போது கலிமா சொல்லி குளிக்க வேண்டுமா? இல்லையா? என்ற சந்தேகம் நம் பெண் சமூகத்தில் காணப்படுகிறது. குளிக்கும்போது கலிமா சொல்லி குளிக்க வேண்டும் என்பதற்கு ரஸுல் (ﷺ) அவர்களின் மனைவிமார்களின் வாழ்விலோ ஏனைய ஸஹாபாக்களின் வாழ்விலோ எத்தகைய ஆதாரமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழுகையில் மறதி ஏற்படுதல்

**கேள்வி:**

நான் ஒரு பெண். அல்லாஹ் பர்ழாக்கிய அனைத்து இபாதத்களிலும் ஈடுபடுகிறேன். எனினும் தொழுகையின் போது சரியான இறையச்சத்துடன் ஈடுபட முடியவில்லை. பல்வேறுபட்ட விடயங்கள் நினைவுக்கு வருவதால் தொழுகையில் கவனம் குறைகின்றது. ஆனால் (பகிரங்கமாக) சத்தமாக கிறாஅத்தை ஓதும் போது சற்றுப் பேணுதலாக எனது தொழுகை அமைகிறது. இதைப் பற்றி எனக்கு விளக்கமளிக்கவும்.

**பதில் :**

உண்மையில் நீங்கள் கூறியிருக்கும் மறதி பற்றிய பிரச்சினை பொதுவாகப் பலருக்கும் தொழுகையின் போது ஏற்படக்கூடிய ஒன்றாகும். ஏனெனில் ஷைத்தான் என்பவன் தொழுகையாளிகளின் உள்ளத்தில் 'வஸ்வாஸ்' (சந்தேகத்தை) ஏற்படுத்தி விடுகிறான். இதனால் உந்தப்பட்ட மனிதன், தான் தொழுகையில் என்ன கூறுகிறோம்? எதை ஓதுகிறோம்? என்பன பற்றி அறியாது அவனது சிந்தனை எங்கோ இழுத்துச் செல்லப்படுகிறது. என்றாலும் ரஸுல் (ﷺ) அவர்கள் இத்தகைய வஸ்வாஸைப் போக்குவதற்கு வழிகாட்டித் தந்துள்ளார்கள். அதாவது தொழுகைக்காக நிற்கக் கூடிய ஒருவர் தனது இடப் பக்கமாகத் திரும்பி 'அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்' என மும்முறை கூறவேண்டும். அப்போது அவனை விட்டும் ஷைத்தான் விரண்டோடுவான். ஒரு மனிதன் தொழுகைக்காக நிற்கும்போது தான், தனதும் உலகங்கள் அனைத்தினதும் எஜமானனின் முன் நிற்பதாகவும், தனது ஓதல்கள் மூலமாகவும் தக்பீர், தஸ்பீஹ் மூலமாகவும் அவ்வெஜமானனுடன் உறவாடுவதாகவம் எண்ண வேண்டும். அவ்வாறானதொரு எண்ணத்துடன் நிற்கும் ஒருவனுக்கு தானாகவே இறையச்சம் மேலோங்கி நிற்கும். இதன் மூலம் தொழுகையை இறையச்சத்துடன் நிறைவேற்ற முடியும்.

அல்லாஹ் மிக அறிந்தவன்

**மூலம் : அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு ஸுலைமானுல் முனீஃ**
**தமிழில் : உம்மு அதிய்யா ஹபீப் முஹம்மத்**

# ‘இறை காதல்’

**கே. முனாஸ்**

## 01

நீண்ட நாட்களாக நினைத்து நினைத்து நீ என் ஆத்மாவில் பரவிவிட்டாய். இப்போது எதைக் கேட்டாலும் எதைப் பார்த்தாலும் ஓர் உணர்வு மேலிட உடனே ஆத்மாவில் பரவிய உன் நினைவுதான் வருகிறது.

ஆத்மா!

ஆம் அதனால் உன்னைக் காண முடியும்.

எப்படி?

ஒரு பாடல் இதனை ஏற்படுத்துகிறது.

பாடலா?

ஆம்!

பாடலுக்கு இப்படி சக்தி இருக்கிறதா?

ஏனில்லை.

வாழ்வின் கடந்த காலங்களை உடனே எம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகின்றன. சிலபோது காட்சிகளாகவும் அவை அமைகின்றன.

ஆத்மாவில் கண்ணயர்ந்து உறங்கி விட்ட உன்நினைவுகளை ஒரு பாடலின் கரங்கள் நீண்டு, தட்டி, உசுப்பி, எழுப்பி இருப்பாட்டுகின்றன. எனது உடம்பை இங்கே வைத்தவாறு ‘நான்’ எனது பழைய நாட்களுக்குப் போய் வருகிறேன். இது ஓர் இனிமையான அனுபவம்.

இப்படி கடந்த நாட்களுடன், முடிந்த நிகழ்வுகளுடன் பேசிவிட்டு வருவது போல் எதிர்கால நாட்களுடனும், வருங்கால நிகழ்வுகளுடனும் கைகுலுக்கி சம்பாஷித்து விட்டு மீள்கிறேன். இவ்வனுபவங்களை இனி சொல்லியாக வேண்டும்.

## 02

‘‘நீ வெளியில் சொல்ல அவசரப்படுகிறாய்’’ என்றார். இல்லை. இது அவசரமில்லை. நாட்கள் எனக்காகக் காத்திருப்பவையல்ல. இன்னும் நான் விட்டுவிட்டால் வாய்ப்புக்கள் எல்லாம் தவறிவிடும். பின் நான் கவலைப் படுவதில் பயனில்லை. போன ஒன்றிற்காக கைசேதப்படுவதிலும், கிடைத்த ஒன்றிற்காக பெருமிதப்படுவதிலும் பிரயோசனமில்லை என்று நீ தானே சொல்லித் தந்தாய்.

‘‘நான் உனக்கு மாத்திரம் சொல்ல வில்லை. என்னை நேசித்த, முயன்ற எல்லோருக்கும்தான’’ என்றார் அவர்.

அன்றிரவு நான் தனிமையில் இருந்தேன். என் மனோநிலை உனக்குத் தெரியும். என்னைப் பாதித்துவிட்டு பின் எந்தக் கரிசனையும் இல்லாததுபோல் மௌனமாகி விட்ட நேரம் உனது வரிகளை மீட்டினேன். அப்போதும் எனக்கு மட்டும் தானே சொன்னாய்.

எனது பண்பு உன்னைப் பாதித்திருக்கிறது. நான் மறைந்திருக்கவே விரும்புபவன் உனது அவசரத்தால் சட்டென்று என்னைக் காட்டிவிட்டு போய்விடும் விருப்பம் இல்லாதவன்.

‘‘பின் ஏன் என்னை இழுக்கிறாய்’’ என்றேன்.

‘‘நான் இழுக்கவில்லை; எந்தக் கயிறும் என்னிடம் இல்லை’’ என்றார்

‘‘இல்லை! இல்லை!’’

நான் வீறிட்டுச் சப்தமிட அமைதி நிலவியது. நிதானத்திற்கு வருகிறேன்; சனங்கள் இல்லை. எனது றூமில் நான் மாத்திரம் இருக்கிறேன்.

அதே அமைதி தொடர்கிறது.

அரை மணித்தியாலம், ஒரு மணி நேரம், இரண்டு மணியளவு இருக்கும். எனது இடது கையினை நெஞ்சில் வைத்து அதன் மீது வலது கையினை வைத்தவாறு எழுந்து நிற்கிறேன். எனது பார்வை தலையினை தாழ்த்தி நின்றால் நிலத்தில் படும் இடத்தைப் பார்த்து பொட்டு வடிவில் ஏற்படுத்தியிருந்தது.

அமைதி கலைகிறது

ஐந்து நிமிடங்கள் கழிய நான் நிலத்தில் அமர்ந்திருக்கிறேன். என்னைப் பாதித்த பிற்புலத்தினை யோசிக்கிறேன்.

## 03

மனிதனைப் பாதிக்க இனிய குரலால் முடிகிறது. குரலில் அப்படி ஒரு சக்தி இருக்கிறது. ஓர் இனிய சங்கீதத்தைப் போல. குயிலோசையினை மனம் ரசிக்கிறது. காகம் கரைவதில் மனசு லயிப்பதில்லை. ‘காகம்’ என்றதும் எழும் வெறுப்பு இதற்குக் காரணமாக இருக்கலாமா? ஒன்றில் வெறுப்பு வந்தால் அதிலிருந்து வெளிப்படுபவை களிலும் பிடிப்பின்மை ஏற்படுகிறது.

ஓர் இனக்குழு, மற்றோர் இனக்குழுவை நசுக்குவதால் நசுக்கும் இனக்குழுவின் - மொழி, கலை. இலக்கிய, கலாச்சார, பண்பாடுகளிலும் வெறுப்பு ஏற்படுகிறது; அனைத்தையும் உதறித் தள்ளுகிறோம். அவற்றிலுள்ள நல்லவற்றைக்கூட கணக்கெடுப்பதில்லை.

ஆனாலும், நான் நல்லவற்றை பொறுக்கிப் பொறுக்கி எடுக்கிறேன். எனக்குப் பிரயோசனம் என்று காணும் சகலவற்றையும் வைத்துக் கொள்கிறேன். அதுபோலவே பயனற்றவை களை வீச வேண்டியதாயிற்று. அவை எனக்கு குப்பை. வேறு யாருக்கோ பிரயோசனப்பட்டுப் போகட்டும்.

ஒன்றின் கழிவு மற்றொன்றிற்கு உணவு ஆகிறது. வாழைப்பழத்தை தின்றுவிட்டு தோலை வீசுகிறோம். அதை ஆடு மாடுகள் உணவுக்காகக் கொள்கின்றன. வாழ்க்கை சுழல வீசுபவனும் அதனைப் பொறுக்கு பவனும் தேவைப்படுகிறான். அல்லது கொடுப்பவனும் எடுப்பவனும் அவசியப்படுகிறான்.

ஒன்றில் விருப்பம் வருவதால் அதிலிருந்து வெளிப்படும் அனைத்திலும் லயிப்பு ஏற்படுகிறது. அந்த லயிப்பு ரசனையாகி, உணர்ச்சியுடன் கலக்கிறது. உணர்ச்சி பேரின்ப நிலைக்கு வந்து பின் பரவச நிலையை அடைகிறது.

நான் உன்னை விரும்பினேன். இதனால் உன்னிலிருந்து வெளிப்படுவனவற்றில் லயிப்பு மேலிட அவற்றில் ரசனை ஏற்பட்டு விடுகிறது. என்னை ‘விருப்பத்திலிருந்து’ ‘லயிப்புக்கும்’, ‘ரசனைக்கும்’ நகர்த்துவதில் ஒரு மெல்லிய கீதமும், சங்கீதமும், ஓசையும் உதவுகின்றன.

இனிமையான குரலில் ஓதும் வேதத்தின் முன் எனது மனம் கைகட்டி, வாய்மூடி, காது தாழ்த்துகிறது. பின் எனது ஆத்மாவைக் குருடாக்கி, செவிடாக்கி ஊமையாக்கி எங்கோவெங்கெல்லாம் அழைத்துச் செல்கின்றன அந்தக் குரலும், வேத வரிகளும்.

வேதத்தை இறக்கியவன் பற்றியும் அவனது ஆற்றல் குறித்தும் எனக்குச் சொரிந்த நல்லவை தொடர்பாகவும்; சொல் கேட்டு நடந்தால் கிடைக்கும் விருது பற்றியும் மாறு செய்தால் கிடைக்கும் வேதனை குறித்தும்.

காட்சியாக... கண்முன் காண்பதாக... இனிய குரல் கலந்த அந்த வரிகளுக்குள் முடிகின்றன. நல்லவற்றிக்கு இட்டுச் செல்பவையும் நல்லவைதான். அதனால் இவற்றை பெரிதும் விரும்புகிறேன். என்னில் விருப்பை ஏற்படுத்தி, ரசிக்க வைத்து, உணர்ச்சி பொங்க வைத்து விட்டாய். நானும் வீழ்ந்து மீள வழியின்றித் தவிக்கிறேன். இறங்கியாச்சு; இறங்கினால் தொடர வேண்டியதுதான். பாதியில் நிறுத்தி விட்டு நான் எங்கு போவது? இனி யார் என்னை அரவணைப்பார்?

## 04

உனது கரங்கள் கண்படும் தொலைவில் உள்ளன. இனி நான் எதற்கும் பயப்படத தேவையில்லை. பயம் தயக்கத்தை தருகிறது. தயக்கம், துணிவின்மையை ஏற்படுத்த உன்னை நெருங்குவது தாமதமாகிறது. தாமதம் என் மனவலியை மேலும் அதிகப் படுத்துகிறது. அதனைத் தாங்கும் வயதில் நானில்லை. அந்த வலியும் ஒரு வகை சுகம் என்று தெரிந்தும்!

உன் கரங்களை நான் காண்கிறேன். நான் தவறும் போது திருத்துவதும் உன் கரம் தான். நான் விழும் போது தூக்கிவிடுவது

அதுதான். அழும்போது துடைத்து விடுவதும் அதேதான்.
எம்மிடையே இடைவெளி அதிகம் இல்லை. நானும் குறைக்க நீயும் குறைக்கிறாய். இடைவெளி குறைய நெருக்கம் கூடுகிறது. பலவீனங்கள் நெருக்கத்தைத் தடுக்கின்றன. நான் நெருங்கும் வழியில் எனது பலவீனம் மேலிட நெருக்கம் சில சமயங்களில் திருப்தியாக இல்லை. உன்னில் விருப்பம் ஏற்பட்டு அது ரசனையினைத் தூண்டி, உணர்ச்சியுடன் கலந்துவிட்ட பின்னும் பலவீனங்கள் இருளாகி உனது வெளிச்சத் திற்கிடையில் தடையாகிவிட்டது. இத்தடை முன்னேறவிடாது தடுக்கிறது.

## 05

'பெற்றோருக்காகவும்', 'மனைவிக்காகவும்', 'மகனுக்காகவும்' ஒதுக்கும் நேரங்களில் பராக்கு ஏற்பட்டு விட்டது. பராக்கு எப்போதும் நோக்கத்தை விட்டு விலக்கு கிறது. அல்லது அதை அடைவதனைத் தாமதிக்கிறது என்பதனை அனுபவமாகச் சொல்லித் தருகிறாய். நீ வழிகாட்டும் 'மஹாகுரு'. குருவின் விருப்பினைப் பெற வேண்டுமென்பதற்காக அவர் வெறுக்கும் எதனையும் சிஷ்யன் செய்வதில்லை. நான் வளர வேண்டுமென அனுதாபங் கொண்டு விமர்சித்து திருத்தி விடுவதனை ஏற்கிறேன். சுயநலத்தையும் மீறிய உனது அணுகல் வேறு யாரிடமும் இல்லாதது.
உனது விருப்பினைத் தேடிக் கொள்வதில் எவ்வளவு கரிசனையாக இருக்கிறேனோ அவ்வளவு வெறுப்பினையும் பெற்றுக் கொள்ளாது அவதானமாக நடந்து கொள்கிறேன். விருப்பத்தைத் தேடுவதும் வெறுப்பினைத் தவிர்ப்பதும் நெருக்கத்தை அதிகரிக்கின்றன என்பது நான் உணரும் உண்மை.
இப்போது உனது பேச்சுக்கு ஓரளவு பொருள் விளங்குகிறது. வார்த்தைகளை தற்போது கேட்பதற்கும் முன்னர் கேட்டதற்கும் நிறைய வித்தியாசம் தெரிகிறது. முன்பு வாசித்ததற்கும் தற்சமயம் வாசிப்பதற்கும் வேறுபாடு விளங்குகிறது.
நீ என்னை விரும்புகிறாய் என்பதற்கு இதுதான் அடையாளமா? நான் உன்னை நேசிக்கிறேன் என்பதற்கும் இதுதான் பொருளா?

## 06

இறை காதல் என்றால் என்ன?
மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பிணைப்புக் கயிறா?
மனிதன் மனிதனை காதலிப்பது, அவன் இறைவனை நேசிப்பதற்கு வேண்டிய பாடங்களைத் தருகிறது. அது ஒரு முன்னுரையும் முன் அனுபவமும் என்று கொள்ளலாமா?
ஓர் உணர்வு பல பண்புகளை வளர்த்து விடுகிறது. இறை காதல் பிறந்ததும் அதன் பின்னே மறைந்து கிடக்கும் நல்ல பண்புகளை எப்படி தட்டிக் கழிப்பது?
இறை காதலின் பின்னே:

- துணிவு
- கருத்தினை வெளியிடல்
- பேச்சும் எழுத்தும் செழுமை பெறல்
- கொடுத்தல்
- சுயநலம் குறைதலும் களைதலும்
- பிரிவும் அனுதாபமும்
- பொறுமை
- மற்றவர்களை மதித்தல்
- குறைகளில் குற்றம் காணாமை
- விட்டுக் கொடுத்தல்
- விருப்பத்தறிகுரியவரின் நன்மதிப்பினைப் பெற முயல்தல்
- நேரத்திற்கு தொழிற்படல்
- தவறுக்கு மன்னிப்புக் கோரல்
- பொறுப்புணர்வு
- அழகியதை பேணலும், மதித்தலும்
- வேதனையின் சுகத்தினை உணர்தல்
- கலை இலக்கிய வடிவங்களைப் புரிதலும் ஈடுபாடு காட்டலும்.
- ஒப்பிட்டு தெரிவு செய்யும் திறன்
- உளவிசாலம்
- விரும்பப்படுபவரின் பண்புகளும் குணங் களும் விரும்புபவரில் குடிகொள்ளலும் ஆளுமை விருத்தியும்
- மனப் பாரத்தினை இறக்கி வைத்தல்
- இதய ஆறுதல்.
- உணர்வு, உணர்ச்சி நிலையிலிருந்து அறிவு, அறிவியல் நிலையின் ஆரம்பக் கட்டத்திற்கு வரல்

இப்படி எத்தனை பண்புகள்!
எத்தனை குணங்கள்!
இவற்றைவிட, இறைவனை நேசிக்கும் தன்மையும், அதிலிருந்து இறைவனை அஞ்சும் மனோநிலையும் அதிகரிப்பதற்கு வழியமைக்கிறது. அவனது ஒளியினை உணர மனம் பயில்கிறது.
வாழ்க்கையை நீ இப்படித்தான் போதிக்கிறாய். ஓர் உணர்வினை ஏற்படுத்தி அதிலிருந்து பல பண்புகளை வளர்த்து விடுகிறாய். வாழ்க்கை ஓர் உணர்ச்சித் தன்மைமிக்கது என்பதனை எனது சுய வாழ்விலிருந்து கற்கும் மாணவன் நான்

## 07

'விருப்பம்'
பின் 'ரசனை'
அடுத்து 'உணர்ச்சி'க்கு கட்டம் கட்டமாக என்னை நீ நகர்த்தும் சுகத்தினை எப்படி வெளியிற் சொல்லாமல் இருக்க முடியும்! உள்ளே இருப்பவை வெளியில் வரும் போதுதான் சுகம்; கண்களால் காண்பது குளிர்ச்சி; அவற்றைத் தடவிப் பார்ப்பது இதம்; இதற்காக உசும்புவதும் ஓடுவதும் கண் விழித்திருப்பதும் இன்பம்; இதில் வரும் கண்ணீரும் படும் காயங்களும் எவ்வளவு இதய ஆறுதல்!
இதனை பிறருக்குச் சொல்லாமல் இருக்க முடியுமா?
வெளியே வரவேண்டியவை வரவில்லை என்றால் வலிக்கிறது; சிலபோது அந்த நோவு பலவீனப்படுத்துகிறது; பலவீனம், செல்லும் திசையைத் திருப்பும் தன்மை மிக்கது என்பதனை வாயால் வெறுமனே சொன்னால் புரிவதில்லை. பலவீனத்திற்காக நான் மற்றவர்களுக்குச் சொல்லாமல் இருக்க முடியாது. எனக்கு இரண்டு கடமைகள் உண்டு. ஒன்று: நான் பிறருக்குச் சொல்வது; மற்றையது: எனது பலவீனத்தைக் களைந்து நானும் சொல்வதைக் கடைப்பிடிப்பது. சொல்ல ஆரம்பிக்கும் போது நானொரு படி உயர்கிறேன். உயர்வு வேறுபடுத்திக் காட்டக் கூடியது. இந்த உயர்வு பலரி லிருந்து என்னை வித்தியாசப்படுத்துகிறது. இதனால் என்னைப் பலர் உன்னிப்பாக பார்க்கிறார்கள். அடுத்து பலவீனம் மெல்ல மெல்ல என்னை விட்டு நகர்ந்து வேறு யாரையோ தொற்றிக் கொள்கிறது. இனி என்னிடத்தில் அதற்கு குடியிருப்பு இல்லை.

என்னை விட்டகன்று தொற்றிக் கொண்ட பலவீனம் கொண்டவன் என்னைப் பார்த்து விமர்சித்தான். நான் மௌனமாக இருந்த போது மற்றுமொரு படி மேலெழ, மேலும் அதிகமானோரை விட வித்தியாசமிக்கவன் ஆனேன். அதனால் இன்னும் பல பலவீனங்கள் என்னை விட்டு இடம்பெயர்ந்து பாய் படுக்கைகளோடு விமர்சித்தவனையே தொற்றிக் கொண்டன.
அது ஒரு நோய்தான் உன்னொளியைப் பட விடாது தடுக்கும் தன்மை கொண்டது. அவ்வொளி தொழுகையினூடாக வருவதை நீ எனக்குக் காட்டியிருக்கிறாய். அச்சம் கூடக் கூட உனது ஒளியும், ஒலியும் தொழுபவனில் பரவிக் கொள்கிறது. அப்போது தொழுபவன் உன்னைக் கண்டு கொள்கிறான். ஓர் அடிமையாக இருந்து, நீ சொல்ல அவன் கேட்டு நடக்கப் பழகுகிறான்.
பின் அந்த அடிமை பெரும் குழுவை வழிநடாத்தி உன் ஒளித் தீபத்தினை ஏந்தி (Guiding Light) அதன் வெளிச்சத்தில் கூட்டிச் செல்வார். அவரின் பணி ஓய்ந்ததும் இன்னுமோர் அடிமையை உருவாக்கு கிறாய்- தொழுகையை வைத்து அதனூடே உன்னொளியைப் பாய்ச்சி.
நான் உன் அடிமை. என்னை அவ்வாறு ஏற்றுக் கொள்வாயா?

# ஹதீஸ்கலை

## ஒரு வரலாற்று நோக்கு - 01

### (ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டு)

"ஹதீஸ்" எனும் பதம் 'உரையாடல்', 'செய்தி' என்ற பொருள்களில் கையாளப்படுகிறது. இஸ்லாத்திற்கு முற்பட்ட காலங்களில் கவிஞர்களும் இப்பதத்தை இப்பொருளில் கையாண்டுள்ளனர். எனினும், இப்பதம் முஹம்மது (ﷺ) அவர்களின் காலம் முதல், "நபிகளார் (ﷺ) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றைக் குறிக்க" மட்டும் கையாளப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. நபித்தோழர்களும் நபிகளாரும் இப்பதத்தை இப்பின்னைய பொருளில் கையாண்டுள்ளார்கள்.

அல்குர்ஆனில் 'ஹதீஸ்' எனும் பதம் 23 இடங்களிலும் அதன் பன்மைச் சொல்லான 'அஹாதீஸ்' எனும் பதம் ஐந்து இடங்களிலும் கையாளப்பட்டுள்ளன. முஜ்தஹிதுகள் முஹம்மது (ﷺ) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றைக் குறிக்க ஹதீஸ் எனும் பதத்தைக் கையாண்ட போதும், முஹத்திஸ்கள் "முஹம்மது (ﷺ) அவர்களின் சொல் செயல் அங்கீகாரம் என்பவற்றுடன் அவர்களின் குணப் பண்புகள், உருவத் தோற்றம் என்பன பற்றி ராவிகள் அறிவித்த தகவல்களைக் குறிக்கவும்" இப்பதத்தைக் கையாண்டார்கள்.

முஹம்மது (ﷺ) அவர்களின் வாழ்க்கை பற்றிய செய்திகளைக் குறிக்க ஹதீஸ் எனும் பதத்துடன் 'சுன்னா', '.˙.கபர்', 'ஆதார்' எனும் பதங்களும் கையாளப்படுகின்றன.

இஸ்லாமிய சட்டக் கலையின் முக்கிய மூலாதாரங்களில் ஒன்று என்ற வகையிலும் இஸ்லாமிய கலாசாரத்தின் ஒருமுகப்பாட்டிற்கான ஓர் அடிப்படை என்ற வகையிலும் ஹதீஸ், முஸ்லிம் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றதால் நபிகளார் காலம் முதலே அதனை அறிவதிலும், அதனைப் பாதுகாப்பதிலும், அதன்படி செயற்படுவதிலும் முஸ்லிம்கள் அதிக ஆர்வம் காட்டினார்கள். அத்துடன் அதன் தூய்மை கெடாது பாதுகாப்பதிலும் அவர்கள் ஆரம்பம் முதல் அதிக அக்கறை செலுத்தினார்கள்.

நபித்தோழர்கள் முஹம்மது (ﷺ) அவர்களைத் தம் அன்புக்குரியவராக மட்டுமன்றி தம் குடும்பத்தவரைவிட மிக நெருக்கமானவராகவும் தம் உயிரிலும் மேலானவராகவும் இனியவராகவும் நேசித்தனர். அவரது வாழ்க்கையை முன்மாதிரியானதாகக் கருதி அணுவணுவாகப் பின்பற்றினார்கள். அதில் அவர்கள் திருப்தியும் பெருமையும் அடைந்தார்கள். அதனால் அவரது நடையுடை பாவனைகள், வணக்க வழிபாடுகளை அப்படியப்படியே பின்பற்றினார்கள். அதற்காக அவரது செயற்பாடுகளை, அங்க அசைவுகளைக் கூட இரவு பகல் பாராது அவதானித்தார்கள்.

அவரது இரவு வணக்கங்களை அவதானிப்பதற்காக அவரது வாசலடியில் ஸைதிப்னு காலித் (رضي الله عنه) அவர்கள் முழு இரவிலும் நித்திரை விழித்தார்கள். ஒரே அமர்வில் நபி (ﷺ) அவர்கள் எத்தனை முறை பாவமன்னிப்புக் கோருகிறார்கள் என்பதை இப்னு உமர் (رضي الله عنه) அவர்கள் அவதானித்தார்கள். அபூஹுரைரா (رضي الله عنه) தொடர்ந்து மூன்று வருடங்கள் மஸ்ஜிதுந் நபவியில் தங்கியிருந்து நபிகளாரை அவதானித்தார்கள். உமர் கத்தாப் (رضي الله عنه) அவர்கள் மஸ்ஜிதுந் நபவியில் இருந்து தூரத்தில் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு தினமும் நபிகளாரைத் தரிசிப்பது சாத்தியமற்றதாக இருந்தது. எனவே, அன்சார் சகோதரர் ஒருவருடன் ஒரு தினம் விட்டொரு தினம் மாறிமாறி இருவரும் நபிகளாரை அவதானிப்பதாக ஓர் உடன்பாட்டுக்கு வந்தார். அவ்வாறு அவதானிக்கும் போது நபிகளாரிடம் இருந்து தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் ஒருவர் மற்றவருக்கு அறிவிப்பதற்கும் உடன்பட்டார்கள்.

அபூ ஸஈத் அல்குத்ரி (رضي الله عنه) ளுஹர் தொழுகையின் போது நபிகளார் எவ்வளவு நேரம் நிலையில் நிற்கிறார்கள் என்பதனை அவதானித்தார்கள். ஸஹாபிகள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதெல்லாம் நபிகளார் பற்றிய செய்திகளை விசாரித்தறியும் மரபுடையவர்களாக இருந்தார்கள். நபிகளாரை ஓர் ஆதர்ஷ புருஷராகக் கொண்டு அவரைப் பின்பற்றுவதில் காட்டிய ஆர்வம் ஹதீஸ்களைக் கண்ணுங்கருத்துமாகப் பேணி மனத்திலும், வாழ்விலும், ஏட்டிலும் பதித்து வைத்துக் கொள்ள வழிகோலியது.

நபிகளாரின் தோழர்கள் வீட்டுக்கு வெளியே அவரைச் சூழ்ந்திருந்தனர். மஸ்ஜிதில், பிரயாணத்தில், போர்க்களத்தில் என்றெல்லாம் அவர்கள் அர்ப்பணிப்புடன் அவதானித்தார்கள். வீட்டில் அவரது மனைவியர் பணியாளராகப் பணிபுரிந்த அனஸ் பின் மாலிக் என்போர் நபிகளாரின் இல்லற வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, அன்றாட வாழ்க்கை, நடவடிக்கைகளை அவதானித்தனர். நபிகளாருடன் தொடர்பு கொண்ட பல்வேறு தரத்தினர் அவரது சமூக நடத்தைகளை மட்டுமன்றி அவரது நரைத்த முடிகளின் எண்ணிக்கை, அவரது புன்சிரிப்பு, தலைசீவுதல், உணவருந்துதல், நீர் அருந்தும் முறை என்பன போன்ற அம்சங்களைக் கூட மனதில் பதித்து வைத்தனர்.

நபிகளாரின் பேச்சு மிகத் தெளிவானதாகவும் இலக்கண வரம்புக்குட்பட்டதாகவும் இருந்தது. மனதில் பதித்துக் கொள்ள வசதியாகக் கூறும் மரபும் அவரிடம் இருந்தது. இதனால் மனனமிடுவதும் இலகுவாகியது. நபிகளாரின் காலத்தில் ஹதீஸ்கள் மனனம் செய்து பாதுகாப்பதே முக்கிய பண்பாக இருந்த போதும் முக்கியம் என்று தாம் கருதிய ஹதீஸ்களை ஸஹாபிகளில் சிலர் எழுதிவைத்திருந்தனர். இதனை நபிகளார் அறிந்தும் இருந்தார்கள். சிலருக்கு எழுதிவைக்க அனுமதியளித்திருந்தார்கள். எனினும், குர்ஆனுடன் கலந்து விடாதிருப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்கள்.

எம்.ஐ.எம். அமீன்
முதுநிலை விரிவுரையாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# இஸ்லாம் A/L

ஜாஹிலிய்யாக்கால அரேபியர் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள். ஆனால் அபார ஞாபகசக்தியுடையவர்கள். ஆதலால் எழுத்து வடிவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காதிருந்தார்கள். மக்காவில் ஜாஹிலிய்யாக் காலத்தில் 17 பேர் மட்டுமே எழுத, வாசிக்க அறிந்திருந்தார்கள் என்று முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் எழுதிவைத்துள்ளார்கள். ஆதலால், "ஹதீஸ்களை எழுதுவது நபிகளார் காலத்திலோ அல்லது ஸஹாபிகள் காலத்திலோ சாத்தியமானதாக இருக்கவில்லை. ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில்தான் ஹதீஸ்கள் எழுதப்பட்டன" என்ற <u>தவறான</u> ஒரு கருத்து நிலவுகிறது. இக்கருத்து ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

மக்கா ஒரு தலைநகர்; வர்த்தக மத்திய நிலையம்; சந்தைகள் நிகழும் இடம்; வர்த்தகக் கரவன்கள் சந்திக்குமிடம்;

ஹஜ்ஜுக்காக மக்கள் வருடந்தோறும் அங்கு ஒன்று கூடினர். அவர்களுக்கு உணவு, நீர் வசதிகள், பாதுகாப்பு என்பன வழங்கப்பட்டன. இத்தகைய பின்னணியை உடைய அந்நகரில் மட்டுமன்றி தாயிப், தூமதுல் ஜன்தல், மதீனா, ஹிரா நகர் களிலும் பாடசாலைகள் இருந்தன. அங்கு ஆண் பிள்ளைகளுடன் பெண் பிள்ளை களும் கல்வி பயின்றனர்.

அரேபியர் தத்தம் பரம்பரை பற்றிய தகவல்களைப் பதிந்து வைத்திருந்தனர். கோத்திரங்களுக்கிடையிலான உடன் படிக்கைகளை எழுதிவைத்திருந்தனர். கஃ பாவில் முக்கிய கவிதைகளையும், பிரகடனங்களையும் தொங்கவிட்டிருந்தனர். இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பே எழுத்துக்கலை மக்காவில் அறிமுகமாகி யிருந்தது என்பதை இவை காட்டுகின்றன.

நபித்துவத்துடன் முஹம்மது (ﷺ) அவர்களும் கல்வி கற்பதைப் பெரிதும் ஊக்குவித்தார்கள். கல்வியின் மேன்மையைச் சுட்டிக்காட்டியதுடன் கல்வி கற்பதை ஆண் களுக்கும் பெண்களுக்கும் கடமையாக்கி னார்கள். முஸ்அப் இப்னு உமைர் (ரழி), இப்னு உம்மி மக்தூம் (ரழி) ஆகியோரைக் கல்வி போதிக்க ஆசிரியர்களாக அனுப்பி னார்கள். அப்துல்லாஹ் பின் ஸஈத் பின் அல் ஆஸ் (ரழி) அவர்களை எழுத்துக் கலையைக் கற்பிப்பதற்காக நியமித்திருந் தார்கள். அந்நிய மொழிகளைக் கற்குமாறு ஸஹாபிகளைத் தூண்டினார்கள். கொடுக்கல் வாங்கலை, கடனைப் பதிந்து வைப்பதைக் குர்ஆன் கடமையாக்கியிருக் கிறது. நபிகளார் (ரழி) அவர்களிடம் சுமார் ஐம்பது எழுத்தாளர்கள் கடமை யாற்றியுள்ளார்கள். இவர்கள் குர்ஆனை எழுதியதுடன் மட்டுமல்லாது ஸகாத் கணக்கு களையும் பதிவுசெய்து வைத்தனர். வெளி நாட்டு அரசுகளுடன் கடிதத் தொடர்புகளை நபிகளார் (ﷺ) அவர்கள் வைத்திருந் தார்கள். இஸ்லாத்தில் இணையுமாறு அவர்களுக்கு எழுத்து மூலமான அழைப்பை விடுத்தார்கள். ஹுதைபியா உடன்படிக்கை எழுத்தில் வடித்துக் கையொப்பமிடப்பட்டிருந்தது. நிருவாகி களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் நூற்றுக்கணக்கான கடிதங்களை அனுப்பி யுள்ளார்கள். அவற்றில் பல மிக நீண்டவை. வணக்க வழிபாடுகள், இஸ்லாமியக் கடமைகள், நிறைவேற்றும் வழிமுறைகள் அவற்றில் விளக்கப்பட்டிருந்தன.

இவை நபிகளார் (ﷺ) அவர்களது காலத்தில் ஹதீஸ்கள் பதியப்பட்டிருந்தமை யைக் காண்பிக்கின்றன. ஹதீஸ்கள் குர்ஆனுடன் கலந்து விடக் கூடியதாக எழுதுவதை முஹம்மத் (ﷺ) அவர்கள் தடுத்துள்ளார்கள் என்பது உண்மையே. ஆயினும், ஹதீஸ்களைத் தனியாகப் பதிந்து வைப்பதற்கு அனுமதி வழங்கி ஊக்குவித் தார்கள். ஒரு முறை ஓர் அன்சாரி ஸஹாபி தனக்கு ஞாபகமறதி ஏற்படுகிறது என்று நபிகளாரிடம் முறையிட்ட போது,

"உங்களது வலதுகையைப் பயன் படுத்துங்கள் (எழுதிவையுங்கள்)" என்றார்கள். இந்தக் கருத்து அடங்கிய ஹதீஸ் திர்மிதியில் பதியப்பட்டுள்ளது.

மக்காவாசியான அப்துல்லாஹ் பின் அம்ரிப்னுல் ஆஸ் (ரழி) எனும் இளவயது ஸ்ஹாபி நபிகளாரின் கூற்றுக்கள் அனைத் தையும் எழுதிவைக்கும் மரபுடையவராக இருந்தார்கள். ஒரு தினம் அவருடைய தோழர்களுள் ஒருவர், ''நபிகளார் (ﷺ) அவர்களும் ஓர் மனிதரே! அவர் சிலவேளை மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும் இருப்பார்; மற்றும் சிலவேளை கோபமடைந்திருக்க முடியும். ஆதலால் அவரது கூற்றுக்களை எல்லாம் அப்படி அப்படியே எழுதி வைப்பது நல்லதல்ல'' என்று கூறினார். ஆதலால் அவர் நபிகளாரிடம் சென்று, ''நீங்கள் கூறும் அனைத்தையும் ஒருவர் எழுதிவைக் கலாமா?'' என்று வினவினார். நபிகளார், ''ஆம்'' என்றார்கள். ''நீங்கள் மகிழ்ச்சி அடைந்துள்ள வேளையும், கோபம் அடைந் துள்ள வேளையும் கூறுவதெல்லாம் எழுதலாமா?'' என்று மீண்டும் கேட்டபோது, நபிகளார், ''அல்லாஹ்வின் மீது ஆணை யாக, ஒருபொழுதும் இந்த வாயிலிருந்து பொய் வருவதில்லை'' என்று பதிலளித்தார் கள். இக்கருத்தடங்கிய ஹதீஸ் அபூதாவூதில் பதிவாகியுள்ளது. அப்துல்லாஹ் பின் ஆஸ் தான் எழுதிவைத்த ஹதீஸ் தொகுப்புக்கு 'ஸஹிபா ஸாதிகா' என்று பெயரிட்டிருந்தார் கள். இந்நூல் பலகாலம் மாணவர்களுக்கு ஹதீஸ் பாடம் போதிக்கும் தனிநூலாகப் பயன்பட்டது.

மதீனாவில் நபிகளாரின் வீட்டில் பணி யாளராகத் தங்கியிருந்த அனஸ் (ரழி) அவர்கள் இளமை முதல் எழுத வாசிக்க அறிந்திருந்தார்கள். அவர் ஒருதினம் தனது மாணவரிடையே தனது ஏட்டை விரித்து பின்வருமாறு கூறினார்:

''இவை என்னால் எழுதப்பட்ட நபிகளார் (ﷺ) அவர்களின் வார்த்தைகள். இதில் ஏதேனும் தவறுகள் இடம் பெற்றிருக்கின்ற னவா என்றறிந்து திருத்திக் கொள்வதற்காக நபிகளார் (ﷺ) அவர்களிடம் வாசித்துக் காண்பிக்கப்பட்டவை'' இந்நிகழ்ச்சியை அவரது மாணவர்களில் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்குறித்த தகவல்கள் நபிகளார் (ﷺ) அவர்களின் காலத்திலே ஹதீஸ்கள் பதிந்து வைக்கப்பட்டிருந்தன என்பதை சந்தேகத் துக்கிடமின்றி காண்பிக்கின்றன. எனினும், அல்குர்ஆனை எழுதிவைப்பதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டது போல் ஹதீஸ்கள் அனைத்தையும் எழுதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதும், ஹதீஸ்கள் அக்காலத்தில் திட்டமிட்டு எழுதப்பட வில்லை என்பதும் உண்மையே. ஸஹாபி கள் தம் சுயவிருப்பினடிப்படையில் நபி களார் காலத்தில் ஹதீஸ்கள் சிலவற்றை எழுதிவைத்திருந்தார்கள் என்பதும், நபி களாரின் எழுத்துவடிவ அறிவுறுத்தல்களும் கடிதங்களும் எழுதப்பட்ட ஹதீஸ்களே என்பதும் நினைவுறுத்தத்தக்கதாகும்.

நபிகளார் காலத்தில் முஸ்லிம்கள் மீது தொடுக்கப்பட்ட சித்திரவதைகளும் கொடுமைகளும், நாடுகடத்தலும், போர் தொடுத்தலும் அனைத்து ஹதீஸ்களையும் எழுதிவைப்பதில் கவனம் செலுத்த இடம் அளித்திராது என்பதும் நபிகளார் மரணிக்கும் வரை ஹதீஸ்கள் நிகழ்வுகள் இடம்பெறுவதால் அவரது ஆயுட்காலத்தில் ஹதீஸ்கள் அனைத்தையும் எழுதி முடிப்பது சாத்தியமாகாது என்பதும் நோக்கத் தக்கதாகும்.

குலபாஉர் ராஷிதீன் காலப் பகுதியில் ஏற்பட்ட இஸ்லாமிய இராச்சிய வியாபகத்தை அடுத்து முக்கிய நகர்களில் எல்லாம் ஸஹாபிகள் குடியேறினர். போர் வீரர்களாகவும், நிருவாக உத்தியோகத்தர் களாகவும், ஆசிரியர்களாகவும் கடமை யாற்ற அனுப்பப்பட்ட இவர்கள் அனைவரும் ஹதீஸ்களை தம் மனப்பேழையில் வைத்துப் பாதுகாத்தவர்களாகவும் இருந்த னர். அங்கு அவர்கள் தாம் அறிந்திருந்த ஹதீஸ்களைப் போதிக்கலாயினர். இதனால் மக்கா மதீனாவுக்கு வெளியேயும் முக்கிய நகர்களை மையமாக வைத்து ஹதீஸ் கலாநிலையங்கள் தோன்றின. மக்கா, மதீனா, கூபா, பஸரா, டமஸ்கஸ், புஸ்தாத், ஸன்ஆ, மர்வு முதலாம் நகர்களின் ஹதீஸ் கலாநிலையங்கள் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தன.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

சோனியா மானா ஸ்கோவா

# நான் ஏன் இஸ்லாத்தைத் தெரிவுசெய்தேன்?

நன்றி: Discover Islam

தமிழில் : முபஷ்ஷரா

என்னுடைய பெயர் சோன்யா மானா ஸ்கோவா. நான் செக்கோஸ்லாவாகியாவைச சேர்ந்தவள். எனது கதை, சிறிது காலத்துக்கு முன், 1995 -1996ல் இஸ்லாம் பற்றிய ஒரு நூலை வாசிக்கக் கிடைத்த திலிருந்து ஆரம்பிக்கிறது. அந்த நூலை வாசித்த பின்னர் நான் அதனை விரும்பு வதாக எனக்குத் தோன்றியது. அது இஸ்லாத்தின் அடிப்படைகளை அறிமுகப் படுத்துகின்ற ஒரு நூல். நான் அந்த மதத்தைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்தேன். ஆனால், துரதிஷ்டவசமாக எனது நாட்டில் இஸ்லாம் தொடர்பான இலக்கியங்கள் எதனையும் பெற்றுக் கொள்வது மிகக் கடினமான ஓர் அம்சம். ஜீஸஸையும் மேரியையும் பற்றிய கதை யைச் சொல்வது. அந்த ஸூராவிலே நபிமார் களின் வரலாறும் அவர்கள் எவ்வாறு ஒரே தூதுடன் வந்தார்கள் என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் அனைத்தும் என்னை மிகவும் ஆழமாகத் தொட்டுவிட்டன. நான் அவை பற்றி சிந்திக்க ஆரம்பித்தேன். என்னுடைய முந்தைய மார்க்கமான கிறிஸ்தவமும் எனது சிந்தனையை மாற்றிய முக்கிய காரணிகளுள் ஒன்றாகும். சிறுவயதாக இருக்கும் போது ''வேதநூல் என்று பைபிளைத் தவிர வேறு எதுவும் இல்லை." என்று எனக்கு சொல்லித் தரப்பட்டிருந்தது. அது மிகவும் குறுகிய சிந்தனையாகவே இருந்தது.

காலம் போகப்போக ஐரோப்பிய மக்கள், அவர்களது வாழ்க்கை முறைகள் பற்றிய எனது நோக்கம் என்பன மாற்றமடையத் தொடங்கின. நான் எனது நாட்டுக்குத் திரும்பிச் செல்லும்போதெல்லாம் என்னால் தொடர்ந்து அங்கு வாழ முடியுமா? என்று சிந்திப்பதுண்டு. ஏனெனில் அது எனக்கு முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை முறையாக இருந்தது. ஐரோப்பாவின் வாழக்கை முறை மிகவும் வேகமானது. எல்லாருமே எல்லா வேளைகளிலும் அவசரமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களது சமூக வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம் மிகவும் வித்தியாசமானது; அவர்களது குடும்ப வாழ்வும் அவ்வாறே! அவை இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ளது போல வலுவானவையல்ல. சாதாரணமாக ஒரு பிள்ளை 15 அல்லது 18 வயதாகியவுடன் வீட்டை விட்டு வெளியே வந்து சுதந்திரமாக வாழ ஆரம்பித்து விடுகிறது. இது எனது நாட்டின் நிலமை. நான் மற்றைய ஐரோப்பிய நாடுகளைப் பற்றிக் கூறவில்லை.

நான் இஸ்லாத்தின்பால் ஈடுபாடு காட்டத் தொடங்கியதிலிருந்து என்னுள் ஏற்படத் தொடங்கிய மாற்றத்தினை எனது குடும்பத் தினுள்ளும் கொண்டு வருவதற்கு மெது மெதுவாக முயற்சித்தேன். நான் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் இஸ்லாம் பற்றியும் நான் சிந்திக்கின்ற அம்சங்கள் பற்றியும் எடுத்துக் கூறுவேன். நான் இவ்வாறெல்லாம் சிந்திப்பதற்கு எவ்வாறு? எங்கிருந்து? கற்றுக் கொண்டேன் என்பது குறித்து எனது பெற்றோர் ஆச்சரியப்படலாயினர். எனது பழக்க வழக்கங்களும் மாற்றத்திற்குள்ளா யின. அவர்கள் சாப்பிடும் சில உணவு வகைகளை நான் சாப்பிடுவதில்லை.

நான் இறுதியாக வீட்டுக்குச் சென்ற போது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளப் போவதைக் கூறினேன். அவர்களுடைய பிரதிபலிப்பு மிகவும் எதிர்மறையானதாக இருந்தது. அவர்கள் என்மீது கோபம் கொண்டார்கள். இருந்த போதிலும் நான் அவர்களுக்கு இஸ்லாம் பற்றி விளக்கப் படுத்தலானேன். நாங்கள் மிக நீண்ட தொரு கலந்துரையாடலை ஏற்படுத்திக் கொண்டோம். நான் இஸ்லாம் பற்றியும் முஹம்மத் (ﷺ) அவர்கள் பற்றியும் குடும்ப வாழ்க்கை பற்றியும் அவர்களுக்கு எடுத்து ரைத்தேன். இந்த சந்தர்ப்பத்தில் எனது தந்தை இவற்றில் எதையுமே ஏற்க மறுத்தார். அவையனைத்திற்கும் எதிர்ப்புத் தெரிவித்தார். ஆனால், எனது தாயார் இக் கருத்துக்களை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொள்ள ஆரம்பித்தார். எனது சகோதரிக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொன்னபோது அவள் என்னுடன் உடன் பட்டாள். அவள் தற்போது இஸ்லாத்தின் பால் உண்மையில் ஈடுபாடு காட்டுபவளாக இருக்கிறாள்.

'கசபிலன்கா' (மொரோக்கோ தலைநகர்) வில் எனது விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த போது ஒருநாள் நண்பர் களுடன் ஒரு பள்ளிவாயலுக்கு செல்ல வேண்டும் எனத் தீர்மானித்தேன். அது மிக அழகியதொரு பள்ளிவாயல். கடற்கரையின் அருகில் மிக அழகாக கட்டப்பட்டிருந்தது. அந்த ரம்மியமான சூழலில் அந்தப் பள்ளி வாயலில் வைத்து நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்.

அடுத்த நாளே நான் இஸ்லாம் பற்றியும், அதன் சட்டதிட்டங்கள் பற்றியும் அதிகமாக வாசிக்கத் தொடங்கினேன். ஏனெனில், இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் தொடர்பாக நான் அவ்வளவு தூரம் அறிந் திருக்கவில்லை. எனது தோழிகளுள் ஒருத்தி இஸ்லாம் பற்றி எனக்குக் கற்பிப்பதில் மிகவும் உதவி புரிந்தாள்.

எனவே, நான் வெறுமனே அரபுகளினதும் வளைகுடாவினதும் வரலாறு தொடர்பாக வாசிக்க ஆரம்பித்தேன்.

சில மாதங்களுக்குப் பின்னர் நான் தொழிலுக்காக பஹ்ரைனுக்கு வந்தபோது எனக்கு இன்னுமொரு நூலை வாசிக்கக் கிடைத்தது. பஹ்ரைனில் இஸ்லாம் பற்றிய நூல்களை வாசிக்கக் கிடைப்பது மிக இலகுவாக இருந்தது. எனவே நான் நிறைய நூல்களை வாசிக்கலானேன். இந்த வாசிப்பின் மூலமாக நான் இவ்வுலகம் தொடர்பான வித்தியாசமான உணர்வுகளை யும், நோக்குகளையும் பெறலானேன். அத்தோடு இவ்வுலக வாழ்க்கை தொடர் பான எனது அபிப்பிராயத்திலும் மாற்றங்கள் ஏற்படலாயின. இது என்னை இன்னும் அதிகமான நூல்களை வாசிக்கச் செய்தது. பின்னர் எனக்கு இந்திய எழுத்தாளர் ஒருவரால் எழுதப்பட்ட அல்குர்ஆன் பற்றிய அறிமுகம், மற்றும் விளக்கங்கள் அடங்கிய நூலொன்றினை வாசிக்கக் கிடைத்தது. இந்த நூலின் அரைப்பகுதியை நான் வாசித்து முடித்ததும் நான் இஸ்லாத்தைத் தழுவ வேண்டும் என்ற முடிவுக்கு மிக நெருங்கி வந்தேன்.

''உங்களுடைய வாழ்க்கையின் திருப்புமுனை என்ன?" என்று என்னிடம் யாராவது கேட்டால் நான், ''ஸூரா ஆல இம்ரானை வாசிக்கக் கிடைத்த அந்த சந்தர்ப்பம் தான்" எனக் கூறுவேன். அது

செகோஸ்லோவாகியாவில் நான் அதிகம் முஸ்லிம்களைக் கண்டதில்லை. நான் அங்கிருந்தபோது ஓர் இஸ்லாமிய நிலையம் பற்றிய நூலொன்றைக் கண்டேன். அதிலே தங்களிடம் 15,000ம் முஸ்லிம்கள் இருப்பதாக அவர்கள் எழுதியிருந்தார்கள். ஆனால் இந்த முஸ்லிம்கள் ஒரு பள்ளிவாயலைத்தானும் கட்டிக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஆனால் முஸ்லிம்கள் அதற்காக கடுமையாகப் போராடினார்கள். எனவே இரண்டொரு வருடங்களுக்கு முன்னர் அவர்களுக்கென ஒரு பள்ளிவாசலை கட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் அவர்கள் தொழுகைக்காக ஏதாவது ஓர் இடத்தை தெரிவுசெய்து கொள்வதே வழமையாக இருந்தது.

நான் இன்னுமொரு தடவை எனது நாட்டுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளேன். அச்சந்தர்ப்பத்தில் அந்த இஸ்லாமிய நிலையத்திற்குச் செல்லவுள்ளேன். அங்கு இஸ்லாத்தின் நிலை, முஸ்லிம்கள் எவ்வாறு வாழகிறார்கள் என்பன பற்றி கேட்டறிய வேண்டும். நான் இஸ்லாத்தைத் தழுவ வேண்டும் என்ற கருத்தை கடுமையாக எதிர்த்துவந்த எனது தந்தை சில நாட்களுக்கு முன்னர் ஒரு மின்னஞ்சலை அனுப்பியிருந்தார். அதிலே இஸ்லாம் பற்றிய தத்துவ விளக்கங்களைக் கொண்ட ஒரு நூலை வாசித்துக் கொண்டிருப்பதாக கூறியிருந்தார். அந்த நூல் அவரை, நான் அவருக்கு ஏற்கனவே விளக்கிய அம்சங்கள் குறித்து சிந்திக்க வைக்கும் எனக் கருதுகிறேன். உண்மையில் இது எனக்கு ஒரு சார்பான சந்தர்ப்பமாகும். எனது அடுத்த விஜயத்தின் போது எனது சகோதரிக்காக சில நூல்களைக் கொண்டு செல்லவுள்ளேன்.

என்னுடைய வாழ்க்கையில் இஸ்லாம் பல மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. மனிதர்களோடு பழகும்போது நான் முன்னரைவிட அதிகமாக அமைதியுடன் நடந்து கொள்வதாக உணர்கிறேன். நான் எனது ஆடை அணியும் முறைகளையும் ஆண்களோடு பழகும் விதத்தையும் மாற்றிக் கொண்டேன். இதற்கான முதற் காரணம் அது பெண்ணுக்கென அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட கட்டளை; இரண்டாவது, நான் இன்னும் கண்டிப்பானவளாகவும் சீரியஸானவளாகவும் ஆக விரும்பினேன். நான் இஸ்லாத்தை வாசிக்க அரம்பித்த திலிருந்தே சோஷியலாகப் பழகுவதை மிகவும் குறைத்துக் கொண்டேன்- மது அருந்துவது, சிகரட் பிடிப்பது உட்பட. இவ்வாறான வாழ்க்கை முறை எனக்கு மிக சௌகரியமாக இருந்தது. இது ஒரு பின்னடைவு என நான் கருதவில்லை. சில நண்பர்கள் என்னிடம் ஒரு நாள்,

''உனது சொந்த நாட்டிற்குப் போனால் எவ்வாறு ஒரு முஸ்லிமாக வாழ முடியும்?'' எனக் கேட்டனர். இது எனக்கு இன்னும் ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. நான் அதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

தற்போது நான் இஸ்லாமிய வகுப்புகளுக்குச் சென்று வருகிறேன். பொதுவான பாடங்களுடன் தப்ஸீர், தஜ்வீத் போன்றவற்றை கற்று வருகிறேன். Discover Islam சஞ்சிகையினூடாக எனக்குத் தேவையான தகவல்களைப் பெற்று வருகிறேன். நான் இப்போது மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். இரண்டு நாட்களின் பின்னர் நான் வீட்டுக்குச் செல்லவுள்ளேன். அங்கு அனைத்துக் காரியங்களும் சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறேன். இன்ஷா அல்லாஹ்.

வல்ல அல்லாஹ் எம் அனைவரையும் சத்தியத்தின்பால் நெருக்கமாக ஆக்கி வைப்பானாக.

## ரப்பானியத் துளிகள்

# பலமிக்க ஆயுதம்!

''நான் உங்களுக்கு மிக அண்மித்தே இருக்கிறேன்; என்னிடம் கேளுங்கள்; நான் பதிலளிக்கிறேன்.'' என அல்லாஹ் கூறுகிறான். 'துஆ' வணக்க வழிபாடுகளின் மூளை. நபிகளாரது பொன் மொழிகளில் மட்டுமல்ல, வாழ்க்கையையே அவ்வாறுதான் அன்னார் அமைத்துக் கொண்டாரோ என நாம் நம்ப வேண்டியிருக்கிறது.

ஆனால், முஸ்லிம்கள் இன்று மிகப் பொடுபோக்காக இருக்கின்ற ஓர் அம்சமாக அது மாறிவிட்டது. வரலாற்றில் முஸ்லிம்களின் பெரும் ஆயுதமாக அது இலங்கியிருக்கிறது. முழு நம்பிக்கையுடன் எம் முன்னோர்கள் அதைக் கைக்கொண்டுள்ளனர். இதோ இஸ்லாமியத் தளபதி குத்ஸ்! தனது முழுப் படைபலத்துடன் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தில் அட்டுழியங்கள் புரிந்து கொண்டிருந்த தாத்தாரிய படைவீரர்களை சந்திக்கத் தயாராகிவிட்டார். ''இன்று வெள்ளிக்கிழமை; அனைத்தும் தயாராகிவிட்டன; செல்வோமே!'' என உபதளபதிகள் வேண்டினர். ''இன்னும் ஓர் ஆயுதம் எம்மை வந்தடைய வேண்டியுள்ளது. எனவே ஜும்ஆ முடிந்தவுடன் செல்வோம்'' எனக் கூறினார் தளபதி குத்ஸ். அவ்வாயுதம்தான் அன்று ஜும்ஆவில் மில்லியன் கணக்கான முஸ்லிம்கள் இஸ்லாமியப் படைக்குச் சார்பாக கேட்கவிருந்த பிரார்த்தனை! அந்தத் துஆவை அல்லாஹ் அங்கீகரித்தான். 'அய்ன் ஜாலூத்' என்ற இடத்தில் முஸ்லிம்கள் தாத்தாரியர்களை தோற்கடித்தனர்.

சகோதரர்களே! எமது தளபதிகளின் ஆயுதம் எங்கே இருந்தது என்பதைப் பாருங்கள். ஆனால் இன்று எமது சகோதரர்கள் பலஸ்தீனில், கஷ்மீரில், செச்னியாவில், பிலிப்பைன்ஸில் இன்னும் எங்கெல்லாமோ போராடுகிறார்கள். ஆனால் நாம் துஆவினூடாக வாவது சகோதரத்துவத்தை வெளிப்படுத்துகிறோமா?

முஸ்லிம்களிடம் உள்ள எல்லா ஆயுதங்களும் பறிக்கப்பட்டு விட்டன. ஆனால் எதிரிகளால் ஒருபோதும் பறிக்க முடியாத ஓர் ஆயுதமே 'துஆ' என்பதை எதிரிகளே நன்கு விளங்கி வைத்துள்ளனர். ஆனால் எம்மவர்கள் எவ்வளவு தூரம்தான் இக்கருவியைப் பயன்படுத்தி இஸ்லாத்திற்கு சேவை செய்கின்றனர்!!

# இமாம் ஹுஸைன் (رضي الله عنه)

# உயிரைக் கொடுத்தது எதற்காக? –01

மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

முஹர்ரம் மாதத்தின் முதல் பத்து தினங்களை உலகெங்கும் இலட்சக் கணக்கான முஸ்லிம்கள் துக்க தினங்களாக அனுஷ்டிக்கிறார்கள். பல்வேறு வழிகளில் தங்களது துய்ரத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்கள்.

1300 வருடங்களுக்கு முன்பு ஈராக் தேசத்தில் கர்பலா மைதானத்தில் நபிகளாரின் பேரர் ஹுஸைன் (رضي الله عنه) தனது இன்னுயிரை இஸ்லாத்திற்காக ஈந்ததை நினைவூட்டும் சடங்காக இந்த துக்கதின அனுஷ்டித்தல்கள் அமைந்து விட்டன.

ஆனால் துக்கம் அனுஷ்டிக்கும் இலட்சக்கணக்கான மக்களில் பெரும் பாலோருக்கு ஹுஸைனின் உயிர்தியாகத்தின் தாத்பர்யமே தெரியாததுதான் விந்தை.

ஹுஸைன் கூட இத்தகைய கண்மூடித்தனமான தனிநபர் பற்றை அங்கீகரிப்பாரா என்பது சந்தேகமே.

அவருக்கு சித்தாந்தத்தை விடவும், உயர்நோக்கத்தை விடவும் தனது தனிப்பட்ட வாழ்வுதான் முக்கியமானதாக இருந்தது எனில் அந்த வாழ்வை ஏன் அர்ப்பணித்தார்? அவரது உயிர்த் தியாகமே அந்த உயர்நோக்கத்தை அவர் தமது உயிரை விட மேலாக மதித்தார் என்பதற்குச் சான்றாகும்.

அந்த உயர் நோக்கம்தான் என்ன? கலீஃபா ஆகி இஸ்லாமிய அரசை நிர்வகிக்க வேண்டும் என ஹுஸைன் ஆசைப்பட்டாரா? அந்த இலட்சியத்தை அடைவதற்காக தனது உயிரையே பணயம் வைத்துப் போராடினாரா?

ஹுஸைன் ஏன் உயிரைக் கொடுத்தார்? தனது வாழ்வை மட்டுமல்ல; தனது இதயத்துக்கினிய குடும்பத்தவர்களின் வாழ்வையும் எந்த நோக்கத்திற்காக அவர் அர்ப்பணித்தார்?

துக்கம் அனுஷ்டிக்கும் மக்களிடம் விசாரியுங்கள். எவருக்குமே தெரியாது. ஹுஸைனின் உன்னத நோக்கத்தை அறியாமலேயே...

ஒருவரின் உயிர்த் தியாகம் குறித்து அவரது உறவினர்களும் ஆதரவாளர்களும் துக்கப்படுவது வாஸ்தவமானதுதான். இதில் விசேஷமாக ஒன்றுமில்லை. அன்பால் நனைந்த இதயங்கள் இழப்பின் சுமையைத் தாங்காமல் பொழியும் கண்ணீர்த் துளிகள் அவை.

ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் 1300 வருடங்கள் உருண்டோடி விட்ட பிறகும் ஒரு இறை நேசரின் இழப்பு ஏன் உணரப்படுகிறது என்பதே. அந்த உயிர்த் தியாகம் மிகமிக உயர்ந்த இலட்சியங்களுக்காக செய்யப்பட்டதுதான் காரணமாகும். வெறுமனே தனிப்பட்ட அன்பினால் மட்டுமே உந்தப்பட்டு பல நூற்றாண்டுகளாக அந்த மனித துயரம் நினவுகூரப்படுகிறது எனக் கூறுவது அர்த்தமற்றது.

ஏன், இன்னும் சொல்லப் போனால் இல்லை. நிச்சயமாக இல்லை. அவர் பிறந்த வீடு, அவர் வளர்ந்த குடும்ப சூழலை அறிந்தவர்கள் எவருமே. இந்த விபரீத நோக்கம் அவருக்கு இருந்தது என யோசிக்கவும் துணிய மாட்டார்கள். அத்தகைய உன்னத குடும்பத்தில் பிறந்த ஒருவர் அரசியல் அதிகாரம் பெறுவதற்காக முஸ்லிம்களிடையே இரத்தம் சிந்தச் செய்தார் என்பது எண்ணிப் பார்க்க முடியாத ஒன்று ஆகும்.

> **ஹுஸைன் ஏன் உயிரைக் கொடுத்தார்? தனது வாழ்வை மட்டுமல்ல, தனது இதயத்துக்கினிய குடும்பத்தவர்களின் வாழ்வையும் எந்த நோக்கத்திற்காக அவர் அர்ப்பணித்தார்?**

பிறகு என்னதான் நோக்கம்? ஹுஸைன் கூரிய பார்வை கொண்டவர். இஸ்லாத்தின் ஆணிவேரையும் அடிநாதத்தையும் அறிந்தவர். அப்போதைய இஸ்லாமிய ஒழுங்கமைப்பின் அடித்தளத்தில் விழுந்த கீறலை அவர் கவனித்து விட்டார். தீயசக்திகளை முளையிலேயே கிள்ளியெறிய ஆசைப் பட்டார். நிலைமை கட்டுக்கு மீறிப் போய் போர் புரிய வேண்டிய நிலை வந்தால் அதற்காக போர் புரிவது கூட தம் மீதான கடமை என அவர் உணர்ந்தார்.

ஹுஸைன் (رضي الله عنه) கவனித்து விட்ட அந்த மாற்றம்தான் என்ன? மக்கள் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்று விடவில்லை; ஆட்சியாளர்களும் சரி, பாமர மக்களும் சரி இறைவன் மீதும் இறைத்தூதர் மீதும் இறைமறை மீதும் நம்பிக்கை வைத்திருந்தார்கள்; அதில் எள்ளளவும் குறைவு ஏற்பட்டு விடவில்லை. அரசு சட்டங்களிலும் கூட எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை. உமைய்யா அரசுகளின் கீழ் இயங்கும் நீதிமன்றங்கள் குர்ஆன், நபி வழியின் அடிப்படையிலேயே வழக்குகளுக்குத் தீர்ப்பளித்து வந்தன. இன்னும் சொல்லப் போனால் 19ஆம் நூற்றாண்டு வரை உலகில் எந்தவொரு முஸ்லிம் நாட்டிலும் எந்தவைகயான சட்டத் திருத்தமும் கொண்டு வரப்படவில்லை என்பதுதான் உண்மை.

சிலர் யஸீதின் தனிப்பட்ட ஆளுமையை மோசமாக சித்தரிக்க முற்படுகிறார்கள். இதனால் யஸீத் என்கிற மோசமான நபரை இஸ்லாமிய அரசுத் தலைவராக நீடிக்க விடக்கூடாது என்பதற்காகத்தான் ஹுஸைன் எழுந்தார் என்ற பொதுப்படையான ஊகம் வேரூன்றி விட்டது.

யஸீதின் குறைபாடுகளை ஒப்புக் கொண்டாலும் கூட அது ஒன்றே ஹுஸைன் (رضي الله عنه) அவர்கள் அரசுக்கு எதிராக கிளர்ந் தெழுந்ததற்குக் காரணமாக அமைந்தது என்று சொல்லி விட முடியாது. எனெனில் அந்தச் சமயம் அரசு நிர்வாகமும் செம்மையாக நடந்து கொண்டிருந்தது.

வரலாற்றை ஆய்ந்து படித்துப் பார்க்கும் போது ஓர் உண்மை புரியும். தனது தந்தையின் வாரிசாக யஸீத் அறிவிக்கப் பட்டதும், பிறகு மன்னராக முடிசூடிக் கொண்டதும் உண்மையில் இஸ்லாமிய அரசியல் சட்டத்தின் நோக்கம், நடைமுறை ஆகியவற்றிலிருந்து விலகிச் செல்வதாக அமைந்தன. சிம்பிளாகச் சொல்ல வேண்டுமெனில் இஸ்லாத்தில் வாரிசு அரசியலுக்கு இடமில்லை. யஸீத் ஆட்சித் தலைவராக அறிவிக்கப்பட்ட போது எவரும் அதன் தீய விளைவுகளை எண்ணிப் பார்க்கவில்லை. தொலைநோக்கும், ஆழமான மாக்க ஞானமும், இறைப்பற்றும் நிரம்பிய ஹுஸைன் (رضي الله عنه) இந்த வித்தியாசத்தையும்,

விலகலையும் மிகச் சரியாகக் கணித்து விட்டார். இதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளையும் அவர் உணர்ந்து கொண்டார். இஸ்லாமிய அரசுக்கு ஏற்பட விருக்கும் பேரழிவை அவர் முன்கூட்டியே கணித்து விட்டார். இதனால் அதனைத் தடுக்கவும் இஸ்லாமிய ஒழுங்கமைப்பை பாதுகாக்கவும் தனது உயிரையே கொடுக்கத் துணிந்து விட்டார் அவர்.

இந்த குறிப்பிட்ட நிலையை முழுமை யாகப் புரிந்து கொள்வதற்கு நாம் இஸ்லாம் வழங்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் தனித்துவத் தன்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ்தான் நபிகளார் மற்றும் நல் வழிகாட்டப்பட்ட கலீ∴பாக்களின் தலை மையில் அரசு நிர்வாகம் நடந்தது. அதைப் போலவே யஸீதின் நியமனத்திற்குப் பிறகு உமைய்யா, அப்பாஸியக் கலீபாக்களின் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின் வந்த ஆட்சியாளர்களின் காலத்திலும் உருவான புதிய முஸ்லிம் அரசின் நிர்வாக அமைப்புச் சட்டத்தின் முக்கியத் தன்மைகள் என்னவென்பதையும் பார்க்க வேண்டும்.

இவ்வாறு இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது முதன் முதலில் உருவான இஸ்லாமிய அரசின் அடிப்படைத் தன்மை களுக்கும் யஸீதின் நியமனத்துக்குப் பிறகு காலப் போக்கில் உருவான முஸ்லிம் அரசுகளின் முக்கிய தன்மைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் புலப்பட்டு விடும். எந்தப் புள்ளியில் அவற்றிற்கிடையே யான வித்தியாசம் துவங்குகிறது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாக விளங்கும். இந்த ஆய்வு மூலம் ஹுஸைன் கிளர்ந்தெழுந்தது ஏன் என்பதையும் எளிதாகக் கணித்துவிடலாம். நபிகள் நாயகம் (ﷺ) அலீ (رضي الله عنه) ∴பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா ஆகியோரால் வளர்த்து ஆளாக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு அண்ணலாரின் அருமைத் தோழர்களின் அரவணைப்பில் அந்த அழகிய சமூகச் சூழலில் குழந்தைப் பருவத்திலிருந்து நடுத்தர வயது வரை கழித்த ஹுஸைன் (رضي الله عنه), யஸீதின் நியமனம் என்கிற ரூபத்தில் மாற்றத்துக்கான பாதை வகுக்கப்பட்ட போது அதன் விளைவுகள் குறித்து கிஞ்சிற்றும் கவலைப்படாமல் முழுமூச்சுடன் எதிர்த்தார்.

## மன்னராட்சியின் துவக்கம்

வெறுமனே பின்வரும் உண்மைகளை ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது.

(1) இஸ்லாமிய அரசில் அரசாண்மை (Sovereignty) முழுவதுமே இறைவனுக்கே உரித்தானதாகும்.

(2) குடிமக்கள் அனைவரும் இறைவனின் அடிமைகளே.

3 ஆட்சியாளர்கள் இறைவனுக்கு பதிலளிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அரசும் குடிமகனும் இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

இஸ்லாமிய அரசின் தனித் தன்மையே இறைநம்பிக்கைதான். அப்பழுக்கில்லாத எந்தவிதக் குறையும் இல்லாத உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். அதுமட்டு மல்லாமல் குடிமக்கள் மீது அரசுக்கு வரம் பற்ற அதிகாரம் கிடையாது என்பதையும், குடிமக்கள் அரசாங்கத்தின் அடிமைகள் அல்ல என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆட்சியார்கள் கூட முதலில் தாம் இறைவனின் அடிமைகள் என்கின்ற உணர்வுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அடுத்து தமது நாட்டு குடிமக்கள் மீது இறைச் சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

தந்தை முஆவியாவுக்கு அடுத்தபடியாக மகன் யஸீத் கலீபாவாக நியமிக்கப்பட்ட போது இவை எதுவுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இறைவனுக்கே அரசாண்மை அனைத்தும் என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டாலே போதும் என்ற நிலை உருவானது. இதற்கு முந்தைய முடி மன்னர்களைப் போலவே முஸ்லிம் ஆட்சியார்களும் ஏதோ அரசாண்மைக்கு தாமே ஏகபோக சொந்தக்கார்களைப் போல நடந்து கொண்டார்கள். அரசாண்மை தனது குலச்சொத்து; தனக்குப் பிறகு தனது மகன் தான் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பாரம்பரிய மன்னர்களைப் போல நடந்து கொண்டார்கள். குடிமக்களின் வாழ்வு, சொத்து, கண்ணியம் மற்றும் எல்லா வற்றுக்கும் ஏகபோக எஜமான்தான் ஆட்சியாளன் என்கிற நிலைக்கு இது வித்திட்டது. அந்த ஆட்சியாளனின் ஆளுமைக்கு உட்பட்ட நிலப்பரப்பில் இறைச் சட்டங்கள் பிரயோகிக்கப்பட்டால் அவை பொதுமக்களுக்கு மட்டுமே என்று கருதப்படும். இந்த மன்னர்களே இறைச் சட்டத்தின் பல்வேறு விதிகளை எவ்வித குற்ற உணர்வும் இல்லாமல் மூர்க்கமாக மீறினார்கள். அந்த மன்னர்களின் அடி யொற்றி மேல்தட்டு மக்களும் செயல்படத் தலைப்பட்டார்கள்.

**முஸ்லிம் ஆட்சியாளர்களின் உணர்வு, நோக்கம், மற்றும் நடத்தையில் எத்தகைய மோசமான மாற்றம் நிகழும் என்பதை இமாம் ஹுஸைன் தொலைநோக்குடன் ஊகித்து விட்டிருந்தார்.**

### நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் தார்மீகக் கடமையை மறந்தனர்

இஸ்லாமிய அரசின் முக்கிய நோக்கம் இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட நன்மை களை நிலைநிறுத்தி வளர்ப்பதும் இறைவனால் வெறுக்கப்பட்ட தீமைகளைத் தடுத்து அழிப்பதும்தான். ஆனால் முடிமன்னர்களின் நோக்கமோ நிலத்தை அபகரிப்பதும், ஆடம்பர சுகவாழ்வும் பதவி பட்டங்களைச் சேகரிப்பதும் சிற்றின்ப சுகங்களை நாடுவதும்தான். முடிமன்னர்கள் அபூர்வமாகத்தான் உண்மை, நீதி ஆகியவற்றுக்காக பாடுபட்டிருக்கிறார்கள். மன்னர்களும், மேல்தட்டு மக்களும், அரசு அதிகாரிகளும் நன்மைகளை விட தீமைகளைப் பரப்புவதில்தான் முன்னணியில் இருந்துள்ளனர்.

மக்களிடையே நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுத்து, இஸ்லாத்தை எடுத்துரைத்து, மார்க்க நூல்களை தொகுத் தளிப்பது, இஸ்லாமிய ஆய்வுப் படிப்புகளை மேற்கொள்வது போன்ற ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்ட இறைநேசர்களுக்கு ஆட்சியாளர்களின் ஆதரவு கிஞ்சிற்றும் கிடைக்கவில்லை. ஆட்சியாளர்கள் இத்தகைய இறைநேசர்களுடன் அதிருப்தி யுடன்தான் இருந்தனர். அத்தகைய இக் கட்டான சூழல்களிலும் அந்த இறை நேசர்கள் அரசாங்கம் தருகின்ற இடையூறுக் கிடையே தமது உன்னத பணியைத் தொடர்ந்து செய்தனர்.

இந்த அறிஞர்கள், இறைநேசர்களின் முயற்சிகள் தொடர்ந்து தங்களுடைய பணிகளைச் செய்து வந்தனர். இந்த இறை நேசர்கள் அறிஞர்கள் தொடர்ந்து முயற்சித்த போதிலும் ஆட்சியாளர்களின் வாழ்க்கை முறையும், நடத்தையும் முஸ்லிம் சமூகத்தை சீரழிவுக்கு இட்டுச் சென்றது. தங்களது சுயநலத்திற்காக இஸ்லாமியப் பிரச்சாரத் தைத் தடைசெய்யும் அளவுக்கு அவர்கள் போய்விட்டனர். உமையாக்களின் கால கட்டத்தில் புதியதாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள் மீதும் ஜிஸ்யா வரி விதிக்கப்பட்டது. இவ்வகையில் இது மோசமான எடுத்துக் காட்டு ஆகும்.

முஸ்லிம் நன்மையின் மொத்த வடிவ மாகவும், இறையச்சத்தின் அடிப்படையில் தனது வாழ்வை அமைத்துக் கொண்டவனா கவும் திழ்வான். இஸ்லாம் மனிதனுக்குள் ஏற்படுத்துகின்ற மகத்தான பண்பு நலன் களாக இவை திகழ்கின்றன. இந்த மகத்தான பண்புநலன்கள் இஸ்லாமிய அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் ஆட்சியாளர்களிடம் குறைவற இருக்க

வேண்டும். ஆட்சியாளர்களின் நடத்தை இறையச்சத்தாலும் நற்செயல்களாலும் மிளிரும்போது அது மற்ற அரசு அதிகாரிகள் நீதியரசர்கள், ராணுவ அதிகாரிகள், மத்தியிலும் பிரதிபலிக்கும். அவர்களும் இத்தகைய உணர்வுகளால் தமது ஆளுமையை வார்த்தெடுப்பார்கள். இது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தும். முழு சமூகமே இறையச்சம் கொண்டதாய் நற்செயல்கள் புரிவதில் பேரார்வம் கொண்டதாய் மிளிரும். சீசர் பாணியிலான ஆடம்பரத்தையும் சுகபோக வழிமுறைகளையும் முஸ்லிம் ஆட்சியாளர்களும் அரசாங்கமும் மேற்கொண்டபோது முழு பரிமாணமுமே மாற்றம் கண்டது. நீதியின் இடத்தை அநீதியும், அக்கிரமமும், தான் தோன்றித்தனமும் கவ்விப் பிடித்துக் கொண்டன. ஆடம்பரமும், டாம்பீகமும், உல்லாசக் கேளிக்கைகளும் அன்றாட வழக்கமாயின. எது சட்டரீதியானது? எது சட்டவிரோதமானது? என்று பிரித்துப் பார்க்கவும் ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். ஒழுக்க நெறிமுறைகள் காற்றில் பறக்கவிடப் பட்டன. அரசியல் நெறிகள் வலுவிழந்தன. அதிகாரிகள் தங்களுக்குள் இறையச்சத்தை வளர்த்துக் கொள்ளவதற்குப் பதிலாக மக்கள் மீது அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்களாக மாறிவிட்டனர். எளிய மக்களை அடக்கி தமது கட்டுக்குள் வைக்க முற்பட்டனர். மக்களோ அதிகாரிகளின் மனச்சாட்சிகளை விழித்தெழச் செய்வதற்குப் பதிலாக லஞ்சம், ஆசையளிப்பதன் மூலம் காரியம் சாதிக்க முற்பட்டனர்.

இந்த மாற்றம்தான் நிகழ்ந்தது. இத்தகைய சீரழிவு ஏற்படும் என்பதைத்தான் இமாம் ஹுஸைன் (ரழி) அன்றே சரியாகக் கணித்து விட்டார். முஸ்லிம் ஆட்சியாளர்களின் உணர்வு, நோக்கம், மற்றும் நடத்தையில் எத்தகைய மோசமான மாற்றம் நிகழும் என்பதை இமாம் ஹுஸைன் (ரழி) தொலைநோக்குடன் ஊகித்துவிட்டிருந்தார். அதனால்தான் அந்த 'மாற்றத்தை' முழு மூச்சுடன் உயிரைக் கூட பொருட்படுத்தாமல் எதிர்க்க முற்பட்டார்.

அது மட்டுமல்ல. அந்த 'மாற்றத்தின்' காரணமாக இஸ்லாமிய அமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளிலும் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்ந்தன. தலைகீழ் மாற்றத்துக்குள்ளான இஸ்லாமிய அமைப்புச் சட்டத்தின் ஏழு அடிப்படைப் பண்புகளின் விவரம் வருமாறு:

**1. சுதந்திரமான தேர்தல்:**

இஸ்லாமிய அமைப்புச் சட்டத்தின் அடிப்படையே மக்களின் சுதந்திரமான கருத்துக்களின் அடிப்டையில் அரசு அமைக்கப்படுவதுதான். தமக்கு வேண்டிய அரசை அமைத்துக் கொள்வதில் மக்களுக்கு முழு சுதந்திரம் இருந்தது. எவருமே குறுக்கு வழியிலோ, செல்வாக்கு, அதிகாரம், செல்வத்தைப் பயன்படுத்தியோ அதிகாரத்தைக் கைப்பற்றி விட முடியாது. மக்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து தமக்குள் எவர் சிறந்தவராக இருக்கிறாரோ அவருக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும்.

**2 ஆலோசித்து செயல்படுதல்**

இஸ்லாமிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடுத்த முக்கியமான அம்சம் ஆலோசனை பெற்று அவற்றின் அடிப்படையில் அரசாங்கத்தை செயல்படுத்துவது ஆகும். மார்க்க அறிவு பெற்ற, இறையச்சம் மிகுந்த, கருத்துச் சீர்மையும் விவரங்களைப் புரிந்து கொண்டு முடிவெடுக்கும் ஆற்றலும் கொண்ட நபர்களின் ஆலோசனை பெறப்பட வேண்டும். இவ்வாறு ஒரு ஆலோசனைக் குழு அரசுத் தலைவருக்கு உதவும். முதல் நான்கு கலீஃபாக்கள் காலத்தில் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால் அவர்களுக்கு மக்கள் ஆதரவும் வாக்கு அளிப்பதற்கான மக்களது அங்கீகாரமும் நிரம்ப இருந்தது. இந்த நபர் தமக்கு ஆதரவான நிலையை எடுப்பார் என்கிற எண்ணத்தில் கலீஃபா அவர்களை ஆலோசனைக் குழுவில் சேர்க்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் சமூகத்திலேயே மிகவும் சிறந்த நபர்களை எந்தவித விருப்பு வெறுப்பும் இன்றி வாய்மையுடன் தேர்ந்தெடுத்தனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உண்மையே பேசுபவர்களாகவும், தமது மனசாட்சியுடன் நாணயத்துடன் சிறந்த ஆலோசனைகளை கூறுபவர்களாகவும் இருந்தனர். அவர்கள் கலீஃபாவுக்கு தவறான ஆலோசனை கொடுத்து வழிகேட்டின் பக்கம் தள்ளி விடுவார்களோ என்ற ஐயம் துளிகூட இருக்கவில்லை. இப்போது தேர்தல்கள் நடத்தப்படுவதைப் போல அந்தக் காலத்தில் தேர்தல் நடந்திருந்தாலும் எவ்விதப் பிரச்சாரமும் இன்றி அவர்களே மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்தளவுக்கு மக்கள் மத்தியில் அவர்கள் குறித்து நல்ல கருத்து இருந்தது.

**இந்தப் பேச்சு சுதந்திரமும் உரிமையும் ஏதோ கலீஃபாவே விரும்பி அவர்களுக்கு அளித்த ஒன்றல்ல. மாறாக அது இஸ்லாத்தினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டரீதியான உரிமை ஆகும்.**

ஆனால் மன்னராட்சி வந்ததும் பெருத்த அடி வாங்கியது இந்த ஆலோசனைக் குழு வழிமுறைதான். மன்னராட்சி நிர்வாகம் சர்வாதிகார கொடுங்கோலர் வழிமுறைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. அவர்களது ஆலோசனைக்குழுவிலே இளவரசர்கள், பசப்பு வார்த்தை பேசி காரியம் சாதிக்கும் ஜால்ராக்கள், ராணுவத் தளபதி, வட்டார ஆளுநர்கள் போன்றோரின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. இன்றைய பாணியில் தேர்தல் நடத்தப் பட்டால் அவர்களுக்கு டெபாசிட் கூடக் கிடைக்காது. அந்தளவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்தவர்களாக மக்களின் விரோதத்தையும் வெறுப்பையும் அள்ளிக் கொட்டிக் கொண்டவர்களாக அவர்கள் இருந்தனர்.

இதற்கு மாறாக இறைவனுக்கு அஞ்சி வாழ்கின்ற வாய்மை வாய்ந்த, மார்க்க அறிவும் தெளிவும் நிரம்பிய, மக்கள் இதயங்களில் இடம்பிடித்துக் கொண்ட அறிஞர்களுக்கோ அந்த ஆலோசனைக் குழுக்களில் எவ்வித மதிப்போ இடமோ இல்லாமல் போனது. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் மன்னர்களின் கோபத்திற்கும் அக்கிரமத்திற்கும் இலக்காயினர். ஆட்சியாளர் அத்தகைய அறிஞர்களை என்றுமே சந்தேகக் கண்ணோடுதான் பார்த்தனர்.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

இது முஹர்ரம் மாதம். இஸ்லாமிய ஆண்டின் முதல் மாதம். ஒரு முஸ்லிம் தனது புதிய வருடத்தை ஆரம்பிக்கையில் பல்வேறுபட்ட பாதிப்புகளுடனும், படிப்பினைகளுடனும் துவங்குவதற்கு ஏதுவாக இஸ்லாமிய வரலாறு முஹர்ரம் மாத்தில் பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை தன்னுள் பொதிந்து வைத்துள்ளது. அவற்றுள் ஹிஜ்ரத்தும், கர்பலா சம்பவமும் பிரதானமானவை. மௌலிதுகளிலும், தன்னைத்தானே வெட்டிக் குத்திக் கொள்வதிலும் இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களது போராட்டமும், வீரமரணமும் இன்று கொச்சைப்படுத்தப்பட்டுள்ளன. பேரறிஞர் மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களின் தியாக வரலாற்றின் யதார்த்தத்தை விளக்குகிறார்கள். 'சமரசம்' இதழில் தொடராக வெளிவந்த இவ்வாய்வுக் கட்டுரை 'அல்ஹஸனாத்' வாசகர்களுக்காக பிரசுரிக்கப்படுகிறது.

இளைஞர்களே...!
இறைபணியில் இணைந்திடுவோம்!
மறைவழிப் பாதையில் நகர்ந்திடுவோம்!
குறை நிறைந்த கொள்கைகளை
கூடிநின்று தகர்த்தெறிவோம்!!
இளைய சக்திகள் இணைந்தெழட்டும்!
இமயப் புரட்சியும் இமைப்பொழுதில் என்றாகட்டும்!!

# கல்நெஞ்சங்கள் கரைந்திடுமா?

மனிதன் உலகத்திலே அல்லாஹ்'த் தஆலாவின் பிரதிநிதியாகப் படைக்கப்பட்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டுள்ள வாலிப சகோதரர்களே! நாம் அவனின் உண்மைப் பிரதிநிதிகளாக வாழ வேண்டாமா? எமது வாழ்வின் பொருளையும் நாம் வந்த கதையையும் விளங்க வேண்டாமா? எமது வாழ்வு முவடிவடைய முன்பு அல்குர்ஆன் எமது சட்டயாப்பாக ஆக வேண்டாமா? சிந்தியுங்கள். இவற்றிற்காக நாம் செய்ய வேண்டியது என்ன? ரஸூல் (ﷺ) அவர்கள் நவின்றார்கள்:

**"உங்களில் எவராவது ஒரு தீமையைக் கண்டால் அதனைத் தன் கரங்களால் தடுக்கட்டும். முடியாவிட்டால், தனது நாவினால் தடுக்கட்டும். அதுவும் முடியாவிட்டால் தனது உள்ளத்தால் வெறுத்து ஒதுக்கட்டும். அதுவே ஈமானின் கடைசிப் படித்தரமாகும்."**

நபியவர்களின் இந்த வாக்குடன் ஒப்புநோக்குகையில் இன்றைய இளைய தலைமுறையினர் கரங்களால் தடுக்கும் நிலையிலோ அல்லது தமது நாவினால் தடுக்கும் நிலையிலோ இல்லை என்பதைப் புரிந்து கொண்டிருந்தாலும் மனதால் வெறுக்கும் அளவுக்குக் கூட தயாராகவில்லை என்பதை நினைக்கும்போது எமது சமூகத்தின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகிறது..

சமூகத்தில் காண்கின்ற குற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பைச் சுமந்த, அல்லாஹ்வின் பிரதிநிதிகளாக உலகிலே வாழவேண்டிய இளைஞர்கள் இன்று என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் எனப் பார்த்தால் மேற்கத்தேய மோகம் கொண்டலைந்து இஸ்லாத்தின் அடிப்படைகளையே புரிந்து கொள்ளமுடியாத ஷைத்தானிய வழித்தோன்றல்களாக மாறி வருகிறார்கள்.

இவ்விளைஞர்கள் மனதிலே தாம் காண்கின்ற குற்றங்களைத் தடுக்கும் எண்ணம் தோன்றுவதற்கு மாறாக அவற்றிற்கு எவ்வாறு விளம்பரம் தேடிக் கொடுக்கலாம் இன்னும் அந்த ஜாஹிலிய்யத்தை எவ்வாறெல்லாம் வளர்க்கலாம் எனச் சிந்திப்பதிலேயே தமது காலத்தையும் நேரத்தையும் வீணாக்கிக் கொண்டிருப்பதால் தீமை கண்டு வெஞ்சத்துடன் பொங்கியெழ வேண்டிய, தீமை புரிபவர்களுக்காக இறைவனிடம் கசிந்துருகிப் பிரார்த்தனை செய்யவேண்டிய இளைய உள்ளங்கள் இன்று பாவச் செயல்களாலும் உண்மைக்கு மாற்றமான கறைபிடித்த இதயங்களாலும் பாறாங்கற்களாக மாறி நிற்பதைக் காண்கிறோம்.

எமது நாட்டிலுள்ள முழு மனித இனத்திற்கும் இஸ்லாமிய தூதினை சுமந்து செல்ல வேண்டிய எம் நாட்டு இளைஞர்கள் இன்று கைகளிலே கஞ்சாவையும் மனதிலே வஞ்சத்தனத்தையும் சுமந்து கொண்டு வாழ்கிறார்கள் என்பதே தீர்க்கமான உண்மையாகும். இலங்கையின் பிரதானமான நகரங்களிலே குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் இளைஞர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவு சத்திய சன்மார்க்கத்தைச் சுமக்க வேண்டிய எமது முஸ்லிம் வாலிபர்களும் உள்ளடங்குகின்றனர் என்பதை வேதனையுடன் கூறவேண்டியுள்ளது.

இஸ்ரேலியக் கெடுபிடிகளுக்கு மத்தியில் இஸ்லாத்திற்காய் இரத்தம் சிந்தும் பலஸ்தீனப் பாலகர்களும் காஷ்மீரில் போராடும் முஜாஹிதுகளும் எமக்கு உதாரணங்களாக வேண்டாமா? நாம் கரங்களால் தடுப்பதற்கு முன் தீமைகளை நாவினால் தடுப்பதற்கும் மனதால் வெறுப்பதற்கும் முன்வர வேண்டாமா?

மதுவிலும், மாதிலும், சினிமாவிலும் மேற்கத்தேயக் கலாச்சாரத்திலும் தம்மைக் குழிதோண்டிப் புதைத்து தமது இலக்கை மறந்து வாழ்ந்து கொண்டும் தமது உள்ளங்களை இறுகச் செய்யுமிந்த சகோதரனுக்கு பாலஸ்தீனத்தையும், காஷ்மீரையும், பொஸ்னியாவையும் செச்னியாவையும் கண்ட பிறகாவது எமது நாட்டின் நிலையும் இவ்வாறு மாறும் காலம் தூரமில்லை என்பதை உணரமாட்டாதா? அவர்களது கல்நெஞ்சங்கள் இனியாவது கரைந்திடுமா?

## இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மொறட்டுவை

தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சிநெறிக்கு 2001ம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**ஆகக் குறைந்த தகைமைகள்:**

01) 2002-10-31ம் திகதி அன்று 16 வயதுக்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

02) சிங்கள / தமிழ் மொழி (போதனா மொழி) கணிதம் உட்பட 6 பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். முதல் தடவையில் 5 பாடங்கள் கட்டாயமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2001-06-07 ம் திகதி அல்லது அதற்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்**
**582, காலி வீதி**
**கல்கிசை**
**தொலைபேசி: 01–605535**

மேலதிக விபரங்களுக்கு 2001-04-01 ஆம் திகதி தினகரன் வார மஞ்சரியை பார்க்கவும்.

# ஜம்இய்யா

### ருகூன் ஒன்றுகூடல்

இந்த நிர்வாக ஆண்டுக்கான 2 வது ருகூன் ஒன்றுகூடல் இன்ஷா அல்லாஹ் இம்மாதம் 13,14,15ம் திகதிகளில் ஹெம்மாதகம தாருல் அய்த்தாமில் நடைபெறவுள்ளது.

### ஜம்இய்யாவின் செய்தித் திரட்டு

நீண்டகால இடைவெளிக்குப் பிறகு ஜம்இய்யாவின் உத்தியோக பூர்வ செய்தி ஏடான ஜம்இய்யா செய்தித் திரட்டு இன்ஷா அல்லாஹ் இம்மாதம் முதல் தொடர்ந்து வெளி வரும் என்பதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

# களச் செய்திகள்

### மேற்குப் பிராந்திய இணைப் பொறுப்பாளர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சி

திகதி : 21-04-2001 சனி அஸர் முதல்
: 22-04-2001 ஞாயிறு ளுஹர் வரை

இடம் : 204/1, தாருல் அர்க்கம்
தெமடகொட வீதி கொழும்பு - 09

மேற்குப் பிராந்திய இணைப் பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

### அஸாபீர் முத்துக்கள் நூல் வெளியீடு

கல்முனை ஜம்இய்யாவின் அஸாபீர் அமைப்பின் ஊழியரான முஜாஹித் முபாரக் அவர்களால் எழுதப்பட்ட அஸாபீர் முத்துக்கள் என்ற நூல் வெளியீடும் கலை நிகழ்ச்சிகளும் கடந்த மார்ச் 02ம் திகதி கல்முனை ஜம்இய்யா அலுவலகத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக மௌலவி நபார் (ஹாமி) அவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் பெற்றோர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். மேற்படி நூலினைப் பெற விரும்புவோர் கல்முனை ஜம்இய்யவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 067- 22106, 067- 21265

### வெலம்பொடையில் Jam'iyyah Academy

வெலம்பொடை ஜம்இய்யாவினால் சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட Jam'iyyah Academy பற்றிய செய்தியை அல்ஹஸனாத் தாங்கி வந்ததனை வாசகர்கள் மறந்திருக்க மாட்டீர்கள். தற்போது Academy இற்கான புதிய கட்டிடம் ஒன்றையும் ஜம்இய்யா கட்டிமுடித்துவிட்ட பெருமகிழ்ச்சியில் வெலம்பொடை ஜம்இய்யா சென்ற 31-03-2001 சனிக்கிழமை அன்று Academy யின் புதுக் கட்டிடத் திறப்பு விழாவையும் ஒரு வருடநிறைவு விழாவையும் வெகுவிமரிசையாக நடாத்தியது. அல்ஹம்து லில்லாஹ். இந்நிகழ்ச்சியில் பங்குபற்றிய ஊரின் முக்கிய பிரமுகர்கள் ஜம்இய்யாவின் செயற்பாடுகளைப் பாராட்டிப் பேசியதுடன் Academy இன் வகுப்புக்கள் காரணமாக சென்றவருட O/L பரீட்சைப் பெறுபேறுகளில் என்றுமில்லாதவாறு அதிகளவு மாணவர்கள் சித்தியடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் ''ஊரின் எல்லா வளர்ச்சிக்கும் ஜம்இய்யாவின் அவசியம்'' என்ற கருப்பொருளில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

# சிறுவர் பூங்கா

## தம்பி தங்கைகளே ஹிஜ்ரத் என்றால் என்ன?

இம்மாதம் இஸ்லாமிய வருடத்தின் முதல் மாதமாகும். இந்த மாதத்தில் மஸ்ஜிதுகளிலும், பத்திரிகைகளிலும், வானொலியிலும் 'ஹிஜ்ரத்' என்ற வார்த்தையை நாம் அடிக்கடி செவியுறுகிறோம். அதேபோல் 'ஹிஜ்ரி ஆண்டு' என்றும் பெரியவர்கள் சொல்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். 'ஹிஜ்ரத்' பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்தை இங்கே பார்ப்போம்.

நபிகளார் (ﷺ) அவர்கள் இஸ்லாத்தை உலகிற்கு அறிமுகம் செய்து அதன்பால் மக்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள். இதனை மக்காவில் வாழ்ந்த நிராகரிப்பாளர்கள் எதிர்த்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களையும், நபிகளாரையும் துன்புறுத்தினார்கள். கஃபாவில் நபிகளார் தொழுது கொண்டிருந்தபோது அழுகிய ஒட்டகக் குடலை அவர்களது புனித மேனியின் மீது போட்டார்கள்; அவ்வாறே, பிலால் (ரழி) அவர்களது நெஞ்சின் மீது பாறாங்கல்லை வைத்து சுடுமணலில் வெறும் மேனியுடன் வீசினார்கள். அதுமட்டுமா! யாஸீர் (ரழி) அவர்களைக் கொலைசெய்தார்கள். இவ்வாறு ஆரம்பித்த குறைஷிக் காபிர்களது கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கியன. இறுதியில் நபிகளாரையும் முஸ்லிம் களையும் ஊரைவிட்டும் ஒதுக்கி வைத்தனர்; உண்பதற்கு உணவு வழங்குவதைத் தடுத்தனர்; வியாபாரத்தை நிறுத்தினர். இவ்வாறு சொல்லொணாத் துன்பங்களுக்கு உட்பட்ட மக்களை மதீனத்து மக்கள் அன்புடன் வரவேற்கக் காத்திருந்தனர். அல்லாஹ்வின் அனுமதியோடு நபிகளார் இந்த முஸ்லிம்களை மதீனத்து நகர் நோக்கி அனுப்பி வைத்தார்கள். இறுதியில் வெஞ்சத்தின் உச்சத்திற்கே சென்றுவிட்ட காபிர்கள் நபிகளாரைக் கொல்லத் தீர்மானித்தார்கள். இதனை அல்லாஹ் நபிகளாருக்கு அறிவித்து விட்டான். அதன்படி நபிகளார் மக்காவிலிருந்து இஸ்லாத்தை வாழவைப்பதற்காக மதீனா நோக்கி தன் நண்பர் அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களோடு பயணப்பட்டார்கள்.

மக்காவிலிருந்து சுமார் 300மைல் தொலைவிலுள்ள மதீனாவை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்த விடயம் காபிர்களின் காதுக்கு எட்டிவிட்டது. நபிகளாருக்கும் இறைவன் இதனை அறிவித்திருந்தான். எனவே வழியில் இருந்த 'தவ்ர்' என்னும் குகையில் அடைக்கலம் புகுந்தனர். அல்லாஹ் அற்பமான சிலந்திவலை, புறா என்பவற்றைக் கொண்டு நபிகளாரை காபிர்களின் கண்களிலிருந்து பாதுகாத்தான். காபிர்களின் நடமாட்டம் குறைந்ததன் பின்னர் நபிகளார் மதீனா நோக்கிப் பயணித்தார்கள். இந்தப் பயணம் தான் 'ஹிஜ்ரத்' என வழங்கப்படுகிறது. இந்த நிகழ்விலிருந்துதான் முஸ்லிம்களின் ஆண்டுக் கணிப்பும் இடம்பெறுகிறது. எனவேதான், முஸ்லிம்கள் தமது ஆண்டை 'ஹிஜ்ரி ஆண்டு' என அழைக்கிறார்கள். ஹிஜ்ரி ஆண்டானது 'முஹர்ரம்' மாதத்தில் தொடங்கி 'துல்ஹஜ்' மாதத்திலே முடிவடையும் 12 மாதங்களைக் கொண்டது. இந்த மாதத்துடன் ஆரம்பமாகி இருப்பது ஹிஜ்ரி 1422ம் ஆண்டாகும்.

தம்பி தங்கைகளே! உங்களுக்கு ஹிஜ்ரி ஆண்டின் 12 மாதங்களினதும் பெயர்களைத் தெரியுமா?

## சிந்தனை முத்துக்கள்

**மூன்றில்லாதவருக்கு மூன்றில்லை**

ஒழுக்கமில்லாதவருக்கு கல்வியில்லை
பொறுமையில்லாதவருக்கு மார்க்கமில்லை
பேணுதல் இல்லாதவருக்கு அல்லாஹ்வின் நெருக்கமில்லை.

-ஹஸன் பஸரீ (ரஹ்)-

**நோயும் மருந்தும்**

கொடையாளியின் உணவு மருந்தாகும்
கஞ்சனின் உணவு நோயாகும்

-இப்னு உமர் (ரழி)-

**இருளும் ஒளியும்**

உலகைப் பற்றிய கவலை இதயத்தின் இருள்
மறுமை பற்றிய கவலை மனதின் ஒளி

-உஸ்மான் (ரழி)-

**தேடப்படும் இருவர்**

மார்க்க அறிவைத் தேடுவதில் ஈடுபட்டிருப்பவரை சுவனம் தேடுகிறது.
பாவத்தில் ஈடுபட்டிருப்பவரை நரகம் தேடிக் கொண்டிருக்கிறது

-அலி (ரழி)-

**நரகம் தொடாத கண்கள்**

அல்லாஹ்வின் அச்சத்தால் அழுத கண்
அல்லாஹ்வின் பாதையில் விழித்திருந்த கண்

-நபிமொழி-

**பாதியும் மீதியும்**

மனிதர்களிடம் அழகிய பண்புடன் பழகுதல் அறிவில் பாதியாகும்
அழகிய கேள்வி கல்வியின் பாதியாகும்
குடும்பத்தில் அழகிய நிர்வாகம் வாழ்வின் பாதியாகும்

-உமர் (ரழி)-

**சுவனம் செல்ல முடியாதவர்கள்**

சதி மோசக்காரன்
கஞ்சன்
செய்த தருமத்தைச் சொல்லிக் காட்டுபவன்

-அபூபக்கர் (ரழி)-

**சிறுவர் கட்டுரைப் போட்டி**

**முடிவு திகதி: 31.05.2001**

## நல்ல வார்த்தைகள்

**பொருளாசை**
தண்ணீரானது செடியை முளைக்கச் செய்வது போல பொருள் ஆசை நயவஞ்சகத்தை வளர்த்து விடும்.

**யார் திருடன்?**
வாங்கும் கடனை திருப்பிக் கொடுக்க முடியாதவன் திருடன் ஆகிறான்.

**நண்பர்கள்**
தீயோருடன் இருப்பதைவிட தனிமையில் இருப்பது சிறந்தது; தனிமையில் இருப்பதை விட நல்லவர்களுடன் இருப்பது நன்று.

உள்ளத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு உதட்டில் ஒன்று வைத்துப் பேசும் நயவஞ்சகர்களை நண்பராக்கிக் கொள்ளாதீர்கள். நல்லொழுக்கமுடையோரை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்.

முகமலர்ச்சியோடு இருப்பவனையும், இன்மொழிகளைப் பேசுபவனையம் நண்பனாக்கிக் கொள்ளுங்கள்.

**உயர்ந்தவர்**
பிறப்பால் ஒருவர் மற்றவரை விட உயர்ந்தவரல்லர்; ஒழுக்கத்தில் சிறந்தவரே உயர்ந்தவர்.

**பேராசை**
பேராசை கொண்ட மனிதனின் வயிற்றை மண்ணால்தான் நிரப்பலாம்.

**தீமை**
தீமை செய்யத் தூண்டுபவன் தீமை செய்தவன் போலாவான்.

**தொகுப்பு:**
பாதிமா நஸ்மிலா,
மாவனல்லை.

# சிறுவர் பூங்கா

## குறுக்கெழுத்துப் போட்டி-09

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 வெ | 02 | 03 | 04 | 05 | | 07 | 08 |
| 09 | | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | | 20 | 21 | | 23 | 24 |
| 25 | 26 | 27 த | 28 | 29 | | 31 தி | 32 |
| 33 | 34 த | 35 | | | 38 ன் | 39 | 40 |
| | 42 | 43 | 44 உ | 45 | 46 | 47 | |
| 49 | 50 | | 52 | 53 | | 55 | 56 |
| 57 | | 59 | 60 | 61 தா | 62 | 63 | 64 |

**இடமிருந்து வலம்**
1. ஆறாத கோபம்
7. நாற்பெரும் கலீபாக்களுள் ஒருவர் (மாறியுள்ளது)
13. மென்மையான சிரிப்பு (குழம்பி)
25. அறிவாளி எனலாம்.
31. ஹிஜாபை தமிழில் இப்படியும் கூறலாம்
39. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓர் ஊர் (குழம்பியுள்ளது)
42. சமையலோடு தொடர்புடைய ஒரு கருவி. (குழம்பியுள்ளது)
44. இஸ்லாமிய வரலாற்றில் ஆட்சிபுரிந்த ஒரு வம்சத்தினர்
49. இறப்பு
55. ஒரு ஸஹாபியின் பெயர் (மாறியுள்ளது)
59. அதிக பொறுப்புக்களை சுமப்பவர்

**மேலிருந்து கீழ**
1. நூறு நாள் கொண்டாட்டம்
3. இதை அலங்கரித்துக் கொள்வதில் பலருக்குப் பிரியம்
4. திருட்டு என்று பொருள்படும். (குழம்பியுள்ளது)
7. சுக்கு மிளகு ....... (குழம்பியுள்ளது)
8. ஹதீஸ் துறைக்கு பங்களிப்பு செய்த பிரபலமான ஒரு ஸஹாபி
18. ஆணை என்பதன் ஒத்த கருத்து
27. ஓர் இசைக் கருவி
39 . இஸ்லாமிய சட்டக் கலைகளுள் ஒன்று
44. வாய்மை
45. மைதானம் என்பதன் அரபுச் சொல் (குழம்பியுள்ளது)
49. இனம்
56. Switch என்பதன் தமிழ்ச் சொல்

## குறுக்கெழுத்துப் போட்டி-08 முடிவுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 அ | 02 ப | 03 ய | 04 ம் | | 06 ம | 07 ஸீ | 08 வற் |
| 09 ஹ | 10 ஜ் | 11 ஜ | 12 து | 13 ல் | 14 வ | 15 தா | |
| 17 து | 18 ர் | 19 ரா | | | | 23 ஹா | 24 ர் |
| 25 ன் | | 27 ம் | 28 ப | 29 மி | 30 ர் | | 32 த் |
| | 34 ம் | 35 க | | 37 ஸ் | 38 தெள | 39 ர் | 40 பி |
| 41 ம் | 42 ப | 43 அ | 44 கா | 45 தீ | | 47 க | 48 ல் |
| 49 லி | 50 க | | 52 க | 53 ன் | 53 னி | 55 ப | 56 து |
| 57 ஆ | 58 ப் | 59 கா | 60 னி | 61 ஸ் | 62 தா | 63 ன் | 64 ஈ |

## பாராட்டுக்கள்

குறுக்கெழுத்துப் போட்டி - 8 ன் முதற் பரிசான கிராஅத் ஒலிப்பதிவு நாடாவை பரிசாகப் பெறுபவர்:

**U. ருபினா பேகம்**
**ஆண்டு - 7**
**நாரவில மத்திய கல்லூரி**
**நாரவில**
**நாத்தாண்டிய**

ஏப்ரல் மாத அல்ஹஸனாத்தைப் பரிசாகப் பெறும் 10 தம்பி தங்கைகளின் விபரம் 51ம் பக்கத்தில்

குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடை அனுப்புவோர் தவறாது தாம் கற்கும் பாடசாலையையும், வகுப்பையும் குறிப்பிட மறவாதீர்கள்.

**குறுக்கெழுத்துப் போட்டி 9**
விடைகள் வந்துசேர வேண்டிய இறுதித் திகதி : 08.05.2001

# விஞ்ஞானம்

# கருவில் உள்ளது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? -2

மனிதனில் பால் நிர்ணயம் மூன்று கட்டங்களில் நடைபெறுகின்றது.

1 நிறமூர்த்தங்களில் பால் நிர்ணயம்
2 அக ஜனன உறுப்புக்களின் உருவாக்கம்
3 புற ஜனன உறுப்புக்களின் உருவாக்கம்

ஒரு குழந்தை இனம்பெருக்கும் ஆற்றுலுடைய வளமான எச்சமாக உருவாக வேண்டுமானால் அது இம் மூன்று கட்டங்களையும் முறையாகவும் சீராகவும் கடந்தாக வேண்டும்.


**நிறமூர்த்தங்களில் பால் நிர்ணயம்**

ஒவ்வொரு மனிதத் தனியனும் தனது உடலிலுள்ள ஒவ்வொரு கலத்திலும் 23 சோடி அமைப்பொத்த நிறமூர்த்தங்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் 22 சோடிகள் தன்னிறமூர்த்தங்கள் (Autosomes) எனப்படுகின்றன. இவை தனியனின் இயல்புகளைத் தீர்மானிக்கின்றன. எஞ்சிய ஒரு சோடிபால் நிறமூர்த்தங்கள் (Sex Chromosomes) எனப்படுகின்றன. இவையே பால் இயல்புகளைத் தீர்மானிக்கின்றன. பால் நிறமூர்த்தங்கள் X,Y எனும் எழுத்துக்களால் குறிக்கப்படுகின்றன. ஒரு ஆணில் பால்நிறமூர்த்தச் சோடியானது ஒரு X நிறமூர்த்தத்தையும் ஒரு Y நிறமூர்த்தத்தையும் கொண்டிருக்கும் அதேவேளை பெண்ணில் சோடியின் இரு பால் நிறமூர்த்தங்களும் X ஆகவே காணப்படும்.

இனப்பெருக்கத்திற்காக


ஆண் : XY பெண் : XX

பெற்றோரில் புணரிகள் உருவாகும் போது சோடியாகக் காணப்படும் அனைத்து நிறமூர்த்தங்களும் பிரிக்கப்பட்டு புணரிகளுக்குள் தனிப்படுத்தப்படுகின்றன. புணரிகள் ஒவ்வொன்றும் 22 தன்னிறமூர்த்தங்களையும் ஒரு பால் நிறமூர்த்தமுமாக தலா 23 நிறமூர்த்தங்களைக் கொண்டிருக்கும்.




ஆணில் உருவாகும் புணரிகள் 50% ஆனவை X நிறமூர்த்தத்தையும் 50% ஆனவை Y நிறமூர்த்தத்தையும் கொண்டிருக்கும். அதேவேளை பெண்ணில் உருவாகும் அனைத்துப் புணரிகளும் X நிறமூர்த்தத்தையே கொண்டிருப்பதனைக் கவனியுங்கள்.

கருக்கட்டலின்போது ஆணின் X நிறமூர்த்தப் புணரிகள் பெண்ணின் புணரியுடன் இணையுமானால் உருவாகும் நுகம் இரு X நிறமூர்த்தங்களைப் பெற்று பெண்குழந்தையாகப் பால்நிர்ணயம் செய்யப்படுகின்றது. அதே வேளை ஆணின் Y நிறமூர்த்தப் புணரி பெண்புணரியுடன் இணையுமானால் உருவாகும் நுகம் XY நிறமூர்த்தங்களைப் பெற்று ஆண்குழந்தையாகப் பால்நிர்ணயம் செய்யப்படுகின்றது.




ஆகில் அஹமது

பெண்புணரியின் நிறமூர்த்த அமைப்பில் மாற்றம் இல்லை என்பதனையும் அதனுடன் இணைகின்ற ஆண்புணரியின் நிறமூர்த்த அமைப்பின் காரணமாகவே குழந்தை ஆணா அல்லது பெண்ணா எனத் தீர்மானிக்கப்படுகின்றது என்பதனையும் மேலே கூறிய விளக்கத்தின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

புனித அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது,

**மேலும் அவன்தான் சோடிகளான ஆணையும் பெண்ணையும் பாய்கிற துளியிலிருந்து அவனது திட்டத்தின் படி அமைத்தான்.**

**ஸூறாஹ் அந்நஜ்ம் 45,46**

குழந்தை ஒன்று உருவாவதற்கு ஆண், பெண் இருவரதும் பங்களிப்பும் இன்றியமையாததாகும். அனால் அக்குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதனைப் பாய்கின்ற துளியின் மூலமே தீர்மானிப்பதாக அல்லாஹ் மேற்படி வசனத்தில் கூறுகின்றான்.

**பாய்கின்ற துள**ி எனும் சொற பிரயோகத்தின் மூலம் பால் நிர்ணயத்தில் ஆண் தனியனின் முக்கியத்துவத்தையே அல்லாஹ் சுட்டிக்காட்டுகின்றான் என்பது வெளிப்படையானது.

மேலும் எந்தவொரு ஆணினாலும் தனது குழந்தையைத் தனது விருப்புக்கேற்ப ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ உருவாக்க முடியாது.

இங்கு ஆண் தனியன் ஒரு காரணி மட்டுமே. பால் நிர்ணயம் எனும் காரியத்திற்காக ஆணைக் காரணியாக, கர்த்தாவாகிய அல்லாஹ் பயன்படுத்துகின்றான் இதனையே **அவனது திட்டத்தின்படி அமைத்தான்** என அல்குர்ஆன் அழுத்தமாக வலியுறுத்துகின்றது.

அடுத்த இரண்டு கட்டங்களையும் இன் ஷா அல்லாஹ் அடுத்த இதழ்கள் சுமந்து வரும்.

# நிர்மாணப் பணியில் ஹிஜ்ரத்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களின் வரலாறு மனித வரலாற்றில் தன்னிகரில்லாத ஒரு மனிதனின் வரலாறாகும். அந்த வரலாற்றிலும் தன்னிகரற்ற ஒரு நிகழ்வுதான் ஹிஜ்ரத்.

'ஹிஜ்ரத்' என்பதன் பொருள் 'வெறுத்தல்' ஆகும். நபி (ﷺ) அவர்களும் அன்னாரது தோழர்களும் எதை வெறுத்தார்கள்?

உண்மையில் அவர்கள் மக்காவை வெறுத்திருக்க மாட்டார்கள்; அது அல்லாஹ்வின் ஆலயத்தை சுமந்திருக்கும் பூமி. அவர்கள் துன்பம் செய்யும் மக்களை வெறுத்திருக்க மாட்டார்கள்; ஏனெனில் துன்பம் தந்த 'தாஇப்' மக்களின் பிள்ளைகளாவது நாளை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடமிருந்தது.

சொத்து சுகங்களை வெறுத்திருக்கவும் மாட்டார்கள். ஏனெனில் ஹிஜ்ரத் சென்ற ஒரு தோழர் மக்காவில் இருக்கும் தனது சொத்துக்களை எடுத்துவர அனுமதி கேட்ட போது நபி (ﷺ) அவர்கள் அனுமதி வழங்கினார்கள்.

, துன்பங்களை வெறுத்திருக்கவும் மாட்டார்கள். ஏனெனில், 'தாஇப்' மக்கள் தந்த துன்பத்தை அல்லாஹ்விடம் முறையிடும்போது ''யா அல்லாஹ் நீ என் மீது கோபமற்றிருந்தால் இந்த மக்கள் தந்த துன்பத்தை நான் பொருட்படுத்தவே மாட்டேன்'' என்று துஆ செய்தார்கள். அப்படியானால் எதை வெறுத்தார்கள்?

இஸ்லாத்தினை வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்தும் ஒரு சூழல் மக்காவில் உருவாகவில்லை. அந்த உருவாக்கத்துக்கு தொடர்ந்தும் குறைஷித் தலைவர்கள் தடையாகவே இருந்து வந்தார்கள். ரஸுலுல்லாஹி (ﷺ) அவர்களின் சாத்வீகமான அணுகுமுறைகள் அத்தனையும் அந்தத் தலைவர்களிடம் தோற்றுப் போயின. அவர்களோடு போரிடுவதற்கான அனுமதியை அல்லாஹ் வழங்கியிருக்கவுமில்லை. எனவே அந்த மக்காவை விட்டு, தாஇபுக்கு போனார்கள். அண்ணலார் (ﷺ) அவர்கள் மக்காவில் உருவாக்க முடியாமல் போன சூழலை தாஇப் மக்கள் உருவாக்கித் தரலாம் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருந்தது. ஆனால் அந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

அண்ணலார் (ﷺ) அவர்கள் எதிர்பார்த்த சூழல் இதுதான்- அல்லாஹ்வுடைய தீனை இந்தப் பூமியில் நிலைநாட்டுவதற்கு உதவியாகவும், பக்கபலமாகவும், நிழல் போல் தன்னைத் தொடரும் ஒரு (குழுவல்ல;) சமூகம் தேவை. அவர்கள் தனக்கு முற்று முழுதாகக் கட்டுப்பட வேண்டும். தனது கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டும். இஸ்லாத்துக்காக எதையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்க வேண்டும். தீனுல் இஸ்லாத்தின் தேவைகளை அவர்கள் தமது மனைவி பிள்ளைகளின் தேவைகளைப் போல, அல்லது அவற்றை விட மேலாகக் கருத வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களின் இந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் சூழல் மக்காவில் உருவாகவில்லை. தாஇபிலும் கிடைக்கவில்லை. ஆனால், இந்த சூழல் மதீனாவில் மெல்ல மெல்ல உதயமாகியது. நபி (ﷺ) அவர்கள் மதீனாவுக்கு பயணமாகியது அங்கு இந்த சூழல் உருவாகிய பின்புதான். மதீனாவில் இந்த சூழல் உருவாக ஏறத்தாழ மூன்று வருடங்கள் எடுத்தன.

அங்கு இந்த சூழல் உருவாகிவிட்ட ஒரே காரணத்தால் நபிகளார் மதீனாவுக்குப் போய்விடவுமில்லை. ஏற்கனவே கூறப்பட்ட நபிகளாரின் எதிர்ப்பார்ப்புகளை தவறாது நிறைவேற்றுவோம் என்று மதீனாவாசிகள் அண்ணலாருக்கு உறுதிப் பிரமாணம் செய்து கொடுத்த பின்னர்தான் நபி (ﷺ) அவர்கள் மதீனாவுக்குப் போகச் சம்மதித்தார்கள். அந்த உறுதிப்பிரமாணம்தான் வரலாற்றில் (பைஅதுல் அகபா) 'அகபா உடன்படிக்கை' எனப்படுகிறது. நபிகளாரின் இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவோம் என்று முதன் முதலில் 'பைஅத்' செய்த சமூகம் மதீனா சமூகமே! அதனால் 'அன்சார்கள்' என்ற அழியாப் பெயரை அவர்கள் வரலாற்றில் தம்வசமாக்கிக் கொண்டார்கள்.

இங்கு ஒரு கேள்வி எழுவதற்கு இடமிருக்கிறது. மக்காவாசிகள் அதாவது, அபூபக்ர் (رضي الله عنه), உமர் (رضي الله عنه) போன்ற உத்தமர்கள் நபிகளாரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தயாராக இருக்கவில்லையா?

உண்மையில் மதீனாவாசிகளை விட இவர்கள் எந்தவகையிலும் குறைந்தவர்கள் அல்லர். அவர்களைவிட இவர்கள் உயர்ந்தவர்கள் என்று கூறினால் அதனையும் மறுப்பதற்கில்லை. ஏனெனில், இஸ்லாத்தின் முதிர்ச்சி அவர்களை விட இவர்களுக்கே இருந்திருக்கிறது.

என்றாலும், மக்கா முஸ்லிம்கள் ரஸுலுல்லாஹ் எதிர்பார்த்த ஒரு 'சமூகமாக' இருக்கவில்லை; அவர்கள் ஆங்காங்கே சிதறி வாழும் தனிமனிதர்களைக் கொண்ட ஒரு 'குழுவாக'வே இருந்திருக்கிறார்கள். அன்றைய சமூக அமைப்பில் இத்தகைய குழுக்களுக்கு அதிகாரமில்லை. சமூகம் சமூகமாக வாழ்ந்த கோத்திரங்களுக்கே அதிகாரம் இருந்தது. எனவே அதிகாரம் உள்ளவர்களிடம் கேட்பதை, ரஸுலுல்லாஹ் அதிகாரம் இல்லாதவர்களிடம் கேட்கவில்லை. மக்காவில் அதிகாரம் இருந்த குறைஷிக் கோத்திரம் இறுதிவரை ரஸுலுல்லாஹ்வுக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

**- அபூ அம்மார் -**

இங்கு தாஇகள் ரஸுலுல்லாஹ்விடமிருந்து ஒரு முன்மாதிரியைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. சிதறிய தனிமனிதர்களை ஒருங்கிணைத்து ஒரு 'குழுவை' அமைப்பதனால் இஸ்லாத்தின் முற்றுமுழுதான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிவிட முடியாது. 'சமூகத்தை' உருவாக்குவதனால் மட்டுமே கூடுதலான இஸ்லாத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும். எனவே 'குழு உருவாக்கத்தை' நோக்கமாகக் கொண்டு தாஇகள் செயல்படலாகாது. 'சமூக உருவாக்கமே' தாஇகளின் செயல்பாட்டுக்கு அடிப்படையாக இருக்க வேண்டும்.

இந்த வகையில் தாஇகள் சமூகத்தை உடைக்கும் முயற்சிகளில் இறங்கலாகாது. அது இஸ்லாத்தின் எதிர்பார்ப்புகளை சிதைக்கும் ஒரு முயற்சியாகும். 'ஊரை இரண்டாக்காதீர்கள்' என்று நாம் கூறும் போது அதனைப் பலர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். இது, 'ஊரோடு ஒத்தோடுவதற்கான அழைப்பு' என்று தவறாக அதற்கு விளக்கம் கற்பிக்க முனைகிறார்கள். இந்த தவறான விளக்கம் ரஸுலுல்லாஹ்வின் ஒரு சுன்னாவைப் பரிகாசமாக்கி விடுகிறது.

ஹிஜ்ரத், நபி (ﷺ) அவர்களின் எதிர்பார்ப்புகளை முற்று முழுதாக நிறைவேற்றும் ஒரு 'சமூக சூழலை' அன்னாருக்கு பெற்றுக் கொடுத்தது. மதீனா நபிகளாருக்கு ஏற்படுத்திக் கொடுத்த அந்த சமூக சூழலை மக்காவில் முயன்றும் பெற முடியாமல் போனதே மக்காவை நபிகளார் துறக்கக் காரணம். இந்த வகையில் மக்காவை அவர்கள் வெறுக்கவில்லை; மக்காவின் மனிதர்களையும் அவர்கள் வெறுக்கவில்லை. ஆனால் மக்காவின் சூழலை வெறுத்தார்கள் என்று கூறலாம். அதுவே ஹிஜ்ரத்!

ஹிஜ்ரத் இங்கு மற்றுமொரு சுன்னாவை எமக்குக் கற்றுத் தருகிறது. இஸ்லாத்தை செயல்படுத்த முடியாத ஒரு சூழல் என்பதன் பொருள், சமூகம் ஒன்று சேர்ந்து இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்காத சூழல் என்பதாகும். நபிகளாரின் வாழ்வில் மக்கா இதற்கு உதாரணமாகத் திகழ்கிறது.

இத்தகையதொரு நிலை இன்றைய தாஇகளுக்கு ஏற்பட்டால் அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதற்கு விடைதேடி அவர்கள் எங்கும் அலைய வேண்டியதில்லை. நபிகளாரின் சுன்னா வழி காட்டுகிறது. அதனைப் பின்பற்றலாம்.

உதாரணத்திற்கு ஒரு கிராமம் இஸ்லாத்தின் எழுச்சிக்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கிறது என்று வைத்துக் கொள்வோம். தாஇகள் என்ன செய்ய வேண்டும்? மக்காவில் நபிகளார் என்ன செய்தார்களோ அதனைச் செய்யலாம்.

நபிகளார் மக்காவில் இஸ்லாத்தின் அடிப்படைகளைப் போதித்தார்கள். எதிர்ப்பு வந்தது. அழகிய பொறுமையைக் கைக் கொண்டார்கள். (அழகிய பொறுமைக்கும் ஆற்றாத பொறுமைக்கும் இடையில் வித்தியாசமிருக்கிறது.) தளர்ந்துவிடவில்லை. தலைவர்களை சந்தித்தார்கள்; பாமரர்களை சந்தித்தார்கள். தம்மை ஏற்று விசுவாசம் கொண்டவர்களுக்கு பயிற்சிகளை வழங்கினார்கள்; துன்பம் செய்வோருக்கு நல்லன செய்தார்கள். அவர்களைத் தூற்றவில்லை; துன்பம் செய்யவுமில்லை; சாபமிடவில்லை; சாடவுமில்லை; அடித்து உடைத்து நொறுக்கவுமில்லை. சிலைகள் மூடியிருந்த க..பாவை அவர்கள் பகிஷ்கரிக்கவுமில்லை; ஈமான் கொண்டவர்களை அவர்களது வீடுகளிலிருந்து பிரித்து விடவுமில்லை. 'அல் மவத்தது பில்குர்பா' எனக் குர்ஆன் கூறும் உறவினர்களின் அன்பை அவர்கள் வெட்டிவிடவுமில்லை. தன்னை ஏற்று விசவாசம் கொளளாத தனது சிறிய தந்தை அபூதாலிபின் பாதுகாப்பை அவர்கள் ஏற்றிருந்தார்கள். 'ஷிஅபு அபீ தாலிப்' எனும் பள்ளத்தாக்கில் மூன்று வருடங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டபோது அதனை எதிர்த்தும் போராடவில்லை. ஓரிரவிலும், ஒரு பகலிலும் மாற்றத்தைக் கொண்டுவர அவர்கள் எத்தனிக்கவுமில்லை.

அண்ணலாரின் இந்தப் போக்கின் ஒவ்வொரு எட்டிலும் ஒரு தாஇக்குப் படிப்பினை இருக்கிறது. அதுவும் அண்ணலார் காபிர்களுக்கு மத்தியில் இந்தப் போக்கைக் கடைப்பிடித்தார்கள். இன்றைய தாஇகள் முஸ்லிம்களுக்கு மத்தியில் இந்தப் போக்கை கடைப்பிடிக்க முடியாதா?

அண்ணலாரின் இந்தப் போக்கு மக்கா இரத்தக்கறை படியாமல் பாதுகாத்தது. மக்காவில் ஒன்றுக்கொன்று எதிராக இரண்டு குழுக்கள் மோதும் நிலை இதனால் தவிர்க்கப்பட்டது. இஸ்லாத்தை எதிர்த்து நின்றவர்களின் உள்ளங்களில் தீராத ஒரு பகைமை வளர்ந்து விடாமல் நபிகளாரின் இந்தப் போக்கு அணைபோட்டது. ஒருநாள் அவர்களோடு ஒன்றிணையலாம் என்ற நம்பிக்கைக்கு இந்தப் போக்கே உரம் ஊட்டியது.

நபிகளாரின் இந்த சுன்னாவை இன்றைய தாஇகள் ஏன் விளங்கிக் கொள்ளாதிருக்கிறார்கள்? என்பது புரியவில்லை. விளங்கிக் கொள்ளாதிருந்தாலும் பரவாயில்லை, 'ஊரோடு ஒத்தோடுதல்' என்று இதற்குத் தவறான விளக்கம் தராதிருந்தால்!

நபி (ﷺ) அவர்கள் இந்தப் போக்கை பதின்மூன்று வருடங்களாக மக்காவில் பரீட்சித்தார்கள்; மாற்றம் ஏற்படவில்லை. அதற்காக அவர்கள் தனது போக்கை மாற்றவுமில்லை. செய்த மாற்றம் என்னவென்றால் மாற்றம் ஏற்பட்டிருந்த ஒரு இடத்தை (மதீனாவை) நோக்கித் தன்னை மாற்றிக் கொண்டார்கள். அதுதான் ஹிஜ்ரத்!

ஹிஜ்ரத் மற்றுமொரு குழுவின் தலையிடியை நபிகளாருக்குத் தந்தது. அவர்கள் தாம் யூதர்கள். மக்காவில் குறைஷிகளோடு நபிகளார் எந்த அணுகுமுறையைக் கையாண்டார்களோ அதே அணுகு முறையை யூதர்களுடனும் கையாண்டார்கள்- சற்று வித்தியாசமாக! அழைத்துப் பேச்சுவார்த்தை நடாத்தி உடன்படிக்கை எழுதி, 'நாங்களும் நீங்களும் சமாதானமாக வாழ்வோம்' என்றார்கள். ஆனால் யூதர்கள் எப்போதாவது சமாதானத்தை விரும்பினார்களா? அவர்கள் நயவஞ்சகமாக சமாதானத்தை முறித்துக் கொண்டார்கள். எனவே மீண்டும் அவர்களோடு சற்று வித்தியாசமாக நடக்க வேண்டி ஏற்பட்டது; நடவடிக்கை எடுத்தார்கள்.

மக்காவில் உடன்படிக்கையில்லை; எனவே நடவடிக்கையுமில்லை. இங்கே உடன்படிக்கை இருந்ததனால் நடவடிக்கையும் இருந்தது. இந்த அணுகுமுறை உலகத்தில் அன்றிலிருந்து இன்றுவரை அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. எனவே இந்த அணுகுமுறை மதீனாவில் ஒரு பிளவை ஏற்படுத்தவில்லை.

மக்காவில் சாத்வீகத்தால் செய்த அதே வேலையை அண்ணலார் மதீனாவில் சட்டத்தால் செய்தார்கள். இந்த அணுகு முறை இஸ்லாத்தை நிர்மாணிக்கும் முயற்சியின் அத்திவாரமாகும்; மட்டுமல்ல, ரஸுலுல்லாஹ் ஈட்டிய வெற்றிகளின் இரகசியமும் இதுவாகத்தானிருக்கிறது.

தாஇகளே! நபிகளாரின் சுன்னாவை பின்பற்ற வேண்டும் என்று ஓங்கி ஒலிக்கிறோமே, மக்காவையும் மதீனாவையும் முன்மாதிரியாக வைத்து நபிகளாரின் சுன்னாவை கிராமங்கள் தோறும் பின்பற்ற எங்களால் முடியாதா?


# விற்பனை முகவர்கள் தேவை

உங்கள் இஸ்லாமிய குடும்ப இதழான அல்ஹஸனாத்தின் விற்பனை முகவராகி இஸ்லாமிய சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் அல்லாஹ்வின் நற்கூலியையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:

CIRCULATION MANAGER,
'ALHASANATH,'
77, DEMATAGODA ROAD,
COLOMBO 00900 (TP : 687091)

**கேள்வி - பதில் :**

# ஜமாஅதே இஸ்லாமியைப் பின்பற்றுவோர் சுவனம் செல்வார்களா?

**சென்ற இதழ் கேள்வி-பதிலில் கூட்டு துஆ தொடர்பாக பதிலளிக்கும் போது, "இஸ்லாத்தில் இருப்பதை இல்லாமல் செய்யவோ இல்லாததை இருப்பதாகக் கூறவோ எந்த முஸ்லிமுக்கும் அதிகாரம் இல்லை" என்று கூறி கூட்டாக நபியவர்கள் துஆ ஓதவில்லை என்பதையும் ஏற்றுக் கொண்டுவிட்டு, 'மழுப்பலாகப் பதில் அளித்திருக்கிறீர்களே' என ஆதங்கப்பட்டிருக்கிறார் மருதமுனை ஐ.எல்.எம். பாருக்.**

**விளக்கம்:**

எனது பதிலை நீங்கள் புரிந்துகொள்ள முடியாமல் போனதற்கு நான் கவலைப் படவில்லை. ஒரு முஸ்லிம் 'தீமைக்கு அஞ்ச வேண்டும்' என்று நான் கூறியிருப் பதை நீங்கள் 'சமூகப் பிரச்சினைக்கு அஞ்ச வேண்டும்' என்று விளங்கியிருக்கிறீர்கள். இரண்டுக்குமிடையில் பாரிய வேறுபாடு இருப்பதைப் புரிந்து கொள்ள உங்களால் முடியாது போயிருக்கலாம்.

சகோதரா! சமூகத்தில் சிலர், நாங்கள் உங்களைச் சாட வேண்டும் எனக் கருது கிறார்கள். செய்யாது போனால் அதனை 'மழுப்பல்' என்கிறார்கள். அதுபோல வெட்டு ஒன்று; துண்டு இரண்டாக நாம் பதில் கூறி வேறு சிலரை வாயடைக்கப் பண்ண வேண்டும் என இன்னும் சிலர் எதிர்பார்க்கிறார்கள். செய்யாது போனால் அதுவும் 'மழும்பல்'

குர்ஆனும் ஹதீஸும் 23 வருட காலம் சிறிது சிறிதாக ஏன் இறக்கப்பட்டன? ரஸுலுல்லாஹ் படிமுறையான போக்கை தனது த.'.வத்தில் மேற்கொண்டதற்கு காரமணமென்ன? ஒரே வெட்டில் அவர்கள் சாதிக்க முடியாது என்று அல்லாஹ் கருதியிருந்தால் அது எங்களால் மட்டும் முடியுமா? என்பது போன்ற கேள்விகளுக்கு நீங்கள் பதில் தேடியதே இல்லையா? உங்களோடு எனக்கு வருத்தங்கள் கிடையாது. இஸ்லாம் அல்லாஹ்வுடைய தீன். நான் சொல்வதை நீங்கள் கேட்கத் தேவையில்லை. படித்துப் பாருங்கள். 'மழுப்பல்' என்ற பிரயோகம் உங்களது அறிவு வளர்ச்சிக்குத் தடைபோட்டுவிடக் கூடாதே என்பதுதான் எனது விருப்பம். அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக!

**கேள்வி:**

**ஜமாஅதே இஸ்லாமியைப் பின்பற்றுவோர் சுவனம் செல்வார்கள்தானே? அதற்கான ஆதாரம் என்ன?**

**கடயந்தளுவை பாரிஸ்**
**மதவாக்குளம், ஆண்டிகம**

**பதில்:**

கேள்வியைப் பார்த்தால், 'நான் ஜமாஅதே இஸ்லாமியில் இணைந்து கொள்ள விரும்புகிறேன்; எனக்கு சுவர்க்கம் கிடைக்குமல்லவா?' என்று கேட்பது போல் இருக்கிறது. ஆறுதலுக் காக ஆதாரத்தையும் கேட்பது போலிருக்கிறது.

பாரிஸ்..! உங்களது எண்ணம் எமக்குத் தெரியாது. வார்த்தையின் தொனிலேயே நாம் இவ்வாறு விளங் கிக் கொண்டோம். நீங்கள் ஜமாஅதே இஸ்லாமியில் இருந்தாலென்ன, வேறொரு இயக்கத்தில் இருந்தா லென்ன. உங்களது சுவன ஆசை நிறைவேற வல்ல நாயன் உங்களுக்கு அருள்புரிவானாக! சுவனத்திற்காக நீங்கள் பிரார்த்திக்கும் போதெல்லாம் உங்களோடு எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

பாரிஸ்...! நாங்கள் சுவனத்திற்கு உத்தரவாதமளிப்பவர்களல்ல; எங்களால் அதனை செய்ய முடியாது. என்னைப் பற்றிய தீர்ப்பு எப்படி இருக்குமோ என்று பயப்பட வேண்டிய ஒரு முஸ்லிம் இன்னொருவர் பற்றிய அல்லாஹ்வின் தீர்ப்பை எப்படி உத்தரவாதப்படுத்த முடியும்?

அண்ணலார் (ﷺ) அவர்கள் தனது அருமை மகள் பாதிமாவைப் பார்த் துக் கூறினார்கள். ''மகளே! உலகத் தில் உனக்கு என்னாலாக வேண்டிய வைகள் இருந்தால் நீ கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். எனினும் உனது மறுமை விவகாரங்களுக்கு நான் பொறுப்பல்ல.''

உண்மை இவ்வாறிருக்க, அசகாயத் துணிச்சலோடு 'எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்; உங்களுக்கு சுவனம் நிச்சயம்' என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். சுவர்க்க-நரகவாதி களின் பட்டியலை இவர்கள் மெல்லத் திருடிக் கொண்டார்களோ தெரியாது! நாங்கள்தான் பட்டியல் போடுபவர்கள் என்று நினைத்திருக் கிறார்களோ தெரியாது. அல்லாஹ் இவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

ஜமாஅதே இஸ்லாமி சுவனத்திற் காகச் செய்யும் வேலை அதுவல்ல; மாறாக... சுவனம் செல்ல விரும்பும் ஒரு மனிதன் இதைச் செய்தால் போதும் என்று அவனுக்கு அறிவுரை கூறி, இஸ்லாத்தின் ஒரு பகுதியை மறைத்து, ஒரு பகுதியைக் காட்டி அவனை ஏமாற்றி விடாமல் இஸ்லாத்தின் அனைத்துப் பக்கங் களையும் புரட்டிப் புரட்டிக் காட்ட முயற்சிக்கிறது.

நபிகளார் சென்ற பாதையின் ஓரிரு சுன்னாக்களை மட்டுமன்றி, அனைத்து சுன்னாக்களையும் காட்டிக் கொடுக்க முயற்சிக்கிறது. காட்டிக் கொடுப்பதோடு மட்டும் நின்று விடாமல், இஸ்லாமிய வாழ்க்கை முறையை எல்லாத்துறை யிலும் ஸ்தாபிக்கின்ற ஒரு பாரிய முயற்சிக்கு இந்த சமூகத்தை அழைக்கிறது. இது ஜமாஅதே இஸ்லாமியின் அழைப்பல்ல; இஸ்லாத்தின் அழைப்பு. இந்த அழைப புக்கு விடை தருவோரை சுவனத்திற் காக செயலாற்ற அறிவு, ஆன்மிக, களப் பயிற்சிகளை வழங்குகிறது.

நரகத்திற்கு ஒரு மனிதனை இட்டுச் செல்லும் மறைமுகமான, வெளிப்படையான அத்தனை அம்சங் களையும் காட்டிக் கொடுத்து அவை இல்லாத ஒரு சூழலையும் அது உருவாக்க முனைகிறது.

இந்த முனைப்புகளோடு எமது சுவனக் கனவை நனவாக்கி வைப்பா யாக என்று அல்லாஹ்வைப் பிரார்த் திக்குமாறு அது வலியுறுத்துகிறது.

அனைத்து முஸ்லிம்களுக்கும் இந்தப் பாக்கியம் கிடைக்க அல்லாஹ் கிருபை செய்வானாக!

உங்களது கேள்விகளுக்கு பதிலளிப்பவர் இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீர் அவர்கள்.

## பங்களாதேஷ்

### பங்களாதேஷ் ஜமாஅதே இஸ்லாமியின் செயலாளர் நாயகம் கைது

கடந்த 4ம் திகதி இரவு 12 மணியளவில் பெருந்தொகையான துப்பறியும் பிரிவு உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் அணியினர் ஆயுதங்கள் சகிதம் ஜமாஅத்தின் செயலாளர் நாயகமான அலி அஹ்ஸன் மொஹமட் முஜாஹித் அவர்களது வீட்டை சுற்றி வளைத்து சட்ட விரோதமான முறையில் அவர்களைக் கைது செய்துள்ளனர். கைது செய்ய வந்தவர்களுள் சிலர் தங்களது கழுத்தில் சங்கிலிகள் அணிந்து அவாமி லீக்கின் உறுப்பினர்கள் போல் காணப்பட்டதாக கூறப்படுகிறது. செயலாளர் அவர்கள் தனது கைதிற்கான உத்தரவை சமர்ப்பிக்கும்படி பல தடவைகள் வினவியும் பொலிஸார் அதனை செவிமடுக்கவில்லை. அவரைக் கைது செய்யும் நடவடிக்கையின் போது பொலிஸார் ஜமாஅத்தின் தலைமையகத்தையும், வாயிற் கதவுகளையும் சுற்றிவளைத்து காவல் புரிந்துள்ளனர்.

இவரது கைதைத் தொடர்ந்து ஜமாஅத்தின் மத்திய செயற் குழுவின் அவசரக்கூட்டம் ஜமாஅத்தின் அமீர் முதிஉர் ரஹ்மான் நிஸாமியின் தலைமையில் 5ம் திகதி கூடியுள்ளது. எதுவித நிபந்தனையுமின்றி அவரை விடுவிக்குமாறு ஜமாஅத் அரசைக் கேட்டுள்ளது.

அவாமி லீக்கின் ஆட்சியில் எதிர்க்கட்சிகளுக்கெதிரான நடவடிக்கைகள் தொடர்கின்றன. இதுபோன்ற கைதுகளையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கெதிராக சோடிக்கப்படும் ஆதார பூர்வமற்ற வழக்குகளையுமிட்டு பங்களாதேஷ் ஜமாஅதே இஸ்லாமி தனது எச்சரிக்கையை அரசிற்கு விடுத்துள்ளது.

ஜமாஅதே இஸ்லாமியின் செயலாளர் நாயகம் சட்ட விரோதமாக கைதுசெய்யப்பட்ட செய்தி நாடெங்கும் பரவ ஆரம் பித்ததைத் தொடர்ந்து பொதுமக்கள் அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத் தைக் கலைப்பதற்கு பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரைத் தாக்கியதோடு, கண்ணீர்ப்புகைக் குண்டுகளை யும் வீசினர்.

## அமெரிக்கா

### 'வீட்டோ' பிரயோகம்: புஷ்ஷின் மனித உரிமை கொள்கையை பிரதிபலிக்கிறது

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் மேற்குக்கரை மற்றும் காஸா பள்ளத்தாக்கில் அவதானிகள் நியமிப்பது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையினால் கொண்டுவரப்பட்ட மசோதா அமெரிக்காவின் வீட்டோ அதிகாரத்தின் (ரத்ததிகாரம்) மூலம் நிராகரிக்கப்பட்டதானது, அமெரிக்க அரசின் மனித உரிமைக்கெதிரான கொள்கையை எடுத்துக்காட்டுகிறது. மேற்படி மசோதாவை எதிர்த்து வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகித்த ஒரேயொரு நாடு அமெரிக்காவேயாகும்.

இம்மசோதா மிகக் கடுமையான வாதப் பிரதிவாதங்களின் பின்னர் மூலப்பிரதியில் மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னரே கடந்த மார்ச் 8ம் திகதி ஐ.நா. பாதுகாப்பு சபையால் சமர்ப்பிக்கப்பட்டது. அதனையும் கூட அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்து விட்டது.

## இந்தியா

### இந்தியா இராணுவத்தின் அத்துமீறல்

இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள காஷ்மீர் பகுதியில் கடந்தமாதம் மட்டும் 266 காஷ்மீரிகள் ஷஹீதாக்கப் பட்டிருக்கின்றனர். இவர்களுள் காவலில் இருந்த 16 பேரும், 114 பெண்களும் 3 குழந்தைகளும் அடங்குவர். 349 பேர் கடுமையான காயங்களுக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர். தேடுதல் நடவடிக்கை, முற்றுகைகளின் போது 355 கஷ்மீரிகள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 395 வீடுகளும், கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. மேலும் 15 காஷ்மீரிகள் கடத்தப்பட்டு அல்லது காணாமல் போயுள்ளனர். காமவெறி கொண்ட படையினரால் மிக மோசமான முறையில் 8 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

'ஹண்ட்வரா' பிரதேசத்திலுள்ள 'சானு' எனுமிடத்தில் இந்திய எதிர்ப்புக் குழுவினர்களுள் இருவர் மின்சாரம் பாய்ச்சப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

'தர்ஹால்' பிரதேசத்தில் ராஜரி மாவட்டப் படையினரால் வீடுகள் முற்றுகையிடப்பட்டு சேதமாக்கப்பட்டும் சூறையாடப் பட்டுமுள்ளன. உதய்பூர் பிரதேசத்தில் 'சால்' எனுமிடத்தில் இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபரினால் காயங்களுக்குட்பட்ட ஒரு பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிர் துறந்தாள். பஞ்சாப் மாநிலத்தில் இயங்கிவரும் 'அடக்கு முறைகளுக்கெதிரான மாநில இயக்கம்' என்ற மனித உரிமை அமைப்பு, இந்திய தேசிய மனித உரிமைகளுக்கான கமிஷனின் முன்னாள் தலைவரிடம் சுட்டிக்காட்டியுள்ளதன்படி சுமார் 10,000 காஷ்மீரிகள் '94 ஜுலை தடா சட்டத்'தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## பாகிஸ்தான்

### உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதற்கு எதிர்ப்பு

பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதை பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி எதிர்ப்பதுடன், பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மீள உருவாக்குவதற்காகப் போராடும் உரிமையை மக்கள் மட்டுமே கொண்டுள்ளதாக நம்புகிறது என இஸ்லாமாபாத் இல்லத்தில் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த தூதுக்குழுவினரிடம் உரையாற்றும் போது ஜமாஅதே இஸ்லாமியின் அமீர் காஸி ஹுஸைன் அஹ்மத் தெரிவித்தார். இந்நிகழ்விலே லண்டனில் நடைபெற்ற CMAG கூட்டத்தில் ஜமாஅதே இஸ்லாமியைப் பிரதிநிதித்துவப்படுத்திய நாயிப் அமீர் பேராசிரியர் குர்ஷித் அஹ்மத் அவர்களும் கலந்து கொண்டார்.

பாகிஸ்தானின் அரசியல் விவகாரங்களிலே வெளிநாடுகள் தலையிடுவது நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல என ஐரோப்பிய யூனியனிடம் தாங்கள் குறிப்பிட்டதாக ஜமாஅதே இஸ்லாமி தலைவர்கள் குறிப்பிட்டனர். மேலும் காஸி ஹுஸைன் அஹ்மத் அவர்கள், பாகிஸ்தானில் சிவில் சட்டத்தை மீள நடைமுறைப் படுத்துவதற்கு பாகிஸ்தானே முயல வேண்டும் என்றும் இவ் விடயத்தில் வெளிநாடுகள் தலையிடத் தேவையில்லை எனவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானிகள் ஜனநாயகத்தை விரும்புகின்றனர் எனவும், ஐரோப்பிய யூனியனின், பாகிஸ்தானின் நல்லாட்சிக்கான சாத்தியமான அணுகுமுறைகளையும் ஜமாஅத் வரவேற்பதாகவும் குறிப்பிட்டார்.

# புதுக்கடை ஆண்கள் பாடசாலையின் நிலையும் அஹதிய்யா வகுப்பின் கதியும்

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை சென். செபஸ்டியன் சிங்கள வித்தியாலயம் 1961க்கு முன் சென் செபஸ்டியன் கிறிஸ்தவ ஆலயத்துக்குச் சொந்தமான ஆங்கிலப் பாடசாலையாகவே இருந்தது. அன்று அரசு அப்பாடசாலையை சுவீகரித்ததன் பின்புதான் அது சிங்கள அரசினர் பாடசாலையாக மாறியது. முழு இலங்கையிலும் அவ்விதம் 300 பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டன. முன்னாள் கலவியமைச்சர் பதியுத்தீன் மஹ்முத் காலத்திலேயே இவ்வரசுடமை யாக்கல் நடைபெற்றது. ''கூடுதலான சமூகப் பிரிவினர் கற்கும் பாடசாலை அச்சமூகத்திற்கே" எனும் திட்டத்தின் கீழ் மேற்படி பாடசாலை முஸ்லிம் பெரும் பான்மைப் பாடசாலையானதில் வியப் பில்லை. 1961ல் ஸ்ரீமாவோ அரசு, ''பிரதேச பெரும்பான்மைக்கே" எனும் முறையைக் கொண்டுவரக் காரணம் சகல பகுதி களுக்கும் கல்வி வசதியைப் பெருக்கு வதற்கேயாகும். அத்தோடு தேசியம், தேசிய மொழி ஆகியவற்றின் எழுச்சிக்கு வித்திடுவதும் ஒரு நோக்கமாகும். இவ்வாய்ப்பு முஸ்லிம்களுக்கு தேசிய அடிப்படையாகக் கிடைத்ததே தவிர சலுகையாகப் பெற்றதல்ல.

மேல்நாட்டு நாகரிகம் தேசியமாக மாறியதும் கிறிஸ்தவக் கல்லூரியில் முஸ்லிம் பெரும்பான்மை பயில்வதும் ஆங்கிலக் கல்வி சிங்களமாக மாற்றப் பட்டதும் மேற்படி ஆலய நிர்வாகியின் மனதில் மாறாத வடுவை ஏற்படுத்தியிருந் ததில் வியப்பில்லை. கடந்த காலங்களில் பாடசாலையின் கல்வித் தகைமையைக் குறைக்க, மாணவர் தொகையை மட்டுப் படுத்த அவற்றைக் காரணங்களாகக் காட்டி பாடசாலையை மூடிவிட என்றெல்லாம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. காலப் போக்கில் 'சிங்கள மீடியம்' விடயத்தில் முஸ்லிம்களிடம் காணப்பட்ட ஆர்வமின்மை காரணமாக 1000 மாணவர்களுக்கு மேல் கற்க வேண்டிய பாடசாலையில் ஆகக் குறைந்த எண்ணிக்கையான 52 மாணவர்களே கற்று வரலாயினர். இந்நிலையில் 100 மாணவர் களுக்கும் குறைவாகவுள்ள பாடசாலை களை மூடிவிடும் திட்டமொன்றை அரசும் வகுத்திருந்தது. இந்நிலையில்தான் ஐக்கிய முஸ்லிம் நலன்புரிச் சங்கம் விரைவாகச் செயற்பட்டு மாணவர் தொகையை 200 ஆகக் கூட்டி பாடசாலை மூடப்படாமல் காப்பாற்றியதோடு பாடசாலைக்குத் தேவை யான தளவாடங்களையும் கொடுத்தது. அது மாத்திரமல்ல, அஹதிய்யா வகுப்பையும் 1997ல் ஏற்பாடு செய்தது. பாடசாலை நடவடிக்கைகளுக்கு தெம்பூட்டும் வகையில் அஹதியாவில் எழுநூறு மாணவர்களும் இருபது ஆசிரியர்களும் சேர்ந்திருந்தமை ஆலய நிர்வாகிக்கு அதிர்ச்சியூட்டியதில் வியப்பில்லை. அதன் காரணமாக அவரது முயற்சியால் அரச செலவில் 1985ல் பாடசாலைக்கும் ஆலயத்துக்குமிடையில் மதிற்சுவர் எழுப்பி, காணப்பட்ட இணக்கப் பாட்டுக்கு மாற்றமாக அவர் நடக்க ஆரம்பித்தார். அவ்வுடன்பாட்டில்,

''தேவாலயமும், பாடசாலையும் வெவ் வேறானவை என்றும் பாடசாலை நடவடிக்கைகள் தேவாலயத்துக்கும் தேவாலய நடவடிக்கைகள் பாடசாலைக்கும் இடையூறாக இருக்கக் கூடாது" என்றும் உறுதிசெய்யப்பட்டிருந்தது.

எனவே ஆலய நிர்வாகி 01.09.2000ல் பாடசாலை அதிபரிடம் சுவருக்கப்பாலுள்ள இடம் ஞாயிறு தோறும் தேவை என்று கோரியதும், 05.09.2000ல் மேலதிக கல்வி இயக்குநர் கஜவீர தெல்பாகொட நேரடி யாகவே பாடசாலைக்கு வந்து, ''கிறிஸ்தவ ஆலயத்தின் அதிகாரப்படி" என்று கூறி சுவருக்கு அப்பால் நடக்கும் அஹதிய்யா வகுப்பை ரத்துச் செய்ததும் உடன்பாட்டுக்கு மாற்றமான நிகழ்வுகளேயாகும். அதுபோல் கல்வித் திணைக்களத்தின் உத்தரவுப்படி கிறிஸ்தவ ஆலயத்தின் ஞாயிறு வகுப்புக் காக டிஸம்பர் 2000 முதல் வாரம் தொடக்கம் தடுப்புச் சுவருக்கு அப்பாலுள்ள இடமும் வழங்கப்பட்டுவிட்டதாக அஹதிய்யா நிர்வாகிகளிடம் பாடசாலை அதிபர் எழுத்து மூலம் அறிவித்ததும் உடன்பாட்டுக்கு எதிரானதேயாகும்.

08.03.2001ல் கூடிய மனித உரிமைச் சங்கமும் கூட, ''சுவருக்கு அப்பால் சென்று ஆலய வகுப்பு நடத்தலாம்'' என்று கூறியுள்ளது. சர்ச்சை ஏற்பட்டுள்ள நேரத்தில் இரு மதத்தினர் ஒரே இடத்தில் புழங்குவது ஆபத்து என்பதை மனித உரிமைச் சங்கம் உணராதது ஏன்? ''அங்கு சிலைகளைக் கொண்டுபோய் வைக்கலாம்" என்றும் பேசியிருக்கிறார்கள். சுவருக்கு இப்பாலும் தாராளமாக இடமிருக்கையில் சுவருக்கு அப்பால் செல்வதுதான் மனித உரிமையோ? முஸ்லிம்களுக்கு தேசிய ரீதியில் கிடைத்த வாய்பை பறிப்பதுதான் மனித உரிமையோ? 1985ல் செய்துகொள்ளப்பட்ட இணக்கப்பாடு மீறப்படுவதுதான் மனித உரிமையோ?

எனவே மனித உரிமைச் சங்கத்தின் முடிவு நீதிமன்றமொன்றின் தீர்ப்பல்ல. பிரச்சினையைச் சிக்கலாக்கும் ஒரு தலைப்பட்சமான இத்தகைய முடிவை மீறி நீதிமன்றம் சென்று இடைக்கால உத்தரவு பெறுவதே சரியாகும். நீதிமன்ற தீர்ப்பு வெளிவரும்வரை அஹதியா வகுப்பு தடையின்றி நடைபெற வேண்டும். இன்றேல் விசாரணையின் பேரால் அஹதியா தொடர்ந்து நடைபெறாதிருக்கவும் செய்யப்படலாம்.

1961ன் ''பாடசாலைகள் தேசிய உடமை" சட்ட அமுலாக்கலுக்குப் பிறகும் ஆலயங்களுக்கும் அவற்றில் அதிகாரம் உண்டெனில் அது பூரண சுயாதீனமற்ற சட்டவடிவம் என்பதே பொருளாகும். உண்மையில் இது அஹதியாவோடு மாத்திரம் சம்பந்தப்பட்ட விவகாரமல்ல. புதுக்கடை வாழ் பெரும்பான்மை முஸ்லிம் களின் ஆண்கள் பாடசாலை சம்பந்தப்பட்ட ஜீவாதாரப் பிரச்சினையுமாகும்.

எனவே, இது ஐக்கிய முஸ்லிம் நலன்புரிச் சங்கத்தின் விவகாரம் என்று கருதி பொறுப்புச் சாட்டவோ, சாட்டுக் கூறவோ, குறை கூறவோ செய்யாமல் சகலரும் அதற்கு ஒத்தொருமித்து பங்களிப்பு வழங்குதல் முக்கியமாகும். அதற்காக ஒரு நடவடிக்கைக் குழுவை உடனடியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சகல தராதரத்தினரும் அதில் இடம்பெற வேண்டும். தனித்தனிக் குழுக்களாக செயற்படவும் கூடாது.

''ஹிஸ்புல் இஸ்லாம்"

# முஸ்லிம்களின் வீழ்ச்சியில் (12ம் பக்கத் தொடர்)

அப்பொழுதுதான் அந்த மகானது இறுதி விருப்பம் வாசிக்கப்படுகிறது: ''என்னுடைய ஜனாஸாவை தொழுவிப்பதற்கு பின்வரும் தகுதி கொண்டவர் இமாமாக இருக்க வேண்டும்: தன்னுடைய பருவ வயதை அடைந்ததிலிருந்து ஐந்து நேரத் தொழுகைகள் அனைத்தையும் கூட்டாகத் தொழுதவராக முன் பின் ஸுன்னத்துத் தொழுகைகளை பேணியவராக குறிப்பாக அஸர் தொழுகையையும் அதனது சுன்னத்தையும் பேணியவராக இருக்க வேண்டும்."

''இந்தத் தகுதியுள்ள யாராவது இருந்தால் வாருங்கள்" என்று அந்த அறிவிப்பு பல தடவைகள் வாசிக்கப்பட்டது. யாரும் வரவில்லை. இறுதியாக, ''அல்லாஹ்வின் பெயரால் அழைக்கிறேன் தகுதியுடையவர்கள் முன்வாருங்கள்" என்று அழைப்பாளர் அழைக்கவே ஒருவர் தனது முகத்தை சால்வையால் மூடியவராக ஜனாஸாவுக்கு முன்னால் நின்று தனது சால்வையை அகற்றிய போது அங்கே இருந்தவர் வேறு யாருமல்ல, முகலாய சாம்ராஜ்யத்தின் அரசர் அவ்ரங்கஸீப்தான் அந்தத் தகுதி பெற்ற மனிதர்!

இஸ்லாமிய கடமையின் உயிரோட்டம் இதுதான். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் அரசராக இருந்த நிலையில் அனைத்து வேலைக்களுக்கு மத்தியிலும் அனைத்துத் தொழுகைகளையும் ஸுன்னத்தான தொழுகைகள் உட்பட பேணிப் பாதுகாத்துத் தொழுதிருக்கிறார்கள் என்றால் அதுதான் இஸ்லாம்!

எம்மில் எத்தனை பேர் ஐந்து விடுத்தம் தொழுகிறார்கள்? எத்தனை நோன்புகளை ஒழுங்காக நோற்கிறார்கள்? எத்தனை விடுத்தம் குர்ஆன் ஓதுகிறார்கள்? என்னென்ன நற்கிரிகைகள் புரிகிறார்கள்? இவற்றுள் எதில் உயிரோட்டம் இருக்கிறது? அல்குர்ஆனைக் கற்றுணர்ந்து அதன் சாராம்சத்தை விளங்க முயற்சித்தோர் எத்தனை பேர்? இவ்வாறு அல்குர்ஆனை விளங்க முயற்சிக்காத, தொழுகை, நோன்பு, அவ்ராத், ஹஜ் ஆகியவற்றை உயிரோட்டமாக நிறைவேற்றாதபோது ஒரு இஸ்லாமிய சமூகத்தின் பின்பற்றுதலுக்கு என்ன பெறுமானம் இருக்கிறது? எனவேதான் நாம் வீழ்ச்சியடைந்த சமூகம் என்று சொல்கிறோம்.

### வீழ்ச்சிக்கான அடிப்படைக் காரணங்கள்

1. நாம் இஸ்லாத்தின் சம்பூரணமான வடிவத்தை உலகுக்கு பிரகடனப்படுத்தவில்லை. நாங்களும் வாழவில்லை; பிறருக்கு வாழ இடமும் கொடுக்கவில்லை.

2. எஞ்சியிருக்கின்ற எமது இஸ்லாமிய பின்பற்றல்கள் வெறுமனே மரபு ரீதியான, உணர்வற்ற ஒரு பின்பற்றலே!

இந்த இரண்டு காரணங்களும்தான் இஸ்லாமிய வீழ்ச்சிக்குக் காரணம் என்பது அல்குர்ஆனினதும் இஸ்லாமிய அறிஞர்களினதும் கருத்துமாகும். எனவே எப்போது இந்த தீனை உலகுக்கு சம்பூரண வடிவில் பிரகடனப்படுத்துகிறோமோ, எப்போது இஸ்லாமிய வழிகாட்டல்களை உயிரோட்டத்துடன் பின்பற்றுகிறோமோ அப்போதுதான் நாம் எழுச்சி பெற்ற சமூகம்! எண்ணெய் வளம், கணியவளம், மனித வளம் என்பது எமது பலம் அல்ல.

இத் தலைப்பின் ஒரு பகுதி இந்தக் கருத்தோட்டத்தைக் கொண்டது. முஸ்லிம்களது வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன என்பது தலைப்பின் அடுத்த பகுதியாகும்.

(மீதி இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்)

# ஆப்கானிஸ்தானில்

நூல்களில் மாத்திரம்தான் இருந்திருக்கும். ஜெரூஸலம் கைப்பற்றப்பட்டபோது அங்குள்ள பிறமத ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டுமென கலீபா உமர் (رضي الله عنه) அவர்கள் ஆணையிட்டார்கள்.

உண்மையில் தாலிபானின் குரலுக்கும் சற்று செவிமடுக்காவிட்டால் நாம் அநீதியாளர்களாக ஆகிவிடுவோம் அண்மையில் யுனெஸ்கோ மற்றும் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஆகியன ஆப்கானிஸ் தானுக்குச் சென்று பாமியான் சிலையை பாராமரிப்பதற்கு தம்மிடம் நிதி வசதி இருப்பதாகவும் அதற்கான அனுமதியைத் தரும்படியும் தாலிபான் அரசிடம் வேண்டிக் கொண்டபோதுதான் பிரச்சினை கிளம்பியது. தமது நாட்டின் உடனடிப் பிரச்சினை கற்சிலைகளைப் பாதுகாப்பது அல்ல; அமெரிக்காவின் கொடூர பொருளாதாரத் தடையில் வாடும் மக்களின் பட்டினியைப் போக்குவதுதான். எனவே உங்களது பணத்தை அதற்காகச் செலவிடுங்கள் என தாலிபான் அதிகாரிகள் வேண்டியபோது அவர்கள் அதனை மறுத்து விட்டனர். தாலிபான் இதனை தனக்கேற்பட்ட ஓர் அவமானம் எனவும், இவர்களுக்கு எமது பாலகர்களை விட சிலைகள் பெரிதாகி விட்டன; எனவே அத்தகைய சிலைகள் எமது நாட்டில் இருக்கத் தேவையில்லை எனக் கருதியே இவ்விதம் தீர்மானித்தனர். தாம் பௌத்த மதத்துக்கு எதிரானவர்களாக இருந்திருந்தால் 3 வருடங்களுக்கு முன் பாமியான் மாநிலம் கைப்பற்றப்பட்ட போது சிலையைத் தகர்த்திருக்க முடியும் என அவர்கள் வாதிடுகின்றனர். மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு பிரதேசத் தளபதி இச் சிலைகளை உடைக்க முற்பட்டபோது தாலிபான் அதனைத் தடைசெய்தது. அத்தோடு பாமியானைக் கைப்பற்றும் சண்டையில் சிலைக்கு சிறிய தேசம் ஏற்பட்ட வேளையில் தாலிபானின் தலைவர் முல்லா உமர் பௌத்தர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார். தாலிபான்கள் உண்மையில் மதங்களுக்கு எதிரானவர்கள் என்றிருந்தால் ஜெலாலாபாத் மாநிலத்தில் வாழும் ஹிந்துக்களின் ஆலயங்கள் தவிடுபொடியாகி இருக்கும்.

தாலிபான் இஸ்லாத்தை அமுல்படுத்தக் கையாளும் அணுகுமுறையை சரியென ஏற்றுக்கொள்ள முடியாது. இஸ்லாம் எப்போதும் கடும்போக்கை ஆதரிப்பதில்லை. நடுநிலையையே அது வரவேற்கிறது. தூய இஸ்லாமிய அறிஞர்கள் கூட தாலிபானின் அணுகுமுறையை முழுமையாக அங்கீகரிக்கவில்லை. ஆனால் தாலிபான் பாமியான் சிலை உடைப்பு வித்தியாசமான கோணத்திலிருந்து நோக்கப்பட வேண்டும்.

13 கோடி முஸ்லிம்கள் வாழும் இந்தியாவின் அயோத்தியாவில் இருந்த பாபரி மஸ்ஜிதை தற்போது அந்நாட்டின் ஆட்சி பீடத்திலிருக்கும் BJP தீவிரவாதிகள் அப்போது ஆட்சி புரிந்த காங்கிரஸின் அனுசரணையுடன் இடித்து அழித்தபோது சர்வதேச உலகம் எங்கே இருந்தது? இந்தியாவுக்கு எதிராக தடைகளைக் கொண்டு வர ஏன் முடியவில்லை? பாமியான சிலையை காப்பாற்றுவதற்காக கோபி அன்னானும் அவரது யூத மனைவியும் கச்சையைக் கட்டிக்கொண்டு பாகிஸ்தான் எல்லைக்கு விரைந்து சென்றனர். அப்படியெனில் அவர்கள் ஏன் பட்டினியால் வாடும் குழந்தைகளுக்காக ஒரு தடவை சென்றிருக்கக் கூடாது?

இதிலிருந்து தெளிவாக விளங்குவது ஒன்றுதான். அதாவது அமெரிக்கா விரும்புகிறவருக்குத்தான் நீதி. அது விரும்பும் பிரச்சினைதான் முழு உலகுக்கும் பிரதானமானது. அது விரும்பம் திசையில்தான் எம்போன்ற நாடுகள் பயணிக்க வேண்டும். பாமியான் சிலை உடைப்புக்கான முழுக் குற்றச்சாட்டையும் சிங்கள சமூகம் அமெரிக்கா மீதும் ஐ.நா. மீதும்தான் போட வேண்டும். ஏனெனில் அவர்களது அநியாயங்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவர்களது அடாவடித்தனங்களுக்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் பொங்கியெழுந்த ஆப்கானிஸ்தான் வாசிகளின் ஆத்திரத்தின் வெளிப்பாடே பாமியான் சிலை உடைப்பு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே அடுத்த எதிர்ப்பு ஊர்வலம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நயவஞ்சகத்தை அம்பலப்படுத்திக் காட்டுவதற்கும், ஆப்கானிஸ்தானில் பஞ்சத்தால் வாடும் குழந்தைகளுக்காக அழுவதற்காகவும் அமைக்கட்டும். அதில் சிங்கள-முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த மூடர்களையும், எட்டப்பர்களையும் தவிர்த்து அனைத்து மக்களும் கலந்து கொள்ளட்டும். ●

## திருமணமும்.. (தொடர்)

கருத்தடை செய்வதற்கான ஏதாவதொரு வழிமுறையைப் பயன்படுத்துவது ஷரீஆ வின் பார்வையில் குற்றமாகாது என்று ஏற்கனவே குறிப்பிட்டு விட்டோம். ஆனால் குடும்பக் கட்டுப்பாடு சமூகத் திட்டங்களில் ஒன்றாக சமூக பொது நடைமுறையாக மாற்றப்படுவது இஸ்லாமிய ஷரீஅத் சட்டத் துடன் மோதுவதாகவும், முரணாகவும் அமைகிறது. உண்மையாகவே தேவை இன்றி கருத்தடை செய்து கொள்வதற்கான ஒரு வழிமுறையின்பால் மக்களை அழைக் கின்ற கொள்கைகளும், சிந்தனைகளும் இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு முற்று முழுதாக முரணானவைகளாகும்.

கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி அவர்களும் இக்கருத்தை வலியுறுத்து கிறார்கள். அவர்களது கருத்து இவ்வாறு அமைகிறது:

''மனித இனத்தின் நிரந்தரமான இருப் பைப் பேணுவதே திருமணத்தின் முதன்மை யான நோக்கமாகும். தொடரான இன விருத்தியின் மூலமே மனித இனம் தொடர்ந்து இருக்க முடியும். எனவே இஸ்லாம் இனப்பெருக்கத்தை ஆர்வமூட்டி ஆண், பெண் குழந்தைகள் பாக்கியம் மிக்கவை என்று கூறுகிறது. ஆனாலும் நியாயபூர்வமான காரணிகள், தேவைகள் ஒரு முஸ்லிமுக்கு இருக்கும் பட்சத்தில் இஸ்லாம் குடும்பக் கட்டுப்பாட்டை அனுமதிக்கிறது.''

நியாயபூர்வமான காரணிகளை இவ்வாறு வகைப்படுத்தலாம்:

1. அனுபவம் அல்லது மருத்துவ ஆலோசனையின் பின்னர் கர்ப்பம் தரித்தல் அல்லது பிரசவம் ஆகியவற்றால் தாய்க்கு உயிர் ஆபத்து அல்லது தேகாரோக்கியத் தில் பாதிப்பு ஏற்படும் என அஞ்சல்.

2. குழந்தைகளை அதிகம் பெறுவதன காரணமாக உலகியல் ரீதியான கஷ்டத்தை அனுபவித்தலும் அது மார்க்கத்தில் ஒரு கஷ்டத்தை அனுபவிக்க வழிவகுத்தலும். அதனால் ஒருவர் தடுக்கப்பட்டதைச் செய்து ஹராத்தை ஏற்றுக்கொள்ள வழிவகுத்தலும். உதாரணமாக பிள்ளைகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படுதல், அவர்களை பயிற்றுவிப்ப திலும் வளர்ப்பதிலும் குளறுபடி ஏற்படுதல்.

3 புதிதாக கர்ப்பம் தரித்தல் மூலம் பால்குடிக்கும் குழந்தைக்கும் பிறக்க இருக்கும் குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படும் எனப் பயப்படுதல். (இக்காரணிகளுக்கான ஷரீஅத் ரீதியான ஆதாரங்கள் விரிவஞ்சி விடப்படுகின்றன)

மேற்குலகத்தில் வரலாற்றின் குறித்த ஒரு காலப்பிரிவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி, அதனடியாக பெண்கள் பெற்றுக் கொண்ட பொருளாதார ரீதியான சுதந்திரம், நவீன நாகரீகம் போன்றவற்றின் அழுத்தம் காரணமாக ஏற்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டு சிந்தனை ஒரு கொள்கையாக உலகுக்கு முன்வைக்கப்பட்டது. அது மேற்குலகிலிருந்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டு அதன் தீயவிளைவுகளை உலகம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது. மனித உருவாக்கமான தற்கால குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைக்கும் தூதர் (ஸல்) அவர்கள் குறித்த சில சூழ்நிலைகளின் போது குறித்த சில ஸஹாபிகளுக்கு வழங்கிய குடும்பக் கட்டுப்பாட்டிற்கும் குறித்த சலுகைக்குமிடையே பாரிய வித்தியாசம் உண்டு. தற்கால குடும்பக் கட்டுப்பாட்டை கொள்கை-கோட்பாடாக ஒரு பொதுவான சமூக நடைமுறையாக இஸ்லாம் கருதவில்லை. தங்களது சமூக உறுப்பினர்களை அதிகரித்துக் கொள்ளு மாறு முஸ்லிம்களை அண்ணலார் ஊக்கு வித்துவிட்டு மறுபுறம் குடும்பக் கட்டுப்பாட்டை ஒரு கொள்கையாக பிரகடனம் செய்திருப்பார் கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இருப்பினும் பிள்ளைகளைப் பெற்றெடுக கக் கூடிய கணவனும் மனைவியும் பிள்ளை பெற்றெடுக்கும் விடயத்தில் தார்மீக ஒழுங்கைப் பேணும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். இரு பிள்ளைகளுக்கு இடையேயுள்ள வயது வித்தியாசம் இரண்டு வருடமாக அமைதல் சிறந்தது. ஏற்கனவே நாம் கூறிய பாதிப்புகள் தாய்க்கும் பிள்ளை களுக்கும் ஏற்படாமல் இருப்பதற்காக இதனை முன்வைக்கிறோம். அல்குர்ஆன் இவ் ஒழுங்கை பின்வரும் வசனத்தினூடாக மறை முகமாக முன்வைக்கிறது. இவ்வசனம், பாலூட்டும் காலஅளவு பற்றி குறிப்பிடுகிறதே அன்றி குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிக்கிறது என்பது அர்த்தமாகாது.

**''எவரேனும் (தலாக் கூறப்பட்ட மனைவிகளிடம் தங்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்குத் தலாக் கூறப்பட்ட மனைவிகளைக் கொண்டே) பால் ஊட்டுவதைப் பூர்த்தியாக்க விரும்பினால் தாய்மார்கள் தங்களுடைய குழந்தை களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டவும்'' (2: 233)**

பிள்ளைகளுக்கிடையிலான கால இடை வெளி இரண்டு வருடமாக அவசியம் அமைதல் வேண்டும் என்று மேற்படி வசனம் குறிப்பிடவில்லை. மாறாக ஓர் ஒழுங்கை மட்டும் வலியுறுத்துகிறது.

அல்லாஹ் மிகவும் அறிந்தவன்

**துணைநின்றவை**

1. ஹரகது தஹ்தீதிந் நஸ்ல்
-மௌலானா மௌதூதி (ரஹ்)
2. அல்ஹலால் வல்ஹராம் பில் இஸ்லாம்
- கலாநிதி யூஸுப் கர்ழாவி
3. பிக்ஹுஸ் ஸுன்னா
- அஷ்ஷெய்க் செய்யித் ஸாபிக் (ரஹ்)
4. அல்பிக்ஹுல் மன்ஹஜி அலா மதாஹிபி இமாம் ஷாபிஈ

### குறுக்கெழுத்துப் போட்டி பரிசு பெற்றோர் விபரம்

ஏப்ரல் மாத அல் ஹஸனாத் இதழைப் பரிசாகப் பெறும் தம்பி தங்கைகள் பத்துப் பேர்:

01. நிப்ரான் பௌஸ்
ஆண்டு 7
கொட்டேகொட முஸ்லிம் வித்.,
ஹெம்மாதகம

02. எம்.ஏ.எம் சித்தீக்
எம். எச். ஏ. கல்லூரி
மீராவோடை
வாழைச்சேனை

03. நப்ரியா ஸெய்யதலி
றி.சி. வீதி
கிண்ணியா - 06

04. எம்.எஸ்.எம். ஹனீபா
மாகொல முஸ்லிம் வித்.,
மாகொல

05. எஸ். எம். பாகீர்
ஆண்டு -09
எம்.எச்.ஏ. கல்லூரி
மீராவோடை -04
வாழைச்சேனை

06. என்.எம். நப்லாஸ்
எம்.ஐ.ஏ. கல்லூரி
அரக்யால
கெகுணகொல்ல

07. வி.ரி. றிஸ்வான்
இல : 58
மாஞ்சோலை
வாழைச்சேனை

08. முஹமட் அஸாட்
ஆண்டு -08
எஸ்.ஆர்.எம். வித்தியாலயம்.
சன்கட்டிக் குளம்
ஆனமடுவ

09. எம்.எச். முஷ்ரிபா
ஆண்டு - 04
முஸ்லிம் மகா வித்தியாலயம்.
வவுனியா

10. எஸ்.ஜே. ஸப்ரினா பேகம்
ஆண்டு 10
முஸ்லிம் மகா வித்தியாலயம்
முதலைப்பாளி
பள்ளிவாசல்துறை

**அனுப்ப வேண்டிய முகவரி :**
'SIRUVAR POONGA'
ALHASANATH
77, DEMATAGODA ROAD,
COLOMBO - 00900

## கொகா கோலாவின் பாவனையை தூண்டலாமா?

மார்ச் மாத இதழில் 'சிறந்த சுத்திகரிப்புக்கு கொகாகோலா' என்ற ஆக்கத்தை வாசித்ததும் அதிர்ந்து விட்டேன். நவம்பர் 2000ல் வெளிந்த இதழில் பிரபல இஸ்லாமிய மார்க்க அறிஞர் யூசுப் அல்கர்ழாவியின், அமெரிக்க-இஸ்ரேல் உற்பத்திகளையும் கொகாகோலா, பெண்டா, போர்டெலோ, ஸ்பிரைட், பெப்ஸி போன்ற அதன் தாயரிப்புகளையும் பரிஷ்கரிப்போம் என்ற பத்வாவை வெளியிட்டு விட்டு, இப்போது அதன் பாவனையை அதிகரிக்கத் தூண்டும் வண்ணம் அதற்கு இலவச விளம்பரம் பெற்றுக் கொடுக்க முனைந்த பாரதூரத்தை எழுதிய எழுத்தாளரும் அல்ஹஸனாத் ஆசிரியர் குழுவும் உணரவில்லையா? அது இரண்டு நாளில் ஆணியையும், இறைச்சியையும் கரைக்கலாம். ஆனால் நாம் அதற்காகச் செலவிடுகின்ற பணம் இரண்டே நொடிகளில் ஒரு பலஸ்தீன சிறுவனின் உயிரைக் குடித்து விடும் என்பதை உணரவில்லையா? இவ்வாறான ஆக்கங்களை பிரசுரிப்பதால் இஸ்லாமிய இலட்சியக் குரலின் தரம் குறைந்துவிடும். இவ்வாறான பானங்களை அருந்துவது மாத்திரமல்ல, அதை எந்தத் தேவைக்குமே உபயோகிக்கக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்திக் கூற வேண்டிய அல்ஹஸனாத்தே இவ்வாறான ஆக்கங்களைப் பிரசுரிப்பது பெருந்தவறல்லவா? இதற்கு அவசியம் ஆசிரியர் பதில் சொல்ல வேண்டுமென தயவாய் வேண்டுகிறேன்.

எஸ். ஐ. எம். முஸ்டீன்,
காவத்தமுனை

## சூசகமாக...

அல்ஹஸனாத்தின் அனைத்துப் பக்கங்களும் அல்லாஹ்வின் அருளால் நலமே காட்சி தருகின்றன. சென்ற மாத இதழில் வெளிவந்த 'சிறந்த சுத்திகரிப்புக்கு கொகாகோலா' என்ற ஆக்கம் மிகச் சூசகமாக பல அர்த்தங்களை உள்ளடக்கியிருந்தது. அதற்கு மிக நன்றி.

நஸீம், பள்ளிவாசல்துறை

**குறிப்பு:**

குறிப்பிட்ட ஆக்கம் ஓர் அரபுப் பத்திரிகையில் வெளிவந்தது. கொகா கோலாவின் தீங்குகளை நாசூக்காக உணர்த்துவதே அவ்வாக்கத்தின் நோக்கம். எனினும், துரதிஷ்டவசமாக பலருக்கு நேர்மாற்றமான கருத்துப் பதிவை அது ஏற்படுத்திவிட்டது-வருந்துகிறோம். சாதகமான விளைவை ஏற்படுத்தியமைக்கு மேற்கண்ட வாசகர் கருத்து சான்று. (ஆ-ர்)

## அட்டைப்படம் அருமை

அல்ஹஸனாத் மார்ச் மாத இதழின் அட்டைப்படம் மிக அருமையாக இருந்தது. இன்னும் ஆசிரியர் கருத்து, அல்குர்ஆன், அல்ஹதீஸ் விளக்கம், த.'வா களம், பூகம்பத்தின் பின்னால், சிறுகதை, கேள்வி பதில் ஆப்கானுக்கு ஒரு வேண்டுகோள் போன்ற ஆக்கங்கள் அருமை. அத்தோடு அல்ஹஸனாத் வெளியாகும் தேதியான 15 ஐ (உ-ம்: ஏப்ரல் 15.02.01) அட்டையில் குறிப்பிட்டால் என்ன? இன்னும் இஸ்லாமிய இலட்சியக்குரல் என்னும் இடத்தில் 'இஸ்லாமிய மாதாந்த இலட்சியக் குரல்' என்று குறிப்பிட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும் என எண்ணுகிறேன். அல்ஹஸனாத்தின் பணி தொடர வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக!

சியாஜ் சியானா, கற்பிட்டி

**குறிப்பு :** அல்ஹஸனாத் தூரப் பகுதிகளிலுள்ளவர்களுக்கு பிந்திக் கிடைப்பதாக முறைப்பாடுகள் வந்துள்ளன. எனவே மாதத்தின் முதல் வாரத்தில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். இன்ஷா அல்லாஹ். (ஆ-ர்)

## புதிய பகுதி தேவை

நான் அண்மையில் இஸ்லாத்தை ஏற்றவள். அல்ஹஸனாத்தின் அழகு ஆக்கங்களால் கவரப்பட்டுள்ளேன். குறிப்பாக மீடியா வொட்ச். முஸ்லிம்களுக்கெதிரான சதியை சந்தர்ப்பத்தில் சக மக்களுக்கு இதை அறிவித்த சகோதரர் முஸ்டீனுக்கும் அல்ஹஸனாத்துக்கும் நன்றி. அது போன்ற கடிதம் ஒன்று எனக்கும் வந்துள்ளது. இதுபோல் பரவலாக நடைபெறுகிறது. இது சம்பந்தமாக, குறிப்பாக முஸ்லிம்களை வழிகெடுத்தல் பற்றி அல்ஹஸனாத்தில் அதிகம் உணர்த்த வேண்டும். முஸ்டீன் குறிப்பிட்டது போல வறுமையில் உள்ளவர்களுக்கே கூடுதலாக வருகிறது. முஸ்லிம்களுக்கு மாத்திரமல்ல; இந்துக்களுக்கும்தான்! ஆகவே இந்த விடயத்தில் புதிதாக இஸ்லாத்தை ஏற்றோருக்கும் எச்சரிக்கை செய்ய வேண்டும். இது இஸ்லாமிய ஊடகங்களின் கடமை. என் போன்ற புதிய சகோதரர்களுக்கு எளிதாக இஸ்லாத்தை விளக்கும் வகையில் ஒரு புதிய பகுதியை ஆரம்பிப்பது மிகவும் பிரயோசனமாக இருக்கும். இது பற்றிய குறிப்பை அவசியம் குறிப்பிடவும். ஓங்கட்டும் அல்ஹஸனாத்தின் இஸ்லாமியப் பணி!

எஸ்.ஏ. பஸீலா பத்மா,
களுவாஞ்சிக்குடி

'புதிய பகுதி' தொடர்பாக ஆலோசித்து வருகிறோம். (ஆ-ர்)

## ஓவிய வெளியீடு பற்றி...

அல்ஹஸனாத்தின் முன் அட்டையைப் போல் ஏற்படுத்தி ஒரு பக்கத்தில் மாத்திரம் ஓவியங்களை வெளியிடுங்கள். முடியுமென்றால் சிறந்த ஓவியங்களுக்கு பரிசளித்து எதிர்காலத்தில் இஸ்லாத்திற்கு சிந்தனை ரீதியாகவும் உடல் ரீதியாகவும் உதவ இருக்கும் சிறுவர்களுக்கு உற்சாகப்படுத்துங்கள். இன்ஷா அல்லாஹ், அல்லாஹ் உங்கள் குழுவுக்கு நற்கூலி அளிப்பான்.

அஸாபீருல் இஸ்லாம், சீனன்கோட்டை

## அஸாபீர் சகோதரர்களுக்கும்...

இஸ்லாமிய இலட்சியக் குரல் வெளிவருவதற்கு ஏன் தாமதம் ஆகிறதோ என்ற ஆதங்கத்துடன்... குரலே! என்றும் போல் கடந்த மார்ச் இதழ் சுமந்து வந்த அனைத்து அம்சங்களும் பிரமாதம். 'சோதனைத்தீயும் ஈமானியத் தங்கமும்', 'த.'வாக் களம்', விழிப்படையச் செய்த மீடியா வொட்ச் என்பன இதயத்தில் இடம்பிடித்தன. குரலே சிறுவர் பூங்கா அதே அம்சங்களைச் சுமந்து அஸாபீர் பக்கமாக மாறினால் என்ன? அது எமது அஸாபீர் சகோதரர்களுக்கு மிகுந்த உற்சாகம் அளிப்பதாய் அமையுமல்லவா? இஸ்லாமிய இலட்சியக் குரல் ஓங்கி ஒலிக்க வாழ்த்துகிறேன்.

ஸதகதுல்லாஹ், நிககொள்ள

**குறிப்பு** : இது தொடர்பாக இன்னும் கருத்துக்களை எதிர்பார்க்கிறோம். (ஆ-ர்)

## வாழ்க வளர்க உன்பணி

நான் அல்ஹஸனாத்தின நீண்டகால வாசகி. தற்போது எனது வகுப்பிலுள்ள மாணவர்களும் இதைப் படித்து இதில் வரும் அம்சங்களின்படி நடப்பதுண்டு. சென்ற இதழில் வந்த 'அகதி', 'த.'வத்தில் உலக ஆசை' 'பூகம்பத்தின் பின்னால்' அந்நிஸா, ஜம்இய்யாப் பக்கம் என அனைத்தும் பிரமாதம். அல்ஹஸனாத்தின் பணி தொடர்ந்து வளர பிரார்த்திக்கிறேன்.

ஜனூபா அஹ்மட் லெவ்வை
பிறைந்துறைச்சேனை

இன்னும் பலரது கருத்துக்களும் கிடைக்கப் பெற்றன. இடப் பற்றாக் குறை தவிர்க்க வைத்து விட்டது. அனைவருக்கும் எமது நன்றிகள். ஜஸாகுமுல்லாஹு கைரன்.

பெயர், முகவரியற்று வரும் எவையும் பிரசுரிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். (ஆ-ர்)

அல்லாஹ்வின் திருநாமத்தால்..... அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்,
ஸலவாத்தும், ஸலாமும் அல்லாஹ்வின் ரஸூல் அவர்கள் மீதும், அவர்களது சந்ததியினர், தோழர்கள்
இறுதிநாள் வரை வாழ்வோரில் அவரைப் பின்பற்றியோர் அனைவர் மீதும் உண்டாவதாக.

**அல்லாஹுத் தஆலாவின் அருளால்
தங்களுக்குத் தேவையான...**

- **புனித அல்குர்ஆன் பிரதிகள் பல அளவுகளில், பல ஹத்யாக்களில், தனித்தனி ஜுஸ்உக்களாக 30 ஜுஸ்உக்களில்**
- **தர்ஜுமாக்கள், தப்ஸீர்கள்**
- **ஸஹீஹுல் புகாரி (1-6) ஸஹீஹுல் முஸ்லிம் -I, ஸுனன் அத்திர்மிதி (1-28), ரியாழுஸ் ஸாலிஹீன் (1-3) உட்பட அநேக ஹதீஸ் கிரந்தங்கள்**
- **இஸ்லாமிய விடயங்களை விளக்கும் நூற்றுக் கணக்கான தலைப்புக்களிலான புத்தகங்கள்**
- **பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான பாடங்களுக்கான உசாத்துணை நூல்கள்**

கிறாஅத், தர்ஜுமா, கஸீதா, பிரபல உலமாக்களின் Bயான்கள்
அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள்

யூனானி, சித்த, ஆயுர்வேத, ஹோமியோபதி, மருத்துவ நூல்கள்,
மனோவியல், மனையியல், கம்பியூட்டர் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள்

**அத்தர் வகைகள்** **தொப்பி வகைகள்**

இவை அனைத்தும் விசாலமான இடத்தில் பார்வைக்கும்,
கொள்வனவுக்கும் இலகுவான அமைப்பில் உள்ளன.

**ஹிஸ்புல் இஸ்லாம் ட்ரஸ்ட்**

# இஸ்லாமிக் Bுக் ஹவ்ஸ்

77, வஜிரஞான மாவத்த, (தெமடகொட ரோட்) மருதானை, கொழும்பு 00900
தொலைபேசி : 684851, பெக்ஸ் : 686030

# பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள்

## மதரஸா, ஹோட்டல், திருமண விருந்து

வைபவங்களுக்குத் தேவையான
உறுதியான முறையில் தயாரிக்கப்பட்ட

# அலுமினியம் சட்டி (பானை)

## (4 கொத்து முதல் 65 கொத்து வரை)

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

பழைய பானைகளை திருத்திக் கொள்வதற்கு அல்லது
பழைய பானைகளுக்குப் பதிலாக (செம்பு, அலுமினியம்)
புதிய பானைகளைப் பெற்றுக் கொள்வதற்கு
இன்றே நாடுங்கள்

# ORCHID ALUMINIUM DISTRIBUTORS

MANUFACTURES OF
ALUMINIUM, STAINLESS STEEL, HOTEL KITCHEN EQUIPMENTS

11, WEDA MAWATHA, WATALPOLA, HENAMULLA, PANADURA
Phone: 074-282057, Hot Line: 077-322896
(near the Multilac Industries)


AJ PRINTS, 44, Station Road, Dehiwala. Telephone : 739765, 723205, 723209